
# பாவனை பேசலன்றி...

ஆசி. கந்தராஜா





# பாவனை பேசலன்றி

ஆசி. கந்தராஜா

மித்ர வெளியீடு

**Mithra Arts and Creations**

சிட்னி  சென்னை  மட்டக்களப்பு

Mithra Books
ISBN 1876626 909

Apart from any fair dealing for the purpose of Private Study, Research, Criticism or Review as Permitted under the Copyright Act, No part may by reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or any means, electronic, mechanical or photocopying, recording or otherwise without prior written permission from the publishers.

Mithra Publication books are published by
**Dr Pon Anura**

Production Editor
**ESPO**

**PAVANAI PESALANTRI**
A Collection of Short Stories written
by
**Dr. A.S. KANDARAJA**

First Edition
1 st November 2000

Cover Design and Illustrations
**Trostky Marudu**

Made in India by Mithra Book Makers

**Mithra Arts and Creations**

1/23 MUNRO STREET
EASTWOOD 2122 AUSTRALIA
Ph: (02) 9868 2567
e-mail: www.anura@matra.com.au

30 VANNIAH STREET
BATTICALOA (EP)
SRI LANKA

375/8-10 ARCOT ROAD
CHENNAI 600 024 INDIA
Ph: (044) 372 3182
e-mail: www.mithra@md4.com.in
Fax : 0091-44-4721336

*மித்ர : 39*
*விலை :*

1 நவம்பர் 2000
பக்கங்கள் : 192

இளமைப் பருவத்திலே
தமிழ் உணர்வையும்
இலக்கியத் தாகத்தையும்
ஊட்டி
இன்று என்னைத்
தமிழ் ஊழியக்காரரானாய்ச்
சமைத்த
என் அருமைத் தந்தை
ஆ. சின்னத்தம்பி வாத்தியார்
அவர்களின்
ஆசிக்கு

இது

**படையல்**

Mithra Publication books are published by
Dr Pon Anura

Production Editor
ESPO

# PAVANAI PESALANTRI

A Collection of Short Stories written
by
Dr. A.S. KANDARAJA

First Edition
1st November 2000

Cover Design and Illustrations
Trostky Marudu

Made in India by Mithra Book Makers

1 நவம்பர் 2000
பக்கங்கள் : 192

# பதிப்புரை

இன்று 'புலம்பெயர்ந்தோர் தமிழ் இலக்கியம்' என்பது தனி வகையாகப் பேசப்படுகின்றது. அதன் அங்கீகாரம் குறித்தும், முக்கியத்துவம் குறித்தும் போர்க் குரல்கள் எழுப்பப்படுகின்றன. இவை எழுச்சியின் அறிகுறிகள். எழுச்சிகள் புதிதின் படைப்புக்கு விதையிடுவன. எனவே, வற்வேற்புக்கு உரியனவும்.

'புலம்பெயர்ந்தோர்' என்பதை ஒரே வகையினர் என விளங்கிக் கொள்ளுதல் தப்பு. அவர்களுள் கிளையும் பிரிவும் உண்டு. மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் வாழும் தமிழர்கள், ஒரு நூற்றாண்டுத் தமிழ்க் கலை - இலக்கிய முயற்சிகளுக்கு உரித்துடையோர். இங்கிலாந்திலே தமிழ்த்துவத்தின் தடம் பதித்த வரலாறும் சற்றே தொன்மையானது. இவற்றின் சாங்கங்களும் பொதுமைகளும் அவுஸ்திரேலியத் தமிழ்க் கலை-இலக்கியப் படைப்பு எத்தனங்களுக்குப் பொருந்த மாட்டாது. 'புலம்பெயர்ந்தோர் தமிழ் இலக்கியம்' என்று பொத்தம் பொதுவாகப் பேசுபவர்கள் இந்த நுண்ணிய வேறுபாடுகளிலே தெளிவு பெறுதல் சேமமானது.

அவுஸ்ரேலிய நாட்டின் தமிழ்க் கலை - இலக்கிய முனைப்புகளும் முயற்சிகளும், பதினைந்து ஆண்டுகள் அநுபவத்தைத்தானும் தாண்டவில்லை. மனித வரலாற்றிலே இதனை விரல் நொடிப்பு நேரம் எனக் கணித்தலும் பொருந்தும். அதே சமயம், மனித அறிவின் வளர்ச்சி விரைவும், அவற்றின் பிரசித்தத்திற்குகந்த ஊடகங்களிலே ஏற்படும் சடுதி மாற்றங்களும் இணைந்து, குறுகிய காலங்கூட வரலாற்று யுகமாக மாற்றிடும் புதிய பிரமிப்புக்குள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பதையும் மறந்திடலாகாது.

அவுஸ்ரேலியாவில் கதைசொல்லிகளாக உரிமை பாராட்டுபவர்கள் பலரை நான் அறிவேன். அவர்கள் பலரும் தாயக மண்ணிலே ஓரளவிற்கேனும் கதைசொல்லிகளாய்

அறியப்பட்டவர்களே. தாயக மண்ணின் எழுத்து நீட்சியே அவர்கள் படைப்புகள். எனவே, அவர்களுடைய படைப்புகள் புலம் பெயர்ந்தோர் இலக்கிய வகைக்குள் எவ்வாறு நோக்கப்படும்? அவர்களுடைய படைப்புகளை, கி.மு. கி.பி. என்பது போல புலம் பெயர்வுக்கு முன் பின் என வகுத்து ஆராயப்படுதல் சாத்தியமா? இவை எதிர்காலத் தமிழ் இலக்கிய விமர்சகர்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள்.

புலம்பெயர்ந்த பின்னர், புதிய சூழல்களின் படுதாவிலே, புதிதாகக் கதை சொல்ல முனைபவர்களுடைய கதைகள் நிச்சயமாகப் புலம் பெயர்ந்தோர் இலக்கிய வகையைச் சேரும். அந்த வகையிலே, 'பாவனை பேசலன்றி' என்கிற இந்தச் சிறுகதைத் தொகைக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு. தமிழ் அவுஸ்ரேலியராகவே, கலாநிதி ஆசி. கந்தராஜா அவர்கள் தம்மை ஒரு கதை சொல்லியாக இத்தால் பிரசித்தம் செய்கின்றார். இருப்பினும், பிறிதோர் உண்மையையும் நாம் மறக்கலாகாது. இத்தொகையிலுள்ள பல கதைகள் தாயக மண்ணின் வாழ்க்கைக் கோலங்களையும் நினைவு கூருகின்றது. தாயக மண்ணின் வாழ்க்கைக் கோலங்களை அறியாத தமிழ்க் கதைசொல்லிகள் நாளைய அவுஸ்ரேலியாவில் தோன்றுவார்கள்.

நேற்றைக்கும் - நாளைக்கும் இடைப்பட்ட ஒரு பெயர்ச்சி நிலையை - transition - இந்தக் கதைக்கோவை செப்பமாக ஆவணப்படுத்துகின்றது.

புதிசுகளின் பிரசித்தத்திற்கு மித்ர எப்பொழுதும் களம் அமைப்பதிலே ஆர்வமுடன் உழைப்பதைத் தமிழ் வாசகர்கள் அறிவார்கள். தென் துருவ நாட்டிலிருந்து வரும் புதிய கதை சொல்லியின் முயற்சியைத் தமிழ் வாசகர்கள் சீராட்டிப் பாராட்டுவார்கள் என நம்புகின்றோம்.

டாக்டர் பொன். அநுர

1/23, Munro Street,
Eastwood 2122
Austraila

# என் கதைகளும் நானும்

**ஆசி. கந்தராஜா**

**ப**ல்கலைக் கழகப் பணி நிமித்தம் நான் பயணித்த நாடுகளின் தரிசனங்கள் சில இங்கு கதைகளாக உருப்பெற்றிருக்கின்றன. அந்நாட்டு மக்களின் வாழ்க்கை முறைகளிலே இழையோடியுள்ள மனிதத்தின் காட்சி களாகவும் சாட்சிகளாகவும் இக்கதை களுக்கான கருக்கள் என் மனதில் பதிந்தன.

இவற்றிலே பாடம் பண்ணப் பட்டவையும் உண்டு; புடம் போடப்பட்டவையும் உண்டு. இவற்றைக் கதைகளாக்கி இப்போது தமிழ் வாசிப்புக்குத் தந்துள்ளேன். என் சிறுகதை எழுத்து முயற்சிகள் அவுஸ்திரேலியாவுக்கு புலம் பெயர்ந்த பின்னர் நிகழ்வது என்பது பதிவுக்குரியது.

இக்கதைகள் சர்வதேசியமாக பரம்பியுள்ள தமிழ் இலக்கியச் சுவைஞர்களையும் வாசகர்களையும் ஓரளவுக் கேனும் சென்றடை தல் வேண்டும் என விரும்பினேன். எனவே, பிரசுரத்திற்காக நான் பல நாடுகளிலும் பிரசுரமாகும் பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் அனுப்பி வைத்தேன். அவர்கள் என் ஆக்கங்களை விரும்பிப் பிரசுரித்து ஊக்கம் தந்தார்கள். அவர்களுக்கு என் நன்றிகள்.

எனது எழுத்து ஊழியத்தின் ஆசான் எஸ்.பொ அவர்களே. அவருடைய அக்கறைகள் பரந்துபட்டன. அவருடைய சிரத்தையினாலும், ஆலோசனைகளினாலும்,

வழி நடத்துதலினாலும், கலை இலக்கிய முனைப்புகளை அர்த்தமுடன் முன்னெடுத்துச் செல்வதற்காக *சிட்னி தமிழ் அரங்கக் கலைகள் + இலக்கிய பவர்* என்கிற அமைப்பு 1990 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. அதன் இலக்காக 'ஞானத்தைப் படைக்கவும் பகிரவும்' என அவர் முன்மொழிந்தார். ஆரம்ப கட்டத்திலிருந்தே அதன் செயற்பாடுகளிலே இணைந்த தினாலும் அவருடைய தமிழ் உறவினைச் சம்பாதித்தேன். என் எழுத்து ஊழியத்தின் ஆசான் எஸ்.பொ. என உரிமை பாராட்டுதலைப் பெருமையாகக் கருதுகின்றேன். தமிழ்ச் சிறுகதைத் துறையிலே ஈழநாட்டின் பெருமைகளை உலக அரங்கிலே நிறுவிய சித்தர் அவர்! சிறுகதை நுட்பங்களை அலுப்புச் சலிப்பின்றிக் கற்றுத் தருவதில் அவர் ஒரு பேராசான் என்பது என் அநுபவம். அவரது வழிகாட்டலின் கீழ் இத் தொகுதி வெளிவருவதில் நான் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன். அவர் ஆசியினால் என் படைப்பிலக்கிய ஊழியம் தொடரும்.

இச்சிறுகதைத் தொகுதிக்கு முன்னுரை வழங்கிய நண்பர்கள் *பிரபஞ்சன், அசன்* ஆகியோருக்கும், தமது ஒவியத்திறனால் இதற்கு அழகும் மெருகும் சேர்த்த ஓவியர் *மருது* அவர்களுக்கும், இதனை வெளியிடுவதிலே மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்ட சென்னை *மித்ர வெளியீடு* நிறுவனத்தினைச் சேர்ந்த ஊழியர் சகலருக்கும் என் அன்பு கலந்த நன்றிகள்.

கலை இலக்கிய முயற்சிகளில் நான் ஈடுபடவும் என் எழுத்துப் பணியை முன்னெடுத்துச் செல்லவும் பொறுமையுடன் சகல வழி களிலும் ஒத்தாசை புரியும் எனது அன்பு மனைவிக்கும், தாயாருக்கும், அருமைக் குழந்தைகளுக்கும் என் நன்றிகள்.

# அறம் சார்ந்த மனதின் கலை விழிப்பு

பிரபஞ்சன்

**ஆசி.** கந்தராஜாவின் 'பாவனை பேசலன்றி' சிறுகதைத் தொகுதிக்கு, முன்னுரையாகச் சில உரைப்பதில் எனக்கு மகிழ்ச்சி உண்டு.

முன்னுரை என்கிற ஹோதாவில், புத்தகத்தில் இடம் பெற்றுள்ள கதைகள் ஒவ்வொன்றாக எடுத்துச் சுருக்கமாகச் சொல்லி நயம் காண்பது சரி இல்லை என்பது என் கருத்தாகும். ஏன் எனில், கதைகளைத் திரும்பச் சொல்வது , கூறியது கூறல் என்கிற பிழை. அதோடு சுருக்கங்களில் கதை இல்லை. கதை, விஷயத்திலும் கூட இல்லை. மாறாக, சொல்லும் முறையில், உணர்த்தும் நெறியில் கதை இருக்கிறது என்பது என் கருத்து.

என் நண்பர் ஆசி. கந்தராஜாவின் கதைகள் அனைத்தையும் ஒரு சேரப் படிக்கையில், எனக்குத் தோன்றும் கருத்து இதுதான். அறம் சார்ந்த மனித விழுமியங்களை, மனிதம் சார்ந்த மதிப்பீடுகளை, மனிதர்கள் அணிந்து கொள்ளும் பாவனை முகமூடிகளை, அவர் கதைகளாக எழுதுகிறார் என்பதே நான் வந்து சேர்ந்த முடிவாகும்.

எல்லாக் காலத்திலும் எழுத்து, மானுடம் சார்ந்த அறங்களை, விழுமியங்களைப் போதித்து வந்திருக்கிறது. போதனை என்பது, சமயம் சார்ந்த பாவனை அல்ல. மாறாக, அன்பு சார்ந்த பகிர்வு. இளங்கோ அடிகளுக்கு, அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று, பத்தினிப் பெண்டிரை உலகம்

தொழும் என்று சொல்ல வேண்டி இருந்தது. ஆகவே, அவர் சிலம்பை ஒரு கருவியாகக் கொண்டார். சாத்தனாருக்கு, அறக்கோட்டம் இருந்தால், சிறைக் கோட்டத்துக்கு இடமில்லை என்று சொல்ல விருப்பம். அது, மணிமேகலை. கம்பனுக்கு, உடையாரும் இல்லாரும் இல்லாத உலகம் காண ஆசை. ஆகவே ராமனை முன் நிறுத்த வேண்டி இருந்தது. மனிதன், சக மனிதன் மேல் ஆதிக்கம் செலுத்த அவாவுகிற கீழ்மையைத் தன் போரும் அமைதியும் மூலமாக டால்ஸ்டாய் சொல்கிறார்.

வேறு எக்காலத்திலும் இல்லாத அச்சுறுத்தல்கள், நம் காலத்தின் முகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. இவை அறத்துக்கு எதிராக, சகல கயமைகளும் சேர்ந்து விடும் சவால் என்றே நான் கருதுகிறேன். இந்தச் சவாலை, எழுத்தாளர்களே முதலில் ஏற்றாக வேண்டியிருக்கிறது. ஏன் எனில், மனித குலத்தின் மேல் நமக்குள்ள அக்கறை அது.

'பாவனை பேசலன்றி' என்கிற, இந்தத் தொகுப்பில் உள்ள சிறந்த கதை, அறம் சார்ந்த, மனித விழுமியம் சார்ந்த ஒரு படைப்பாக எனக்குத் தோன்றுகிறது. மூத்த பிரஜைகள் என்று கௌரவமாகச் சொல்லப்படும் மூத்தவர்கள், தந்தை, தாய்மார்கள், தம் சந்ததியரால் அவமானப்படுத்தப்படும் அவலம்தான் இக் கதையின் மூலம். தம் முழு வாழ்க்கையை, அதன் இனிப்பு பகுதிகள் எதனையும் அநுபவியாது தம் குழந்தைகள் சுக சௌகரியத்துக்கே சமர்ப்பணம் செய்து, தம் உழைப்பின் கடைசித் துளியையும் அவர்களுக்கே தத்தம் பண்ணி, சாறு இழந்து சக்கையாகிப்போன தம் இறுதி நாட்களில், பிள்ளைகளாலும் மருமகள்களாலுமே கீழ்மைப் படுத்தப்படும் அவலம், மிகவும் குரூரமானது. இந்தக் குரூரங்களைச் சற்றும் குற்ற மனம் இல்லாது செயல்படுத்தும் பல புதிய தலைமுறையை நான் கண்டிருக்கிறேன். ஒரு ஆசிரியரின் --- முன் மாதிரி ஆசிரியரின் --- முழு வாழ்க்கையே

இந்தக் கதையில் மிகவும் சுருங்கச் சொல்லப்பட்டுவிடுகிறது. இது ஆசிரியரின் மிக முக்கியமான கதை.

ஒரு நீளும் கை, கந்தராஜாவின் வார்த்தைகளுக்கு முளைத்து விடுகிறது. அந்தக் கை நம் தோளைத் தொடுகிறது. தொட்டு, நம் கவனத்தை அவர் சொல்லும் விஷயத்தின் பக்கம் நகர்த்துகிறது. உணர்வு கொப்பளிக்க, ஆனால் உரக்கச் சத்தம் போடாத நளினம், ஆசிரியருக்கு கைவந்து விடுகிறது. இதுதான் அவரை தனித்துவப் படுத்துகிறது. சாதாரண சொற்கள், சத்தியத்தில் நனைந்து விடுகின்றன.

எனக்குக் கதைகளைக் காட்டிலும், கதைகளின் பின் இருக்கும் எழுதியவரின் ஆத்மா முக்கியமாகப்படுகிறது. ஏன் எனில், எழுத்து என்பது, எழுதுபவரின் மனப் பெரு வெளியில் விளைந்த ஒரு அடுக்கு மாத்திரமே. எழுதப்படாத பல அடுக்குகள், இன்னும் எழுதுபவரின் கைவசமே இருக்கிறது. கந்தராஜாவின் ஹிருதயம் இம் மாதிரியான பல அடுக்குகள் கொண்டது.

அறம் சார்ந்த மனது, வாழ்க்கையின் சகல அம்சங்களிலும் சத்தியத்தையே அவதானிக்கிறது. வாழ்க்கை, மாற்றுக் குறைகிற போதெல்லாம், எழுத்தாளர்கள் வெளிப்படுகிறார்கள்.

சோஷலிசம், கம்யூனிசம் என்றெல்லம் அர்த்தமுள்ள வார்த்தைகளை பேசிக்கொண்டே, ஆனால் யதார்த்தத்தில், அந்த லட்சியங்களுக்கு விரோதமாக வாழ்கிற மனிதர்களை, அந்த "சிவந்த மண்"ணில் பார்க்கையில் கந்தராஜா கலவரப்பட்டுப் போகிறார். மானுட வசந்தத்துக்கே கட்டியம் சொல்ல வந்த ஒரு பூமியில் லஞ்சமும் ஊழலும் எங்ஙனம் தோன்ற முடியும்? ஆனால் தோன்றியது மட்டுமல்ல, செழுமையாகவும் போஷிக்கப்படுகின்றது என்பதே உண்மை. என்ன காரணம்? தத்துவத்தை மனித அழுக்குகள் வென்று

விடுகின்றன என்பதே உலக வரலாறு. புத்தரின் மறைவுக்குப் பிறகான ஐம்பது ஆண்டுகளுக்குள்ளாகவே, புத்தர் முகம், நிஜமுகம், தத்துவத்தின் பெயராலேயே மறைக்கப்படுகிறது. மாவோவுக்கும் கூட இதுதான் நிகழ்ந்தது. மனிதர்கள், மகத்தானவர்கள் என்பது எந்த அளவுக்கு உண்மையோ, அந்த அளவுக்கு அவர்கள் அற்பமானவர்கள் என்பதும் உண்மைதான். வேதத்துக்கும் அவர்கள் கட்டுப்படுவார்கள். சாத்தானுக்கும் அவர்கள் ஏவல் செய்வார்கள்.

இது தத்துவத்தின் தவறா? அல்லது அதை நடைமுறைப் படுத்துகிறவர்களின் தவறா? பெரும்பாலும், தத்துவங்கள், மனித முழுமையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு உருவாக்கப்படுகிறது. நடைமுறையோ, மனிதர்களின் துர்பலங்களோடு நடைபோட வேண்டி இருக்கிறது.

கந்தராஜா, தனக்குள் குழம்பி, தெளிந்து, தனக்குள் விடை காண முயல்கிறார். இந்தக் குழப்பமும் ஆறுதலும் வள்ளுவருக்கே உண்டு. ஒருவன் பல்லக்கில் உட்கார்ந்து போவதற்கும், சிலர் அவனைச் சுமப்பதற்கும் என்ன ஹேது? என்ன புண்ணியத்தை அவன் செய்தான்? என்ன பாவத்தை இவர்கள் செய்தார்கள்? விடை தெரியத்தான் இல்லை.

ஏசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட, ஒரு குற்றவாளி தப்பிவிக்கப்படுகிறான். மிகவும் முக்கியமான கேள்வி இது. வாழ்க்கை, தர்க்கங்களில் அகப்படவில்லை. இது ஆராய்ச் சிக்குட்பட வேண்டியது. முடிவு கூறத் தக்கதா? எனக்கு தெரிய வில்லை. வாழ்க்கையின் இந்தப் புதிர்களை, எழுத்தாளர்கள் தொட வேண்டும், விடைகாண வேண்டும் என்கிற கட்டாயம் இல்லை. கந்தராஜா தொடுகிறார். ஆராய்கிறார்.

மனித இருப்பு, வேறு எப்போதையும் விட இப்போது ஸ்திரம் அற்று பாசி போல், தண்ணீரில் நகர்ந்து கொண்டு இருக்கிறது. அல்லல் பட்டு இலங்கையிலிருந்து தமிழ்நாடு திரும்பிய ஆதித்தமிழன் இங்கு இலங்கையனாகவே

கருதப்படுகிறான். இலங்கையிலோ கள்ளத்தோணியாகவே இருக்கிறான் என்றால், அவன் பூமி எது? இதை முன் எடுத்து ஒரு கதையைக் கந்தராஜா எழுதியிருக்கிறார்.

தமிழனாகட்டும், இலங்கையனாகட்டும், அவன் மண் எது? இருபதாம் நூற்றாண்டு உலக விளிம்பில் ஏற்படுத்தியிருக்கும் பெரும் கேள்வி இது. இந்த மண் எவனுக்குச் சொந்தம்? வரலாறு என்ன வெனில், மனிதன் எங்கே காலூன்றி நிற்கிறா-னோ, அதுதான் அவன் மண். எந்த மண் தனக்கானது என்பதை அவன்தான் தீர்மானிக்க வேண்டுமேயல்லாமல், அரசுகள் அல்ல. போலீஸ் அல்ல. கங்காணிகள் அல்லர். எந்த நிலத்தின் மேல் மனிதனின் வியர்வை விழுந்ததோ அதுதான் அவன் மண். பூமிப் பரப்பு என்பது மனிதர் வாழும் நிலம். இதை, பூகோள வரம்பிட்டது யாரின் செயல்? அதுக்கு, மனிதன் பொறுப்பல்ல. கந்தராஜா, இந்த அடிப்படைக் கேள்வியைத் தான் எழுப்புகிறார்.

கந்தராஜாவின் கதைகள், கந்தராஜாவின் கதைகளே! அதாவது அவருடைய அனுபவம் சார்ந்த க்தைகள். அதனால்தான் அவருடைய கதைகள், நிஜமான அனுபவத்தை வாசகர்க்கு மாற்றித் தருகின்றன. கதைகளின் பலம், அவை சொல்லப்பட்ட விதத்தில் நடந்திருக்கும் என்று நம்பும் படியாக இருப்பதுதான். இந்தக் கதைகள், உண்மைகள் என்று வார்த்தை தோறும் நமக்கு அனுபவமாகிறது.

கந்தராஜாவின் வார்த்தைகள், சம்பாஷணைகள், யாழ்ப்பாண வழக்குச் சொற்கள். இவை, ரசிக்கத்தக்க வகையில் அமைந்து கதைகளுக்கு ஒரு பிரதேசத் தன்மையைத் தந்துவிடுகின்றன. கதை மாந்தர்கள், புலம் பெயர்ந்து, புதிய பூகோளக் கோடுகளுக்குள் வாழ நேர்ந்தாலும், தம் " சுயம்" மறக்காதவர்கள். சுயத்தை தன் இயல்பாகவே வெளிப்படுத்துகிறார்கள்.

கந்தராஜாவின் அசல் பலமாக நான் கருதுவது மனிதர்கள் மேல் இவருக்கு இருக்கும் அபிமானம். மனிதர்களை அவர்கள் பலத்தோடும் பலவீனத்தோடும் இவர் ஏற்றுக் கொள்கிறார். தொட்டிகளில் வளரும் 'போன் சாய்' செடிகளைப் போல, அவர்கள் வடிவமைக்கப்பட வில்லை. அவர்கள், அவர்கள் இஷ்டத்துக்கு இயங்குகிறார்கள். அந்த இடங்களில் கதை வளர்கிறது. சம்பவங்கள், கச்சிதமாக வளர்ந்து, கதையின் தத்துவத்துக்குள் பிரவேசிக்கின்றன. அநாவசியமான வம்பளப்புகள் இல்லாத கதைகள். கதைகள் எதை எழுத வேண்டும், எந்த அளவுக்கு எழுதவேண்டும் என்று அவருக்குத் தெரிகிறது. பெரும்பாலான கதைகள் வடிவ நேர்த்தியும், அழகும் கொண்ட கதைகள்.

ஆசி. கந்தராஜா அவர்கள் அவர் துறையில் பெரிய விஞ்ஞானி. உலகப் பல்கலைக் கழகங்கள், ஆய்வு நிறுவனங்கள் அவரைத் தங்கத் தட்டில் வைத்து ஏந்துகின்றன. இது அவரிடம் பக்குவத்தை வளர்த்து இருக்கிறது. முற்றிய நெற் பயிர் தலைவணங்குவது போல், இவர் விளங்குகிறார். இவர் கதைகளில்கூட, அந்தக்குணம் வெளிப்படுகிறது. கதையின் சகல கதவுகளைத் திறந்து வைத்துக் கொண்டே இவர் எழுதுகிறார். மூடப்பட்ட வாழ்க்கை அல்ல இது. திறந்த மனத்துடன் செய்யப்பட்ட வாழ்க்கை விசாரணைகள் இவர் கதைகள். எந்த இடத்திலும் நீதிபதி ஆகவில்லை. மாறாக, ஒரு பார்வையாளன் என்கிற ஸ்திதியில் கதை சொல்கிறார். இந்த எளிமை, மனதில் முதிர்ச்சியைக் காட்டுகிற பண்பாக எனக்குத் தோன்றுகிறது. இது அபூர்வம்.

இந்தக் கதைகள், நல்ல வாசக அனுபவம் தருகிற கதைகளாக எனக்குத் தெரிகிறது. இவைகளைப் படிக்க நேர்ந்ததில், நான் மகிழ்ச்சி அடைந்தேன். எந்த வாசகருக்கும் இந்த அனுபவம் சித்திக்கும் என்பது என் நம்பிக்கை.

# முன்னுரை

கலை இலக்கிய உலகில் நண்பர் கந்தராஜாவுடன் கடந்த பத்து ஆண்டுகளாக பல முனைகளில் செயல்பட்டுள்ளேன். நாங்களிருவரும் மகாஜன கல்லூரியின் பாரம்பரியத்திலிருந்து வந்தபோதும் சிட்னியிலேயே இணைந்து செயல்பட வாய்ப்புக் கிடைத்தது.

90-களின் தொடக்கத்தில் சிட்னி தமிழ் அரங்குகளில் சினி-மா மசாலாக்கள் நாடகம் என பேர் பண்ணிக் கொண்டிருந்தன. அரங்கு பற்றிய புரிதலும், கரிசனையு முடைய சிலர் இதற்கு மாற்றீடு தேவை என உணரத் தலைப்பட்டனர். அதன் விளைவு, சிட்னி தமிழ் அரங்கக் கலைகள் + இலக்கியப் பேரவை அமைப்பு. அது கருக்கொண்ட அடிநாள் முதல் அதன் ஒவ்வொரு முனைப்பிலும் தீவிர பங்காளியானவர் நண்பர் கந்தராஜா.

ஒரு நல்ல நடிகனாக, ஒலிபரப்பாளனாக, பேச்சாளனாக, எழுத்தாளனாக கந்தராஜாவைக் கண்ட சிட்னி தமிழ் சமூகம் கடந்த சில வருடங்களாக சிறந்த சிறுகதை ஆசிரியராக இனங் காணத் தொடங்கியது. தனது பரந்த உலகளாவிய அனுபவங்களை சிறு கதை வடிவில் வெளிக்கொணருவதில் அவர் வெற்றி பெற்றுள்ளார். இத் தொகுப்பிலுள்ள அனைத்துக் கதைகளும் அதை உரக்கவே எடுத்துச் சொல்கிறது.

கலை இலக்கிய முயற்சிகளை முன்னெடுப்பதிலும், நெறிப்படுத்துவதிலும் சிட்னியில் அவருக்கு இணை அவரே. தமிழ் சிறார்களுக்குத் தமிழ் மொழி போதிக்க உருவாக்கப்பட்ட நான்கு பாடநூல்களும், 98-இல் ஒப்பேறிய 'புலம் பெயர்ந்த தமிழர்களின் நாடகக் கலை' என்ற கருத்தரங்கும், பட்டறையும் அவரது உழைப்பின் அறுவடையே. எதைச் செய்தாலும் அதன் அந்தத்தினை அடையும் வரை தளராத உறுதியுடன் செயல்படும் கந்தராஜா சிறு கதை புனைவிலும் அதன் உச்சத்தை எட்டுவார்.

**அசன்** ஈஸ்ட்வூட், அவுஸ்திரேலியா.

பா. பே. 1

## உள்ளே...

◆ காலமும் களமும் 19 ◆ யாவரும் கேளிர் 32


◆ கள்ளக் கணக்கு 43 ◆ சூக்குமம் 54 ◆ எலி புராணம் 61

◆ அம்மா பையன் 74 ◆ மறுக்கப்படும் வயசுகள் 91

◆ இனமானம் 101 ◆ அடிவானம் 116 ◆ பாவனை பேசலன்றி 143

# 1

## காலமும் களமும்



**வி**தானையார் மாமா அந்த முடிவை எதிர்பார்க்க வில்லை. தோல்வி என்பதை விட, அந்த அவமானத்தை அவரால் தாங்கவே முடிய வில்லை. விசாலாட்சி காட்டிய 'பவிசு' அவரைச் சுட்டெரித்தது. ஊராக இருந்திருந்தால் இற்றை வரை அங்கு ஒரு பிரளயமே நடந்து இருக்கும்.

ஆனால் அவர் இப்பொழுது அவுஸ்ரேலியாவில் அல்லவா வாழ்கிறார்!

அனுசரித்துப் போவதென்றால் மூலையில் முடங்கிக் கிடப்பது தானோ?

"இரண்டு நாட்களாக அப்பா அறைக்குள்ளேயே படுத்துக் கிடக்கிறார். நீ ஒருக்கால் வந்து பார்த்தியானால் அவருக்கு கொஞ்சம் ஆறுதலாக இருக்கும்..." என்று ரெலிபோனில் கூறினாள் கல்யாணி. அவள் விதானையார் மாமாவின் மகள். ஹோம்புஸில் வாழும் சிட்னிவாசி.

விதானையார் மாமாவின் பெருமைகளை நான் ஊரிலேயே அறிந்தவன். எனக்கு அவர் தூரத்து உறவு. மரியாதையின் நிமித்தம் அவரை நான் மாமா என்று அழைத்துப் பழகிவிட்டேன்.

இரண்டு மூன்று தலைமுறைகளுக்கு மேலாக மாமாவின் குடும்பம் யாழ்ப்பாணத்தில் விதானையார் தொழில் பார்த்து வந்தது. அறுபதுகளின் பிற்பகுதியில் விதானையார் முறை மாறி கிராமசேவர் பதவி அமலுக்கு வந்த பொழுதும், மாமா தொடர்ந்து பதவி வகித்து ஐம்பத்து எட்டு வயதிலே பென்சன் வாங்கியவர். அதன் பிறகும் அவர் 'விதானையார்' என்றே அழைக்கப்பட்டார்.

விதானையார் வீடும் வளவும் ஊரில் மிகப்பெரியது. ஓர் எல்லையில் நின்று மறு எல்லையை நிதானிப்பது சிரமம். அடாத்தாகப் பக்கத்துக் காணிகளைப் பிடுங்கிச் சேர்த்த சொத்து என்று ஊரில் பலரும் பேசிக் கொண்டார்கள். எனது பாட்டியின் சீதனக்காணியையும் விதானையார் மாமாவின் தகப்பன் சுருட்டி எடுத்தவர் என அம்மா புறுபுறுப்பதை நான் கேட்டிருக்கிறேன். இவை பழங்கதைகளும் பழங்கணக்கு களும்! இருப்பினும் விதானையார் மாமா ஊருக்கு பெரிய மனுஷன் என்கிற பிம்பமே என் மனதில் இன்றும் நிலைத்துள்ளது.

விதானையார் மாமாவின் ஒரே மகன் என்னுடன்

ஒன்றாகப் படித்தவன். பணத்திமிருடன் ஊர் சுற்றுவான். படிப்பு விடயத்தில் என்னில் தங்கியிருக்க வேண்டியிருந்ததால் என்னுடன் நன்கு ஒட்டிக் கொண்டான். நான் வாத்தியார் மகன்! அப்பா தொழில் தர்மம் பேணி வாழ்ந்ததினால் ஊர்மக்களின் மரியாதையை சம்பாதித்தவர். வாத்தியார் மகன் தப்புத் தண்டாவிற்கு போகக் கூடாதென்பது எங்கள் ஊரின் எழுதாத விதி. இதனால் விதானையார் மகனின் நட்பு பலவழிகளிலும் எனக்குப் பாதுகாப்பாக இருந்தது.

பாடசாலை தவிர்ந்த மற்றைய நேரங்களில் விதானையார் வளவிலேயே நான் காலங்கழிப்பதுண்டு. விதானையார் மாமிக்கு என்னை நன்கு பிடிக்கும். மாமாவின் தில்லுமுல்லுகளைச் சமப்படுத்துவது மாமி பாக்கியமே.அவர் அந்த வீட்டின் லஷ்மி; மங்கல விளக்கு!

மாமா தோட்டம் செய்பவர்களுக்குக் காசு கடன் கொடுப்பார். புகையிலை, மிளகாய் விற்றவுடன் அவர்கள் காசைத் திருப்பிக் கொடுப்பார்கள். கொடுத்த காசுக்கு மேலாக அடுத்தவாரமே கடன் வாங்குவார்கள். மாமாவைக் கண்டாலோ, இவர்கள் தோளில் இருக்கும் சால்வையைக் கமக்கட்டிற்குள் எடுத்து வைத்து மரியாதை செய்வார்கள். வட்டியின்றிக் கொடுக்கும் கடனுக்கு மாமா எதிர்பார்ப்பதும் இதுதான். மாமாவின் கொடுக்கல் வாங்கல் கணக்குகளைப் பெரியதொரு கொப்பியில் எழுதிவைக்கும் பொறுப்பை என்னிடமே தந்திருந்தார். வரவு ஒரு பக்கத்திலும், செலவு எதிர்ப்பக்கத்திலுமாக மாதா மாதம் கணக்கு எழுதவேண்டும். சிக்கலான 'வழக்குகள்' வந்தால் அதை முறைப்படி பதிவேட்டில் பதியவும் என்னையே கூப்பிடுவார்.

இதனால் நான் மாமா வீட்டில் செல்லப் பிள்ளையாக உலா வந்தேன்.

பஞ்சாங்கத்திலே எழுதி வைக்கப்பட்ட விரதம் எதுவும்

வீட்டிலே தப்பாது. விரதம் என்றாலே சைவச் சாப்பாடுதான். எனக்கோ அசைவம் வேண்டும். அதனால் பெரும்பாலான நாட்களில் நான் மாமா வீட்டிலேயே சாப்பிடுவேன். அங்கு அசைவம் சமைப்பதற்கென்றே புறம்பான கொட்டில் உண்டு.

ஊரில் ஆட்டுக் கடா களவு போகும். களவு கொடுத்தவர்கள் முன்வாசலால்வந்து வழக்கைப் பதிந்து விட்டுப் போவார்கள். 'கடா' களவெடுத்த 'வல்லி' பின்வளவால் வந்து இறைச்சி கொடுத்துவிட்டுப் போவான். மாமி அந்த இறைச்சியைக் கையாலும் தொடமாட்டார். அங்கு வேலை செய்யும் சின்னாச்சியால் அது குடிலுக்குள் குழம்பாக்கப்படும். இறைச்சி மாமாவின் வயிற்றுக்குள் இறங்கியதும் களவு பற்றி எழுதப்பட்ட முறைப்பாட்டுப் பத்திரமும் குப்பைக் கூடைக்குள் போகும்.

சனிக்கிழமை மாமாவிற்கு முழுக்கு நாள். அன்று வேறு எந்த வேலையும் வைத்துக் கொள்ள மாட்டார். காலையில் எழுந்தவுடன் வழக்கம் போல முட்டைக் கோப்பிவரும். சூரியன் மேலே எழும்பத் தொடங்க, வட்டுக்கோட்டையிலிருந்து ஸ்பெஷலாகவே வர வழைக்கப்பட்ட நல்லெண்ணையுடன் மாமி அவர் முன் ஆஜராவார். மாமா நாலு முழத்துண்டுடன் நாற்சார் முற்றத்தில் சம்மணம் போட்டு அமர்ந்து கொள்வார். மாமி சூடுபறக்க உடம்பெல்லாம் எண்ணை தேய்த்து விடுவார். மாமா ஊரிலே 'மேய்ந்து' திரிவது மாமி அறியாத விஷயமல்ல. இருப்பினும் இந்தச் சனிக்கிழமைப் பதிசேவை தனக்கே உரியதென மாமி மகிழ்வார்.

பனங் கள்ளுக் காலத்தில், பின்வளவுக்குள் கதிர் வேலுவினால் இறக்கப்பட்ட தனிப்பெண்பனைக்கள்ளும் தும்பு செதுக்கிய சிரட்டை ஒன்றும் முற்றத்தை ஒட்டிய கதவோரம் வைக்கப்பட்டிருக்கும். சிரட்டையின் வெளிப் புறத்தை எண்ணைக் கையால் பொலிஷ் செய்தவாறே கள்ளை ஊற்றி

மாமாவிடம் கொடுப்பார். அவர் குடித்து முடிக்கும் வரை அருகில் இருந்து கதை பறைவார் மாமி. இந்தப் பணிவிடைகள் நடைபெறும் பொழுது நான் மாமியை நினைத்துப் பரிதாப் படுவதுண்டு.

மாமா சனிக்கிழமை தவிர்த்த மற்றைய. நாட்களில் கள்ளுக்குடிக்கும் சாட்டில் கதிரவேலுவின் வீட்டிற்கு இரகசியாமாகப் போய் வருவார். விதானையார் வருவதை பெருமையாக எடுத்துக் கொண்டது கதிரவேலு குடும்பம். கதிரவேலுவின் வாட்டசாட்டமான பொடியன் விதனையா ருக்குப் பிறந்ததென பின்னொரு காலத்தில் ஊரில் 'கிசுகிசுக்கள்' உலாவின.

**சி**ட்னியிலுள்ள தனியார் நிறுவனமொன்றின் கணக்காளர் நான். வருட இறுதியில் அடுத்த நிதியாண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தைப் பணிப்பாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும். அத்துடன் நத்தார் லீவும் வருவதால் ஊழியர்களின் சம்பளத்தை நேரகாலத்துடன் அவர்களின் வங்கிக் கணக்கிற்கு அனுப்புதல் வேண்டும். வேலை மிகுதியால் மாமாவை உடன் சென்று பார்க்க முடியவில்லை.

'நாள் முழுதும் அப்பா ஒன்றுமே சாப்பிடவில்லையென்றும் முடிந்தால் இன்றிரவே வீட்டிற்கு வருமாறும்' ரெலிபோன் ஆன்ஸரிங் மெஷினில் தகவல் விட்டிருந்தாள் மாமாவின் மகள் கல்யாணி. வேலையால் வீட்டிற்கு வந்த நான் மனைவி தந்த தேநீரை அருந்திவிட்டு, மாமாவிடம் செல்ல மீண்டும் காரில் ஏறிக் கொண்டேன்.

மாமாவிடமும் ஊரில் பழைய மொடல் 'ஒஸ்ரின்' கார் ஒன்றிருந்தது. 'செட்டி' அதை ஓட்டுவான். அந்தக் காரை தினமும் கழுவி, மண்ணெண்ணையும் ஒயிலும் கலந்த திரவத்தால் பொலிஷ் பண்ணி போட்டிக்கோவில் நிறுத்த

வேண்டும்.

மாதத்தின் முதலாம் திகதி மாமாவிற்குச் சம்பள நாள். அவர் யாழ்ப்பாணக் கந்தோருக்குப் (Office) போக வேண்டும். அன்று மற்ற ஊர் விதானைமாரும் சம்பளம்மெடுக்க கந்தோருக்கு வருவார்கள். அன்று மாமியும் காரில் பட்டணம் செல்வார். மாமி உடுத்துப்படுத்து நிற்கும் பொழுது சாட்சாத் அந்த மகாலஷ்மியே பிரசன்னமானது போல் இருக்கும். மாமா அன்று கந்தோருக்குச் செல்லும் போது செவ்விளநீரும் வாழைக்குலையும், மற்றும் பிறவுமாக கையுறையால் கார் நிரம்பியிருக்கும். இவை அதிகாரிகளுக்கும் சக விதானை மாருக்கும் மாமாவின் அன்பளிப்பு. இந்தத் தாராள சுபாவத் தினால் மாமாவின் செல்வாக்கு யாழ்ப்பாணக் கந்தோர் மட்டத்திலும் கொடிக்கட்டிப் பறந்தது.

ஊரிலே, விதானையார் மாமாவிற்கு பதவிகள் பல தானாகவே வந்தன. பல சமூக அமைப்புகளும் வருந்தி அழைத்து தலைமைப் பதவிகள் வழங்கின. ஏதாவது ஒரு பதவிக்கு அவர் ஆசைப்பட்டால் அது அவருக்கு கிடைக்க வேண்டும். அதனை அடைவதற்கு சாம, பேத, தான, தண்டம் என எந்த உத்தியையும் பயன்படுத்தத் தயங்க மாட்டார். இந்தப் பதவிகளை மக்கள் மத்தியிலே தனக்கிருந்த செல்வாக்கினை அளக்கும் ஒரு கருவியாகவே அவர் கருதினார். சமூக சேவையின் ஈடுபாட்டினாலும், பதவிகளை அடைவதற்கு அவர் கையாண்ட செலவு சித்தாய நடவடிக்கையாலும் குடும்பச் சொத்தை அழித்தாகவும், அது இருந்திருந்தால் இப்பொழுது நாலு 'இன்வெஸ்ற்மென்ட்' (investment) வீடுகள் சிட்னியில் வாங்கி இருக்கலாமென்றும் மகள் கல்யாணி குற்றம் சாட்டுவதுண்டு. மாமா பண விஷயத்தில் கருமியல்ல. பதவிக்கும் புகழுக்கும் முன்னால் காசை அவர் பொருட்டாக மதித்ததில்லை. செல்வத்தையும்

செல்வாக்கையும் ஊரில் வாழ்ந்தனுபவித்தவர் அவர்.

அவராகவே தேடிப் போகாது பரம்பரையாக கிடைத்த பதவிகளுள் ஒன்று ஊரில் உள்ள முருகன் கோயில் மணியகாரன் பதவி. முருகன் கோயில் மாமாவின் பரம்பரைச் சொத்து. பத்து நாட்கள் அங்கு திருவிழா நடைபெறும். தேர் -- தீர்த்தம் ஒன்றாகப் -- பத்தாம் நாளும், அதைத் தொடர்ந்து பதினொராம் நாள் நடைபெறும் திருக்கல்யாணமும் மாமாவின் செலவிலேயே நடைபெறும். இத்திருவிழாக்களில் சிகர சப்பர சோடணைகள் அசத்தும்; யாழ்ப்பாணத்தில் உள்ள நாதஸ்வர தவில் வித்வான்கள் அனைவரும் கானமழை பொழிவார்கள். இவை மாமாவின் செல்வாக்கினால் முருகன் திருவிழாவுக்கு இலவசமாகக் கிடைக்கும் சிறப்புகள்.

அன்று திருக்கல்யாணம். பிரபல நாதஸ்வர வித்வான் களின் இசை காற்றில் மிதந்து வந்து கொண்டிருந்தது. குருக்கள் மந்திரத்தை உச்சரித்தபடி அம்மன் கழுத்தில் தாலியை ஏற்றப் போகையில் அது சடுதியில் நிகழ்ந்தது. விதானையார் மாமாவின் மகன், குருக்களின் கையிலே இருந்த தாலியைப் பறித்து அங்கு தயாராக நின்ற மேளகார ராசதுரையின் மகள் கழுத்தில் கட்டினான். மக்கள் மருண்டு அல்லோல கல்லோலப்பட, அந்தச் சோடி சிட்டாய் பறந்து மறைந்தது.

மகனைச் சுடுவதற்காக மாமா அடிப்பட்ட புலிபோல், துவக்கும் கையுமாக ஊரெல்லாம் சுற்றித் திரிந்தார். துவக்குடன் எனது வீட்டிற்கு வந்தவரின் காலில் விழுந்து 'எனக்கு எதுவுமே தெரியாது மாமா' எனக் கதறினேன். என்னை அன்று அவர் உயிருடன்விட்டது அதிசயம்தான். இளம் ஜோடி எப்படியெல்லாமோ மறைந்து வாழ்ந்து லண்டனுக்குத் தப்பியோடிவிட்டது. அங்கு அவன் மனைவி யுடன் நல்லநிலையில் இருப்பதாக பலரும் சொன்னார்கள்.

அவன் தந்தையுடன் பாச உறவினைப் புதுப்பிக்க சகல முயற்சிகள் எடுத்தும் மாமா இன்றும் அவனை மன்னிக்கத் தயாராக இல்லை.

மகன் இப்படி தந்தையின் முகத்திலே கரியைப் பூசி மறைந்த சோகத்தில் மாமி அதிக காலம் வாழவில்லை. மாமி இறந்த பின் மாமா ஆடிப் போய்விட்டார்.

அப்பொழுதுதான் விடுதலை இயக்கத்தின் கட்டுப்பாட்டிற்குள் யாழ்ப்பாணம் வந்தது. ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் ஊழியர்களான கிராம சேவகர்கள் அதிகாரமற்றவர்களாக்கப் பட்டு, இயக்க முக்கியஸ்தர்கள் சிவில் நிர்வாகத்தையும் கவனிக்க நியமிக்கப்பட்டார்கள். மாமாவின் அதிகாரத்திற்கு உட்பட்ட கிராமங்களுக்கு கள்ளிறக்கும் கதிரவேலுவின் மகன் நியமிக்கப்பட்டான். தான் கட்டியாண்ட அதிகாரம் கதிரவேலுவின் மகனிடம் வந்ததில் மாமாவிற்கு உள்ளூரச் சந்தோஷம்தான். பரம்பரை தொடர்கிறது என எண்ணிக் கொண்டார் போலும்.

இருப்பினும், வாழ்க்கை வெறுமையாகியது போன்ற உணர்வு. எத்தனை காலத்துக்குத்தான் முகட்டைப் பார்த்துக் கொண்டு பழம் பெருமைகளை இரைமீட்டுக் கொண்டிருப்பது? ஊரிலும் கொழும்பிலும் வாழ விரும்பாது அவருடைய மகள் கல்யாணி அவுஸ்ரேலியாவிற்கு புலம்பெயர்ந்து, சிட்னிவாசி யாகிவிட்டாள். அவளுடைய மகன்கள் இருவரும் நன்றாகப் படிக்கிறார்களாம். நீச்சல் குளத்துடன் கூடிய பெரிய வீடு; இரண்டு கார்கள் என ஏக தடல்புடல்களுடன் அவள் வாழ்வதாகவும் அறிந்தார். 'கடைசிக் காலத்தில் பால் பருக்குவதற்கு உங்கள் பேரர்களாவது பக்கத்தில் வேண்டாமா?' என்று பலவாறு எழுதி மாமாவின் மனைசக் கரைத்து விட்டாள் கல்யாணி. அவளுடைய வற்புறுத்தல் தாங்காமலும், மறைமுகமாகத் தனிமையும் வெறுமையும்

விரட்டியதாலும் இப்பொழுது விதானையார் மாமாவும் சிட்னிவாசியாகிவிட்டார்.

**மா**மாவைப் போலவே நாட்டு நிலைமையைக் காரணம் காட்டி பிள்ளைகளின் ஸ்பொன்ஸரில் (Sponsor) யாழ்ப் பாணத்து 'பென்சன்காரர்' பட்டாளமொன்றே சிட்னியில் வாழ்வதைப் பார்த்து மாமா விக்கித்துப் போனார். 'ஊரில் இவங்களை விலாசமாக யார் மதித்தவர்கள்?' Nobody யாக ஊரில் இருந்தவர்கள், சிட்னியில் Somebody யாக விலாசமிட்டு மின்னுவது மாமாவின் உள்ளூறை சுபாவத்தைக் கிளறிவிட்டது. ஊரிலே வாழ்ந்ததுபோல், தலைமைப் பதவிகளுடன் வாழ்வதுதான் விதானையார் மாமாவிற்கு மதிப்புத் தரும் என்று விஸ்வலிங்கம் மாஸ்டரும் தூண்டிவிட்டார். இதனால் சமூக அமைப்பின் தலைவராகும் ஆசை நாளடைவில் மாமாவின் உள்ளத்தில் விஸ்வரூபம் எடுக்கலாயிற்று.

கோயில் தர்மகர்த்தா பதவி மாமாவுக்கு அச்சொட்டாகப் பொருந்தும். அதில் அவரைவிட விண்ணன் சிட்னியில் யாருமில்லை. ஆனால் அதிலே இவருக்கு புரியாத சில புதிய சூக்குமங்கள் புகுந்து விளையாடுவது மாமாவுக்கு புதிசு. பிறப்பால் அவர் கோயில் மணியகாரன்! வீடு வீடாக எலெக்ஷனில் வெல்ல 'Proxy' கேட்டு அலைவது ஆண்டவன் திருப்பணியாகாதென விஸ்வலிங்கம் மாஸ்டரிடம், மாமா கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்.

மாமாவிலும் பார்க்க, மாமாவுக்குத் தலைவர் பதவி என்னும் 'தலைப்பா' கட்டிப்பார்க்க விஸ்வலிங்கம் மாஸ்டரே மூர்க்கமாக விரும்பினார். அவருடைய சுபாவமே அப்படி. கூட்டுறவு இயக்கம், ஆசிரியர் சங்கம் என்று ஊரில் அவருக்கு எலெக்ஷன் தண்ணீர்பட்டபாடு. அவர் எப்பொழுதும் பிரபல

யமான ஒருவரைத் தூண்டிவிடுவார்.

அந்த ஆள் வெற்றி பெற்றதும் தன் பிரயாசைகளுக்காக ஒரு சிறிய பதவியை 'தட்டிப்' பறித்துக் கொள்வார். திரை மறைவு அதிகாரங்கள் அவருக்குப் போதும். 'சுழியன்' என்றாலும் விஸ்வலிங்கம் மாஸ்டர் விபரம் அறிந்தவர்.

சிட்னித் தமிழர் கலாசார சங்கத்திற்கு அவுஸ்திரேலிய அரசு பல் இன பல்கலாசாரத்தை ஊக்குவிப்பதற்காகப் பண உதவி வழங்குகின்றது. அதிலே தலைவரானால் அரசாங்க மட்டத்திலும் அறிமுகம் கிடைக்கும், காலப் போக்கிலே பெரிய பதவிகளைப் பெற்றுக் கொள்வது சுலபமாகிவிடும் என்ற பல விஷயங்களை விளக்கி விதானையார் மாமாவை கோதாவில் இறக்கிவிட்டார் விஸ்வலிங்கம் மாஸ்டர். மாமாவின் பின்னால் பெரியதொரு அணி திரள்வதை பொறுக்கமாட்டாத எங்கள் ஊர் விசாலாட்சி மாமி மாமாவைப் பழிவாங்க இதுதான் தருணம் என எண்ணிக் கொண்டார்.

பழிவாங்கலின் பின்னணியை, நான் ஊரிலே கேள்விப் பட்ட கதைகளுடன் ஒப்பிட்டுப்பார்த்து விளங்கிக் கொண் டேன். மாமா, விதானையாராவதற்கு முன்னால், விசாலாட்சி மாமி பின்னால் சுற்றித்திரிந்தவராம். இருவரும் மனமொத்த காதலர்கள். ஊர் மணியகாரன் தனது மகளை சொத்துப் பத்து டன் மாமாவுக்கு கொடுக்க முன்வரவே சொத்துக் ஆசைப் பட்டு மாமா விசாலாட்சி மாமியை கைகழுவிவிட்டு பாக்கியம் மாமியை கட்டிக் கொண்டாராம். இதற்குப் பிராயச் சித்தமாக மாமாவின் தகப்பன் பெரிய விதானையார் விசாலாட்சி மாமிக்கு ஆசிரியர் வேலை வாங்கிக் கொடுத்து சிங்களப் பிரதேசத்துக்கு அனுப்பி வைத்துவிட்டதாகவும் ஊரில் பேசிக் கொண்டார்கள். விசாலாட்சி மாமியும் கனகாலம் கன்னியாக இருந்த பின்னர் தேயிலைக் கொம்பனியொன்றில் வேலை பார்த்த பரமரைக்கட்டிக் கொண்டு கொழும்பு வாசியாகி

விட்டார்.

இருவரும் சிட்னியிலேயே மீண்டும் சந்தித்துக் கொண் டார்கள். விசாலாட்சி மாமிக்கு இப்பொழுதும் கட்டுக்குலை யாத தேகம். கண்ணைச் சுழற்றி உடம்பைக் குலுக்கி 'பவிசு' காட்டுவதில் மகா கெட்டிகாரி. அவருடைய பிள்ளைகள் சிட்னி யில் நன்கு வேரூன்றி வாழ்பவர்கள். அத்துடன் தொண்டை யிலே வழுக்கிச் செல்லும் ஆங்கிலம் பேசும் வித்தையைக் கொழும்பு வாழ்க்கை அவருக்கு வாலாயமாக்கியது. கொழும் பில் எடுத்த றைவிங் லைசென்ஸுடன் சிட்னி வந்து, அதை லோக்கல் லைசென்ஸாக மாற்றி சிட்னியெங்கும் காரில் ஓடித்திரிபவர். விதானையார் மாமாவைக் காணும் பொழு தெல்லாம் வேண்டுமென்றே விசாலாட்சி மாமி ஆங்கிலத்தி லேயே பேசுவார்.

விதானையார் மாமாவிற்கு ஆங்கிலம் எழுதத் தெரிந் தளவுக்கு, பேசப் பறியாது. இன்னமும் தனது யாழ்ப்பாணத்து தற்பெருமை பேசுபவர். 'செட்டி'யை நம்பியே ஊரில் கார் வைத்திருந்தவர்.

மாமா பேசிய யாழ்ப்பாண தற்பொருமையை அவருக் கெதிரான துரும்புச் சீட்டாக மாற்றினார் விசாலாட்சி மாமி. யாழ்ப்பாண மிடுக்குடன் வாழ்ந்த மாமாவுக்கு எதிராகக் "கொழும்பார்" "யாழ்ப்பாணத்தார்" என்ற பிரிவினையைக் கிளப்பிவிட்டதுடன் கொழும்பு மணியத்தையும் களத்தில் இறக்கிவிட்டார். விசாலாட்சி மாமியின் சுறுசுறுப்பு - விவேகம் - நளினம் ஆகியவற்றிக்கு முன்னால் மாமாவின் மிடுக்குத் தோற்று போயிற்று!

கொழும்பு மணியம் எலெக்ஷனில் வென்றதாக அறிவித் தார்கள். பலத்த கரகோஷத்துக்கு மத்தியிலே, தலைவர் கதிரையில் வந்தமர்ந்தார் மணியம். இதைக்கூட மாமாவால் தாங்கிக் கொள்ள முடிந்தது. ஆனால் சடுதியாக விசாலாட்சி

மாமி தான் கொண்டு வந்த பொன்னாடையை விரித்து, மாமா பக்கம் திரும்பி இலேசான புன்முறுவலுடன், கொழும்பு மணியத் துக்கு சாத்தி, கைகுலுக்கி, வாழ்த்துக் கூறினார்.

அதுதான் விதானையார் மாமாவை சுட்டெரித்துச் சாம்பலாக்கியது.

நிலைமையை உணர்ந்த விஸ்வலிங்கம் மாஸ்டர் டாக்ஸியைப் பிடித்து மாமாவை வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்தார்.

அதிலிருந்து அவர் அறையிலே முடங்கிக் கிடக்கிறார் என்ற இரண்டாவது தகவல் கிடைத்த பிறகும், என்னால் சும்மா இருக்க முடியவில்லை.

**பி**ளமிங்டன் மதுக்கடையில் மட்டுமே கிடைக்கும் யாழ்ப் பாணத்து பனஞ் சாராயப்போத்தல் ஒன்றினை வாங்கி எடுத்துக் கொண்டு விதானையார் மாமா வீட்டுக் கதவைத் தட்டினேன்.

கல்யாணி வயிற்றில் பிறந்த, விதானையார் மாமாவின் பேரன், அவரைப் போலவே மிடுக்குடன் வந்து என்னை வரவேற்றான்.

'தாத்தா எப்படி இருக்கிறார்...?' என்று அவனைக் கேட்டு --- தன்னுடைய தமிழ் அறிவை நான் சோதிக்கிறேன் என அவன் நினைப்பான் என்றெண்ணி --- நாக்கைக் கடித்துக் கொண்டேன்.

'Thatha...? He is OK now. For the past two days, he is doing some research with the Tamil Yellow Guide!' என்று கூறியவாறே மாமாவின் அறைக்கு என்னை அழைத்துச் சென்றான்.

அறைக்குள் எட்டிப் பார்த்தேன். உண்மைதான்!

அந்த மஞ்சள் நிற, அவுஸ்ரேலிய தமிழர் விபரங்கள் அடங்கிய கைடேட்டில், சிட்னி தமிழர் அமைப்புக்களைப்

பற்றிய ஆராய்ச்சியில் மாமா ஈடுபட்டிருந்தார்.

காலங்களும் களங்களும் மாறினாலும், தமிழனுடைய குணம் மாறாது என்று என் மனதில் தோன்றிய நினைவினை மறைத்துக் கொண்டு, பனஞ்சாராயப் போத்தலைக் கவசமாகக் கைப்பற்றினேன்.

[கணையாழி (இந்தியா) செப்டம்பர் 2000]

2

# யாவரும் கேளிர்



முகுந்தனுக்கு ஏற்காட்டு மலையில் இருந்து மீண்டும் அழைப்பு வந்து இருந்தது.

மலையின் அடிப்புறத்தேயுள்ள நகரத்தில் இருந்து, வடக்கு நோக்கிச் செல்கிறது மலைப்பாதை. பல கொண்டை ஊசி வளைவுகள் கொண்ட இம் மலைப் பாதை இருபது கிலோ மீற்றர் நீண்டு

ஏற்காட்டை யடைகிறது. மலையில் ஆங்காங்கே அரசு வனத்துறைக்குச் சொந்த மான சந்தன மரங்கள். காட்டின் நடுவே உல்லாசம் விரும்பிகள் படகு விட்டுப் பொழுது போக்க பெரியதொரு ஏரியுண்டு. கடைத் தெருவையும் ஏரியின் விலா வில் அமைந்துள்ள பூங்காவையும் ஊடறுத்து நீளும் பாதை யூடாக, மேலும் ஐந்து கிலோ மீற்றர் பயணித்தால், செழித்து வளரும் தேயிலைத் தோட்டங்களை அடையாலம்.

தேயிலைத் தோட்டங்களின் நடுவே குத்துக்கல் போல் எழுந்து நின்ற ஆராய்ச்சி மையம், அந்த மலையின் வனப் பிற்குச் சற்றும் பொருத்தமில்லைத்தான். இருப்பினும், அங்கு வளரும் 'காசுப் பயிர்கள்' எதிர் நோக்கும் சவாலை நிவர்த்தி செய்ய அந்த நிலையம் அங்கு அவசியமாயிற்று. ஆராய்ச்சி நிலையத்தில் உள்ளவர்களுக்கு நவீன பயிற்சி அளிப்பதற் காகவே அவுஸ்திரே லியாவிலிருந்து முகுந்தன் வரவழைக்கப் பட்டிருந்தான். அவனுடைய சேவையால் பயனுற்ற மையத்தார் **மூன்றாவது** முறையாக முகுந்தனை மீண்டும் இந்தியாவுக்கு அழைத்திருந்தார்கள்.

ஏற்காடு என்றதும் முகுந்தனுக்கு முதலில் நினைவுக்கு வருவது அதன் வனப்பு மட்டுமல்ல, அங்கு வேலை செய்யும் முத்துசாமியும், அவன் தாயார் சிரத்தையுடன் இலங்கை மணம் கமழச் சுட்டுத் தரும் பால் அப்பமும் தான்! ஏற்காட்டில் பணிபுரியும் காலங்களிலே முகுந்தனுக்குக் காலை உணவாக முத்துசாமி வீட்டிலிருந்து பால் அப்பம் வர வேண்டும். இது ஆராய்ச்சி மையத்தினருக்கு அவன் போட்டிருந்த எழுதாத நிபந்தனை.

காலை ஆறரை மணிக்கெல்லாம், குளித்து, உடை யணிந்து விருந்தினர் விடுதியிலுள்ள முன்புற விறாந்தைக்கு முகுந்தன் வந்துவிடுவான்.

தேயிலைச் செடிகளினூடாகத் தவழ்ந்து வரும் இதமான

குளிர் காற்றை அனுபவிப்பது அவனுக்குப் பிடித்தமான தொன்று. அந்த நேரங்களிலேதான் முத்துசாமி அங்கு பால் அப்பத்துடன் வருவான். அவை மகிழ்ச்சியான வேளைகள்!

முகுந்தன் சடங்கு அநுட்டானமானதோர் அலாதி முறை யிலேயே பால் அப்பங்களைச் சாப்பிடுவான். அப்பத்தின் மொறு மொறுப்பான கரைப் பகுதியை மாசிக்கருவாடும், செத்தல் மிளகாயும், தேங்காயும் கலந்து இலங்கைப் பாணியில் இடிக்கப்படும் 'கட்டா' சம்பலுடன் முதலில் சாப்பிடு வான். நாக்கிலே காரச்சுவை சுள்ளிட, பாலிலே பொங்கி எழுந்த அப்பத்தின் மெதுவான நடுப்பகுதியை இரண்டாக மடித்து ஒரே அடுக்காக வாய்க்குள் திணித்து காரத்துடன் இனிப்புக் கலந்த விந்தைச் சுவையை சாவதானமாக அநுபவிப்பான்.

இந்த அப்பம் சாப்பிடும் படலத்தின் போதுதான் முத்துச் சாமி, முகுந்தனுடன் ஊர்ப் புதினங்களும், லோக்கல் பொலிட் டிக்ஸும் பேசுவான்.

**மு**த்துசாமியை முகுந்தனுக்கு இலங்கையிலேயே தெரியும். அது அந்தக் காலம்! இலங்கையின் தேயிலை, ரப்பர் தோட்டங்களிலே ஆங்கிலத்துரைக்கு விசுவாசமான — கீழ்ப் படிவுள்ள ஊழியர்கள் என்ற 'கியாதி'யை யாழ்ப்பாணத் தமிழர் பெற்றிருந்த காலம். இத்தோட்டங்களிலே கங்காணிக்கு மேற்பட்ட, துரைக்குக் கீழ்ப்பட்ட பதவிகளிலே யாழ்ப்பாணத் தவர்கள் அமர்ந்திருந்தார்கள்.

இலங்கையின் மலைநாட்டு நகரங்களுள் ஒன்றான இரத்தின புரியிலே செழித்திருந்த தேயிலைத் தோட்டம் ஒன்றில் முகுந்தனின் மாமா கணக்காளராகப் பணியாற்றினார். அந்த மாமாவின் வீட்டிலே தான் முதன்முதலில் முத்து சாமியை முகுந்தன் ஒரு சின்னப் பையனாகப் பார்த்தான்.

காலை நேரங்களிலே மாமாவின் வீட்டிற்கு முத்துசாமி அப்பம் கொண்டு வருவான். முத்துசாமியின் தாய் சுடும் அப்பம் அந்தத் தோட்டத்திலேயே பெயர் பெற்றிருந்தது. அப்பம் கொண்டு வரும் முத்துச்சாமி 'வந்தோம் போனோம்' என்கிற பையனல்ல. வீட்டிலே 'மயந்தி'க்கொண்டு நின்று அங்கு கிடைக்கும் பத்திரிகைகளையும் புத்தகங்களையும் ஆர்வ முடன் வாசிப்பான். அவனிடம் வளர்ந்திருந்த அந்த வாசிப்புப் பழக்கம் மாமாவுக்கு மிகவும் பிடித்திருந்தது. இதனால் அவன் மாமா வீட்டில் சுதந்திரமாக உலாவித் திரிவதற்கும், வேண்டிய சஞ்சிகைகள் புத்தகங்களைப் படிப்பதற்கும் மாமா அனுமதி கொடுத்திருந்தார். பிள்ளைகள் பரீட்சையில் குறைவான புள்ளிகள் எடுக்கும் போதெல்லாம், "உங்களைப் படிப்பிக்கிற நேரம் முத்துசாமியைப் படிப்பித்திருக்கலாம். அவனுக்குத் தான் படிப்பிலை எவ்வளவு கரிசனை..." என்று முகுந்தனின் மாமா அலுத்துக் கொள்வது வழக்கம்.

அந்தக் காலங்களில்தான் இலங்யைில் தோட்டங்கள் தேசிய மயமாக்கப்பட்டன. அதன்பின் யாழ்ப்பாணத்தவர்கள் அமர்ந்திருந்த பதவிகளில் சிங்கள இளைஞர்கள் வந்தமரத் தொடங்கினார்கள். முத்துசாமியின் தோட்டத்திற்கும் சிங்கள இளைஞன் ஒருவன் 'கண்டக்டராக' நியமிக்கப்பட்டான். கண்டிய உயர்குடியிலே செல்வத்துடன் பிறந்த அவனுக்கு திரித்துவக் கல்லூரியிலே கல்வி பயின்றும் படிப்பு ஏறவில்லை. அரசியல் செல்வாக்குடன் தேயிலைத் தோட்டத்தில் வேலை பெற்றுக் கொண்டான். பகலில் 'கண்டக்டர்' என்கிற பந்தாவில் தோட்டமெல்லாம் சுற்றித்திரிவான். இரவில் குடியும் கும்மாளமும் மட்டுமல்ல... அடியாட்களின் உதவியுடன், கொழுந்து பறிக்கும் குமரிகளின் குருத்து உடல் தேடும் வேட்டை... இதுக்கு இணங்கினாற்றான் கொழுந்து பறிக்கும் வேலைக்கு 'செக்றோல்' கிடைக்கும் என்பது போன்ற

அட்டகாசம்! இளைஞன் முத்துசாமியினால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. இதனைத் தோட்டத்திலே பிரச்சினை யாக்க முனைந்தான். இந்த எதிர்ப்புக் குரலை முளையிலே கிள்ள முந்தினான் 'கண்டக்டர்'. முத்துசாமியின் பெயர் 'செக்றோல்' எனப்படும் வேலை செய்வோர் பட்டியலிலிருந்து உடனடியாக நீக்கப்பட்டது.

வேலையற்று வெறுப்போடு சுற்றித் திரிந்த முத்துச் சாமியின் சேவையைத் தோட்டத் தொழிலாளர் சங்கம் இலகுவில் பெற்றுக் கொண்டது. அதன் பின்பு அவன் தோட்ட நிர்வாகத்துக்கு "வேண்டப்படாத ஆளாகவே" கணிக்கப்பட்டு இனக்கலவரம் வரும் பொழுதெல்லாம் 'ஸ்பெஷலாகவே' கவனிக்கப்பட்டான்.

எண்பத்து மூன்றாம் ஆண்டு இனக்கலவரம் வெடித்த போது காடையர் கூட்டமொன்று தோட்டத்தில் முத்துசாமியின் லயத்தையே முதலில் குறி வைத்துத் தாக்கியது. சிங்கள இளைஞனான கண்டக்டரே தனது ஜீப்பில் அடியாட்களைக் கொணடு வந்து குவித்திருந்தான்.

'அடே, கள்ள தோணி தெமிழ பயலே...

கண்டக்டர் துரையையா எதுக்கிற...

இப்பபாரு உன் யூனியன் உதவிக்கு வருதானு...!'

கொச்சைத் தமிழும் கெட்டவார்த்தைகளும் கலந்து கோஷமிட்டவாறே ஜீப்பில் இருந்த பெற்றோல் ஊற்றப்பட்டு முத்துசாமி வாழ்ந்த லயத்துக்கு தீவைக்கப்பட்டது. எரியத் துவங்கிய லயத்து வீட்டிற்குள் புகுந்து முக்கிய சாமான்களை எடுத்து, அவசர அவசரமாக வெளியே எறிந்து கொண்டி ருந்தாள் முத்துசாமியின் தங்கை. அதுவரை ஜீப்பினுள் அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த கண்டக்டர் அவளது மயிரைக் கொத்தாகப் பிடித்து ஜீப்பிற்குள் இழுத்து வந்தான். தடுக்கப் போன முத்துசாமி, அடியாட்களால்

நையப்புடைக்கப்பட்டு, கைகள் கட்டப்பட்ட நிலையில், தங்கயின் கற்பு ஜீப்பிற்குள் பறிபோனது. சிங்களவர் மத்தியிலே வாழ்ந்த தமிழர்கள் அனைவருமே அன்று அகதிகளாக்கப்பட்ட நிலையில் சிங்களப் பெரும்பான்மையை எதிர்க்கத் தோட்டத்தில் யாருக்கும் திராணி இருக்கவில்லை.

இப்படியெல்லாம் நடக்கும் என்று எதிர்பார்த்தோ என்னவோ, முத்துசாமி குடும்பம் ஸ்ரீமா --- சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா செல்ல முன்னரே அனுமதி பெற்றிருந்தது.

எண்பத்தி மூன்றில் மனிதம் வேரறுக்கப்பட்ட நிலையில் பல்லாயிரக்கணக்கான இலங்கைத் தமிழர்கள் பூமிப் பந்தின் பல்வேறு நாடுகளிலும் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தனர். இவ்வாறே இலங்கைத் தேயிலை ஆராய்ச்சி நிலையத்தில் பணிபுரிந்த முகுந்தனும் அகதிகளோடு அகதிகளாக அவுஸ்திரேலியா வந்து கன்பராவிலுள்ள அரச ஆராய்ச்சி நிறுவனமொன்றில் ஆராய்ச்சி யாளராக அமர்ந்தான். அவனுடைய விசேட ஞானத்தையும் அறிவுரைகளையும் இந்தியாவில் உள்ள ஏற்காட்டு ஆய்வு மையம் வேண்டிக் கொண்டது. அதன் நிமிர்த்தமே அவன் முதன் முதலிலே அங்கு வந்திருந்தான்.

ஏற்காட்டில் முத்துசாமியைக் கண்டதும் 'உலகம் எவ்வளவு சிறியது' என்று முகுந்தன் மகிழ்ந்தான். நீண்ட காலத்தின்பின் முத்துசாமி தன்னுடைய மனத்துயர் முழு வதையும் கொட்டித் தீர்த்து ஆறுதலடைந்தான். முத்துச் சாமியின் தங்கை பதினாறு வயது இளங்குருத்து இனக் கலவரத்தின் போது பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட பின், அவளுடைய உடல் வீதியிலே தூக்கி எறியப்பட்டதுடன், தந்தையும் உயிருடன் எரிக்கப்பட்டதாக சொல்லியழுதான்

முத்துசாமி.

'போதுமடா சாமி' என்ற மனநிலையிலேயே மூன்று தலைமுறைக்கு மேலாக வாழ்ந்து வளப்படுத்திய மண்ணில் இருந்து தாயுடன் வெளியேறி தனது மூதாதையர் 'அவதரித்த' புண்ணிய பூமி என்கிற கனவுகளுடன் தமிழ்நாட்டுக்கு வந்திருந்தான்.

இந்தச் சோகங்களின் மத்தியிலே மனித உறவுகளின் மென்பகுதியைத் தொடுவதுபோல பால் அப்பம் மீண்டும் முகுந்தனின் சுவைக்குக் கிட்டுவதாயிற்று.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்கிற உத்தம உறவைக் கற்பித்து, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பான நாகரீகம் பேணும் இந்த தமிழ் மண்ணிலே உனக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமையும் முத்துசாமி" என்று ஆறுதல் கூறி அவுஸ்திரேலியா திரும்பினான் முகுந்தன்.

**இ**ரண்டாவது தடவை முகுந்தன் ஏற்காட்டுக்குச் சென்றிருந்த பொழுது, புதிய தோட்டச் சூழலில் இலங்கையில் இருந்து மீண்ட தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளைச் சொல்லி முத்துசாமி குறைப்பட்டான்.

"ஐயா, நாங்க இங்க வேண்டப்படாத ஆளுக... எங்கள இங்க 'சிலோன்காரங்க' என்றுதான் சொல்றாங்க!

சிலோன்ல எங்கள 'இந்தியாக்காரன்னு' அடிச்சு விரட்டினான்.

இங்க எங்கள ஜாதியே தெரியாத சிலோன்காரன்னு மிதிக்கிறாங்க...! இதில என்ன சாமி ஞாயம் இருக்கு!"

இவ்வாறெல்லாம் சொல்லி மனம் நொந்தான்.

இந்த முறைப்பாடுகளிலிருந்த உண்மையைச் சில தினங்களி லேயே முகுந்தன் இனங்கண்டு கொண்டான்.

ஏற்காட்டிலில் உள்ள பெரும்பாலான தோட்டங்கள்,

சிங்கப்பூர் தமிழர்களுக்கு சொந்தமாக இருந்தன. அவர்கள் தமது செல்வத்தின் ஒரு பகுதியை இந்தத் தேயிலைத் தோட்டங்களிலே முதலீடு செய்திருந்தார்கள். இவர்களுள் பெரும்பாலானவர்கள் தேவர் ஜாதியைச் சேர்ந்தவர்கள். இதனால் அத்தோட்டங்களில் தேவர் ஜாதியைச் சோந்தவர் களுக்கு வேலை வாய்ப்புகளிலே முன் உரிமையும் முதன்மையும் கொடுக்கப்பட்டிருந்தது. தேவர் ஜாதியின் பெருமையையும் ஆதிக்கத்தையும் நிலைநாட்டுவதற்காகத் தோட்டத்தில் நியமனம் பெற்றவர் போல சுந்தரத் தேவர் அங்கு குரல் எழுப்பிப் பேசுவார். தலைமைக் கங்காணியாக அவர் ஏற்காட்டு தோட்டங்களிலே வலம் வருபவர். ஒரு சந்தர்ப்பத்திலே அவர் ஏற்காட்டிலுள்ள தேயிலைத் தோட்டங் களின் நிர்வாகக் குரலாகச் சில நியாயங்களை முகுந் தனுக்குச் சொன்னார்.

'இந்த தோட்டங்க தேவங்கட சொத்து... அவங்க எங்க பங்காளிக. சிலோன்காரங்க, அவங்க என்ன ஜாதின்னு சொல்லுங்க... சிங்கப்பூரில் வாழ்ந்தாலும் தேவங்க தேவங்க தான்...'

'தமிழனுக்கு தமிழன் உதவி ஒத்தாசையா வாழ வேண்டாமோ...?' என்று எச்சில் விழுங்கியவாறு முகுந்தன் கேட்டான்.

சுந்தரத் தேவருக்கு முகுந்தன் இலங்கையில் பிறந்தவன் என்பது தெரியாது. அவன் பேசும் யாழ்ப்பாணத் தமிழை வைத்து அவன் மலையாளத்தான் என்ற அனுமானம் அவருக்கு!

'தமிழன் அது இதுன்னு பேசுறதெல்லாம் அரசியல். அதை நம்ம கட்சித் தலைவங்க பாத்துக்குவாங்க... அவங்க, இன்னிக்கு 'இந்தியாக்காரன்' என்ற தேசியம் பேசுவாங்க... நாளைக்கு தமிழன்னு சொல்லி புறநானூறுக் கதை

சொல்வாங்க... அதெல்லாம் எலெக்ஷனுக்கு எலெக்ஷன், தொகுதிக்குத் தொகுதி மாறும். அதெல்லாம் கட்சித் தலைவங்க சமாச்சாரம். ஆனா, ஜாதி அபிமானம்தான் நமக்குப் பெரிசு... தேவன், மறவன்! அவனுக்காக நாங்க உசிரையும் குடுப்பம்!' என்று சுந்தரத் தேவர் முழங்கினார்.

அவருடன் நீதிநியாயம் பேசமுடியாதென மௌனமா னான் முகுந்தன்.

**ஆ**ராய்ச்சி மைய அதிகாரிகளுடன், பெட்டி தூக்கும் கூலியாக முத்துசாமி விமான நிலையத்துக்கு வந்திருந்தான். கவலை களினால் அவன் சடுதியாக மூப்படைந்திருப்பதாக முகுந்தனுக்கு தோன்றியது.

விருந்தினர் விடுதிக்கு வந்தவுடன் 'என்ன சேதி முத்துசாமி?' என அன்புடன் விசாரித்தான் முகுந்தன்.

'ஏதோ இருக்கேன் சாமி...' என்று கூறிய முத்துசாமி நீண்ட தொரு பெருமூச்சினை வெளிப்படுத்தி மௌனமானான். பின்பு எதையோ நினைத்துக் கொண்டவன்போல, 'நாளைக்கு நடக் கிற மீட்டிங்கில தான் சிலோன்ல இருந்து வந்திருக்கிற எங்க தலை விதியை நிர்ணயிப்பாங்க......' என்றான் விரக்தி இழை யோடிய புன்னகையுடன்.

முத்துசாமியை நேசத்துடன் பார்த்தான் முகுந்தன்.

படுக்கை அருகே பெட்டிகளை வைத்த முத்துசாமி முகுந்தனின் கைகளை இறுகப்பற்றியவாறே 'வீட்டில் எல்லாரும் சௌக்கியமா சாமி...?' என்றான்.

அப்பொழுது முத்துசாமியின் விழிகளில் துளிர்த்திருந்த கண்ணீர்த் துளிகளை முகுந்தன் அவதானிக்கத் தவற வில்லை.

மீண்டும் சந்தித்ததால் உணர்ச்சிவசப்படுகிறான் என்ற சமாதானத்துடன் தாராளமாகவே அவனது கைகளில்

பணத்தைத் திணித்துவிட்டு, "அப்பத்தை மறந்துவிடாதே," என்று நினைவூட்டினான் முகுந்தன்.

நேரமாற்றத்தின் காரணமாக அடுத்த நாள் மதியம் போலவே முகுந்தனால் எழுந்திருக்க முடிந்தது. வெளியே எட்டிப் பார்த்தான். தோட்டத்தில் பதட்டம் நிலவியது. ஆயுதம் தாங்கிய பொலீஸார் தோட்டத்து வீதிகளில் ரோந்து வந்து கொண்டிருந்தார்கள். ஆராய்ச்சி மையத்துக்கு அருகில் விருந்தினர் விடுதியை ஒட்டிக் கூட்டம் கூட்டமாக 'கசமுசா' வெனப் பேசிக் கொண்டிருந்தவர்களை பொலீசார் கலைத்துக் கொண்டிருந்தனர்.

முன்பக்க விருந்தையிலுள்ள மேசை மீது முத்துசாமி காலையில் கொண்டு வந்து வைத்த பால் அப்பங்கள் ஆறிக் குளிர்ந்திருந்தன. முகுந்தன் முத்துசாமியைத் தேடினான். காணவில்லை!

ஆராய்ச்சி மையத்திலே வேலை செய்யும் ராமசாமி முகத்திலே கலவரம் பரவ முகுந்தனிடம் வந்தார். அவர் சொன்ன விபரங்கள் முகுந்தனை உறையச் செய்தன.

தோட்டங்கள் நஷ்டத்தில் இயங்குவதனால் ஆள் குறைப்பு அவசியம் என்றும், இதனால் இங்கு பிறந்தவர்களுக் குத்தான் நிரந்தர வேலை என்றும் நிர்வாகம் அறிவித்ததாம். இலங்கைத் தமிழர் மறுவாழ்வுத்திட்டத்தின் கீழ் இந்தியா வந்து சேர்ந்தவர்கள் சிறிது காலத்திற்கு வேலையிலிருந்து நீக்கப்படுவார்கள் என்றும் நிர்வாகம் சொல்லியது. இந்த அறிவிப்பினை தேவர் ஜாதியினர் ஆரவாரமாக வரவேற்றுள் ளனர். அப்பொழுது முத்துசாமி எழுந்து ஏதோ நியாயம் கேட்டிருக்கிறான்.

'இந்த சிலோன்கார நாய்கள, யார்ரா இங்க வெத்திலை வைச்சு அழைச்சது...?' என்று சுந்தரத் தேவர் பல்லை நெறுமி யிருக்கிறார். அப்பொழுது தான் முத்துசாமி ஆவேசமாகப்

பேசினானாம்.

'இந்தத் தோட்டத்து முதலாளி சிங்கப்பூரில் இருக்கிற இந்திய வம்சாவழி. நானும் சிலோன்ல இருந்து வந்திருக்கிற இந்திய வம்சாவழிதான்... சிலோன்ல எங்கள இந்தியாக் காரன்னு உதைச்சு விரட்டினான். இப்ப நீங்க - தமிழன்களே --- எங்கள சிலோன்காரன்னு முத்திரை குத்தி ஒதுக்கிறது என்னா நாயம்...?' என்று கேட்டு முடிப்பதற்கிடையில் "மூடடா வாயை...! தோட்டம் தேவன்ர..., நாங்க தேவன்க... நீ யார்டா? ஜாதியே என்னன்னு தெரியாத பரதேசிப் பய..." என்றவாறே ஆத்திரத்துடன் பாய்ந்து சென்று அவனைச் சுந்தரத் தேவர் அடித்திருக்கிறார். அப்போ கூட்டத்தில் இருந்த தேவரின் கையாட்கள் சிலர், முத்துசாமியை மீட்டிங் நடந்த ஹோலுக்கு வெளியே தூக்கிச் சென்றார்களாம். அதற்குப் பிறகு முத்துச் சாமிக்கு என்ன நடந்ததெனத் தெரியா தென்றார் ராமசாமி.

பொலீஸ் ஜீப் ஒன்று சிவப்பு விளக்குடன் அங்கு வந்து நின்றது. அதிலிருந்து முத்துசாமியின் தாய் ஒப்பாரி வைத்த படி இறங்கினார். பொறுமையை இழந்தவனாக, இராமசாமி தடுத்தும் கேளாமல் முகுந்தன் வெளியே வந்தான். முகுந்தனைக் கண்டதும் முத்துசாமியின் தாய், அவன் காலடி யில் விழுந்து கதறி அழுதார்.


"தம்பி...! எம் மவனை இவங்க அடிச்சே கொன்னுட்டாங்க. நம்ம ரத்தம்... நம்ம பூமினு இங்க வந்தம்..." என்றவாறே காலடி யில் மயங்கிச் சாய்ந்தார் முத்துச்சாமியின் தாய்.

ராமசாமியின் உதவியுடன் அந்த முதிய தாயைத் தூக்கிக் கொண்டு வந்து, விடுதி விறாந்தையிலுள்ள வாங்கில் கிடத்தினான் முகுந்தன்.

வாங்கினருகே இருந்த மேசைமீது, முத்துசாமி காலை யில் கொண்டுவந்து வைத்த பால் அப்பங்களை கட்டெறும் புகள் மொய்த்திருந்தன![மலேசிய நண்பன் (மலேசியா) 25 ஜூன் 2000]

3

# கள்ளக் கணக்கு



சிவப்பு நிறத்தில் சீன அரச முத்திரை குத்திய கடிதம் ஒன்றைக் கையில் ஏந்திய படியே கதவைத் திறந்தாள் மகள்.

வீட்டில் ஒளிவு மறைவு எதுவும் இல்லை.

எனக்கு வந்த கடிதத்தை ஏற்கனவே குடும்பம் படித்து முடித்துவிட்டது. தகவல் அறிந்த மகள் எப்படியும் இன்று சாதித்து விடுவது என்று கங்கணங் கட்டிக் கொண்டாள்.

அவளுக்கு வயது பத்து. நீண்ட வயது வித்தியாசத்தில் அவள் பிறந்ததனால் வீட்டில் செல்லம்.

வேலையால் களைத்து வந்த நான் சோபாவில் இருந்த படியே சப்பாத்தைக் கழற்றினேன். சப்பாத்தை எடுத்து உரிய இடத்தில் வைத்தாள்.

மனைவி வேலையால் வந்தவுடன் எல்லோருக்கும் பொது வாகத் தயாரித்த தேநீர் ஆறிக் குளிர்ந்திருந்தது.

அதை 'மைக்கிறோ வேவில்' சூடாக்கி எனக்குத் தந்தவாறே, என் அருகே அமர்ந்து கொண்டாள்.

மகளின் சேவைகளை புன்னகையுடன் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள் எனது மனைவி.

நானோ எதுவும் பேசவில்லை. எதற்கோ மகள் அடி போடுகிறாள் என்பது தெரிகிறது.

"என்ன விஷயம் என்று சொல்லன்...!" என்றாள் மனைவி பொறுமையை இழந்தவளாக.

சீனாவில் இருந்து வந்த கடிதத்தை என்னிடம் நீட்டியவாறே, "நான் ஒரு நாளும் பிளேனிலை போனதில்லை... நீங்கள்தான் அடிக்கடி வெளிநாட்டுக்குப் போகிறியள். இந்த முறை நானும் வரப் போறன்" என்றாள் தமிழில். வீட்டில் தமிழ் பேசுவது எனக்குப் பிடித்தமானதொன்று என அவளுக்கு நன்கு தெரியும். தனது விருப்பங்களை நிறைவேற்றுவதற்கு இதையே அவள் தனது இறுதி 'அஸ்திரமாக' பாவிப்பதுண்டு.

நன்னிங் (Nanning) விவசாயப் பல்கலைக் கழகத்தில் இருந்து அக்கடிதம் வந்திருந்தது. அவுஸ்திரேலியாவின் சர்வதேசிய உதவி வழங்கும் திட்டத்தின்கீழ் சில விரிவுரை களை நடத்துவதற்குச் சீன அரசால் அழைக்கப் பட்டிருந்தேன்.

"இது உல்லாசப் பயணம் இல்லை. வேலை விஷயம்! நீ அங்கு என்ன செய்யப் போகிறாய்?" என்றேன் கடிதத்தை

மடித்து மீண்டும் உறையில் போட்டவாறே.

"அவளை ஒருக்கா கூட்டிக்கொண்டுதான் போங்கோவன். அவளும் பிறந்ததிற்கு அவுஸ்திரேலியாவை விட்டு வெளியே போகவில்லை. அவளைப் பாக்கிறதுக்கு வேணுமெண்டால் நானும் வாறன்," என்ற குண்டைத் தூக்கிப் போட்டாள் மனைவி.

இனி பேசிப் பயனில்லை!

மூவரின் பிரயாணத்திற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டேன்.

**கொ**ங்கொங்கூடாக பறந்து நன்னிங் விமான நிலையத்தில் இறங்கினோம். இது சீனாவின் தென் மாகாணங்களுள் ஒன்றான 'குவாங்செள'வின் தலைநகரம். இங்கு சீனாவின் சிறுபான்மை இனம் ஒன்று பெரும்பான்மை. ஆதலால் மட்டுப்படுத்தப்பட்ட சுயநிர்ணய உரிமையைப் பெற்றிருந்தார்கள். இருப்பினும் இங்கு நான் சந்தித்த நிறைவேற்று அதிகாரிகள் பலரும், மத்திய அரசால் அனுப்பப்பட்ட பெரும்பான்மை இனத்தவர்களே.

இம்மாநிலத்தின் பொருளாதார வளத்தை விமான நிலையமே எடுத்துக்காட்டியது. விமான நிலையத்தின் உள்ளும் புறமும் நிலத்தில் போடப்பட்ட சிகரெற் கட்டைகளும், இருக்கைக்குக் கீழே தட்டிவிடப்பட்ட சாம்பல்களும், குப்பைத்தொட்டியைச் சூழ விழுந்த எச்சில்களும், மகளின் எதிர்பார்ப்புக்கு மாறாக இருந்ததை முகத்திலே காட்டிக் கொண்டாள்.

மகளின் வகுப்பில் பல சீனர்கள் படிக்கிறார்கள். அவர்கள் கொங்கொங்கில் இருந்து அவுஸ்திரேலியாவிற்குக் குடி பெயர்ந்தவர்களாக இருக்கவேண்டும். பலர் பெரிய வீடுகளும் ஆடம்பரக் கார்களும் வைத்திருப்பவர்கள். ஏழைச்

சீனர்களை அவள் இதுவரை கண்டதே இல்லை. சீனர்கள் எல்லோரும் வியாபாரத்தில் பெரும் பணம் சம்பாதிப்பவர்கள் என்பதே அவளது எண்ணம்.

எனது பெயர் எழுதிய மட்டையுடன் சீனன் ஒருவன் காத்திருந்தான். அவனிடம் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன். தனது பெயர் 'லியொங்' என்றும், எமது நலன்களைக் கவனிக்க அமர்த்தப்பட்ட அதிகாரி என்றும் ஆங்கிலத்தில் கூறினான்.

விமானநிலைய சம்பிரதாயங்கள் முடிந்து விருந்தினர் விடுதிக்குச் செல்ல காலை பதினொரு மணியாகி விட்டது.

"ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். நான் எனது அலுவலகம் செல்ல வேண்டும். மதிய உணவின் பின் தூங்கிவிட்டு மாலை மூன்று மணிபோல் வருகிறேன்" என்றான் லியொங்.

"தூங்கிவிட்டா...?" என இழுத்தாள் மனைவி அதிகப் பிரசங்கித்தனமாக.

"சிறியதொரு குட்டித் தூக்கம்! காலை ஏழு மணிக்குத் தொடங்கினால் பன்னிரண்டு மணிவரை வேலை. பின்னர் வீடு சென்று மதிய உணவு உண்டபின் மாலை மூன்றுமணிவரை தூங்கிவிட்டு ஆறுமணிவரை வேலை செய்வோம். ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தொழிற்சாலைக்கும் அருகே வேலை செய்பவர்களுக்கென வீடுகள் கட்டிக் கொடுத்துள்ளார்கள். மதியம் தூங்குவதால் புத்துணர்ச்சியுடன் வேலை செய்ய முடிகிறது," என்றான் தனது கடிகாரத்தைப் பார்த்தவாறே. அவனுக்கு நித்திரை கொள்ளும் அவசரம்.

"இவர்கள் மதியம் என்ன உணவு சாப்பிடுவார்கள்..." தாயைக் கேட்டாள் மகள்.

"பிரதான உணவே சோறுதான். அதை அவர்கள் வெவ்வேறு வடிவில் சாப்பிடுவார்கள். நூடில்சும் அவர்கள்

விரும்பிச் சாப்பிடுவதுண்டு" என்றேன் மனைவி பதில் கூறமுன்பு.

"அப்படியானால் அப்பா வேலை செய்வதற்கு ஏற்ற இடம் சீனாதான்" என்றாள் மகள் சிரித்துக்கொண்டே.

மதிய உணவிற்குப் பின் குட்டித்தூக்கம் போடுவதிலே நான் மகா சுகம் காண்பவன். மத்தியான வெயில் ஆளைப்பொசுக்கும். வெளியே வேலைசெய்ய முடியாது. விடப்படும் மூன்றுமணித்தியால லீவு அவர்களின் வேலைத் திறனை அதிகரிக்கிறது. வெப்ப வலையத்திலுள்ள எல்லா நாடுகளிலும் இதை அவசியம் அமல்படுத்த வேண்டும் என, நித்திரைக்கு வக்காலத்து வாங்கினேன்.

சொல்லி வைத்தாற்போல் மீண்டும் மூன்றுமணிக்கு வந்தான் லியொங். வந்தவன், "வாருங்கள் கடைக்குப் போவோம். உங்களுக்கு சில பொருட்கள் வாங்க வேண்டும்" என்றான்.

"எமக்கு சாமான் வாங்கவா...?" வியப்புடன் கேட்டாள் மனைவி.

"எமக்கு எதுவுமே தேவையில்லை. தேவையானது எல்லாம் நாம் கொண்டுவந்தோம். மனைவிக்கும் மகளுக்குரிய செலவை நான் கொடுத்து விடுகிறேன்" என்றேன் கண்ணியமாக.

"நீங்கள் எதுவுமே கொடுக்கவேண்டாம். உங்கள் செலவிற்காக என்னிடம் பணம் தரப்பட்டுள்ளது. வாருங்கள் கடைத்தெருவிற்குப் போவோம்" என அவசரப்படுத்தினான்.

கார் ஒரு வித்தியாசமான கடையின்முன் நின்றது. அங்கு மற்றக் கடைகளில் இல்லாத எல்லா ஆடம்பரப் பொருட்களும் காணப்பட்டன.

"இந்தக் கடையில் சாமான் வாங்குவதானால் பிரத்தியேக சீனக்காசு கொடுத்தல்வேண்டும். அதற்குப் பெயர் RMB யுவான். வங்கியில் டொலரை மாற்றுவதன் மூலம்தான்

இதைப் பெறமுடியும். அரச விருந்தினர் வந்தால் அனுமதி பெற்று இப்பணத்தை வங்கியில் பெற்றுக்கொள்வோம்" என்றான் லியொங்.

"சீன மக்களிடம் இந்தப்பணம் புழங்காதா...?" மனைவி ஆர்வம் மேலிடக் கேட்டாள்.

"அவர்களிடம் சாதாரண யுவான்தான் இருக்கும். யாராவது டொலர் போன்ற மேற்குலகப் பணம் வைத்திருந் தால் அது எங்கிருந்து பெறப்பட்டது என்ற விபரத்துடன் வங்கியில் மாற்றிய பின்பே, இக்கடையில் வாங்கமுடியும். இந்த நடைமுறை விரைவில் நீக்கப்படவிருக்கிறது. நீங்கள் அடுத்தமுறை வரும்போது நேரடி யாகவே இக்கடைகளில் டொலரைக் கொடுத்துப் பொருள்களை வாங்கமுடியும்" என சீனாவில் வேறுபட்ட பணப் புழக்கத்துக்கு விளக்கம் கொடுத்தான் லியொங்.

கடைக்குள் அனைவரும் சென்றோம். கார்சாரதி கூடவே வந்தான். அவுஸ்திரேலியக் கடைகளில் சாதாரணமாக கிடைக்கும் அனைத்துப் பொருள்களும் அங்கு அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

எங்களை எதுவும் கேட்காமலே இரண்டு கூடைகளில் கார்சாரதியும் லியொங்கும் மளமளவென சாமான்களை எடுத்துப்போட்டனர். நெஸ் கபே, ஸம்பு, சவர்க்காரம், சுவிங்கம், சொக்கிளேற் எனப் பொருள்கள் கூடைகளில் நிரம்பி வழிந்தன.

பணத்தைக் கொடுத்தபின் சாமான்களை மூன்றாகப் பிரித்துப் பைகளில் போட்டான். ஒன்றை எனக்கு நீட்டினான்.

"இவை எதுவுமே எமக்குத் தேவையில்லை. நாம் வரும் போது கொண்டுவந்தோம்" என்றாள் மனைவி.

"இல்லை எடுத்துக் கொள்ளுங்கள்" என வற்புறுத்தினான் அவன்.

சுவிங்கத்தையும் சொக்கிளேற்றையும் மாத்திரம் மகள் எடுத்துக்கொள்ள மிகுதியை லியொங்கிடம் கொடுத்தேன்.

அவற்றில் உள்ளவற்றைப் பிரித்துத் தனது பையிலும் சாரதியின் பையிலும் போட்டுக்கொண்டவன் ஒரு பையை சாரதியிடம் கொடுத்தான். எங்களைப்பார்த்து சிரித்தபடியே தலையை ஆட்டி நன்றி தெரிவித்தான் கார்சாரதி. அவனுக்கு ஆங்கிலம் பேசத்தெரியாது.

மனைவிக்கோ இவனது செய்கைகள் மிகுந்த எரிச்சலை ஊட்டின. விடுதிக்கு வந்தவுடன் இதுபற்றிக் கேட்டாள்.

"உண்மைதான். எமக்கென ஒதுக்கப்பட்ட பணத்தில் தான் எல்லாவற்றையும் வாங்கிக்கொண்டான். மேற்குலக நாடுகளுக்கு சென்றால் எமக்குரிய பணத்தை எமது கையில் கொடுத்து விடுவார்கள். மொழி தெரியாத இடத்தில் இப்படியான ஒழுங்கீனம் நடப்பது இயற்கைதான். அவர் களுக்கும் இப்படியான பொருள்களை வாங்குவதற்கு இதுதான் சந்தர்ப்பம். இதில் உனக்கென்ன குறையப் போகிறது?"

"என்னதான் இருந்தாலும் இப்படி ஒரு ஊழலா...? என்னால் இதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை," என முணுமுணுத்தாள்.

இரவுச் சாப்பாட்டிற்கு நகரத்தில் உள்ள விலை உயர்ந்த றெஸ்ரோறன்ற்றுக்கே எங்களை அவன் அழைத்துச் செல்வான். அப்பொழுதெல்லாம் தன்னுடன் தன் கந்தோர் நண்பர்களையும் அழைத்துவருவான். சில சமயங்களில் அவனது 'நண்பிகள்' சிலரும் கலந்து கொள்வதுண்டு.

"நல்லவேளை! நாங்களும் வந்தது. இல்லாட்டில் இவங்களோடை என்ன கூத்தடிச்சிருப்பியளோ...?" நாள் பூராகவும் நச்சரித்தாள் மனைவி.

**வி**ரிவுரை தொடங்கிவிட்டது. லியொங்கும் எம்மை

அன்புடன் கவனித்து கொண்டான். கேட்டவை கேட்டவுடன் கிடைத்தன. இருப்பினும் எம்மை 'அந்த'க் கடைக்கு அழைத்துச்சென்று 'எமக்கு' என்ற சாட்டில் சாமான் வாங்குவதும், விலை உயர்ந்த றெஸ்ரொறன்ற்றுக்கு எம்மை அழைத்துச் சென்று தமது சகாக்களுடன் கும்மாளமடிப்பதும் ஏனோ எனது மனதை அரித்தது. நாட்டின் அபிவிருத்திக்கென வழங்கப்படும் பணம் இவ்வாறு செலவு செய்யப்படுவதற்கு நான் காரணமாக இருக்கிறேனோ என்ற எண்ணம் வாட்டியது. எப்படி அவனைக் கேட்பது என்ற தயக்கம்.

அன்றும் அந்தக் கடைக்குச் சென்று நிறையப் பொருள்களை வாங்கியிருந்தான் லியொாங். அதில் அரைப் போத்தல் விஸ்கியும் அடங்கும். சாரதியுடன் ஒரு மூலைக்குச் சென்ற லியொாங், போத்தலைத் திறந்து குடிக்கத் தொடங்கினான். என்னையும் அழைத்தான். மனைவி என்னைப் போகவிடாது பார்வையாலேயே தடுத்தாள்.

மகள் விடுதிக்குச் செல்லவேண்டுமென்று அடம் பிடிக்கவே அனைவரும் காரில் ஏறிக்கொண்டோம். வழக்கம் போலவே சுவிங் கத்தையும் சொக்கிளேற்றையும் எனது மகளிடம் கொடுத்தவாறே, "உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?" எனக் கேட்டான்.

"விரல்களை விரித்துக்காட்டி மூன்று" என்றாள் மனைவி.

"மூன்றா...?" வாயைப் பிளந்தான் லியொாங்.

"எனக்கு ஒரு பெண்குழந்தை மாத்திரம்தான் இருக் கிறது. ஆண் குழந்தையொன்று பெற்றெடுக்க ஆசைதான். ஆனால் எமது நாட்டின் 'ஒரு குழந்தை மட்டும்' சட்டம் அதற்கு இடம்தராது" என்றான் விரக்தி கலந்த தொனியில்.

"எதிர்பாராதவிதமாக இரண்டாவது குழந்தை கருத் தரித்தால்...?" அப்பாவியாக மனைவி கேட்டாள்.

"அந்தக் குழந்தையை அழிப்பதைத்தவிர வேறு

வழியில்லை. இரண்டாவது குழந்தை பிறந்தால் அதற்கு எதுவித அரச உதவியும் கிடைக்காது. பாடசாலைகளில் இடம், கல்விப் பணம் மற்றும் வேலைவாய்ப்பு போன்ற அனைத்திற்கும் அரசு உத்தரவாதம் அளிக்காது," என்றான் லியொங்.

"முதல்தரமே இரட்டைக் குழந்தைகள் பிறந்துவிட்டால் என்ன செய்வார்கள்...?" என மகள் கேட்டவுடன் அனைவரும் சிரித்துவிட்டோம்.

"இரட்டைக் குழந்தை பிறந்தால் அதிர்ஷ்டம்தான்! அதற்கு அரச சட்டத்தில் இடமிருக்கிறது. குடும்பத்தில் ஒரு குழந்தை மாத்திரம் வளர்வதால் அவர்கள் பரஸ்பரம் கொடுத்து வாங்கும் பழக்கும் அற்றவர்களாக வாழப் பழகுகிறார்கள். இது எதிர்காலத்தில் சுயநலம் மிக்க சமுதாயத்தை உருவாக்கும்" என்றன் லியொங்.

**வி**ஸ்கி தனதுவேலையைத் தொடங்கியிருக்க வேண்டும். அட்டகாசமாகச் சிரித்தவாறே லியொங்கும், சாரதியும் தமது மொழியில் ஏதேதோ பேசிக்கொண்டார்கள். வழக்கத்துக்கு மாறாக வேகமாகக் கார் ஓடிக் கொண்டிருந்தது.

சைரன் சத்தத்துடனும் சைகை விளக்குடனும் பின்னால் துரத்திவந்த பொலீஸ் வாகனம் எமது காரை மறித்தது.

இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இறங்கி வந்தார்கள். மதுவின் மணம் மூக்கைத் துளைக்கவே அதையும் பரிசோதித்து உறுதி செய்து கொண்டார்கள். குற்றப்புத்தகத்தை எடுத்து எழுத ஆயத்தமானான் பொலீஸ்காரன்.

அவசர அவசரமாக இறங்கிய லியொங் அவனுடன் பேரம் பேசத் தொடங்கினான். கையை அசைத்து உடம்பை ஆட்டி

உரத்த தொனியில் இருவரும் பேசிக்கொண்டனர். பாஷை விளங்கா விட்டாலும் லஞ்சத் தொகைக்கு பேரம் நடப்பதைப் புரிந்து கொண்டேன். இறுதியில் பணம் கைமாறியது.

பணத்தை வாங்கிய பொலீஸ்காரன், அரைவாசியை எண்ணி மற்றவனிடம் கொடுத்துவிட்டு மிகுதியைத் தன் தொப்பியின் உள்புறத்தில் மறைத்துக் கொண்டான். மற்றவனோ தனது பேஸை எடுத்தான். அதன் ஒரு பக்கத்தில் மாசேதுங்கின் படம் வைக்கப்பட்டிருந்தது. அதற்குப் பின்னால் காசை மூன்று, நான்கு பகுதியாக மடித்து மறைவாகச் செருகிக் கொண்டான்.

மனைவி அனைத்தையும் பீதி கலந்த முகத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் இன்னமும் உலகம் அடிபடாதவள்.

பயணம் தொடர்ந்தது. பொலீஸ் மறித்தபின் நிதானமாகவே காரை ஓட்டினான் சாரதி.

"கொம்மினிஸ்ட் நாடொன்றில் இப்படியெல்லாம் நடக்குமென்று ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை" என்றாள் மனைவி விடுதிக்கு வந்ததும் வராததுமாக.

"ஆடம்பரத்தை விரும்புவது மனித சுபாவம். இதை அனுபவிக்க அவனுக்கு வேறு சந்தர்ப்பம் கிடைக்காது... ஒன்றைமட்டும் கவனித்தாயா? ஊழலிலும் லஞ்சத்திலும் ஊறிப்போனாலும் அவன் சமத்துவத்தை மறக்கவில்லை. எமது கணக்கில் பொருட்களை வாங்கினாலும் சாரதியுடன் சமனாகப் பகிர்ந்து கொண்டானே..." என்ற என்னை இடைமறித்த மகள், "பொலீஸ்காரனும் கிடைத்த காசை சமமாகப் பிரித்துக் கொண்டதை கண்டீர்களா அப்பா?" என்றாள்.

"சீனாவிற்கு வெளியே வாழும் எந்தச் சீனனிடமும் இந்தப் பண்பைப் பார்த்திருக்கமாட்டாய். அவன் சுயநலம்

மிக்கவனாகவே இருப்பான்" என்று லியொங்கை நியாயப்படுத்த முயன்றேன்.

"கொம்மினிஸ்ட் தத்துவத்தின் எந்த அத்தியாயத்தில் இது சொல்லப்பட்டிருக்கிறது...?" என்று கேட்டாள் மனைவி குத்தலாக.

"கொம்மினிஸம் ஒரு முன்மாதிரியான தத்துவம். Ideal என வைத்துக் கொள்ளேன்! சீனா போன்ற நாடுகளில் கடைப் பிடிக்க முயல்வதெல்லாம் இதன் முதல்படியான சோஷலிசம் தான். Ideal ஆன ஒரு விடயத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவது கஷ்டம்..."

"அதனாலேதான் சோஷலிசம் தோல்வியைத் தழுவிக் கொண்டது போலும்!" என்றாள் மனைவி வாங்கிய சாமான்களை குளிர்ப்பெட்டிக்குள் அடுக்கியவாறே.

"சோஷலிசம் ஒருபோதும் தோல்வி அடையவில்லை. அதைக் கடைப்பிடித்த முறைதான் தோல்வியைத் தழுவிக் கொண்டது. ஊழல் லஞ்சம் என்று தலையில் அடித்துக் கொள்கிறாயே...? அவன் செய்த ஊழலில் உனக்கும் பங்கிருக்கென்பதை மறந்துவிட்டாயா?" என்றேன் மனைவி யின் வாயை அடக்கும் நோக்குடன்.

"எனக்கும் பங்கா...?" என்றாள் கோபம் பொங்க.

"உனக்கும் மகளுக்கும் செலவுசெய்யும் பணம் எந்த வகையில் அடங்கும்? உங்களுக்காக எழுதும் கள்ளக் கணக் குடன் அவனுக்கும் தோழர்களுக்கும் சேர்த்து எழுதட்டுமே" என்றேன்.

மறுகணம், நடைமுறை சோஷலிசம் பற்றிய சிந்தனை களிலே என் மனம் மூழ்கலாயிற்று.

[ஈழமுரசு (அவுஸ்திரேலியா) நவம்பர் 1999]

# 4

## சூக்குமம்



**இரா**ணுவ ஜீப் சடுதியாக அவர் முன் நின்றதும் சின்னக் கண்ணு திகைத்துப் போனார். ஜீப்பினுள் இருந்த 'முக மூடி' இளைஞன் தலையை ஆட்டவே, சின்னக்கண்ணுவின் முகத்தில் பளார் என ஒரு அறை விழுந்தது.

'உன் மகன் சந்திரன் "கொட்டியா" தானே...? சொல்லுடா!' சின்னக்கண்ணு மிடறு முறித்து பதில் சொல்வதற்

கிடையில் மீண்டும் பல அறைகள் விழுந்தன. அவருடைய மேலுதடு வெடித்து இரத்தம் வடியத் துவங்கியது. தலையில் கட்டிய துண்டை அவிழ்த்து வெடித்த இடத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டார்.

'சந்திரன் இருக்கிற புலிப்படை முகாம் எங்கையெண்டு உனக்குத் தெரியும் தானே...?'

சின்னக்கண்ணுவின் கட்டுக் குடுமியை இறுகப்பிடித்துத் தலையை மேலும் கீழும் ஆட்டி, முழங்காலை மடித்து நாரியில் பலமானதொரு உதைவிட்டான் இராணுவ கோப்ரல் ஒருவன். ஜீப்பின் பின்புற ஆசனங்களுக்கு நடுவே முகம் குப்புற விழுந்தார் சின்னக்கண்ணு.

இராணுவத்தால் சின்னக்கண்ணு கைது செய்யப்பட்டார் என்ற செய்தி கிராமமெங்கும் பரவியது.

**இ**ப்பொழுதெல்லாம் யாழ்ப்பாணத்தில் பொது மக்கள் கைது செய்யப்படுவது சாதாரண விஷயமே. ஆனால், அயல் கிராமங்களுக்கெல்லாம் மிகவும் வேண்டப்பட்டவராக வாழ்ந்த சின்னக்கண்ணு, இவ்வாறு கைது செய்யப்பட்டதை ஊர்மக்களாலே தாங்கிக் கொள்ள முடியவில்லை. இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டவர் எப்பொழுது திரும்புவார் என்பதை, யாரும் ஆருடம் கூற முடியாது. இந்த நிலையில், சின்னக்கண்ணு இல்லாமல் ஊரிலும் அயல் கிராமங்களிலும் அந்த வேலையை எப்படி ஒப்பேத்துவது என்பதுதான் அனைவரது கவலையும்.

**மா**தத்தின் முதலாவது சனிக்கிழமை 'உடையார் வளவு' எனப் பலராலும் அறியப்பட்ட அந்த தென்னந் தோப்பில்தான் சின்னக்கண்ணு தனது தொழிலை ஆரம்பிப்பார்.

அதிகாலையிலேயே உதவிக்கு இரண்டு மூன்று

எடுபிடிகளுடனும், உசார் ஏத்த அரைப் போத்தல் சாராயத் துடனும் தென்னந்தோப்பில் அவர் ஆஜராவார் என்பதை ஊர் அறியும். வெயில் ஏற ஏற கிராம மக்கள் தமது இளம் நாம்பன் மாடுகளுடனும், கடுவன் நாய்களுடனும் தோப்பில் குழுமத் தொடங்குவார்கள்.

தென்னந்தோப்பின் மேற்கு மூலையில் நன்கு காய்ந்து முறுகிய பூவரச மர விறகுகளும் தேங்காய் மட்டைகளும் கொண்டு நெருப்பு மூட்டப்பட்டிருக்கும். நெருப்பின் நடுவே நீண்ட வளைந்த கம்பிகள் நெருப்பு நிறம் பெற்றுக் கனன்று கொண்டிருக்கும்.

தோப்பின் நடுவே சடைத்து வளர்ந்த பலா மரம் ஒன்றுண்டு. அந்த மரம் இப்பொழுது காய்ப்பதில்லை. அதன் கீழே சாக் கொன்றை விரித்து சின்னக்கண்ணு அமர்ந்து கொள்வார். பழுப்பேறிய கிளாஸ் ஒன்றில் அளவாகச் சாராயத்தை ஊற்றி இடையிடையே உசார் ஏற்றிக் கொள்வார். அந்நேரம் அவரது எடுபிடிகள் சிறிதும் பெரிது மான கத்திகளை மணலும் கலவான் ஓட்டுப் பொடியும் சேர்ந்த கலவையை, தீட்டுக் கொட்டனில் போட்டு, கூராகத் தீட்டியெடுத்து சாராயப் போத்தலுக்கு அருகே உள்ள சாக்கில் வைத்து விடுவார்கள். சுருட்டொன்றைப் புகைத்து முடித்த பின் எழுந்து நின்று காளைகளைப் பார்த்தால், சின்னக்கண்ணு தனது தொழிலை ஆரம்பிக்கப் போகிறார் என்பது அர்த்தம்.

இரண்டு கருங்காலிப் பொல்லுகளை, ஒரு முனையில் 'ஸ்குறூ' ஆணி கொண்டு இணைத்த 'கிட்டி' யே அவருடைய தொழிலின் பிரதான ஆயுதம். சுத்தியல், ஆணி, குறடு போன்ற வற்றை ஒழுங்கு சீராக எவ்வாறு வேலையின்போது அவர் கையில் கொடுக்க வேண்டுமென்பதையும் எடுபிடிகளுக்குச் சின்னக்கண்ணு நன்கு பழக்கியிருந்தார்.

கிராமத்து விவசாயிகளிடம் மாட்டுப்பட்டிகள் உண்டு. பட்டியில் உள்ள மாடுகளை இனங்கண்டு அறிவதற்குக் குறியிடுதல் வேண்டும். சிவப்பேறி அடுப்பிலே கனன்று கொண்டிருக்கும் கம்பிகளைக் கொண்டு வெவ்வேறு வகையான குறிகளை அச்சொட்டாக வைப்பதில் சின்னக் கண்ணு நிபுணர். அந்த நேரங்களில் ஓவியம் தீட்டும் பக்குவம் அவர் விரல்களில் ஏறிவிடுவதுண்டு.

வண்டில் இழுக்கும் பருவத்தில் வளர்ந்து நிற்கும் காளைகளுக்குக் 'காய்அடித்தல்' வேண்டும். இதை சின்னக்கண்ணு தனது பாஷையில் 'நலமடித்தல்' என்பார். இது செய்வதால் காளைமாடுகள் 'பெலமேறி' ஒழுங்காக வேலை செய்யும் என்பது கிராமத்து விவசாயிகளது நம்பிக்கை.

காளைகள் ஒவ்வொண்ணும் வரிசைக் கிரமத்திலேயே கவனிக்கப்படும். முன்னம் கால்களும் பின்னம் கால்களும் வெவ்வேறாகச் சேர்த்துக் கட்டப்பட்டுக் காளைகளை நிலத்தில் விழுத்தி அமத்திப்பிடித்துக் கொள்வார்கள் எடுபிடிகள். சின்னக்கண்ணு பின்னங்கால்களுக்கிடையே தொங்கும் விதைகளைத் தமது 'கிட்டி'யால் நசுக்கிக் கலக்குவார். உபாதையில் காளைகள் போடும் கூப்பாட்டில் ஊரே வெடித்துவிடும். இதைப் பற்றி அலட்டிக் கொள்ளாது, பின்னர் நான்கு கால்களுக்கும் லாடன் அடித்து, பழுக்கக் காய்ச்சிய கம்பிகளால் அச்சொட்டாக விசேடக் குறிகளையும் போட்டுவிடுவார்.

வேலை 'அசுப்புசுப்பானதல்ல'. ஆனாலும் தனது பணி களை கனகச்சிதமாக முடித்த பின்னர், சுருட்டொன்றைப் பற்ற வைத்துக் கொள்வார். உபாதையில் நொந்து உடல் குன்றிப் போய் நடக்க முடியாமல் நிற்கும் காளைகளைச் சுருட்டுப் புகையை உறுஞ்சி வெளியே ஊதியபடி பெருமிதம் பொங்கப் பார்ப்பார் சின்னக்கண்ணு.

இந்தத் தொழில் வித்தைகளைச் சின்னக்கண்ணு தமது தந்தையிடமே எடுபிடியாகச் சேர்ந்து கற்றுக் கொண்டார். தனது மகன் சந்திரனுக்கும் இந்தக் குலவித்தையைக் கற்றுக் கொடுத்துவிட வேண்டுமென்பது அவருடைய ஆசை. 'பட்டணத்திலுள்ள மிருக வைத்தியரிடம் கொண்டுபோனால் எந்த உபாதையுமில்லாமல் செய்துவிடுவார், நீங்கள் செய்வது மிருக வதை' என்று சந்திரன் விவாதிப்பான். பன்னிரண்டாம் வகுப்புவரை படித்த அவன், தம்மை முற்போக்குவாதிகளென இனம்காட்டிக் கொண்டவர்களுடன் சிறிது காலம் சுற்றித் திரிந்தான். இப்பொழுது விடுதலை இயக்கத்தில் இருப்பதாக ஊரார் பேசிக் கொண்டார்கள்.

பட்டணத்தில் உள்ள ஒரேயொரு மிருக வைத்தியரிடம் ஊரில் உள்ள அனைவரும் சென்றால் அவரால் தனித்து இந்த வேலையை ஒப்பேத்த முடியாது என்பது சின்னக்கண்ணுவின் எதிர்வாதம். மிருக வைத்தியருக்கு வேறு வேலைகளும் உண்டல்லவா?

காளைகளுடன் மல்லுக்கட்டி முடிய மதியம் கழிந்து விடும். பசியைத் தாங்குவதற்காக எனச் சொல்லி இரண்டு போத்தல் தென்னங் கள்ளை வயிற்றுள் இறக்குவார். கள்ளும் சாராயமும் வயிற்றுள் கலந்து 'கிக்' ஏறும் நிலையில் தான் 'எடுபிடிகள்' கம்பிகளைச் சூடேற்ற மூட்டப்பட்ட அடுப்பி லிருந்து சுடுசாம்பல் கொண்டு வருவார்கள். அந்தக் கணமே அவர் கடுவன் நாய்களுடன் தனது கைங்கரியத்தைத் தொடங்குவார். குறுக்காகக் கட்டப்பட்ட இரண்டு தடிகளுக் குள் நாயின் தலையைக் கொடுத்து இறுக்கிப் பிடித்துக் கொள்வார்கள் 'எடுபிடிகள்'. நாயின் பின்புறத்தைத் தனது கால்கள் இரண்டுக்கும் இடையே விட்டு அமத்திப்பிடித்த வாறே, கூரிய கத்தி கொண்டு விதையை வெட்டிப் பிதுக்கி சுடு சாம்பல் பூசி விடுவார். ஊர் நாய்கள் இவரைக் காணும்

பொழுதெல்லாம் வாலைப் பின்னங்கால்களுக்கிடையில் மடித்து, கால்களைப் பதித்து உறுமிக் கொண்டு ஓட்டம் பிடிக்கும். சின்னக் கண்ணுவின் கைபடாத கடுவன்களோ காளைமாடுகளோ அந்த சுற்று வட்டக் கிராமங்களில் இல்லை. அவருடைய தொழில் மூலம் காளை மாடுகள் ஊனமுற்றதாகவோ, அன்றேல் நாய்கள் ஏற்பு வலி வந்து இறந்ததாகவோ சரித்திரமில்லை. அவரது கைராசி அப்படி. சுடுசாம்பல்தான் அவரது 'அன்ரிபயோட்டிக்'.

**ச**ந்திரன் அந்தப் பகுதியில் அரசாங்கத்துக்கு கரைச்சல் தரும் புலிகளுள் முக்கியமானவன். அவனுடைய அப்பன் சின்னக் கண்ணுவைப் பிடித்து அடிபோட்டு, ஆமி காம்பில் அடைத்து வைத்தால் இயக்க இரகசியங்களைக் கறக்கலாம் என்பது இராணுவத்தின் அனுமானம்.

ஒரு மாதத்திற்கு மேலாகியும் சின்னக்கண்ணு விடுதலை செய்யப்படவில்லை. அவரை வெளியே எடுப்பதற்கு சின்னக் கண்ணுவின் மனைவி இரவு பகலாக ஓடித்திரிந்தார். அப்போது புதிய நூற்றாண்டு தொடங்குவதற்கு சில நாட்களே இருந்தன. புதிய மெலேனியத் தொடக்கத்தில் நல்லெண்ணப் பிணையில் வெளியே எடுக்க முயற்சி செய்யலாம் என ஆலோசனை கூறினார் அந்த ஊர் 'பிரக்கிராசி'.

பிரக்கிராசியுடன் இராணுவமுகாம் போன உடையாரைக் கட்டிப்பிடித்துக் கதறி அழுதார் சின்னக்கண்ணு. கால்கள் அடித்து நொறுக்கப்பட்டு, நகங்களும் மயிர்களும் பிடுங்கப்பட்டு, சூடு வைத்த தீக் காயங்களுடன் நடக்க முடியாமல் அவர் போட்ட கூப்பாட்டில் உடையாரே அழுது விட்டார். விதைகள் வீங்கிய நிலையில் அவரால் ஒரு சொட்டுச் சிறுநீர்கூடக் கழிக்க முடியவில்லை.

"வாயில்லா ஜீவராசிகளுக்கு செய்த பாவம்தான்

உடையார், நான் இப்ப 'ஒண்டுக்கும்' இருக்கேலாமல் அவஸ்தைப் படுகிறன்" --- சிறுபிள்ளைபோல் தவழ்ந்து வந்து உடையாரின் காலைப் பிடித்தவாறே உபாதையில் அலறினார் சின்னக்கண்ணு.

'தொழில் தர்மம் என்று ஒன்றுண்டு சின்னக்கண்ணு, அதை மறந்து போனியோ...?' என்று ஆறுதல் கூறினார் உடையார்.

'மனிசனுக்கு மனிசன் விதையடிக்கிறதை நான் இங்கைதான் உடையார் பாத்திருக்கிறன். நான்தான் வாழ்ந்தனுபவிச்சனான். இளம் பெடியனுக்கும் 'இதை' செய்யிற கொடுமையை இங்கை என்ரை கண்ணாலை கண்டன். இப்பிடியம் இனத்தை அழிக்கலாம் எண்ட எண்ணத்தோடை தான், பெடியளை ஆமிக்காம்புக்கு அள்ளிக் கொண்டு வாறாங்கள்...!" உடைந்த குரலில் சின்னக்கண்ணு விக்கித் தள்ள, "சின்னக்கண்ணுவை வீட்டை கூட்டிக் கொண்டு போகலாமாம்...!" என்றவாறே இராணுவ கப்ரனின் அறை யிலிருந்து வெளியே வந்தார் பிரக்கிராசி.

உடையார் இளைஞனாக இருந்த போது அரசியல் கூட்டங்களிலே உரிமைக் குரல் எழுப்பியவர். "எத்தனை வழிகளிலே ஏகாதிபத்தியம் நமது இனத்தை அழிக்க முற்படுகிறது..." என்ற தடத்திலே உடையார் சிந்திக் கலானார்.


"வீடும்... வேதனையும்" என்று சின்னக்கண்ணு முணுமுணுத்தார்.

அவருடைய முணுமுணுப்பிலே ஆழ்ந்த தத்துவம் ஒன்று மறைந்து கிடப்பதாக உடையார் நினைத்தார்.

[இந்தியா டுடே 21 ஜுன் 2000]

## 5

# எலி புராணம்



"என்னப்பா எலிப் புழுக்கையோடை அரிசி வங்கிக் கொண்டு வந்திருக் கிறியள். இதை என்னெண்டு தவத்திறது...?" என்று புறு புறுத்தாள் எனது மனைவி. அவளுக்கு, வேலையால் வந்த களை! அத்துடன், சமையலை கெதியாய் முடித் தால்தான், மகளின் படிப் பைக் கவனிக்கலாம். அரிசி பருப்பு போன்ற உணவுப் பண்டங்கள் யாவும், இங்கு

கலப்படமின்றி மிகவும் சுத்தமாகக் கடைகளில் கிடைக்கும். கலப்படம் இருந்தால் 'பாவனையாளர் திணைக்களத்தில்' புகார் செய்யலாம். கடைக்காரர்களுக்கு பாரிய அபராதம் விதிக்கப்படும். எனவே வியாபாரிகள் இதில் மிகுந்த எச்சரிக்கையாக இருப்பார்கள்.

சுத்தமான அரிசியை இரண்டு தரம் சாட்டுக்கு தண்ணீரில் கழுவியபின் "றைஸ் குக்கருக்குள்" போடும் என் மனைவிக்கு இந்த எலிப்புழுக்கை பெரும் சவாலாக அமைந்தது.

"சுளகு இருந்தால் தாருங்கோ, நான் புடைத்துத் தருகிறேன்..." என்றார் எனது அம்மா. இரண்டு மாதங்களின் முன்புதான் என்னுடன் இருப்பதற்கு நிரந்த விசா அனுமதி கிடைத்து அம்மா சிட்னி வாசத்தை ஏற்றிருந்தார். அவர் ஒரு கைம்பெண்.

"இஞ்சை எங்கை மாமி சுளகு இருக்கு... கையாலைதான் பொறுக்க வேணும்" என்று கூறிய மனைவி, புதினப் பேப்பர் ஒன்றில் அரிசியைக் கொட்டிப் பரப்பினாள். மாமியும் மருமகளுமாக அரிசிக்குள் இருந்த எலிப்புழுக்கைகளைப் பொறுக்கத் தொடங்கினார்கள்.

"ஏனப்பா உந்தக் கரைச்சல்! அரிசியைத் தண்ணீருக்குள் போட்டால் நிறைகுறைந்த எலிப்புழுக்கை தண்ணீரில் மிதக்கும்." அரிசி தாழும். இலகுவாக பிரித்து விடலாம்...!" என்றேன். விஞ்ஞான பாடங்களிலே ஒரு கரை கண்டவன் என்ற தற்பெருமை எனக்கு.

"பாரம் கூடின புழுக்கை இருந்திட்டால் என்ன செய்யிறது?" இது எனது மனைவி. இப்படி எதிர்க் கேள்வி கேட்பாள் என்பது நான் சற்றும் எதிர்பாராதது. அவளும் விஞ்ஞானம் படித்தவள்.

"அரிசி மூட்டையை தமிழ்க்கடை ஒன்றிலைதான் வாங்கினான். திருப்பிக் கொடுத்துவிட்டுப் புது அரிசி

வாங்கலாம்..." என்று சொல்லிக் கொண்டே கராஜில் வைக்கப்பட்டிருந்த அரிசி மூட்டையின் வாயைக் கட்டிக் காருக்குள் ஏற்றும் பணியில் ஈடுபட்டேன்.

என்ன மாயம்? பக்கவாட்டில் இருந்த ஓட்டையில் இருந்து அரிசி நிலத்தில் கொட்டுண்ணத் தொடங்கியது. கூர்ந்து பார்த்தேன். ஓகோ, அரிசி முட்டையின் இந்த ஓட்டை எலியின் கைவண்ணம் என்பதில் சந்தேகமே இல்லை.

"கடைக்காரன் எலிப்புழுக்கையோடை அரிசியைத் தரேல்லை, இங்கை தான் எலி புகுந்து விளையாடி இருக்கு" என்ற விடயத்தை விபரமாகச் சொன்னேன்.

"இஞ்சையும் எலி இருக்குதோ...?" ஆச்சரியத்துடன் அம்மா கேட்டார். அவருக்கு எலித் தொல்லை, பாம்புத் தொல்லை, மனிதர் தொல்லை, செல்லடித் தொல்லை என எல்லாத் தொல்லைகளும் இலங்கையில்தான். அவற்றை எல்லாம் தொலைத்துவிட்டு அவுஸ்திரேலியாவில் குடியேறு வதற்கு நம்பிக்கையுடன் வந்தவர் அவர்.

"இங்கை மாமி எலி மட்டுமில்லை, கொக்குறோச், லிசேட், சிலந்தி எண்டு எல்லாப் பூச்சி பூரான்களும் இருக்கு. 'சமருக்கு' எத்தினை விதமான பூச்சியளைப் பார்க்கப் போறியள் எண்டு இருந்து பாருங்கோவன்" என அவுஸ்திரேலியாவின் சூழல், சுற்றாடல் பற்றிய தனது ஞானத்தினை சந்தர்ப்பத்தை நழுவவிடாது, என் மனைவி மெதுவாக அவிழ்க்கத் துவங்கினாள்.

"எலி கராஜிற்குள்தான் நிக்குது. கண்டபடி கதவுகளைத் திறந்து விடாதையுங்கோ. வீட்டுக்கை வந்திட்டால், இருக்கிற சாமான் எல்லாத்தையம் வெட்டிப் போடும்..." என்று குடும்பத் தலைவன் என்கிற, என் பொறுப்பைப் பறை சாற்றி விட்டு, இந்த எலியைக் கொல்வது எப்படி என்று சிந்திக்காலானேன்.

இந்த வீடு நான் 'Land com.' எனப்படும் அரச திணைக் களகத்திடம் காணிவாங்கிக் கட்டியது. முன்பு பண்ணையாக இருந்த பிரதேசத்தை பிரித்து எண்ணூறு சதுர மீற்றர் காணித் துண்டுகளாக விற்பனைக்கு விட்டிருந்தார்கள். எனது காணித் துண்டை நான் வாங்குவதற்கு முன்பு அது இயற்கையான நிலமா அல்லது சமீபத்தில் மண்கொட்டி நிரப்பப்பட்ட தரையா என்றெல்லாம் ஆராய்ந்து எந்தவிதப் பழுதுமற்ற காணியை வாங்கி வீடுகட்டியிருந்தேன். அப்பொழுது பூச்சி கறை யான்கள் தாக்காது இருக்கும் பொருட்டும் நிலத்தைப் பதனப் படுத்தியுமிருந்தேன். கட்டிய முதல் இரண்டு வருடங்களும் எந்த விதத் தொல்லையும் ஏற்படவில்லை. பின்பு கொஞ்சம் கொஞ்சமாக கொக்குறேச், சிலந்தி என்று தலைகாட்டத் துவங்கின. அவுஸ்திரேலியாவில் அதுகளைச் சமாளித்து வாழத்தான் வேணும். ஆனால் இப்பொழுது கூடவே எலியாரும் வந்து சேர்ந்திருக்கிறார். எலியைப் பெருக விட்டால் பெருநாசம் வந்து சேரும் என்ற எண்ணம் என்னைப் பிறாண்டியது. எலியை ஒழிச்சுக்கட்டிவிட்டுத்தான் மறுவேலை என்னும் ஆவேசத்தில் உடனேயே காரை எடுத்துக் கொண்டு 'சுப்பர் மார்க்கெற்'றுக்கு போனேன். கொக்குறேச் மருந்து களுடன் அங்கு எலி மருந்தும் அடுக்கப்பட்டிருந்தது. 'சீஸ்' போன்ற தோற்றமுடைய எலிப்பாஷாணம் ஒன்றை வாங்கி வந்து கராஜுக்குள் வைத்த பின்பே என்னால் மற்ற வேலைகளை நிம்மதியாக கவனிக்க முடிந்தது.

அடுத்த நாள் காலையில் என் வெற்றியை நோட்டமிட கராஜை ஆராய்ந்தேன். எதுவித அசுமாத்தையும் காண வில்லை. எலிப் பாஷாணத்தில் எலியின் முன் இரண்டு பல்லும் பட்ட அடையாளம் மட்டும் தெரிந்தது.

அடுத்த நாளும் எலித் தொல்லையின்றி விடிந்தது. தொலைந்தது தொல்லை என்று நிம்மதியானேன். எலிப்

பிள்ளை பாஷாணத்தைக் கடித்து எங்கேயாவது ஓடிப்போய் செத்திருக்கும் என்ற எண்ணம் எனக்கு சந்தோஷத்தைக் கொடுத்தது.

அன்று சனிக்கிழமை. சில நண்பர்களை சாப்பிட வரும்படி அழைத்திருந்தேன். சமையலைத் தொடங்கிய மனைவி கத்தினாள்.

"என்னப்பா, இஞ்சையும் எலிவந்திட்டுது. இஞ்சை பாருங்கோ, குசினி அலுமாரிக்குள் இருந்த செத்தல் மிளகாய் எல்லாத்தையம் வெட்டிப் போட்டுது. பருப்புக்குள்ளும் எலிப்புழுக்கை...!" என்று புராணம் ஒன்று பாடி முடித்தாள்.

"எவ்வளவு மிளகாய் வெட்டி இருக்கு... எலி உந்த குசினி அலுமாரிக்குள்தான் நிற்கும். எல்லா ரின்னையும் வெளியே எடுத்துப் போட்டுப் பாருங்கோ..." என்று அம்மா பரபரப்பு அடை யாமல் சொன்னார். அனுபவம் பேசியது!

தகரப் பேணிகள் முதல், எல்லாச் சாமான்களையும் வெளியில் எடுத்தோம். அம்மாவின் ஆரூடம் பொய்க்க வில்லை. எலி ஒன்று அலுமாரிக்குள் இருந்து பாய்ந்தோடி எனது மகள் இருந்த அறைக்குள் ஒளித்தது. மகள் சிறியவள். பத்து வயது. பூச்சி பூரான்களைக் கண்டால் மிகுந்த பயம். எலியைக் கண்டதும் கதிரைக்குமேல் ஏறி நின்றாள். எலியைப் பிடிக்கு மட்டும் இறங்க மாட்டேன் என்றும் அடம்பிடித்தாள். எப்படியாவது அவளின் கண்களிற்கு முன்னால் எலியைப் பிடித்தாக வேண்டும் என்கிற நிர்ப்பந்தம்.

சமையலைப் பிற்போட்டுவிட்டு, எலிபுகுந்த அறைக்குள் புகுந்து மூலைக்கு ஒருவராக தேடலானோம். கட்டில் கதிரையை அரக்கும் போது எலி ஒரு மூலையில் இருந்து இன்னுமொரு மூலைக்கு ஓடி எங்களுடன் கிளித்தட்டு விளையாடியது.

என் மூத்த மகன் ஒரு யோசனையை முன் வைத்தான்.

'வைக்கூம் கிளினரின்' (Vacuum Cleaner) முன்பக்கத் தைக் கழட்டிவிட்டு எலியை "சக்" பண்ணிப் பிடிக்கலா மென்றான் அவன். இது சாத்தியமில்லை என்று தெரிந்தும் ஒரு வேளை எலி பிடிபட்டுவிட்டால், என்ற நப்பாசையில் எதைச் செய்தாகிலும் எலியைப் பிடி என்று அவனை விட்டுவிட்டேன்!

முன் குழாய்த்துண்டை ஒரு கையிலும், அது பொருத்தப் பட்ட 'வைக்கூம் கிளினரை' மறு கையிலும் பிடித்துக் கொண்டு கட்டில், கதிரை என அவன் 'கருமே கண்ணாக' ஏறி இறங்கிக் குதித்தான். இறுதியில் தடுக்கி விழுந்து தனது காலையும், 'வக்கூம் கிளினரையும்" உடைத்துக் கொண்டதுதான் மிச்சம். எலி பிடிபடவே இல்லை.

அன்று இரவு வீட்டிற்கு வந்த விருந்தினரிடம் எதிர்பாராத ஒரு சந்தர்ப்பத்தில் எலித் தொல்லை பற்றி எடுத்துக் கூறப்பட்டது.

ஒவ்வொருவரும் ஒவ்வொருவகையான எலிபிடிக்கும் முறையை சிபார்சு செய்தார்கள்.

எப்பொழுதும் எதிலும் குறைகண்டு பிடிக்கும் நண்பன் ஒருவன், "என்னதான் உவங்கள் 'குவாறன்ரின்' என்று பிளேன் முழுக்க மருந்தடிச்சு, வாறவையைக் கரைச்சல் படுத்தி னாலும், இஞ்சை இருக்கிற பூச்சி பூரானை எந்தக் கடலிலை கொண்டு போய்க் கொட்டுறது? ஜேர்மனி எண்டால் இப்பிடியே? அங்கை ஒரு சிலந்தி பல்லியைக் காண மாட்டியள்...!" என்று அலுத்துக் கொண்டான்.

அவன் சமீபத்தில்தான் ஜேர்மனியில் இருந்து புலம் பெயர்ந்து வந்திருக்கிறான். அவனுக்கு எல்லாமே Made in Germany தான் திறம். பிறகு என்னத்துக்காக இங்கே வந்தவனாம்...?

குழந்தைப் பிள்ளையள் இருக்கிற வீட்டில் எலி

மருந்துகள் வைப்பது அவ்வளவு உசிதமில்லை என்றும், எலிப் பொறி வைப்பதுதான் நல்லதென்றும் மீண்டும் அம்மா ஆலோசனை வழங்கினார்.

அடுத்த நாளே நாலைந்து எலிப் பொறிகள் வாங்கி வந்து கடைக்காரன் சொன்ன ஆலோசனைகளில் இருந்து இம்மியும் பிசகாது எலி நடமாட்டமுள்ள முக்கிய இடங்களில் வைத்தேன்.

எலியோ மாட்டுவதாக இல்லை!

பொறிகளிலே 'சீஸ்' துண்டு வைப்பதிலும் பார்க்க, கருவாட்டுத் துண்டு வைத்தால் அந்த மணத்துக்கு எங்கிருந்தாலும் எலி ஓடி வரும் என்ற புதிய திருத்தத்தை அம்மா முன் மொழிந்தார்.

அம்மாவின் ஆலோசனைப்படி பக்கத்துத் தமிழ்க் கடையில் வாங்கிய "அறுக்குளா" கருவாட்டுத்துண்டுகள் ஒவ்வொரு எலிப் பொறியிலும் பொருத்தப்பட்டன.

எலியோ அகப்படவில்லை!

வீடு முழுவதும் கருவாட்டு வாசனை வீசியதுதான் மிச்சம்.

சில நாட்களாக எலியின் தொல்லை இல்லை. தன்பாட்டுக்கு வெளியில் போய்விட்டது என்று எண்ணினேன். வீட்டிலும் எலிபற்றிய பிரஸ்தாபம் குறைந்தது.

அந்தச் சந்தோஷம் அதிக நாட்கள் நீடிக்கவில்லை.

என் மனைவியின் சேலைகள் அடுக்கி வைக்கப் பட்டிருக்கும் அலுமாரிக்குள் இருந்து எலி ஒன்று பாய்ந் தோடியதைக் கண்டதாக எனது மகன் ஒருநாள் கூறினான்.

அவன் கூறியது பொய்யில்லை. நாலைந்து சேலைகளை எலி பதம் பார்த்திருந்தது. அதில் ஒன்றுக்கு மகத்தான Sentimental மதிப்பு இருந்தது. அந்தச் சேலையின் கோலத்தினைப்பார்த்து மனைவியின் கண்கள் பனிப்பதை நான் அவதானித்தேன்.

"இந்த வீட்டிலை மூன்று ஆம்பிளையளும் தண்டத் திற்குத் தான் இருக்கிறியள்! ஒரு எலியைப் பிடிக்க முடியவில்லை...!" எனக் கோபமும் அழுகையும் பொங்கக் கூறினாள் மனைவி.

பதினாலும் பதினைந்தும் வயதுடைய என் இரு மகன்களையும் முழு 'ஆண்பிள்ளைகளாக'க் கணக்கெடுத்தே அப்படி அவள் சாடியிருக்கிறாள், என்ற சூக்குமத்தினைப் புரிவதற்கு எனக்கு கொஞ்ச நேரம் எடுத்தது.

இந்த நேரத்தில் எனது மகள் அபயம் தரும் வகையில் ஒரு யோசனையைச் சொன்னாள். வீட்டில் ஒரு பூனையை வளர்த்திருந்தால் இற்றைவரையில் அது எலியைப் பிடித் திருக்கும் என்றாள். அவுஸ்திரேலியாவில் பிறந்து வளர்ந்த அவளுக்கு இப்படியானதொரு "பதிவு" எப்படி ஏற்பட்டதென்று முதலில் யோசித்தேன். சற்று சீரியஸாகவே விசாரணை நடத்தியதில் பல உண்மைகள் வெளியாயின. புலம் பெயர்ந்த நாட்டில் பிறந்து வாழும் அவள் தமிழையும் தமிழ்க் கலாசாரத்தையும் மறக்கலாகாது என்பதிலே வீட்டில் எல்லோர்க்கும் அக்கறை. இதனால் அவள் சனிக் கிழமை களிலே நம்மவர்களினால் நடத்தப்படும் தமிழ்ப் பாடசாலை களுக்கு சென்று வருகின்றனாள். அவளுடைய தமிழ் ஆர்வத்தைப் பெருக்குவதிலே அம்மாவும் தீவிரம் காட்டினார். தமிழ்ப்பாடத்திலே "பூனை எலி பிடிக்கும்", "நாய் வீட்டைக் காக்கும்" என்கிற அறிவை அவள் அங்கு பெற்றிருந்தாள். இதனால் பூனை வளர்த்தால் எலிப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும் என்ற முடிவுக்கும் வந்திருந்தாள்.

மகள் பூனை ஒன்றினை வீட்டிலே வளர்க்க ஆசைப் பட்டாலும், நாய், பூனை, முயல் போன்ற செல்லப் பிராணிகளை வீட்டிலே வளர்க்கத் தயங்கினேன். இவை வீட்டை அசுத்தப்படுத்தும் என்பது ஒருபுறமிருக்க, காலம் செல்லச்

செல்ல இவற்றைப் பராமரிக்கும் பொறுப்பும் என்னிடம் அல்லது எனது மனைவியிடம் வந்து பொறிந்துவிடும் எனவும் பயந்தேன்.

"நீங்கள் எல்லாம் பள்ளிக்கூடம், வேலை எண்டு போனால் ஒரு காக்கைக் குருவி கூட இஞ்சைவராது. அவள் ஆசையோடை கேட்கிறாள்; ஒரு பூனையை வாங்கிவிடன்! எலியும் பிடித்ததாகுது எனக்கும் ஒரு பராக்காகப் போகுது..." என்று எனது மகளுக்கு வக்காலத்து வாங்கினார் எனது தாயார். மிக மூத்ததும் மிக இளையதும் கூட்டணி சேர்ந்துவிட்டால் அதற்கு அப்பீல் கிடையாது என்பதைப் புரிந்து கொண்டேன்.

அடுத்த நாளே Pet Shop ஒன்றிற்குச் சென்று வடிவான பூனைக்குட்டி ஒன்றினை வாங்கிக் கொண்டு வீட்டிற்கு வந்தேன்.

மகளுக்கு அளவில்லாத சந்தோஷம். ஆனால் மகனுக்கு, தான்கேட்ட நாய் வாங்கித் தரவில்லை என்ற கோவம். பூனை வாங்கியதற்கு ஒரு காரணமிருந்தது. எலிக்கும் நாய்க்கும் என்ன சம்பந்தம்? நாய் எலி பிடிக்காதல்லவா!விஷயத்தைப் பக்குவமாக விளக்கியும் என் மகன் இரண்டு மூன்று நாள் முகத்தை நீட்டிக் கொண்டு திரிந்தான்.

செல்லப் பிராணிகள் கடையில் வாங்கிய பூனைக்குட்டி என்ற படியால் வீட்டின் சோறு கறிகளை சாப்பிடாமல், சண்டித்தனம் செய்தது. மீன் கறியுடன் சேர்த்துக் குழைத்தும் வைத்துப்பார்த்தார் அம்மா. ஊகூம்! பூனை அம்மாவின் அநுசரணையைச் சட்டை செய்யவே இல்லை. பூனையின் பட்டினிப் பரிதாபத்தை பார்க்க முடியாத என் மனைவி 'சுப்பர் மாக்கற்றில்" பூனைகளுக்காக விற்கப்படும் உணவு ரின்கள் சிலவற்றை வாங்கி வந்தாள்.

"பூனைக்கும் சாப்பாடு கடையிலை விக்குதோ..." என்று ஆச்சரியப்பட்டார் அம்மா.

நேரம் தவறாது எனது மகள் பூனைக்கு உணவு கொடுத்து, குளிப்பாட்டி தன்னுடனே வைத்துக் கொண்டாள். பூனை ருசி கண்டுவிட்டது. வயிறு புடைக்க உண்டுவிட்டு மகளின் கட்டிலின் ஒரு மூலையில் படுத்துக் கொண்டது.

என்னைப் போலவே அந்தப் பூனையும் நேரம் தவறாது சாப்பிட்டுவிட்டு ஒரு கவலையும் இல்லாமல் தூங்கி எழும்புவதாக, என் மனைவி என்னை சீண்டுவதற்கு, இது அரிய வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தது.

"பூனைக்கு உந்த கண்டறியாத சாப்பாடுகளைக் கொடுத்தால் எப்பிடி எலி பிடிக்கும்...? வயிறு பசிக்க விடவேணும்!" என்று அம்மா இடையில் புகுந்து என்னுடைய கௌரவம் மேலும் பாதிக்காதிருக்கப் பார்த்துக் கொண்டார்.

அம்மாவின் ஆலோசனைக்கு மரியாதை செய்வது போல் பூனைக்குச் சாப்பாடு குறைக்கப்பட்டது.

ஆனாலும் பூனை எலியைப் பிடிக்கவில்லை! எலித் தொல்லையும் குறைந்தபாடில்லை.

எலி பிடிப்பதெப்படி என்ற விடயத்தில் எனது விஞ்ஞான மூளையைக் கசக்கிப் பிழிந்து விட்டேன். இதற்காகப் பெரிய புத்தகங்களைக்கூடப் புரட்டிப் பார்த்தேன்.

"நீங்களும் ஒரு ஆம்பிளை... ஒரு எலி பிடிக்கத் தெரியவில்லை!" என்ற மனைவியின் குத்தல் கதைகள் எலி வர்க்கத்தின் மீதே தீராத வெறுப்பினை ஏற்படுத்தியது.

**அ**ன்றைக்கு எனக்கு வயிற்றுக் கோளாறு.

அதற்குமுன் தினம்தான் நண்பன் ஒருவன் வீட்டில் விருந்து. விருந்தை கனம் பண்ணுவது எனது சுபாவம். எனவே வெட்கம் பாராது வயிறு புடைக்க உண்டு மகிழ்ந்து

திரும்பினேன். படுத்திருந்த போது வயிற்றைக் கலக்கியது.

ரொயிலற்றுக்குப் போவதற்காக லைற்றைப் போட்டேன்.

ரொயிலற்றை ஒட்டியபடிதான் என் மகளின் அறையும் அமைந்திருந்தது.

நான் சற்றும் எதிர்பாராதவிதமாக அந்த எலி ரொயிலற் மூலையில் இருந்து ஓடி, பூனைக்கு மேலால் பாய்ந்து எங்கோ ஒளித்துக் கொண்டது.

பூனையும் கண்ணைத் திறந்து எலியைப் பார்த்த பின் மீண்டும் கண்ணை மூடிப் படுத்துக் கொண்டது. எனக்குப் பூனை மேல் படுகோவம். பூனைக்கு விரைவில் ஒரு வழிபார்க்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டே, வயிற்றின் அவசர அலைக்கழிவுக்குப் பணிந்தேன்.

**அ**ன்று சனிக்கிழமை. என்னுடைய பல்கலைக் கழகத்தில் பணிபுரியும் வெள்ளைக்கார நண்பன் ஒருவன் என்னைக் காண வந்திருந்தான். அவன் மிருக விஞ்ஞானத் துறையின் விரிவுரையாளன். அவன் வீடே ஒரு மிருகக் காட்சி சாலை போன்று காட்சியளிக்கும். அவ்ன் வரும் போது அவனுடன் கூடவே அவன் மிகவும் செல்லமாக வளர்க்கும் நாயும் வரும். அன்றும் வழக்கம் போல அவனுடன் நாயும் வந்திருந்தது.

நெருங்கிய சிநேகிதர்களை நான் என் வீட்டின் பின்புறமண்டபத்திற்கே கூட்டிச் சென்று கதைப்பதுண்டு.

நாம் இருவரும் பல்கலைக்கழக விடையங்களைப் பேசிக் கொண்டிருந்தோம். அவனது நாய் அவனுக்கு அருகே பின்னங் கால்களை மடித்து நிலத்தில் குந்தி இருந்தது. சுவரோமாக சயனத்தில் இருந்த எங்கள் வீட்டுப் பூனையைக் கண்ட நாய், இரண்டு தடவை உறுமியது.

“Stop it” என்றான் நண்பன். அடங்கிவிட்டது நாய்!

அம்மா இப்பொழுதெல்லாம் வீட்டில் சுதந்திரமாக பழக தொடங்கிவிட்டார். எனது மகளின் அறையிலேயே அவரும் படுத்துக் கொள்வார். பூனையும் வழக்கம் போலவே வயிறு முட்டத்தின்று விட்டு மகளுடன் படுத்துக் கொள்ளும்.

அம்மா தான் கொண்டுவந்த சீலையை மீண்டும் புரட்டி அடுக்கிக் கொண்டிருந்தார். வேர்வையும் குளிரும் சேர்ந்தால் வெள்ளைச் சேலையில் "கரும்பேன்" பிடித்துவிடும் என்பது அவரது கருத்து.

அலுமாரிக்குள் இருந்து வேறொரு பெட்டியை அம்மா அரக்கிய சத்தம் கேட்டது. கூடவே 'கிறீச்' என்ற சத்தத்துடன் எங்கள் வீட்டை ஆக்கிரமித்திருந்த அந்த எலி வெளியே ஓடி வந்தது. அம்மா சத்தமிட்டார். எலி பூனைக்கு மேலால் பாய்ந்தோடி நாம் இருந்த பக்கமாக ஓடி வந்தது.

எலியைக் கண்டதும் என் நண்பன் “Catch it” என்று தன் நாய்க்கு கட்டளையிட்டான்.

நாய் பாய்ந்தெழுந்து, ஓடியது!

மின்னல் வீச்சில் அது எலியைத் தன் வாயிலே கவ்வி, இரண்டு தடவைகள் தலையை ஆட்டிவிட்டு எலியை கீழே போட்டது.

எலியின் ஜாதகம் அத்துடன் முடிந்தது!

இவ்வளவு அமளிக்குள்ளும் எமது பூனை அரைக் கண்ணைத் திறந்து பார்த்துவிட்டு மீண்டும் ஆனந்த சயனத் தில் ஆழ்ந்தது!

"பார்த்தீங்களா...? உங்களைப் போலத்தான் நீங்கள் வாங்கிவந்த பூனையும்...! பூனையின்ரை அலுவலை இப்ப நாய் செய்யுது... வீட்டிலை உங்கடை வேலைகளையும் நானெல்லோ செய்ய வேண்டியிருக்கு...." என இடைக்கிடை

பிள்ளைகளைத் தானே் ரீயூஷனுக்கு கூட்டிக் கொண்டு போவதை, குத்திக்காட்டினாள் மனைவி.

**ஊ**ரில் பூனைகள் எலி பிடிக்கும். அது எல்லாருக்கும் தெரியும். ஆனால் அவுஸ்திரேலியாவில் பூனைகள் எலி பிடிப்பதில்லையோ...? தமிழ்ப்புத்தகத்தில் உள்ள 'வாசகம்' மறுபதிப்பில் நிச்சயம் திருத்தப்படல் வேண்டும்.

ஏனெனில் அது அவுஸ்திரேலியச் சூழலை மனங்கொண்டு எழுதப்பட்ட தமிழ் நூல்!

[வீரகேசரி (இலங்கை) 21 நவம்பர் 1999]

# 6

## அம்மா பையன்



'மெலேனியம் பக்' உடன் இரவு பகலாகப் போராடி வருகிறார் பேராசிரியர் சந்திரசேகரம். அவர் சிட்னி பல்கலைக் கழகம் ஒன்றின் கொம்பியூட்டர் துறைத் தலைவர்.

இந்த 'Y2K bug' பிரச்சனைக்கு ஒரு தீர்வு காணப்பட வேண்டும். எங்கும் எதிலும் தனது மூக்கை நுழைத்து ஆதிக்கம் செய்யும் கொம்பியூட்டர்,

புதிய மெலேனியத்தை தடை தாண்டி இயங்குதல் வேண்டும்.

இரு இலக்கங்களை மாத்திரம் கிரகிக்கப் பழகிய கொம்பியூட்டர் மூளை, ஆண்டு இரண்டாயிரம் தொடங்கும் போது அதன் இறுதி இரண்டு பூச்சியங்களையும் எப்படி இனங்கண்டு கொள்ளும்? ஆயிரத்து தொளாயிரம் என்றா அல்லது இரண்டாயிரம் என்றா?

"மெலேனியம்பக்" பிரச்சனைக்கு 'Software patch' ஒன்றைக் கண்டு பிடித்திருக்கிறான் அந்த வியட்நாமியன்...!" - என்ற கொம்பியூட்டர் தகவலுடன் வந்தமர்ந்தான் ரோனி. பேராசிரியரின் கீழ்ப்பணிபுரியும் அவன் அவரது வலக்கரம்.

"யார்...? பெங்லீ என்பவனா...? இதற்கு முன்பு 'Hardware bios' ஒன்றை அறிமுகம் செய்த அதே 'பெங்லீ தானா..." எனப் பேராசிரியர் ஆர்வம் காட்டினார்.

"அவனேதான். இவனைப் போல இரண்டு பேர் இருந்தால் ஓரிரு வருடங்களில் வியட்நாம், கொம்பியூட்டர் தொழில் நுட்பத்திலே கிழக்காசியாவை ஆட்சி செய்யத் தொடங்கி விடும். இவனை எங்கள் பல்கலைக்கழக ஆராய்ச்சி அணிக் குள் சேர்த்தால் என்ன...?" ரோனியின் கேள்வி.

"இது நடக்கக் கூடிய காரியமா ரோனி? வியட்நாமிய அரசைப் பற்றித்தான் உனக்குத் தெரியுமே...? அவனை நாட்டை விட்டு வெளியேற அவர்கள் அனுமதிப்பார்களா...? இரும்புத் திரை தகர்ந்தாலும், மூங்கில் திரை இருக்கவே செய்கிறது."

"சிறந்த முளைகளை ஆஸ்திரேலியாவிற்குள் கொண்டு வருவதற்கென்றே நம் நாட்டு குடிவரவுச் சட்டத்தில் பல வழி முறைகள் இருக்கின்றன. முதலில் 'பெங்லி'யை மையமாக வைத்து வியட்நாமுடன் ஒரு ஆராயச்சி உடன்படிக்கையில் கைச்சாத்திடு வோம்..." எனத் தீர்வுக்கு வழி சொன்னான் ரோனி.

வியட்நாம்!

பெயரைக் கேட்கும் பொழுதெல்லாம் பேராசிரியரின் முகத்தில் ஒரு சலனம் தோன்றி மறையும்.

அமேரிக்காவின் சர்வதேசப் போலீஸ்காரச் சண்டித் தனத்தை நிராகரித்து நிமிர்ந்த நாடு அது. கொம்பியூட்டர் புலியாக உலகின் மூலைமுடுக்கெல்லாம் சுற்றிய பேராசிரியர், ஏனோ அங்கு செல்வதை மட்டும் தவிர்த்து வந்தார்.

பெங்லீயைப் பற்றிய சகல விபரங்களையும் சேகரித்துக் கொண்டு மறு நாளே பேராசிரியரிடம் வந்தான் ரோனி. அதுதான் ரோனி. ஒரு விடயத்தை எடுத்தானாகில் முடிக்காது விடமாட்டான். தீவிர நாட்டுப்பற்றுள்ளவன்.

வியட்நாமுடன் E-Mail தொடர்பு கொண்டார் பேராசிரியர்.

பேராசிரியருடன் கூட்டுச் சேர்வதில் தமது அரசு பெருமை கொள்வதாகவும், அவரது வரவை மிகவும் எதிர்பார்ப்ப தாகவும் பதில் அனுப்பியிருந்தார்கள் வியட்நாமிய அதி காரிகள்.

அடுத்த வாரமே 'கோசிமிங்' நகர விமான நிலையத்தில் வந்திறங்கினார் பேராசிரியர். அவரைக் கௌரவிக்கும் வகையில் சில மூத்த வியட்நாமிய அதிகாரிகளும், மொழி பெயர்க்கவென ஒரு இளம் பெண்ணும் வந்திருந்தார்கள்.

சம்பிரதாய வரவேற்புகள் யாவும் முடிவடைந்த பின்னர், வியட்நாமிய கொடி பொருத்தப்பட்ட நீண்ட Ford கார் ஒன்றில் ஏறிக் கொண்டனர்.

வியட்நாமிய மண்ணில் அமேரிக்க வாகனத்தை எதிர்பார்க்காத பேராசிரியர் 'அமேரிக்க பொருள்கள் மீண்டும் வியட்நாமிற்குள்ளா...?' எனக் கேட்டுவிட்டார்.

"நாம் அமேரிக்க அடக்குமுறையையும் அத்து மீறல்களையும் தான் எதிர்த்தோம். தொழில் நுட்பம்

மீறல்களையும் தான் எதிர்த்தோம். தொழில் நுட்பம் எங்கிருந்து வந்தாலும் அதை வரவேற்போம். ஏன்...? அமேரிக்க 'ஹாவார்ட்' பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற உங்களை நாம் இப்போது வரவேற்கவில்லையா....?" என்றார் அரசில் இருந்த மூத்த வியட்நாமிய அதிகாரி புன்சிரிப்புடன்.

யுத்தத்தின் தாக்கம், வியட்நாமிய திறந்த பொருளாதாரக் கொள்கை, ஒன்றுபட்ட வியட்நாமிய மக்கள் வாழ்க்கை முறை பற்றிய பேச்சுக்களிடையே, தான் ஆறு வருடங்கள் ரஷ்ய 'லுமும்மா' பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றதையும் சொல்லி வைத்தார் பேராசிரியர்.

"நீங்கள் எங்களருகே மிகவும் நெருங்கி வந்து விட்டீர்கள். இங்குள்ள பெரும்பாலான அதிகாரிகள் ரஷ்யா போன்ற சோஷலிச நாடுகளில் படித்தவர்கள். அமேரிக்கா தென்வியட்நாமை விட்டு வெளியேறியபோது, இங்கிருந்த புத்தி ஜீவிகளும் பணக்காரர்களும் அமேரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் குடியேறி விட்டார்கள். இவர்களது இடத்தை நிரப்ப வடக்கிலிருந்து வரவேண்டிய தாயிற்று" என்றார் காரின் முன் சீற்றில் அமர்ந்திருந்த வியட்நாமிய அதிகாரி.

அமேரிக்க Ford கார் வியட்நாமிய சாலையில் சீராகவே ஓடிக் கொண்டிருந்தது. அன்று ஞாயிற்றுக் கிழமையாக இருந்த போதிலும் கடைகள் திறந்திருந்தன. மக்கள் சைக்கிள்களிலும், மோட்டர் சைக்கிள்களிலும் வீதியில் வழிந்தார்கள். முழுக்குடும்பமும் ஒரு மோட்டார் சைக்கிளில் பயணம் செய்யும் அதிசயத்தை ஆச்சரியத்துடன் பார்த்தார் பேராசிரியர்.

'சிக்னல் லையிட்' நிறம் மாறும் போது அலை அலையாக சைக்கிள்கள் செல்வதை வீடியோ கமராவில் பதிவு செய்து கொண்டே, "ஆஸ்திரேலியாவில் சைக்கிள் செய்வதற்கென

பிரத்தியேகப் பாதையுண்டு. நெடுஞ்சாலைகளில் சைக்கிள் செல்வதை காணவே முடியாது" என்றார் பேராசிரியர்.

"வியட்நாமிலுள்ள ஒவ்வொரு சைக்கிளுக்கும் பதிலாகக் கார் வைத்திருந்தால் இந்த வீதி எப்படி இருந்திருக்கும்?" எனக் கூறிச் சிரித்தபடியே, "வியட்நாமின் ஜனத்தொகைக்கு சைக்கிளே பொருத்தமானது. சூழலும் மாசுபடாது" என்றாள் மொழிபெயர்ப்புப் பணிக்கு வந்த பெண்மணி. அவள் கூடவே இருந்தபோதிலும், அதிகாரிகள் அனைவரும் தட்டுத்தடுமாறி, ஆங்கிலத்திலேயே பேசினார்கள். வீம்பு பாராட்டாது சகஜக மாகப் பழகிய அவர்களைப் பேரரிசிரியருக்குப் பிடித் திருந்தது.

நீண்ட அமைதியைக் கலைக்கத் கார் ஓட்டி றேடியோ கசெற்றை தட்டிவிட்டான். வியட்நாமிய புல்லாங்குழல் இசை காரை நிறைத்தது. இந்த இசை பேராசிரியருக்கு மிகவும் பிடித்தமானது. சிட்னியில் அடிக்கடி அவர் வியட்நாமிய புல்லாங்குழல் கசெற் ஒன்றைப் போட்டுக் கேட்பார். தனது மேஜை லாச்சிக்குள் பூட்டிப் பாதுகாக்கும் பொருட்களுள், இதுவும் ஒன்று.

ஹொட்டல் போட்டிக்கோவில் பணியாள் கார் கதவை திறந்து மேனாட்டுப் பாணியில் பவ்வியமாக வரவேற்றான்.

"அமேரிக்காவின் அதிகாரம் தென்வியாட்டாமில் வியாபத்திருந்த காலத்தில், அமேரிக்க அதிகாரிகளும் விருந்தினர்களும் இந்தக் கட்டிடத்தில் தான் தங்குவார்கள். அவர்கள் வெளியேற்றப்பட்ட பின்பு இதற்கு 'Victory Hotel' என பெயரிடப்பட்டுள்ளது. இது நமது வெற்றிச் சின்னங்களுள் ஒன்று! இதில் உங்களை இப்பொழுது தங்க வைப்பதில் பெருமைப்படுகிறோம்" என்ற வியட்நாமிய அதிகாரி, அவருடன் அவரது அறைவாசல் வரை வந்தபடியே, "நாளைக்காலை இங்கிருந்து முன்னூற்று அறுபது கிலோ

மீற்றர் தூரம் பிரயாணம் செய்தல் வேண்டும். Dac Lac என்பது பிரசித்தி பெற்ற நகரம். அங்குதான் பெங்லீ வேலை செய்யும் கொம்பியூட்டர் மையம் இருக்கிறது. அதுவரை ஒய்வு எடுத்துக் கொள்ளுங்கள். இங்கு நீங்கள் விரும்பும் உணவுகளைப் பெற்றுக் கொள்ளும் வசதி உண்டு" எனக் கூறி விடைபெறத் தயாரானார்.

"காரில்தான் பயணம். இங்குள்ள வீதிகள் ஆஸ்திரேலியா மாதிரி இல்லை. பயணம் குறைந்தது எட்டு மணி நேரம்..." இதமாக நகைத்தவாறே மொழி பெயர்க்க வந்த இளம் பெண் சொன்னாள்.

**தி**ட்டமிட்டபடி, மறுநாள் காலை Dac Lac நகரை நோக்கிப் பயணமானார்கள். மலையும் மலை சார்ந்த பகுதிகளினூடாக வியட்நாமிய தேசியக் கொடியுடனான கார் ஓடிக் கொண்டிருந்தது.

வீதியில் சிறுவர் சிறுமியர் பாடசாலைக்கு சென்று கொண்டிருந்தனர். அவர்கள் தமது கழுத்தில் சிவப்பு நிறத் துண்டொன்றைக் கட்டியிருந்தனர்.

"விடுமுறையின் பின்பு இன்றுதான் பாடசாலை மீண்டும் துவங்குகிறது. நாம் இன்னமும் 'கோசி மிங்' தத்துவங்களை மறந்துவிடவில்லை. அதன் சின்னம்தான் அவர்கள் கழுத்தில் அணிந்திருக்கும் சிவத்தப் பட்டி" என கூறிய வியட்நாமிய அதிகாரிக் காரை சாலை ஓரமாக நிறுத்துமாறு கூறினான்.

"இப்பொழுது பழக் காலம். உலர் வலய பழங்களை உண்டுபாருங்கள். இங்குள்ள குறை இவற்றைப் பதப்படுத்தும் தொழில் நுட்பம் இல்லாததே. இதற்கு ஆஸ்திரேலியா போன்ற நாடுகள்தான் உதவவேண்டும்" என்று கூறியவாறே மொழி பெயர்ப்புப் பெண்ணுடன் சாலையோரம் இருந்த பழக் கடைக்குச் சென்றான் கூடவந்த வியட்நாமியன்.

காற்றில் கலந்து வந்த பழ மணங்களும், வீதியோரக் கடைகளும், ஆங்காங்கே தேங்கிநிற்கும் மழைத்தண்ணீரும், பரவலாகப் போடப்பட்ட குப்பை கூழங்களும், சைக்கிள் மணி அடித்தவாறே விரைந்து செல்லும் மனிதக் கூட்டங்களும், இடையிடையே கேட்கும் ஹோரன் சத்தங்களும், பேராசிரி யருக்குத் தாம் பிறந்து வளர்ந்த கிராமத்தை நினைவூட்டியது. பாட சாலைக்குச் சென்ற பள்ளிச் சிறார்கள் திறந்திருந்த கார்க் கதவினூடாகப் பேராசிரியரை எட்டிப்பார்த்துச் சிரித்தார்கள். சிறு குழந்தை ஒன்று தட்டுத் தடுமாறி ஓடிவந்து சாலை ஓரத்தில் அசிங்கம் பண்ணியது. இதைக் கண்ட தாய் விரைந்து வந்து குழந்தையை சுத்தம் பண்ணுவதில் ஈடுபட்டாள்.

கிராமிய இயற்கைச் சூழலில் வியட்நாமிய குழந்தை களைக் கண்டதும் பேராசிரியரின் மனசிலே சிந்தனைச் சலனங்கள். கண்களை மூடி ஒரு நீண்ட பெருமூச்சை வெளியில் விட்டார். அவருக்கு எல்லா சம்பத்துக்களுமே இருந்தன. ஆனால், வாரிசு என்று சொல்லக் குழந்தை இல்லை. சாத்தியமும் இல்லை. இதனை மறப்பதற்கான வடிகாலாகவும் தீவிரமான கம்ப்யூட்டர் ஆராய்ச்சி உதவியது.

பழங்களடங்கிய பையொன்றை பேராசிரியரின் மடியில் வைத்தாள் மொழிபெயர்ப்புப் பெண்மணி. நினைவுகளில் இருந்து தன்னைச் சுதாரித்துக் கொண்டவராகப் பழங்களைச் சுவைக்கலானார். றம்புட்டான், லச்சி, லொங்கான் போன்ற பழங்கள் அவர் முன்னரே சுவைத்தவை. சில பழங்கள் அவருக்குப் புதியன. உலர் வெப்ப வலயத்தில் அவை விளைந்ததனால் அவை அனைத்துமே அதிக சாறு கொண்டவையாக இருந்தன.

Dac Lac நகரை நெருங்க நெருங்க குளிர்காற்று வீசத்

தொடங்கியது. வீதியின் இருமருங்கும் நீண்டுவளர்ந்த ரப்பர் மரங்களும், காய்த்துக் குலுங்கும் கோப்பிக் கன்றுகளும் அப்பகுதிக்கு வனப்பூட்டின.

"இப்பிரதேசம் மலைப்பகுதி. இங்குதான் வியட்நாமுக்குப் பணவருவாயைப் பெற்றுத் தரும் காசுப்பயிர்கள் வளர்கின்றன. Dac Lac நகருக்கு சரித்திர முக்கியத்துவமும் உண்டு. யுத்த காலத்திலே வடக்கு வியட்நாமில் இருந்து கம்போடிய நாட்டின் காடுகளூடாக வியட்நாமிய எல்லையை ஒட்டி நீண்ட தொருபாதை அமைக்கப்பட்டது. இதற்கு 'கோ சி மிங்' பாதை என்று பெயர். இதனூடாக வியட்நாமிய வீரர்கள் Dac Lac நகருக்கு விரைந்து வந்து இங்கிருந்தே வடக்கும் தெற்கும் நோக்கித் தாக்குதல்களை ஆரம்பித்தார்கள். இதனைத் தாக்குபிடிக்க முடியாமல்தான் 1975 ஆம் ஆண்டு அமெரிக் கர்கள் வெளியேறினார்கள். இந்நகரம் தென் வியட்நாமின் நடுவே மலை சூழ இருந்தமை எமது தாக்குதலை இலகுவாக்கிற்று. அந்தப் படையில் நானும் இருந்தேன்" என்றான் முகத்தில் பெருமை பொங்க, அருகில் இருந்த வியட்நாமியன்.

Dac Lac வந்துசேர இருளத் தொடங்கிவிட்டது. "பெங்லீயை எப்போது சந்திக்கலாம்....?" என்று கேட்டார் பேராசிரியர்.

"நாளை சந்திக்கலாம். அவன் நகரின் ஒதுக்குப்புறமாக மலையின் அடிவாரத்தில் தனது தாயுடன் வசிக்கிறான். இப்பொழுது அவன் வீட்டிற்கு சென்றிருப்பான்" என்றான் கூடவந்த இளம் வியட்நாமியன்.

"பெங்லீ எமது நாட்டிற்குக் கிடைத்த பொக்கிஷம். விரைவி லேயே கொம்பியூட்டர் துறையில் அவனது சாதனை களுக்காக வியட்நாமின் அதி உயர் விருது கிடைக்க விருக்கிறது. இதைப் பெறும் முதல் இளைஞன் இவனே" எனப்

பெருமை பொங்கக் கூறினார் வியட்நாமிய அதிகாரி.

"உண்மைதான். உலகமே இவனது Software Patch பற்றி வியந்து நிற்கிறது. குறுகிய காலத்தில் எம்மை எல்லாம் விஞ்சிவிடுவான்" என்றார் பேராசிரியர். அவர் வார்த்தைகள் வெறும் புகழ்ச்சியல்ல. அவரது உள்மனமோ, 'அவனை ஆஸ்திரேயாவுக்குக் கவர்ந்திழுப்பதற்காகத்தானே நான் இங்கு வந்திருக்கின்றேன்? என் உள் நோக்கம் வெல்ல வேண்டும்....' என்று நினைத்துக் கொண்டது.

அடுத்த நாள். வழமையான சம்பிரதாங்கள் மற்றும் உயர்மட்டக் கலந்துரையாடல்கள் முடிவடைந்தபின்னர், மதிய விருந்திற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அது ஒரு Sea Food றெஸ்றோறன்ற். இப்படியான விருந்து வைபவங்களில் வியட்நாமியர்கள் மணிக்கணக்கில் நேரத்தை செலவு செய் வார்கள். விருந்தின் போது பெங்லீ பேராசிரியருக்கு அறிமுகம் செய்யப்பட்டான். இருவரும் கை குலுக்கி பரஸ்பரம் வணக்கம் தெரிவித்துக் கொண்டனர்.

அவனுக்கு இருபத்தைந்து வயதிற்கு மேல் இருக்காதென மதிப்பிட்டார் பேராசிரியர். கம்பீரமான உருவம். எடுத்த எடுப்பில் அவனது கண்களே முதலில் பேராசிரியரைக் கவர்ந்தன. அவை வழக்கமான வியட்நாமிய கண்களைப் போல் அல்லாமல் பெரிதாக ஒளிவீசிக் கொண்டிருந்தன.

வந்திருந்த வியட்நாமியர்கள் அனைவரின் கவனமும் சாப்பாட்டில் இருக்க, இவன் மட்டும் கொம்பியூட்டர் உலகத்திலே சஞ்சரித்துக் கொண்டிருந்தான். ஆங்கிலத்தில் அவன் கலந்துரையாடிய பாங்கு, அவனது தோற்றம், அறிவு, பழகும் விதம் எல்லாமே பேராசிரியருக்கு மிகவும் பிடித்திருந்தன.

விருந்தின் இறுதியில் வியட்நாமியர்கள் அனைவருக்கும்

போதை தலைக்கேறிவிட்டது. இதனால் பேராசிரியரை அவரது ஹோட்டடல் அறையில் விடும் பொறுப்பு பெங்லீயிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஹோட்டல் அறையில் ஓய்வெடுக்குமாறு கூறிவிட்டுத் திரும்பிய பெங்லீயை அன்புடன் அழைத்தார் பேராசிரியர். "பெங்... உன்னுடன் தனிமையில் சில விடயங்கள் பேசவேண்டும். இன்று இரவு என்னுடன் சாப்பிட வருவாயா....?" என்றார்.

"கொம்பியூட்டர் தொழில்நுட்பம் பற்றிய விடயமென்றால் நான் எனது அதிகாரிகள் இன்றிப் பேசமுடியாது....!" என்றான் பணிவுடன்.

"இல்லை பெங், உனது அழகிய ஆங்கிலமும் பேச்சும் என்னை மிகவும் கவர்ந்த விடயங்கள். இந்நாட்டின் மொழி தெரியாத சூழலில் தனியே உணவருந்துவதிலும் பார்க்க, உன்னுடன் பேசிக் கொண்டே உணவருந்தலாம் என்பதுதான் எனது எண்ணம்...." என்றார் பேராசிரியர்.

"அப்படியென்றால் நிச்சயம் வருகிறேன். நகரின் நடுப்பகுதியிலே ஒரு 'இந்தியன்' றெஸ்றோறன்ற் இருக்கிறது. அங்கு போகலாம். எனக்கும் இந்திய உணவு வகைகள் பிடிக்கும். எனது தாய் வியட்நாமியராக இருந்தாலும் என் தந்தை ஒரு இந்தியர்தான்."

பேராசிரியர் மனதில் ஒரு சலனம்.

" என்ன....? உனது தந்தை இந்தியரா....? அவர் பெயர் என்ன....?" என்றார் ஆச்சரியம் பொங்க.

" எனக்கு அவரைத் தெரியாது" என்றான் பெங்லீ.

"என்னைப் போன்ற தந்தை முகத்தைப் பார்க்காத எத்தைனையோ கலப்பினக் குழந்தைகள் வியட்நாமில் இருக்கிறார்கள். அமேரிக்க ஆக்கிரமிப்பு இதற்கு வசதி செய்தது. அவர்களை நினைவு படுத்தும் இவர்கள் அவமானச்

சின்னங்களாக இன்னமும் வெறுக்கப்படுகிறார்கள்..." என்ற பெங்லீ சிறிது நிறுத்தி, பெருமூச்சொன்றை வெளியே விட்டவாறே, "எனது கதையோ, முற்றிலும் வித்தியாசமானது" என்றான் அமைதியாக.

அவனது மன உணர்வுகளுக்கு ஒத்தடம் கொடுப்பவராக அவனருகே மிக நெருங்கி வந்த பேராசிரியர், "இன்று இரவு சாப்பாட்டிற்கு வரும் போது உனது தாயாரையும் அழைத்துவாயேன். உலகப் புகழ் பெற்ற கொம்பியூட்டர் நிபுணனை பெற்றெடுத்த அன்னை எனது விருந்தினராக வருவது எனக்கும் பெருமைதான்," என்றார்.

கண்களை மூடி இமைகளை வருடியவாறே சிறிது நேரம் அமைதியாக இருந்தான் பெங்லீ. பின் மௌனத்தை கலைத்து, "அதற்கென்ன, கூட்டிவருகிறேன். எனது தந்தையின் பெயரை யாருக்கும் சொல்ல மறுக்கும் எனது தாயார் இப்பொழுதும் அவர் நினைவாகவே வாழ்வது எனக்குத் தெரியும். இந்திய உணவைச் சாப்பிடுவதில் அவருக்கு ஒரு மன நிறைவு ஏற்படட்டும்" என்றான்.

"உனது தந்தை அமேரிக்க இராணுவத்துடன் இங்கு வந்தாரா...?' எனக்கேட்டார் பேராசிரியர் நெஞ்சு படபடக்க.

"எனது கதைதான் வித்தியாசமானது என்றேனே...! வியட் நாமின் வடபகுதி சோஷலிச ஆட்சியில் இருந்த காலத்தில் சோஷலிச நாடொன்றின் புலமைப்பரிசில் பெற்று ஐரோப்பிய நாடொன்றில் படித்தவர் எனது தாயார். எனது தந்தையை அங்கு சந்தித்தே கருவுற்றார். இதற்குமேல் இதுபற்றி அவர் எதுவுமே எனக்குக் கூற விரும்பியதில்லை." சிறிது நேரம் மௌனித்த அவன், "மாலை ஆறு மணிக்கு உங்களை வந்து சந்திக்கிறேன்" எனக்கூறி அறையைவிட்டு வெளியேறினான்.

அவன் மனதைப் புண்படுத்திவிட்டேனா எனப் பேராசிரியரின் மனசு வருந்தியது. அத்துடன் இனந்தெரியாத

கவலையோ அன்றேல் சோகமோ அவரை வளைத்துக் கொண்டது. அறையிலிருந்து மினி பிரிஜ்ஜைத் திறந்து, மதுப்புட்டி ஒன்றை எடுத்துக் குடிக்கத் துவங்கினார். அவருடைய செயல் அவருக்கே ஆச்சர்யத்தைத் தந்தது.

சரியாக ஆறுமணிக்கு வந்தான் பெங்லீ. பேராசிரியரும் தயாராகக் காத்திருந்தார்.

"எங்கே உன் தாயார்...?" ஆவலை அடக்க முடியாமல் கேட்டார்.

"அவர் நேரடியாக றெஸ்ரோறன்ருக்கு வருவார். என்னிடம் கார் இல்லை. மோட்டார் சைக்கிளில்தான் இங்கு வந்தேன். தங்களுக்கு அசௌகரியம் இல்லை என்றால், அதிலேயே நாங்கள் போகலாம். இல்லையேல் வாடகைக்கு ஒரு கார் அமர்த்திக் கொள்வோம். அரச வாகனத்தை என் சொந்தத் தேவைகளுக்கு நான் உபயோகிப் பதில்லை..." என்றான் பெங்லீ பணிவுடன்.

"நீ எனக்கு வாகனமோட்டியாக இருப்பதில் பெருமைப் படுகிறேன்" எனச் சொல்லிப் பேராசிரியர் சிரித்தார்.

டக் லக் நகர வீதிகளினூடாகச் சிறிய 'கொண்டா' மோட்டார் சைக்கிள் ஓடிக்கொண்டிருந்தது. அதன் பின்னால் இருந்து போவது பேராசரியருக்குப் புதிய அனுபவமாக இருந்தது.

"உங்கள் பெயர் என்ன...? பிறந்த நாடு என்ன...?" என்றெல்லாம் துருவித் துருவி எனது தாயார் பல கேள்விகளைக் கேட்டார். உங்கள் பெயரை முறையாக உச்சரிக்க எனக்குக் கஷ்டமாக இருந்தது. அதனால் ஆஸ்திரேலியப் பேராசிரியர்; தென்கிழக்கு ஆசிய நாடொன்றில் இருந்து புலம் பெயர்ந்தவராக இருக்க வேண்டுமென்று கூறினேன். என்ன... எனது ஊகம் சரிதானே...?"

எனக் கேட்டான் பெங்லீ வண்டியின் வேகத்தை குறைத்தவாறே.

பேராசிரியர் பதில் கூற முனைவதற்கு முன்பு இந்திய றெஸ்ரோரன்ற் வாசலில் நின்றது வண்டி.

"இந்த இந்திய றெஸ்றோறன்ற் வியட்நாமியர் ஒருவரால் நடத்தப்படுவது. சமையல் வேலையில் மாத்திரம் இந்தியர்கள் ஈடுபட்டுள்ளார்கள்" என றெஸ்ரோறன்ற் பற்றி விளக்கம் கொடுத்தான் பெங்லீ.

இருவரும் இவர்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த மேஜையில் வந்தமர்ந்து கொண்டனர்.

ரவிசங்கரின் சித்தார் இசை காற்றில் மிதந்து வந்து கொண்டிருந்தது. வியட்நாமிய மண்ணில் ரவி சங்கரின் இசையைக் கேட்பது விநோதமாக இருந்தாலும் பேராசிரியர் ரசித்துக் கொண்டிருந்தார்.

பெங்லீ றைஸ்வைன் ஒன்றுக்கு ஓடர் கொடுத்தான். பேராசிரியர் பழச்சாறுடன் நிறுத்திக் கொண்டார்.

எதேச்சையாக வாசலைத்திரும்பிப் பார்த்த பெங்லீ, "அதோ எனது தாயார் வருகிறார்" என்றான்.

உற்றுப் பார்த்தார் பேராசிரியர். அவளேதான்; கிம்! பெங்லீயைச் சந்தித்திலிருந்து அவருக்கு ஏற்பட்ட மனக் குழப்பங்களுக்கு எல்லாம் விடை தருவது போல, அவள் தோன்றினாள்.

அவளது முகம் பேராசிரியரைக் கண்டதும் வியப்பிலே மாறியது. கதிரையை இறுகப்பிடித்தவாறு சில கணங்கள் மௌனமாக நின்றாள். சுருங்கிய அவளது விழிகளை, திரண்டுவந்த நீர் மறைக்க, இருகைகளாலும் முகத்தை மறைத்தாள்.

"ஓ... கடவுளே, இவ்வளவு நாட்களின் பின்பா...?" என்றாள் Kim, பெங்லீயின் தாயார்.

பேராசிரியர் அதிர்ச்சியிலிருந்து மீளுவதற்குப் பல கணங்களாயின.

"Oh my dear son, Peng Lee... You are my son....!" என்றவாறே அவனைக் கட்டியணைப்பதற்காக கிம்மைக் கடந்து நடந்தார்.

பெங்லீ இதனைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அணைக்க வந்த பேராசிரியர் கைகளைத் தட்டி விலகினான். மறுகணம் தாயை இழுத்துக் கொண்டு அங்கிருந்து வெளியேறிவிட்டான்.

மேஜைமீது மீதம் விடப்பட்டடிருந்து றைஸ் வைனை போத்தலுடன் எடுத்து ஒரே மூச்சில் குடித்து முடிந்தார் பேராசிரியர். மதுவின் சூடு தலைக்கேற, அவர் தமது இளமைக் காலத்தில் மிதக்கலானார்.

**பே**ராசிரியர் பாடசாலையின் உயர் வகுப்பில் கல்வி பயின்ற காலத்தில் 'சோஷலிச சார்பு' என தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்ட அரசு இலங்கையில் பதவிக்கு வந்தது.

அக்காலக்கட்டத்தில் 'வாசோ' கூட்டமைப்பிலே அணி திரண்ட சோஷலிச நாடுகள், பல்வேறு நாடுகளில் இருந்தும் தெரிந்தெடுத்த மாணாக்கருக்குப் புலமைப் பரிசில்கள் வழங்கி; தமது பல்கலைக்கழகங்களில் சேர்த்துக் கொண்டன. கல்வியுடன் சோஷலிச கொள்கையை அந்த மாணாக்கள் மூலம் பரப்பலாம் என்பது உள்நோக்கம். மொஸ்கோவில் இதற்காக ஒரு பல்கலைக்கழகமே நிறுவியிருந்தார்கள். இதற்கு விடுதலை வீரன் லுமும்பா நினைவாக, 'லுமும்பா பல்கலைக்கழகம்' எனவும் பெயரிட்டனர்.

கஷ்டத்தின் மத்தியில் கல்விகற்ற சந்திரசேகரம்

பன்னிரண்டாம் வகுப்பில் தனது நாட்டிலேயே அதிபுள்ளி பெற்ற மாணவனாகச் சித்தி பெற்றான். இதனால் லுமும்பா பல்கலைக் கழகத்துக்குப் புலமைப் பரிசில் பெற்றுச் செல்வது இலகுவாயிற்று.

அது கொம்பியூட்டரின் முக்கியத்துவம் முகிழத் துவங்கிய காலம். கணிதத்தில் திறமையான ஐந்து பேரை லுமும்பா பல்கலைக்கழகம் கொம்பியூட்டர் கல்விக்கெனத் தெரிவு செய்திருந்தது. இவர்களுள் சந்திரசேகரமும் பெங்லியின் தாயார் Kim ம் முன்னிலை வகித்தார்கள்.

கணிதப்புலமை இவர்கள் இருவரையும் நெருங்கிப் பழக வைத்தது. செய்முறை வகுப்புகளும் கலந்துரையாடல்களும் இவர்கள் உணர்ச்சிகளுக்குத் தீனிபோடவே, பெங்லீ கிம் வயிற்றில் கருவானான்.

படிப்பின் இறுதியாண்டும் நிறைவு பெற்றது. கிம் வியட்நாம் திரும்ப வேண்டும். வியட்நாமிய சட்டம் அப்படி.

பல்வேறு வாக்குறுதிகள், அன்பு வார்த்தைகள் யாவும் சொல்லி அவளை வியாட்நாமுக்கு அனுப்பி வைத்தார் சந்திரசேகரம். ஆண் குழந்தை பிறந்த செய்தி அறிந்து பணமும் அனுப்பப்பட்டது.

சந்திரசேகரத்தின் வாழ்வில் மாற்றங்கள் துரித கதியில் நிகழ்ந்தன. ஹார்வாட் பல்கலைக்கழகம் சென்ற சந்திர சேகரம் கொம்பியூட்டர் துறையில் டாக்டர் பட்டம் பெற்றார். ஊரில் தாயாரால் விலை கூறி விற்கப்பட்டு பணக்காரப் பெண் ஒன்றிற்குக் கணவனாகி ஆஸ்திரேலியாவிற்கும் குடி பெயர்ந்துவிட்டார். இப்பொழுது அவர் உலகம் போற்றும் விஞ்ஞானி; கொம்பியூட்டர் துறை பேராசிரியர்.

பேராசிரியரின் முதுகைதட்டி, அரைகுறை ஆங்கிலத் தில், கடையை மூடப்போவதாகக் கூறினான் பணியாள்.

கையில் அகப்பட்ட டொலர்களை அப்படியே எடுத்து

அவன் கைகளில் திணித்துவிட்டு, அறைக்கு வந்து போதை மயக்கத்தில் கண்களை மூடிக்கொண்டார் பேராசிரியர்.

அடுத்த நாள் உடன்படிக்கை பற்றி வியட்நாமிய அதிகாரிகளுடன் பேசவேண்டும். அப்பொழுது பெங்லீ வரலாம். இந்த நினைவு அவரைப் பரபரப்புக்குள்ளாக்கியது.

விரைவில் தன்னைத் தயார் படுத்திக் கொண்டார்.

சில தகவல்களை சேகரிக்க வேண்டி தனது Lap Top கொம்பியூட்டரைத் திறந்தார்.

அவருக்காக ஒரு E-mail காத்திருந்தது.

பெங்லீதான் அனுப்பியிருந்தான். மொட்டையாக 'பேராசிரியருக்கு' என்று தலைப்பிட்டு அந்தக் கடிதம் துவங்கியது.

*தங்களை ஞானமுள்ள மேதை என்கிற முறையிலே மிகவும் மதிக்கிறேன். இருப்பினும் தங்கள் உறவு முறையை என் மனம் ஏற்றுக் கொள்ளவில்லை. என் தாய் உங்கள் நிமித்த மாக இந்த நாட்டிலே எத்தனை அவமானங் களைத் தாங்கியிருப்பாள் என்பதை நினைத்துப் பாருங்கள். அவற்றைப் பற்றிக் கவலைப்படாமல், இன்றுவரை அவள் உங்கள் நினைவாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.*

*ஆனால் நீங்கள்....?*

*எனது தாயாரை இத்தனை ஆண்டு பிரிவின் பின் முதல் முறையாகச் சந்தித்தபொழுது குறைந்த பட்சம் 'மன்னித்துக்கொள்' என ஒரு வார்த்தை கூடக் கூறத் தோன்றவில்லை.*

*கிம்---என்தாய்---உங்களுக்காகத் தன்னை இழந்தவள். அவளின்றியா நான்? நான் என்றும்*

*அவளுடைய மகனே.....*

*பேராசிரியரே.... நாங்கள் இதுவரை வாழ்ந்த மாதிரியே வாழ்ந்துவிடுகிறோம். இனியும் எங்கள் வாழ்க்கையில் குறுக்கிட்டு எங்கள் அமைதியைக் குலைக்க வேண்டாம். 'புத்தி ஜீவி' என்கிற மமதையிலே மானிட தர்மங்களை மறந்த ஒருவரை என் தந்தையென்று அடையாளப்படுத்த நான் விரும்பவில்லை.*

*கிம்மின் மகனாகவும் வியட்நாம் குடிமகனாகவும் வாழ்வதை நான் பெருமை யாகக் கருதுகிறேன் - பெங்லீ.*

[தமிழ்முரசு (சிங்கப்பூர்) 14/21 - Nov 1999]

# 7

## மறுக்கப்படும் வயசுகள்



வகுப்பில் கணக்குப் பாடம் நடந்து கொண்டிருந்தது!

பன்னிரண்டை மூன்று மூன்றாக எப்படி வகுக்கலாம் – என்ற கணக்கைப் புதிய முறையில் விளக்கிக் கொண்டிருந்தார் கணக்கு ரீச்சர் மிஸ்ஸிஸ் தொம்ஸன்.

நாலாம் வகுப்பு படிக்கும் ராஜிக்குட்டியின் சிந்தனையோ கிங்ஸ்வூட் பார்க்கில் (Kingswood Park) அமைக்கப்பட்டுக்

கொண்டிருந்த றாட்டணத்தைச் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது.

ராஜி எப்போதும் வகுப்பில் முன்வரிசையிலேயே அமர்ந்து கொள்வாள். அதுவும் அம்மாவின் கட்டளைப்படி. எதிலும் எப்படியும் தன் மகள் முதலாவதாகத் திகழ வேண்டும் என்கிற தவிப்பு அம்மாவுக்கு!

ராஜி படிப்பில் கெட்டிக்காரிதான். பாடத்தின் நடுவே கேள்வி கேட்பது மிஸ்ஸிஸ் தொம்ஸனின் வழக்கமல்ல. இதனால் தனது மனதைத் தன்னிச்சையாகக் கிங்ஸ்வூட் பார்க்கில் மேயவிட்டாள்.

சனிக்கிழமைகளில் நடக்கும் ரியூஷன் கிளாஸில் போன வருடமே சிக்கலான நெடும் பிரித்தல் கணக்குவரை ராஜி படித்திருந்தாள். ரியூஷன் என்றால் அது ராஜிக் குட்டிக்கு மட்டும் தனியாக நடக்கும் வகுப்பல்ல. இதுவும் பள்ளிக்கூட வகுப்பு போன்றதுதான். பத்துப் பதினைந்து பேர் வரை வகுப்பில் இருப்பார்கள். பாதிக்கு மேல் அவுஸ்திரேலியாவிற்கு குடிபெயர்ந்த ஆசிய நாட்டவர்கள். தமிழ்ப்பிள்ளைகளுக்கும் அங்கு குறைவில்லை.

ரியூஷன் மாஸ்ரரை விட மிஸ்ஸிஸ் தொம்ஸன் நன்றாகப் படிப்பிப்பார் என்பது ராஜிக்குட்டியின் அபிப்பிராயம். ரியூஷனுக்குப் போய்த்தான் பக்கத்து வீட்டு வாணி ஆறாம் வகுப்பில் சிலெக்ரிவ் (Selective) ஸ்கூலுக்கு எடுபட்டிருந்தாள். இதனால் ராஜிக்குட்டியையும் அதே ரியூஷன் வகுப்புக்கு அம்மா அனுப்புகிறாள். பல 'ராஜிக்களையும் ராஜன்களையும்' அவ்வாறு அம்மாக்கள் ஆரம்ப வகுப்பிலேயே ரியூஷனுக்கு அனுப்பும் சூக்குமமும் இதுவே.

மிஸ்ஸிஸ் தொம்ஸன் பிரித்தல் கணக்கை விளக்கி முடித்ததும் சென்ற வாரம் வகுப்பில் நடந்த பரீட்ஷை பெறுபேறுகளைப் பிள்ளைகளிடம் கொடுத்தார். இந்த முறை

பக்கத்துத் தெருவில் வசிக்கும் சுனிதா ராஜியை விட இரண்டு மாக்ஸ் அதிகமெடுத்துவிட்டாள்.

ராஜியின் அம்மா பெற்றோர் ஆசிரியர் கூட்டத்துக்கு ஒழுங்காகப் போய் வருபவர். மாத இறுதியில் அந்த மாதம் படிப்பித்த பாடத்தில் வகுப்பு பரீட்ஷை நடக்கு மென்பதும் இறுதி வெள்ளிக்கிழமை மிஸ்ஸிஸ் தொம்ஸன் அதற்குரிய மாக்ஸை கொடுப்பார் என்பதும் அம்மாவுக்கு நன்றாகவே தெரியும்.

இன்று ராஜி வீட்டிற்குச் சென்றதும், 'எத்தனை மாக்ஸ் டுத்தாய்...?' என்றுதான் அம்மா முதலில் மாக்ஸ் பற்றிய விசாரணைகள் ஆரம்பிப்பார். வகுப்பில் உள்ள தமிழ்ப் பிள்ளைகளின் மாக்ஸ் பற்றிய விசாரணை தொடரும். ராஜி எப்போதும் மற்றவர்களைவிட --- "குறிப்பாகத் தமிழ்ப் பிள்ளைகளை விட" --- அதிக புள்ளிகள் எடுக்கவேண்டு மென்பதே அம்மாவின் ஆசை. இந்த 'எப்போதும்' இடையிடையே ராஜிக்கு சங்கடத்தை கொடுப்பதுண்டு.

படிப்பு விஷயத்தில் ராஜியை அம்மா திட்டுவதும் பேசுவதும் புதுசல்ல. ஆனால் நாளை கிங்ஸ்வூட் மைதானத்தில் காணிவெல் துவங்கும் நேரத்தில் சுனிதா இரண்டு மாக்ஸ் அதிகமெடுத்ததுதான் ராஜிக்கு சிக்கலை ஏற்படுத்தியது. இந்த இரண்டு மாக்ஸிற்காக மேலும் பல மணிந்தியாலங்கள் புத்தகங்களைக் 'கட்டிஅழ' வேண்டும் என்பது ராஜிக்கு தெரியும்.

தான் விரும்பிய இடத்துக்கு அம்மாவோ அப்பாவோ அழைத்துச் செல்வதில்லை என்ற பெரும் குறை ராஜிக் குட்டிக்கு. வகுப்பில் ஒன்றாகப் படிக்கும் எவலின் திங்கட்கிழமை பள்ளிக்கு வரும் போதெல்லாம் வார இறுதி நாட்களைத் தமது குடும்பம் எவ்வாறு கழித்ததென்பதைக் கதை கதையாய் சொல்வாள். அப்பாவுடன் bush walk

போனதாகவும், பீச்சுக்கோ, காம்பிங்கிக்கோ (camping), அல்லது களியாட்ட விழாவிற்கோ குடும்பத்துடன் சென்ற தாகவும் வாராவாரம் பெருமை பேசுவாள். இவைகளை ஒரு முறையேனும் செய்யவேண்டுமென்ற பெரும் ஆசை ராஜிக் குட்டிக்கு.

அவுஸ்திரேலிய அரசு பல இன பல்கலாசாரத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக அவ்வப்போது களியாட்ட விழாக்களை நடாத்துவதுண்டு. அத்தகையதொரு காணி வேல் இவ்வார இறுதியில் கிங்ஸ்வூட் பார்க்கில் சிறந்த முறையில் நடைபெறவிருப்பதாக சமூகக் கல்வி படிப்பிக்கும் ரீச்சர் வகுப்பில் கூறியிருந்தார்.

கிங்ஸ்வூட்பார்க் ராஜியின் வீட்டிற்கு அருகிலேதான் இருக்கிறது. வெள்ளி காலை ராஜி முகம் கழுவும் போது மெரிகோ ரவுண்டும், ராட்டிணங்களும் அமைக்கும் பணிகள் துவங்கியிருந்தன பாத்றூம் யன்னலூடாக நன்கு தெரிந்தது. குதிரைகளும் குட்டையான கோவேறு கழுதைகளும் குழந்தைகளின் சவாரிக்கென பார்க்கின் வடக்கு மூலை யிலுள்ள ஊசியிலை மரங்களில் கட்டப்பட்டிருந்தன.

நாளைக் காலை தந்தையும், மறுநாள் ஞாயிறு தாயும் தன்னையும் தனது தம்பியையும் காணிவெலுக்கு அழைத்துச் செல்வார்கள் என மத்தியான இடைவேளையின் போது எவலின் தம்பட்ட மடித்துக் கொண்டாள். ராஜியை காணி வேலுக்கு பெற்றோர் விடமாட்டார்கள் என்பது எவலினுக்கு நன்கு தெரியும். இருப்பினும், அவளை அடிக்கடி இவ்வாறு சீண்டிப் பார்ப்பத்தில் மகா சுகம் காண்பவள் எவலின்.

சமூகவியல் பாடத்தில் மூன்று பிள்ளைகள் சேர்ந்து 'புறெஜெக்ற்' (Project) செய்ய வேண்டும். ராஜி, எவலின், கத்தரின் ஆகியோரின் குழுவுக்கு 'பல்இனமக்களின்

கலர்சாரம்' என்னும் தலைப்பு. பொருத்தமான வர்ணப் படங்களை சஞ்சிகைகளில் சேகரித்துக் கொண்டார்கள். புறெஜெக்ற் பற்றி கலந்துரையாடி, படங்களை அதற்குரிய மட்டையில் ஒட்டி அதன்கீழ் குறிப்பெழுதுவதற்காக எவலினையும் கத்தரினையும் ராஜி தனது வீட்டிற்கு அழைத் திருந்தாள்.

வீட்டு வரவேற்பறையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த வெற்றிக் கிண்ணங்களைக் கண்ட எவலினால் ஆச்சரியத்தை அடக்க முடியவில்லை.

"நீ பெரிய விளையாட்டு வீராங்கனை என்பது எங்களுக்குத் தெரியாதே... ஏன் நீ பாடசாலைப் போட்டிகளில் பங்கு பற்றுவதில்லை?" எனக் கேட்டாள் எவலின்.

பாடசாலையில் நடைபெறும் பேச்சுப் போட்டி உட்பட பல போட்டிகளிலும், வெற்றி பெறுபவர்களுக்கு சிறிய badge அன்றேல் Flag ஒன்றே கொடுப்பது வழக்கம். வெற்றிக் கிண்ணம் என்பது பெரிய விஷயம்.

"இதெல்லாம் நான் தமிழ்ப் போட்டிகளில் எடுத்த கிண்ணங்கள். நீங்கள் வரும்போதுகூட போட்டியொன்றுக்குப் 'பேச்சு' பாடமாக்கிக் கொண்டிருந்தேன்" என்றாள் ராஜி.

பேச்சுப் போட்டிக்கே வெற்றிக் கிண்ணம் கொடுப்பதை முதல்முறையாகக் கேள்விப்பட்ட கத்தரின் "இம்முறை எதைப்பற்றி பேசுகிறாய்?" எனக் கேட்டாள்.

"சங்ககாலத் தமிழின் சிறப்பு" என்று தமிழில் தலைப்பைக் கூறிய ராஜி, "இதன் அர்த்தம் எனக்கு புரியாது. இருப்பினும் பேச்சு முழுவதையும் மனனம் செய்து விட்டேன்" என்றாள். இதைச் சொல்லும்போது ராஜியால் சிரிப்பினை அடக்க முடியவில்லை.

வெற்றிக் கிண்ணமொன்றை எடுத்துப் பார்த்தாள்

எவலின். மனனப் போட்டியொன்றில் ராஜி மூன்றாமிடம் பெற்றதாக அக்கிண்ணத்தின் அடியில் பொறிக்கப் பட்டிருந்தது.

"என்ன ராஜி...? மூன்றாமிடத்துக்கும் கிண்ணம் கொடுக்கிறார்களா?" என நக்கல் கலந்த குரலில் கேட்டாள் எவலின்.

"மூன்றாவதென்ன.....? சில சமயங்களில் இங்கு தமிழ்ப் போட்டிகளிலே பங்குபற்றும் அனைவருக்குமே வெற்றிக் கிண்ணங்கள் கொடுப்பார்கள்!" என்றாள் ராஜி சிரித்துக் கொண்டே.

"இதுவும் பல் கலாசாரத்தின் ஒரு அங்கம் தானே? கொஞ்சம் விபரமாகக் கூறு. எமது புறெஜெக்ரில் இது பற்றியும் குறிப்பிடலாம்" என, சற்றே சீரியஸாகச் சொன்னாள் கத்தரின்.

"இல்லை... இல்லை... இப்படி எங்கள் நாட்டில் நடப்பதில்லை. இங்கு கிண்ணங்கள் மலிவாக கிடைப்பதால் கண்டபடி கொடுக்கிறார்கள்" எனத் தமிழ்க் கலாசாரத்தை காப்பாற்ற முயன்றாள் ராஜி.

புறெஜெக்ற் முடிந்து வீடு செல்லுமுன் நாளை நடைபெறவிருக்கும் 'பல்இன' காணிவேலை நினைவூட்டினாாள் எவலின்.

"நாளைக்காலை எட்டு மணிக்கு இங்கு வருகிறோம். அம்மாவிடம் மறக்காது அனுமதி வாங்கிவிடு" எனக் கேட்டுக் கொண்டாள் கத்தரின்.

அவர்கள் சென்றதும் சனி ஞாயிற்றுக் கிழமைகளில் தான் வழமையாகச் செய்யும் சங்கதிகளை ராஜி எண்ணிப் பார்த்தாள்.

கணித ரியூஷன் சனிக்கழமை காலை எட்டரை மணிக்கு ஆரம்பிக்கும். அதைத் தொடர்ந்து நடக்கும் ஆங்கில வகுப்பு

பன்னிரண்டு மணிக்கு முடிவடையும். மத்தியானம் வீட்டிற்கு வந்து சாப்பிட்டபின் இரண்டு மணிக்கு தமிழ்ப் பள்ளிக்கூடம். இரவு சாயி பஜனை. ஞாயிறு காலை பரத நாட்டிய வகுப்பு. பின்னேரம் சமய வகுப்பும் Speech and drama கிளாசும். அத்துடன் அடுத்த வாரம் நடைபெறும் தமிழ்ப் போட்டியிலும் கலந்து கொண்டு வெற்றி பெறவேண்டும். போட்டிகளில் பரிசு பெறும் போதெல்லாம் "என்ரை பிள்ளை கெட்டிக்காரி" என்பார் அம்மா. இல்லையேல் தொடர்ந்து சில நாட்கள் எதற்கெடுத் தாலும் சீறிச் சினப்பார். மொத்தத்தில் அம்மாவின் இந்த குணவேறுபாடுகளை ராஜிக்குட்டியால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

நாளை எப்படியும் கிங்ஸ்வூட் காணிவலுக்குச் செல்ல வேண்டுமென்று ராஜி தீர்மானித்து விட்டாள்.

சிநேகிதிகள் கேட்டுக் கொண்டபடி காலையில் செல்வதானால் எட்டரை மணி ரியூஷன் வகுப்பை 'கட்' பண்ண வேண்டும். அது கஷ்டம். அம்மாவே காரில் கொண்டுபோய் கொண்டுவரும் கிளாஸது. பின்னேரம் தமிழ்வகுப்பு. காச்சல் என்று கள்ள மடித்தால் ராஜி வீட்டில் நிற்கலாம். சனிக்கிழமைகளில் மாத்திரம் நடைபெறும் தமிழ்ப் பள்ளிக்கூடத்துக்கு அம்மா இரண்டு மணிக்குப் போய் விடுவார். அவர் அங்கு தொண்டர் ஆசிரியை.

வளவின் பின்புற வேலியருகேயுள்ள வாழை மரத்துக்கும் கறிவேப்பிலைச் செடிக்கும் இடையேயுள்ள தகரப் படலையைக் கடந்தால் மறுபுறம் கிங்ஸ்வூட்பார்க் ஆரம்பிக் கிறது. இரண்டு மணிபோல், மெல்ல படலையூடாகச் சென்றால் தமிழ்ப்பள்ளி நடக்கும் மூன்று மணித்தியாலங்களும் அங்கு ஜாலியாக பொழுதைக் கழிக்கலாம். எவலினும் கத்தரினும் நிச்சயம் நாள் முழுவதும் அங்கே நிற்பார்கள் என்பது ராஜிக்கு நன்கு தெரியும். டனியேலாவும் மூன்று மணிக்கு

வருவதாகக் கூறியிருந்தாள்.

ராஜி தனது உண்டியலைத் திறந்து பார்த்தாள். சிறிது சிறி தாகச் சேர்த்த பணம் கணிசமானளவு இருந்தது. 'இது போதும் நாளைய செலவுக்கு, கள்ளக்காச்சலை எப்படி வரவழைப்பது....?'

அம்மாவுடன் அவள் பார்த்த தமிழ்ப்பட மொன்று சட்டென்று ஞாபகத்தில் வந்தது. கக்கத்தில் வெங்காயத்தை வைத்து இரவுமுழுவதும் படுத்தால் காலையில் காச்சல் வருமென்ற 'ரெக்னிக்' படத்தில் சொல்லப்பட்டிருந்தது.

வீட்டிலுள்ள பெரிய வெங்காயத்தை கக்கத்துள் வைப்பது கடினம். பக்கத்து வீட்டில் வசிக்கும் மட்டக்களப்புப் பாட்டி ஒருவர், தமிழ்க்கடையில் சின்னவெங்காயம் வாங்குவது ராஜிக்கு தெரியும். அம்மா வாங்கிவரச் சொன்ன தாகத்தான் பாட்டியிடம் வெங் காயத்தை வாங்க வேண்டும். பாட்டிக்கு மறதிக் குணமதிகம். இதனால் ராஜி வெங்காயம் வாங்கிய சங்கதி அம்மாவுக்கு தெரியப் போவதில்லை.

வெள்ளி மாலையில் ராஜிக்குட்டியின் குடும்பம் தவறாது கோவிலுக்குப் போகும். கோவிலால் வந்தவுடன் சந்தனம் திருநீறு சகிதம் பாட்டியிடம் சென்றாள் ராஜி. பேச்சோடு பேச்சாக ஐந்தாறு சின்னவெங்காயத்தை அவரிடம் வாங்கி வந்து தனது மேஜை லாக்கிக்குள் பத்திரப்படுத்திக் கொண்டாள்.

இரவு ஒன்பதுமணியளவில் ராஜி, கண் எரிவையும் பார்க்காது சின்ன வெங்காயத்தின் காய்ந்த தோல்களை கவனமாக உரித்து கக்கத்துள் வைத்த பின்னர் போர்வை யால் முழு உடலையும் மூடியவாறு படுத்துக் கொண்டாள்.

மறுநாள் பொழுது விடிந்தது!

"ரியூஷனுக்கு போற நோக்கமில்லையோ....?" என்ற

அம்மாவின் குரல்கேட்டே ராஜி கண் விழித்தாள்.

கக்கத்தில் வைத்த வெங்காயங்கள் படுக்கை எங்கும் பரவிக்கிடந்தன. நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள். வெங்காயம் அவளை ஏமாற்றிவிட்டது.

வீட்டிலுள்ளவர்கள் தொடக்கம் வெங்காயம் வரை தனது ஆசைகளுக்கு எதிராகச் சதிசெய்வதான உணர்வுடன் ராஜிக்குட்டி எழுந்தாள்.

பார்க்கில் காணிவெல் ஆரம்பித்ததின் அறிகுறியாக கடகடவென்ற ராட்டணச் சத்தமும், 'பாண்ட்' வாத்திய இசையும் ஒலித்தன. ராஜியால் மேலும் பொறுக்க முடிய வில்லை. அம்மாவை ஒருமுறை கேட்டுத்தான் பார்ப்போம் என தைரியத்தை வரவழைத்துக் கொண்டாள்.

சமையலறையில் அலுவலாக நின்றார் அம்மா. மனநிலையை நாடிபிடித்துப்பார்க்கும் வகையில், "தம்பியை எழுப்பி முகம் கழுவிவிடவா அம்மா...?" எனக் கேட்டாள் ராஜி.

"அவன் இப்ப எழும்பினால் குழப்படி பண்ணுவான். நீ சாப்பிட்டு கோப்பியைக் குடிச்சிட்டு ரியூஷனுக்கு வெளிக்கிடு. உன்னை கிளாஸில விட்டிட்டுத்தான் பிளமிங்டன் மார்க் கற்றுக்குச் சாமான் வாங்கப் போகவேணும்" என்றார் அம்மா வழக்கத்துக்கு மாறான அமைதியுடன்.

அம்மா நல்ல மூடில் இருப்பதுபோல் தோன்றியது ராஜிக்கு.

"இண்டைக்கு கத்தரினும் எவலினும் கிங்ஸ்வூட் பார்க் காணிவலுக்கு போகினம். என்னையும் கட்டாயம் வரச் சொன்னவை. போகட்டேயம்மா...?" ஒருவித குழைவுடனும் எதிர்பார்ப்புடனும் கேட்டாள் ராஜி.

நெருப்பை மிதித்தவர் போல் துள்ளி எழுந்தார் அம்மா.

"ரியூஷன் கிளாசும், தமிழ்ப் பள்ளிக்கூடமும் இண்டைக் கிருக்கெண்டு தெரியாதோ...? அதோடை பின்னேரம்

கலைவிழா 'நாடக றிகேஸலும்' இருக்கு... நான் எவ்வளவு கஷ்டப்பட்டு உன்னை அதிலை முக்கிய பாத்திரத்திலை போடுவிச்சனான். உனக்கு விளையாட்டாய் இருக்கு.... அதோடை ரியூஷனுக்கும் போகாமல் இப்பிடி விளையாடிக் கொண்டு திரிஞ்சால் ஆறாம் வகுப்பிலை சிலெக்ரிவ் ஸ்கூலுக்கு எடுபடாமல் எங்கடை மானத்தைக் கெடுக்கப் போறாய்... போடி போ... கெதியாய் ரியூஷனுக்கு வெளிக்கிடு..." என பொரிந்து தள்ளினார்.

வெதும்பிய மனதுடன் ராஜிக்குட்டி புத்தகங்கள் சகிதம் காரில் ஏறிக் கொண்டாள்.

கறாஜால் கார் புறப்படும் போது 'றைவே'யில் எவலினும் கத்தரினும் நடந்து வருவது தெரிந்தது.

கார் கண்ணாடியை சற்றுக் கீழே இறக்கிய அம்மா, "ராஜிக்கு ரியூசன் இருக்கிறது. அவள் வரமாட்டாள்..."

"ரியூஷனா...?" என விநோதமாகக் கேட்டவர்கள் ராஜிக்கு கையசைத்தவறே கிங்ஸ்வூட் பார்க் நோக்கி நடந்தார்கள்.

நாலாம் வகுப்பு ராஜிக்குட்டியோ, ஆறாம் வகுப்பில் படிக்க வேண்டிய பாடத்தில் 'ஞானம்' பெறுவதற்காக 'ரியூஷன்' வகுப்புக்கு சென்று கொண்டிருக்கிறாள்!

[மல்லிகை (இலங்கை) 2000]

௮

# இனமானம்



இப்பொழுதெல்லாம் சாம்பசிவம் அடிக்கடி வெளி நாடுகளுக்குப் பறக்கிறான்.

அவனுடைய உத்தி யோகம் அப்படி.

இன்றும் பயணம். விமானநிலையத்திற்கு சாம்ப சிவத்தின் மனைவி தான் காரை ஓட்டி வருவாள். வழமைபோல அவள் காரை எடுத்து வீட்டிற்கு முன்னால் நிறுத்தினாள்.

சாம்பசிவம் காரில் ஏறும்போது 'ஜிம்மி' ஓடிவந்து

தன் முன்னங்கால்களை அவன் கைகளிலே போட்டு விசுவாசத்துடன் இரண்டு தடவைகள் முக்கி முகர்ந்தது. 'ஜிம்மி' அவன் வீட்டிலே செல்லப்பிள்ளைபோல் வளர்ந்து வரும் நாய். அது இவ்வாறு வழக்கமாகச் செய்யும் வழியனுப்புதல், அவனுக்குப் பிடித்தமான தொன்றாய் அமையலாயிற்று.

சிட்னி விமான நிலையத்தில் எல்லாம் திட்டமிட்டபடி நடந்தேற சாம்பசிவம் விமானத்தில் ஏறிக்கொண்டான்.

இது தென்கொரிய நாட்டைச் சென்றடைவதற்கான பறப்பு.

**தெ**ன் கொரியாவின் கீழே குட்டித்தீவு ஒன்று உண்டு. Cheju Island என்று பெயர். இரண்டாம் உலக மகாயுத்தத்திலே, யப்பான் இத்தீவினைப் பிடித்தே இங்கிருந்து கொரியா முழுவதையும் தனது ஆட்சிக்குள் அடிமைப்படுத்தியதாகச் சொல்வார்கள். இத்தீவிலே இப்பொழுது தென்கொரியாவின் ஆட்சி நிலைத்துள்ளது. இத்தீவு சுண்ணாம்புக் கற்களுக்கும் குதிரைகளுக்கும் பெயர் பெற்றது. 'மண்டறின்' என்னும் தோடை இனம் இங்கு செழிப்பாகப் பயிரிடப்படுகின்றது.

இத்தீவின் இயற்கை அழகிலே மனதை பறிகொடுத்த யப்பானியர்கள், தேன்நிலவைக் கழிக்க பெருந்தொகையாக வருவாதாகவும், இதனால் இது தேன்நிலவுத் தீவு என்று அழைக்கப்படுவதாகவும் சாம்பசிவம் சஞ்சிகைகளில் படித்துள்ளான்.

தேனீக்களைப்போல இரவு பகலாக ஓடி ஓடி உழைக்கும் யப்பானியர்கள் இத்தீவுக்கு வந்தவுடன் பணத்தைத் தண்ணீர் போல் செலவு செய்வார்கள். இவர்களின் பணச் செலவிலே தீவு புதிய வனப்பும் அந்தஸ்தும் பெறலாயிற்று.

பட்டுப்போன்ற குறுமணற் கடற்கரைகளும், உல்லாசமான குதிரைச் சவாரிகளும், மற்றும் உல்லாசத்திற்கு உதவும்

'இன்ன பிறவும்', அவற்றை அந்தரங்கத்தில் அனுபவிக்கும் ஒருவகைத் தனிமையும் இத்தீவிலே தாராளமாய்க் கிடைப்பதாக, அவனுக்கு முன்னர் அத்தீவுக்குச் சென்று திரும்பிய சகா ஒருவன் வாயூறக் கூறியிருந்தான். சுண்ணாம்புக் கற்களிலே செதுக்கப்பட்ட காவல் தெய்வங்கள் தீவிலுள்ள ஒவ்வொரு வீட்டு வாசலிலும் காணப்படுவதாக கூறி, சாம்பசிவத்திற்கு அப்படியான தொரு காவல் தெய்வமொன்றை அவன் பரிசாகத் தந்துமிருந்தான்.

இங்கு உல்லாச ஹோட்டல்கள் சர்வதேசத் தரம் வாய்ந்தவை. அதன் தரத்தினை மேலும் உயர்த்தக் கொரியா விரும்பியது. இந்த சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி இத்தீவின் ஹோட்டல் தொழிலை ஒட்டுமொத்தமாகக் குத்தகைகக்கு எடுத்துப் பெரும் பணம் சம்பாதித்தல் சாத்தியம் என்பதை சாம்பசிவத்தின் நிறுவனம் புரிந்து கொண்டது. இந்த சூக்குமத்தை முன்மொழிந்த பெருமையும் சாம்பசிவத்தையே சாரும்.

பல சர்வதேச நிறுவனங்கள் இதற்குப் போட்டியிட்டன. எண்பதுகளின் இனக்கலவரத்திலும் அழிந்துபோகாது, மீண்டும் உயிர்த்து வளம் கொண்ட இலங்கை நிறுவனம் ஒன்றும் Cheju தீவின் வருங்கால வருமானத்தைக் கணக்கில் எடுத்துப் போட்டியில் குதித்தது. இறுதியில் சாம்பசிவத்தின் அவுஸ்திரேலிய நிறுவனத்திற்கும் இலங்கை நிறுவனத்திற்கும் இடையிலேயே போட்டி என்னும் நிலை உருவாயிற்று.

இலங்கை நிறுவனத்தின் ஒப்பந்த ஓட்டைகளை அங்கு வேலை செய்த நண்பன் பியசேனா மூலம் நன்கு அறிந்து கொண்ட சாம்பசிவம் அந்த ஒப்பந்தத்தை Under-cut பண்ணியே குத்தகை யைத் தனது கம்பனிக்குக் கிடைக்கச் செய்தான். இதற்குப் பிரதியுபகாரமாக பியசேனாவின் 'பை' அவுஸ்திரேலிய டொலர்களால் நிரப்பப்பட்டது.

போட்டியிட்ட இலங்கைக் கம்பனி, தான் ஈட்டும் லாபத்தின் பெரும் பகுதியை, பாதிப்படைந்த மக்களின் புனர்வாழ்விற்கே செலவு செய்யும் சமூக நிறுவனம் என்பதை அறிந்ததும் சாம்பசிவத்தின் உள்மனம் குறுகுறுத்தது. பிறந்த மண்ணிற்கும் மக்களுக்கும் துரோகம் செய்கிறோமா என்று அவனது மனச்சாட்சி ஓரிரு சந்தர்ப்பங்களில் அலட்டிக் கொண்டாலும் சாம்பசிவம் கட்டிக்காத்து வளர்த்த 'தொழில் விசுவாசமே' ஈற்றில் வென்றது.

கம்பனிக்கு அவன் சம்பாதித்துக் கொடுத்த அந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடவே இந்தப் பயணத்தை மேற்கொண்டிருக்கிறான்.

**உ**ணவுகள் பரிமாறப்பட்டபின் லைற்றை அணைத்து வீடியோப் படத்தை ஓடவிட்டாள் விமானப் பணிப்பெண். விமானத்தில் பொருத்தப்பட்டுள்ள பிரதான திரையிலும் ஒவ்வொரு இருக்கைக்கும் முன்னால் உள்ள குட்டித் திரையிலும் வீடியோ படம் ஓடத் தொடங்கியது. நாய் ஒன்றை மையமாக வைத்து அந்தப்படம் எடுக்கப்பட்டிருந்தது. நாயின் அட்டகாசமான புத்திசாலிச் செயல்கள் திரையில் ஓடிக்கொண்டிருந்தன.

ஒருகாலத்தில் சாம்பசிவத்துக்கு நாயென்றாலே ஒருவித நடுக்கம். தான் பிறந்து வளர்ந்த கிராமத்தில் தெருநாய் ஒன்று தன்னைக் கடித்ததும், அதைத் தொடர்ந்து பட்டணத்திற்கு பஸ் ஏறி அங்குள்ள ஆஸ்பத்திரியில் 'பொக்கிளை'ச் சுற்றி இருபத்தொரு ஊசி போட்டுக் கொண்டதும் அவன் மனத் திரையில் ஓடியது. அதன் வலியும் வேதனையும் அவன் இன்றும் மறக்காதவை.

அவுஸ்திரேலியா வாசியான பிறகும் நாய் என்றால் அவனுக்கு அலேர்ஜியாகவே இருந்தது. நாய் வளர்க்கும்

வீடுகளுக்குப் போவதையும் அவன் பெரும்பாலும் தவிர்த்துக்கொண்டான்.

குடும்பம் என்ற ஒன்று வந்தவுடன், சாம்பசிவம் மற்றவர்களுடைய விருப்பு வெறுப்புகளையும் அனுசரித்துப் போக வேண்டி வந்தது. சாம்பசிவத்தின் பெற்றோர் தெரிவு செய்த பணக்கார மனைவிக்கோ நாயின்மீது கொள்ளை ஆசை. அவள் கொழும்பில் பிறந்து வளர்ந்தவள். பணகாரத் தாத்தா காலத்திலிருந்தே அவளின் குடும்பம் நாய் வளர்க்கும் மோகத்தினை பூஜித்து வந்துள்ளது. பணக்கார மனைவியைத் திருப்திப்படுத்த நாய் விடயத்தில் பல விட்டுக் கொடுப்புகளை அவன் மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

சாம்பசிவம் வீட்டில் நாய் ஒன்று வளர்க்கப்பட்டது. ஊரில் உள்ள தெருநாய் போல் அல்ல. ஜிம்மி நல்ல சாதி நாய். குடும்ப அங்கத்தார்கள் அனைவருடனும் விசுவாசமாக, சமமாக, செல்லமாகப் பழகியது. குழந்தை இல்லாத குறையைக்கூட அது பூர்த்தி செய்வதாக வீட்டில் உணர்ந்த சந்தர்ப்பங்களும் உண்டு.

இரண்டு வருடங்கள் கழித்து சாம்பசிவத்தின் மனைவி அழகான குழந்தையொன்றைப் பெற்றெடுத்தாள். அது, ஜிம்மி வீட்டிற்கு வந்த ராசி என்றுதான் சாம்பசிவத்தின் மனைவி சாதித்தாள். அவனுக்கு நாய் மீதிருந்த பயம் முற்றாக நீங்கியது. அதனை அன்புடன் பாராட்டும் மனசும் வந்தது.

ஜிம்மி மீது பாசம் மேலோங்குவதற்குப் பிறிதொரு சம்பவமும் காரணமாக அமைந்தது.

**சா**ம்பசிவம் எஜமான விசுவாசத்துடன் தொழில் செய்வதில் மகா கெட்டிக்காரன். படிப்படியாகப் பதவி உயர்ந்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட அதிகாரியாக முன்னேறிவிட்டான். பேச்சுச் சாமர்த்தியம் அவனுக்கு

இயல்பாகவே வந்த கலை. எவரையும் தனது பேச்சால் இலகுவில் மடக்கி, தன் வழிக்கு கொண்டு வந்துவிடுவான். கல்வி தராதரங்களிலும் பார்க்க அவுஸ்திரேலிய தொழில் நிறுவனங்களிலே இதுவே பெரிதும் வரவேற்கப்படுவதால் அவனது ஊதியமும் விரைவில் உயர்ந்தது.

பதவிக்கும் பணத்திற்கும் ஏற்ப, நீச்சல் குளத்துடன் கூடிய அழகிய மாடிவீடு ஒன்றினைப் புதிததாக வாங்கிக் குடியேறினான். தமது முன்னேற்றத்தினை உறவினர்கள் மத்தியிலும் நண்பர்கள் மத்தியிலும் தம்பட்டமடித்தல் சமான்ய மனித இயல்பு. அந்த அழகிய நீச்சல் குளத்தின் அருகே, அவுஸ்திரேலிய மோஸ்தரில் BBQ விருந்து ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தான். நெருப்பிலே வாட்டிய இறைச்சி வகை களுக்கு ஏற்ப மதுவகைகளும் பரிமாறப்பட்டன. நீச்சல் குளத்தை ஒட்டினாற்போல் அமைக்கபட்டிருந்த Garden Table ஒன்றிலே பலவித மதுப் போத்தல்கள் அடுக்கப்பட்டிருந்தன. யாவும் விலை உயர்ந்த மது வகைகள். சாம்பசிவம் வெளிநாடு செல்லும் போதெல்லாம் Duty Free கடைகளில் வாங்கி சேமித் தவையாக இருக்க வேண்டும்.

சூரியன் மறைய, மங்கிய நிலா வெளிச்சத்திலும், அங்கொன்றும் இங்கொன்றுமாக கலைநயத்துடன் மறை வாகப் பொருத்தப்பட்டிருந்த மின் விளக்குகள் சிந்திய ஊமை வெளிச்சத்திலும் நீச்சல்குளம் மிக ரம்மியமாகக் காட்சி தந்தது.

விருந்துக்கு வந்தவர்களின் குழந்தைகள் குளத்தின் அருகில் ஜிம்மியுடன் விளையாடிக் கொண்டிருந்தார்கள். விடலைப் பருவத்து இளைஞர் சிலர் ஆசையைக் கட்டுப் படுத்த முடியாமல், நீச்சல் குளத்தில் இறங்கிக் குளிக்கவும் நீந்தவும் செய்தார்கள்.

"குளத்தின் Deep end க்கு போயிடாதேயுங்கோ.... Shallow

line ஐ ஒருத்தரும் தாண்டவேண்டாம்...!" என்று எச்சரித்துக் கொண்டே மதுவகைகளின் தாராளப் பரிமாற்றத்தை ஊக்கு வித்தான் சாம்பசிவம்.

மதுவின் சூடு தலைக்கேற 'பெருங்குடி' மக்கள், கூட்டம் கூட்டமாக நின்று ஊர்வம்பளந்து கொண்டு நின்றார்கள்.

அப்பொழுதுதான் அது சடுதியாக நடந்தது.

நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த சாம்ப சிவத்தின் நாலு வயது மகன் கால் தவறிக் குளத்தின் Deep endக்குள் விழுந்துவிட்டான். சேர்ந்து விளையாடிய குழந்தை களின் அவல அலறல் கேட்டுத் திரும்பிப்பார்த்த அனைவரும் உடல் விறைக்க மலைத்து நின்றார்கள்.

சாம்பசிவம் இரத்த ஓட்டமே நின்றுவிட்டது போல வெளிறிய முகத்துடன் செயலற்று நின்றான். அவனது மனைவி யோ ஒப்பாரி வைக்கத் தொடங்கினாள்.

மனிதர்கள் செயலற்றுப் போயிருந்த நிலையிலும், ஜிம்மி விவேகத்துடன் செயற்பட்டது. குளத்தில் பாய்ந்த அது, சாம்பசிவத்தின் மகனுடைய சேட்டினை வாயில் கடித்துக் கவ்விக்கொண்டு நீச்சலும் இழுவையுமாக அவனை Shallow end க்கு இழுத்து வந்தது.

அன்றிலிருந்து சாம்பசிவம் வீட்டிலே ஜிம்மி ஒரு ஹீரோ வாகக் கணிக்கப்பட்டது. அதற்கு ராஜமரியாதை கிடைத்து. ஆனால் ஜிம்மி புதிய சலுகைகள் எதைப்பற்றியும் சட்டை செய்யாது, பழைய ஜிம்மியாக நட்பும் விசுவாசமும் உள்ள நாயாகவே பழகியது.

**சா**ம்பசிவத்தின் எண்ண ஓட்டங்கள் நிறைவு பெற, சின்னத் திரையில் படமும் முடிவடைந்தது. படத்தில் காட்டப்பட்ட நாயின் சாகஸங்களுடன் ஜிம்மியை இணைத்துப் பார்த்து சாம்பசிவம் பூரிப்படைந்தான்.

சாம்பசிவம் பறப்பினை மேற்கொண்ட விமானம் தென் கொரிய தலைநகரான சியோலில் இறங்கிற்று. Cheju தீவில் நேரடியாகத் தரையிறங்க யப்பானிய Jal விமானத்திற்கே அனுமதி கொடுக்கப்பட்டிருந்தது. இதனால் சாம்பசிவம் ஒரு சிறிய கொரிய விமானத்தில் ஏறி, பயணத்தைத் தொடர்ந் தான். அங்கு அவனுக்குத் தடபுடல் வரவேற்புக் கிடைத்தது. செங்கம்பள வரவேற்பின் சகல அம்சங்களையும் அது பெற்றிருந்தது.

சூழ்நிலைக்கு ஏற்ப நடந்துகொள்ளும் கலையில் சாம்பசிவம் மன்னன். அவனது அசுர முன்னேற்றத்திற்கு இந்தக் குணம் பெரிதும் பங்களிப்புச் செய்தது.

எந்தவித இடைஞ்சலுமின்றி இருசாராருமே வெற்றி கொண்டாடும் வகையில் ஒப்பந்தம் நிறைவு பெற்றது. அவுஸ் திரேலியக் கம்பனியின் சார்பில் சாம்பசிவம் கைச்சாத்திட் டான். கைகுலுக்கி, பத்திரங்கள் பரிமாறப்பட்டன. இனி...? வழமையான பார்ட்டி தான்.

கொரிய வழக்கப்படி ஒரு விசேடவிருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள்.

கொரிய நிறுவனத்தின் முக்கிய அதிகாரிகளும் சாம்பசிவமும் புத்தம் புதிய வாகனென்றில் ஏறிக் கொண்டார்கள். உடன்படிக்கை கைச்சாத்திட உதவி புரிந்த பெண் செயலாளர் கையசைத்து விடைகொடுத்தாள்.

"அவளும் எங்களுடன் வரலாமல்லவா...?" என்று கொரியனைக் கேட்டான் சாம்பசிவம்

கொரிய வழக்கப்படி 'இப்படியான' பார்ட்டிகளுக்குப் இத்தகைய பெண்கள் செல்வதில்லை என்றான் கொரியன்.

தீவின் அமைதியான பகுதியிலுள்ள பெரியதொரு

பழத்தோட்டம் ஒன்றிலேதான் அந்த விசேட விருந்து ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

கொரிய அதிகாரிகளும் சாம்பசிவமும் பயணித்த வாகனம் அந்தத் தோட்டத்தின் வாசலிலே நிறுத்தப்பட்டது. வாசலில் அழகான சோடனைகள். இத்தகைய சோடனை விஷயங்களில் கொரியர்களையும் சீனர்களையும் யாரும் வெல்ல முடியாது. எளிமையையும் அழகையும் இணைப்பது தான் அவர்களின் கலைத்துவத்தின் சாதனை என்று சாம்ப சிவம் நிதானித்தான். வாசல் அலங்காரத்தின் அங்கமாகத் தோற்றமளித்த கொரிய இளம் பெண்கள் அவர்களைக் குதூகலமாக வரவேற்றார்கள்.

தோட்டத்தின் பிரதான பாதையிலே நடக்கத் தொடங்கினார்கள். இரு மருங்கிலும் தோடம் பழங்களும், ஆப்பிள் பழங்களும் செழுமையுடன் காய்த்துத் தொங்கின. அந்தப் பழ மரங்களில் புகுந்த, இனிய மணம் கலந்த காற்று இதமாக இருந்தது. தோட்டத்தின் மத்தியிலே ஆங்காங்கு வேயப்பட்ட சிறிய குடில்கள் காணப்பட்டன.

சற்றே பெரிதாகத் தோன்றிய குடில் ஒன்றுக்குள் சாம்பசிவம் அழைத்துச் செல்லப்பட்டான். வண்ண விளக்கு களும் பலநிறச் சேலைகளும் கொண்டு, கொரியக் கற் பனையும் கலைவண்ணமும் குழைய, குடில் அலங்கரிக்கப் பட்டிருந்தது. பழத் தோட்டத்தின் நறுமணத்திற்கு ஒரு கிறக்கத்தினை ஏற்படுத்தும் வகையிலே கொரிய இசை காற்றிலே கலந்து கொண்டிருந்தது.

குடிசைக்குள் அழகிய சீமெந்து திண்ணை. அதன் மத்தியிலே குள்ளமான, பரப்பில் பெரிய, கொரிய வேலைப் பாடுகளுடன் கூடிய மேசை. மேசையை சுற்றிவர அழகிய விரிப்பு ஒன்று போடப்பட்டிருந்தது. விரிப்பிலே அமர்வதற்கும், வசதியாக சாய்வதற்கும் பல்வேறு பட்டுத் தலையணைகள்

ஆங்காங்கு வீசப்பட்டிருந்தன. பாதணிகளைக் கழற்றிய பின்னர் மேசையைச் சுற்றிப் போடப்பட்டிருந்த விரிப்பிலே விருந்தினர்கள் சம்மணம் கொட்டி அமர்ந்து கொண்டனர். சாம்பசிவமும் கொரியர்களைப் பின்பற்றி வசதியான தாரு இடத்தில் அமர்ந்துகொண்டான்.

மேசையின் நடுவில் ஒரு gas burner. அழகிய இளம் பெண் ஒருத்தி முழங்கால் குத்தி உடம்பை முன்னே வளைத்து வணக்கம் கூறிய பின்னர், burnerஐப் பற்ற வைத்து, சட்டியை வைத்தாள். அதற்குள் எண்ணையும் தண்ணீரும் கலந்த திரவமொன்றை ஊற்றிக் கொதிக்க விட்டாள்.

கொரியப் பெண் சுறுசுறுப்பாகவே இயங்கினாள். சட்டியில் ஊற்றப்பட்ட திரவம் கொதிப்பதற்கிடையில் பதப்படுத்தப்பட்ட இறைச்சி வகைகளையும், ஊறுகாய், 'சலாட்'(Salad) இலை களையும் மேசை எங்கும் பரப்பிவைத்தாள்.

மது அருந்தும் சடங்கு துவங்கியது. இதில் கொரிய கலாசாரத்தை பின்பற்றுவதிலே அவர்கள் அக்கறை காட்டி னார்கள். மது அருந்துவதற்கு மட்பாத்திரங்கள். கொரிய பாரம்பரிய முறையில் அரிசியில் இருந்து தயாரிக்கப்பட்ட மதுவே பரிமாறப்பட்டது.

பாத்திரத்தில் வார்க்கும் மதுவினை ஒரே மடக்கில் குடித்துவிட்டு, மது அருந்திய பாத்திரம் காலியாக் கப்பட்டதனை நிரூபிக்கப் பாத்திரத்தை கவிழ்த்து வைத்து விடவேண்டும். ஒருவர் மாறி ஒருவர் மற்றவருடைய பாத்தி ரத்தில் மதுவை நிரப்பிக் கொண்டிருந்தார்கள். ஒருவர் மது தர முற்படுகையில் அதனை மறுத்தால், கொரிய வழக்கப்படி அவருடைய நட்பை நிராகரிப்பதாகப் பொருள்படும். இந்த சம்பிரதாயங்கள் எல்லாவற்றையும் நன்கு அறிந்திருந்த சாம்பசிவம் யாருடைய மனமும் கோணாதவாறு கனவா னாகவே நடந்துகொண்டான்.

மது அருந்தும் சம்பிரதாயம் நடந்து கொண்டிருக்கும் பொழுதே கொரிய இளம் பெண் கொதிக்கும் சட்டியிலே இறைச்சித் துண்டுகளையும் ஏதேதோ சரக்குகளையும் கொட்டி அவியவிட்டு, கிளறிக் கொண்டிருந்தாள்.

ஒவ்வொருவருக்கு முன்னாலும் வர்ண வேலைப்பாடுடன் கூடிய மட்பாத்திரத்திலே சோறு வைக்கப்பட்டிருந்தது. அதன் மீது Chop - sticks எனப்படும் குச்சிகளும் சாத்தப்பட்டிருந்தன. ஒவ்வொரு கட்டத்திலும் சாம்பசிவம் விசேடமாகக் கவனிக்கப் பட்டார். அவனுடைய சோற்றுச் சட்டிக்குப் பக்கத்தில் மூன்று நான்கு பொரித்த கோழிக் கால்களும் வைக்கப்பட்டிருந்தன.

இளம் பெண்ணால் தயாரிக்கப்பட்ட 'சூப்'பின் மணம் குடில் முழுவதும் தவழ்ந்தது. தடித்த சூப்பை ஒவ்வொரு முறையும் துளாவியவாறே சிறிய மட்பாத்திரத்திலே ஊற்றி ஒவ்வொரு வருக்கும் பரிமாறினாள் அந்தப்பெண். பின்னர் ஒவ்வொருவரும் தங்கள் விருப்பத்திற்கு ஏற்றவாறு தாங்களாகவே பரிமாறிக் கொண்டனர்.

சூடு ஆறாது பரிமாறப்பட்ட 'சூப்'பினையும் இறைச்சித் துண்டுகளையும் கொரிய நண்பர்கள் பெரிதும் சுவைப்பதைக் கண்ட சாம்பசிவம் அதை விரும்புவதாகக் காட்டிக் கொண்டான்.

மேலும் மேலும் இறைச்சியை மென்று கொண்டே அது என்ன இறைச்சி என்று நிதானிக்க முயன்றான். முடியவில்லை. (Salad) சலாட் இலைபோன்று காணப்பட்ட முழு இலை ஒன்றை எடுத்தான் அருகில் இருந்த கொரியன். இலையின் நடுவே பதப்படுத்தப்பட்ட இறைச்சித் துண்டையும் நீட்டுவாக்கில் மெல்லியதாக சீவப்பட்ட பச்சை வாழைக்காய்த் துண்டையும், உள்ளி இஞ்சியையும் ஒருங்கே வைத்து வெத்திலை போல் மடித்து, "இது நன்றாக இருக்கும். சாப்பிட்டுப்பார்.. இதுவும் கொரிய உணவு முறையில் ஒன்றுதான்" எனக் கொடுத்தான்.

தொடர்ந்து "எப்படி இருக்கிறது....?" எனக் கேட்டான், கொரியன், மதுவைக் கோப்பையில் நிரப்பியவாறே.

"நல்லாகத்தான் இருக்கிறது. மிகவும் மென்மையாகவும் சுவையாகவும் இருக்கிறது. இது என்ன இறைச்சி....?" எனக் கேட்டான் சாம்பசிவம்.

"இது நாய் இறைச்சி."

"நாய் இறைச்சியா....?" சாம்பசிவம் மிடறு முறித்தான்.

"சட்டிக்குள் அவிவதும் அதுதான். ஏன்...? அவுஸ்திரேலியாவில் கங்காருவையும், பன்றியையும், குதிரையையும் சாப்பிடு கிறார்களே..... அதுமாதிரிதான் இதுவும். நாய் இறைச்சி உண்பது எமது பாரம்பரிய வழக்கம்..."

போதை தலைக்கேறிய நிலையிலும் சாம்பசிவத்துக்கு பிரக்கேறி சிரசிலடித்தது. இதைக் கண்ட இன்னுமொரு கொரியன் "கவலைப்படாதே, இது சுத்தமான இறைச்சிதான். அவுஸ்திரேலியாவின் வடமாநிலத்திலே மக்கள் முதலை இறைச்சி சாப்பிடுகிறார்களே, அதற்கு இது எந்த வகையிலும் குறைந்தது இல்லை..." என்றான் சிரித்தவாறே.

இவற்றைக் கேட்டதும் சாம்பசிவத்துக்கு வயிற்றைக் குமட்டியது. பாம்பு தின்னும் ஊருக்குப் போனால் நடுமுறி நமக்கு என்கிற தன்னுடைய சவுடால்கள் எல்லாம் தன்னைக் கைவிடுவதாக உணர்ந்தான். இருந்தாலும், அவன் இங்கு தனி மனிதனல்ல. ஒரு கம்பனியின் பிரதிநிதி. கொரிய மண்ணிலே அவனது கம்பனியின் வியாபாரம் நன்கு வேர் ஊன்ற வேண்டும். தன்னுடைய சங்கடங்களை அவர்களிடமிருந்து மறைப்பதற்காகக் குடிலுக்கு வெளியே உற்றுப் பார்த்தான்.

அழகிய கொழுத்த நாய்க்குட்டி ஒன்று மருட்சியுடன் சாம்பசிவத்தை உற்றுப் பார்த்துக்கொண்டு நின்றது. அவனுக்கு ஜிம்மியின் ஞாபகம் வந்தது.

தனக்குப் பிரத்தியேகமாகப் பரிமாறப்பட்ட பொரித்த

கோழிக் கால்களை எடுத்து நாய்க்குட்டிக்கு காட்டி அருகில் வருமாறு அழைத்தான். மருட்சியும் தயக்கமும் கலந்தபடி மெதுவாக அருகில் வந்தது நாய்க்குட்டி.

சாம்பசிவத்தின் மூளைக்குள் 'பொறி' ஒன்று தட்டியது. கோழிக்காலுடன் சட்டிக்குள் அவிந்த பெரிய நாய் இறைச்சித் துண்டொன்றையும் எடுத்துக் கீழே போட்டான்.

நாய்க்குட்டி நாய் இறைச்சித் துண்டை முகர்ந்து பார்த்துவிட்டு, கோழி இறைச்சியை மாத்திரம் உண்டது.

இந்த நாய்க்குட்டியைப் பார்த்த இன்னுமொரு நாய் அந்த இடத்துக்கு வந்து சேர்ந்தது. சாம்பசிவத்துக்கு எப்போதும் பரிசோதனைக் குணம். முதல் நாய்க் குட்டிக்குச் செய்தது போன்றே இதற்கும் செய்தான். ஊஹும், நாய் இறைச்சியினை இதுவும் தீண்டாது, கோழி இறைச்சியை மட்டுமே உண்டது.

'இந்தப் பண்பிற்கு என்ன பெயர்....?' மூளையைக் குடைந்து கொண்டான் சாம்பசிவம்.

**த**ன் கம்பனியின் சார்பாகக் கொரியாவில் வெற்றி நாட்டிய சாம்பசிவம் சிட்னி மீண்டான்.

மனைவியும் மகனும் அவனுக்காக விமான நிலையத்தில் காத்திருந்தார்கள்.

காரில் ஏறிக் கொண்டதும் அவனையும் அறியாமலே "ஜிம்மி எப்படி இருக்கிறது?" என்றான்.

"He is fine" என்று மகன் முந்திக் கொண்டு பதில் சொன்னான்.

அனைவரும் வீடு வந்து சேர்ந்தார்கள். காரைக் கண்ட தும் ஜிம்மி வழமைபோல ஓடிவந்து தன் முன்னங் கால்களை சாம்பசிவத்தின் கைகளில் போட்டு இரண்டு தடவைகள் முக்கி முகர்ந்தது. இன்று அது முக்கி முகர்ந்தது சாம்பசிவத்துக்கு அசௌகர்யத்தை கொடுத்தது. இருப்பினும் பதிலுக்கு

ஜிம்மியைத் தட்டிக் கொடுத்தான்.

மூக்கை மேலே உயர்த்தி, துவாரத்தினை நன்கு விரித்தவாறே, மீண்டும் அவனைச் சுற்றி வந்து முகர்ந்து பார்த்தது ஜிம்மி. மறுகணம் வாலைச்சுருட்டிக் கொண்டுபோய் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டது.

இது வழமைக்கு மாறான செயலானாலும், இதனை அதிகம் ஒருவரும் பாராட்டவில்லை. கொரியப் புதினங்க்ளிலே மூழ்கிப் போனார்கள்.

எல்லாப் புதினங்களையும் விஸ்தாரமாகக் கூறினான் சாம்பசிவம்.

ஆனாலும் நாய் இறைச்சி சாப்பிட்டது பற்றி மூச்சே விடவில்லை.

அடுத்த நாள். சாம்பசிவம் பரபரப்புடன் கம்பனிக்குப் புறப்பட்டான். தனது வெற்றியைக் கம்பனியின் இயக்குநர் சபையுடன் பகிர்ந்து கொள்ளும் ஆர்வம்.

இயக்குநர் சபையினர் அவனைப் பாராட்டுவதற்காக மதிய விருந்தொன்றை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

சாம்பசிவம் தான் பிறந்த மண்ணின் கம்பனி சமர்ப்பித்த கேள்விப் பத்திரத்தை முறியடித்துதான் இந்த வெற்றியைச் சம்பாதித்தான் என்பது இயக்குநர் சபைக்கு நன்கு தெரியும். சொந்த இன உணர்வுகளுக்கு மேலாக கம்பனி நலன்களைப் பேணும் சாம்பசிவத்தை உரிய முறையில் அங்கீகரிப்பதற்கு அவனது சம்பளத்தில் பெரிய தொரு அதிகரிப்பினை பிரேரிக்க இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தப் பரபரப்புகளுக்கு முகம் கொடுக்க சித்தம் உடையவனாகவே அவன் புறப்பட்டான்.

வழக்கம் போல அவனை வழியனுப்பி வைக்க ஜிம்மி வரவில்லை. ஜிம்மி எங்கே போயிருக்கும்....?

கம்பனிக்குப் போகும் அவசரத்தில் அவன் இதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

கொரிய வெற்றியை கம்பனி சகாக்களுடன் கோலாக லமாகக் கொண்டாடிய சாம்பசிவம் வீடு திரும்பினான்.

'ஜிம்மியை எங்கேயும் காணவில்லை.....' என்ற தகவல் அவனை வரவேற்றது.

'ஜிம்மி எங்கே....?' அனைவரும் தேடினார்கள்.

அடுத்தநாளும் அது வரவில்லை.

'ஜிம்மிக்கு என்ன நடந்திருக்கும்...? அது ஒரு நாளும் இப்படிப் போனதில்லையே....? பரிதவித்தாள் சாம்பசிவத்தின் மனைவி.

சாம்பசிவத்துக்கு உள்மனம் குறுகுறுத்தது. 'அது'தான் காரணமாக இருக்குமோ....?

நாய்க்கு அபார மோப்ப சக்தியும், உள்ளுணர்வுகளும் இருப்பதுண்டு. அதன் மூலம் ஜிம்மி, அவன் நாய் இறைச்சி உண்ட சமாச்சாரத்தை முகர்ந்து அறிந்து கொண்டதோ....?

காரணம் எதுவாக இருந்தாலும் ஜிம்மி அந்த வீட்டிற்குத் திரும்பவேயில்லை.

மனிதனிலும் பார்க்க நாய்க்கு 'இனமான உணர்வு' அதிகம் என்ற புதிய ஞானத்தினை யாருக்குமே சொல்ல முடியாதவாறு சாம்பசிவம் இன்றும் தவித்துக் கொண்டு இருக்கிறான்.

[தினக்குரல் (இலங்கை) 14 Nov 1999]

# 9

## அடிவானம்

### I



அன்று அரசு விடு முறை.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் நான்கு தசாப்தங்களுக்கு மேலாக இரண்டு துருவங்களாக வாழ்ந்த கிழக்கு மேற்கு ஜேர்மனிகள் மீண்டும் ஒன் றிணைந்த நாள்.

அதை நினைவு கூர அன்று பொது விடுமுறை.

விடுமுறை என்றால் சோம்பலை அடைகாத்துப் பொழுதைப் போக்குவது

தான் வீரசிங்கத்தின் விருப்பம்.

அவருடைய விருப்பத்தைக் கடைக்குட்டி மகன் உடைத்தெறிந்தான். சமையலறையில் அவன் 'பிரளி' செய்து கொண்டிருந்தான்.

'என்னப்பா.... இவனை உந்த Park க்கு கூட்டிக்கொண்டு போய் வாருங்கோவன். அவனுக்குக் கொஞ்சம் பிராக்காக இருக்கும்.'

சமையலறை அலுமாரிக்குள் இருந்த சாமான்களை இழுத்துப் போட்டு விளையாடிக் கொண்டிருந்த மகனின் காதைத் திருகியவாறே மனைவி சத்தம் போட்டாள்.

மனைவியின் சத்தத்தை மகனின் அழுகுரல் அமுக்கியது. பிரளயத்தின் ஓசை கட்டவிழ்க்கப்பட்டதைப்போல....

இனி சோம்பலாவது? அதனை அடைகாத்தலாவது?

மகனைத் 'தாஜா' செய்தவாறு வீதியில் இறங்கினார்.

பேர்லின் (Berlin) நகரில், Turm வீதிக்கும் Altmoabit சாலைக்கும் இடையே குழந்தைகள் விளையாடுவதற்காகப் பூங்கா ஒன்றுண்டு. பூங்காவையொட்டி என்றுமே இலை உதிர்க்காத 'பைன்' மரங்களும், குளிர் காலத்தில் இலையை உதிர்த்து நிர்வாணமாய் நிற்கும் 'லார்ஷ' 'பப்ப' போன்ற மரங்களும் நேர்த்தியாக நடப்பட்டிருந்தன. இயந்திரகதியில் இயங்கும் ஜேர்மன் பெரு நகரங்களில் மாசுபடும் சூழலைச் சமப்படுத்த இப்படியான 'Man Made' ஊடுகாடுகள் அமைக்கப் படுவதுண்டு.

பூங்காவிலே மக்கள் நடமாட்டத்துக்குக் குறைச்சல் இல்லை. பகல் நேரங்களில் பெரும்பாலும் கிழவிகள் கூட்டத் தின் அரட்டை அரங்கமாக இது பயன்படும். ஊடுகாட்டின் விளக்குக் கம்பங்களின் கீழே அமைக்கப்பட்டு இருக்கும் இருக்கைகள், இதற்குத் தோதானவை. யுத்தத்திலே அதிக

ஆண்கள் இறந்துவிட இந்தக் கிழவிகள் தனிமையில் எதிர்நீச்சலடித்து வாழ்வில் வெற்றி சாதித்தவர்கள்.

மாலையானதும் 'Penners' என அழைக்கப்படும் நித்திய குடிகாரர்கள் போதை மயக்கத்திலே இவ்விருக்கைகளை ஆக்கிரமித்துக் கொள்வார்கள்.

ஜேர்மனியில் பேப்பர்கடை, காய்கறிக்கடை, சாப்பாட்டுக் கடை என எல்லாக்கடைகளிலும் மதுப் போத்தல்கள் 'மினிக் குவாட்டர்' சைஸ் வரை வெவ்வேறு வடிவங்களில் விற்பனைக் குண்டு. நித்திய குடிகாரர் பைகளிலே எப்போதும் இத்தகைய மினிக்குவாட்டர் போத்தல்கள் கைவசம் இருக்கும். போதை தெளியும் போதெல்லாம் இவற்றைக் குடித்துவிட்டு மின் கம்பங்களின் கீழேயுள்ள இருக்கைகளிலே சுருண்டு படுத்துக் கொள்வார்கள். இவர்கள் தமது உறவைத் தொலைத் தவர்கள். மதுபோதையிலே வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடிக் கொண்டிருப்பவர்கள்.

பூங்காவிலுள்ள மணல் கிடங்கொன்றிலே, மகன் விளையாடிக் கொண்டிருந்தான். காலாற சிறிது தூரம் ஊடுகாட்டினூடே நடந்தார் வீரசிங்கம். நீண்டு வளர்ந்த பைன் மரங்களுக்கு மத்தியில் மின் கம்பத்தையொட்டிப் போடப்பட்ட இருக்கை யொன்றில் ஒரு உருவம் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தது. பார்த்த மாத்திரத் தில் அவன் 'நித்திய குடிகாரன்' வகையைச் சேர்ந்தவன் அல்ல என்பதை ஊகித்துக் கொண்டார். சட்டை கசங்கி ஊத்தையாக இருந்தது. இருக்கையைச் சுற்றி காலியான 'வொட்கா' மினிக்குவார்ட்டர் போத்தல்கள் சிதறிக்கிடந்தன.

வீரசிங்கம் உற்றுப்பார்த்தார்.

றொனால்ட்....!

வீரசிங்கத்தால் நம்பமுடியவில்லை.

'இவன் எப்படி....? இங்கே.... இந்தக் கோலத்தில் ....' என்று

பல வினாக்கள் ஏக காலத்தில் எழுந்தன.

அருகில் சென்றார். சந்தேகமே இல்லை.

றொனால்ட் சுல்ஸ் தான்!

ஒரு காலத்தில் அவன், வீரசிங்கத்தின் ஆத்ம நண்பன்.

பத்து ஆண்டுகள் அவன் ஒரு திசையிலும், இவர் வேறு திசையிலும் பயணித்துவிட்டார்கள். இன்று திடீரென இந்தக் கோலத்தில் சந்திப்பு நிகழ்கின்றது. இவன் எப்படி இந்தக் கோலத்துக்கு வந்தான்?

திரும்பிப்பார்த்தார்.

மகன் சுவரஸ்யமாக மணற் கிடங்கிலே தன் விளையாட்டில் ஈடுபட்டிருந்தது தெரிந்தது.

அவனுடைய தோள்களை இரண்டு தடவைகள் உலுக்கி, 'றொனால்ட் என்னைத் தெரிகிறதா....?' என்று கேட்டார்.

தலையை நிமிர்த்தினான். கண்களைச் சுருக்கி உற்றுப் பார்த்தான்.

'அங்கிள் வீரா' என்றான்.

குடிவெறியிலும் வீரசிங்கத்தைப் பார்த்த மகிழச்சி அவன் முகத்திலே பரவியது. அவனது குழந்தைகள் அவரை 'அங்கிள் வீரா' என்றே அழைப்பார்கள். மரியாதையின் நிமிர்த்தம் அவனும் அவனது மனைவியும் அவ்வாறே அழைத்துப் பழகிவிட்டார்கள்.

'என்ன றோனால்ட்?... இது என்ன கோலம்....!' என்று வார்த்தைகளை விக்கினார் வீரசிங்கம்.

'உன்னால் இதை நம்பமுடியவில்லை, இல்லையா? இதுதான் ஒன்றிணைந்த ஜேர்மனி பெற்றுத்தந்த பரிசு...' எனக் கூறிச் சுரத்தின்றிச் சிரித்தான்.

'நீ இப்போது எங்கே வசிக்கிறாய்? உனது மனைவி சுகமாக இருக்கிறாளா? உனது மகன்கள் இருவரும் வளர்ந்து பெரியவர்களாய் இருப்பார்களே, அவர்களெல்லாம் எங்கே...?'

என்று நிலைமைகளை மறந்து உணர்ச்சிகளின் உந்துதலினால் கேள்விகளை அடுக்கினார்.

'கேள்விகள் கேட்காதே நண்பனே... உன் கேள்விகளுக்கு பதில் சொல்லக் கூடிய நிலையிலும் நானில்லை. உன்னிடம் இருபது 'டொயிஸ் மார்க்' பணமிருந்தால் தந்துவிட்டுப்போ... நான் குடிக்க வேண்டும்... போதை முறிவதற்கிடையில் குடிக்க வேண்டும்...!' உதவி கேட்ட பொழுதுகூட அவனுடைய கம்பீரியம் குறையவில்லை.

அவனைக் கையுடன் வீட்டுக்கு அழைத்துச் செல்லவே விரும்பினார். இந்த நிலையிலே அவனை அழைப்பது சரியா? வீரசிங்கத்தின் மனம் குழம்பியது.

'என் வீடு அருகில்தான் இருக்கிறது...' என்று இழுத்தார்.

'அது இருக்கட்டும். பணம் உண்டா இல்லையா...?'

வீரசிங்கம் நிதானமடைந்தார். ஐம்பது டொயிஸ் மார்க் பணத்தை அவன் கைகளிலே திணித்தார்.

'அதிகம் குடிக்காதே... உன்னை நான் மீண்டும் சந்திக்க விரும்புகிறேன் றொனாஸ்ட்' என அன்புடன் சொன்னார்.

'மேற்கு பேர்லின் பல்கலைக்கழகத்திலே நீ வேலை செய்வதாகக் கூறியது ஞாபகம் இருக்கிறது. நாளை அங்கு வந்து உன்னைச் சந்திப்பேன். நிச்சயம் வருவேன். இப்பொழுது என்னைத் தொந்தரவு செய்யாதே...' என்றவாறு பணத்தைத் தனது பொக்கற்றிலே திணித்தபடி எழுந்தான்.

'மறந்துவிடாதே, நாளை முழுவதும் எனது அலுவலக அறையிலேயே இருப்பேன். வந்துசேர்...'

வீரசிங்கம் பேசியதை றொனால்ட் செவி மடுத்திருப்பானோ என்னவோ, அங்கிருந்து நகர்ந்து அருகில் உள்ள கடையொன்றுக்கு விரைந்து கொண்டிருந்தான். அவனுக்கு இப்பொழுது உடனடித் தேவை, மது மட்டுமே!

# II

**சோ**லிஷ ஆட்சி வியாபித்திருந்த காலத்தில் கிழக்கு ஜேர்மனியில் பிறந்து வளர்ந்தவன் றொனால்ட் சுல்ஸ். கார்ல் மார்க்ஸ், லெனின் வழிவந்த சோசலிஷ தத்துவங்களை ஏற்ற சமுதாயத்தின் உண்மையான பிரதிநிதியாகவே அவன் வளர்ந்தான். பல்கலைக்கழக புகுமுக வகுப்பிலே மாநிலத் திலேயே முதலாவது மாணவனாகத் தேறி Dresden பல்கலைக் கழகத்திற்கு றோனால்ட் வந்திருந்த போதுதான் வீரசிங்கம் முதன்முதலாக அவனைச் சந்தித்தார்.

ஒருகாலத்தில் ஸ்ரீமாவோ ஆட்சியின் கீழ் இலங்கை தன்னை சோசலிஷ நாடாகப் பிரகடனப்படுத்திக் கொண்டது. இது சோசலிஷ நாடுகளின் பல்கலைக் கழகங்களுக்குச் செல்லும் வாய்ப்பினை இலங்கை மாணவர்களுக்குப் பெற்றுத் தந்தது. வீரசிங்கமும் புலமைப்பரிசில் ஒன்றினைப் பெற்று Dresden பல்கலைக்கழகம் சென்றார்.

முதலாளித்துவ நாடுகளுக்கும் கொம்மியூனிஸ்ட் நாடுகளுக்கும் இடையில் 'பனிப்போர்' நிகழ்ந்து கொண்டிருந்த காலம் அது. இரு முகாம்களும் கண்களுக்குத் தெரியாத இரும்புத்திரையால் பிரிக்கப்பட்டிருந்தன. இதனால் மேற்குலக நாட்டின் புதினங்களை அறிவதற்கும் அந்நாட்டு மக்களுடன் நெருங்கிப் பழகுவதற்குமான வாய்ப்புக்கள் பெரும்பாலும் சோசலிஷ நாடுகளில் மறுக்கப்பட்டன.

ஆனாலும், றெனால்ட் முற்றிலும் மாறுபட்டவனாக் காணப்பட்டான். புதியனவற்றை அறிவதில் மிகுந்த ஆர்வம் அவனுக்கிருந்தது. ஜேர்மன் அவனது தாய்மொழி. சோசலிஷ நாடொன்றில் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டிய 'ருஷ்ய' மொழியுடன், ஆங்கிலத்தையும் விரும்பிக் கற்று, புலமை பெற்றிருந்தான்.

வீரசிங்கமும் றொனால்டும் 'வனவியல்' துறையிலே சேர்ந்திருந்தார்கள். அது சற்றே கடினமான கற்கை நெறி. வனவியல் பிரிவு செய்முறை வகுப்புகளுக்குத் தோதாகக் காட்டை மருவிய கிராமம் ஒன்றிலேயே அமைக்கப் பட்டிருந்தது. இதனால் மாணவர்கள் பல்கலைக்கழக விடுதி யிலேயே தங்க நேர்ந்தது. இரு மாணவர்களுக்கு ஒரு அறை.

வீரசிங்கத்திடம் மேற்குலகில் பிரசுரமான பல அரிய நூல்கள் இருந்தன. அவற்றை வாசிக்க றொனால்ட் அதீத ஆர்வம் காட்டினான். இதனால் றொனால்ட், வீரசிங்கத்துடன் விடுதி அறை யொன்றைப் பகிர்ந்து கொண்டான். நூல்களிலே உள்ள பரஸ்பர ஈடுபாட்டினால் இருவரும் விரைவில் நெருங்கிய நண்பர்களானார்கள்.

படிப்பில் மட்டுமல்லாது றொனால்ட் வாழ்விலும் சிறிது வேகத்தைக் காட்டிவிட்டான். பதினோராம் வகுப்பு படிக்கும்போது இவன் மோனிகாவைச் சந்தித்துக் காதலித் தானாம். இங்கெல்லாம் காதல் என்பது குடும்ப வாழ்க்கைக் கான வெள்ளோட்டந்தான். பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பில் றொனால்ட் படிக்கும்போதே மோனிக்கா வயிற்றில் குழந்தை உருவாகிவிட்டது. மாணவிகள் கருத்தரித்தலும் அதனைச் சிதைத்தலும் மேற்கு நாடுகளிலே பெரிதாகப் பாராட்டப்படும் பாவகாரியமல்ல. இருந்தாலும், றொனால்ட் தனது ஆண்மைக் கடமையை ஏற்கவே விரும்பி னான். விடலைப் பருவத்துக் கனவுக் காதலின் அவசர விளைவல்ல அது என்பதிலே உறுதியாக இருந்தான்.

மோனிக்காவை அழகி என்பதிலும், பார்க்கப் பேரழகி என்பதே பொருந்தமானது. இரண்டு குழந்தைகளின் பின்பும் அவள் குமரிபோலவே காணப்பட்டாள்.

மோனிக்கா பத்தாம் வகுப்பை முடித்திருந்ததினால், முதல் குழந்தை பிறந்ததும் இரண்டாண்டு தாதிப் பயிற்சியை

முடித்து தாதியானாள். தாதியானதும் மீண்டும் மோனிக்கா கருத்தரித்தாள். இரண்டு ஆண் குழந்தைகளுடன் மோனிக்கா அவனுடன் வாழவந்த பொழுது றொனால்ட் பல்கலைக்கழகத்தில் மூன்றாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தான்.

பல்கலைக்கழக விடுதிக்கு அருகே வீடொன்றை வாடகைக்கு எடுத்து றொனால்ட் குடும்பத்துடன் வாழத் தலைப்பட்டான். மூத்த பையன் 'வீரா அங்கிள்' என்று அழைக்கத் துவங்கியதனால் றொனால்ட் குடும்பத்திலே, வீரசிங்கத்தின் பெயர் 'வீரா அங்கிளா'க மாறி அக்குடும்பத்தின் உற்ற நண்பனாய் உள்வீட்டுப் பிள்ளையானார்.

ஆறு ஆண்டுகள் எப்படி ஓடியதென்று நிதானிக்க முடியவில்லை. ஆறாண்டு கால பட்டப்படிப்பினை முடித்த பின்னர் வீரசிங்கம் எல்லையைக் கடந்து மேற்கு பேர்லின் வந்துவிட்டார்.

றொனால்ட் கிழக்கு ஜேர்மனியில் உதவி வனப்பாது காவலர் பதவியைப் பெற்றுத் தன் குடும்பத்துடன் வாழ்ந்தான்.

மேற்கும் கிழக்கும் தம்மை விரோதிகளாகப் பாவித்து ஆளப்பட்டதினால், அவர்களால் நட்பையும் தொடர்பையும் பாராட்டி வளர்ப்பது இலகுவாக இருக்கவில்லை.

வீரசிங்கமும், குடும்பம் குழந்தை என வாழத் துவங்க, மேலதிக பொறுப்புக்களும் வந்து சேர்ந்ததினால் நண்பர்களிடையே இருந்த கொஞ்ச நஞ்ச தொடர்பும் விட்டுப் போயிற்று.

இப்பொழுது இந்தக் கோலத்தில் றொனால்ட்டைப் பூங்காவில் பார்த்ததும் இனந்தெரியாத துக்கம் அவரை வளைத்துக் கொண்டது.

# III

எண்பத்து மூன்றாமாண்டு இனக்கலவரத்தின்பின் தமிழர்கள் ஜேர்மனிக்கு அதிகளவில் அகதிகளாக வரத் தொடங்கினார்கள். மேற்கு ஜேர்மனிக்குள் விசா இன்றி நுழைவதற்கு இவர்கள் கிழக்கு-மேற்கு பேர்லின் எல்லையையே நுழைவிடமாக பாவித்துக் கொண்டார்கள். பிரிந்த இருநாடுகளின் பூகோள அமைப்பும், பேர்லின் நகரின் அரச விதிகளும் கிழக்கு பேர்லின் விமான நிலையத்தில் இருந்து நேரடியாகவே றெயின்மூலம் மேற்கு பேர்லினுக்குள் நுழைவதற்கு வசதியை ஏற்படுத்திக் கொடுத்தது.

மேற்கு பேர்லின் நகரம் கிழக்கு ஜேர்மனிக்குள் இருந்தாலும், அது மேற்கு ஜேர்மனியின் ஆளுகைக் குட்பட்டது. எனவே இங்கு வந்து சேர்ந்துவிட்டால் மேற்கு ஜேர்மனிக்கான அகதி அந்தஸ்து கோரும் நடவடிக் கைகளைத் துவங்கலாம்.

தமிழ் அகதிகள் தமது அந்தஸ்து கோரும் விண்ணப் பங்களைப் பெரும்பாலும் தமிழிலேயே எழுதிக் கொடுத்தனர். இந்நிலையில் ஜேர்மன் மொழியும் தமிழ் மொழியும் நன்கறிந்த ஒருவரின் உதவி அகதிகள் பற்றிய விசாரணை நடத்து வோருக்கு உடனடியாகத் தேவைப்பட்டது. பல்கலைக் கழகத்திலே பணிபுரிந்த வீரசிங்கத்தின் சேவையை மேற்கு ஜேர்மன் அரசு பகுதி நேர அடிப்படையில் பெற்றுக் கொண்டது. இப்பணியை வீரசிங்கம் தமது தமிழ் உணர்வின் வடிகாலாய் சிரத்தையுடன் மேற்கொண்டார். தமிழ் அகதிகளுக்கு அநீதி இழைக்கப்பட்ட போதெல்லாம் உரிமைக்குரல் எழுப்பிய வீரசிங்கத்தை தமிழ் அகதிகள் அங்கு பெரிதும் மதித்தார்கள்.

அன்றைய தினம் எல்லையைக் கடக்கும் போது தமிழ்

அகதிகள் சிலர் மேற்கு ஜேர்மன் அதிகாரிகளிடம் மாட்டிக் கொண்டார்கள். அவர்களை இருபத்தி நான்கு மணித் தியாலங்களுக்குள் நீதிமன்றத்திலே ஆஜர் செய்ய வேண்டுமென்பது விதி. அவர்கள் சார்பான விசாரணைகளை மொழிபெயர்த்து முடித்துக் கொடுக்க இரவு பத்து மணியாகி விட்டது.

ஒய்வின்றி வேலை செய்ததினால் அசதி. சுரங்க வண்டியில் பயணித்தபொழுது வீரசிங்கம் அசந்து தூங்கிவிட்டார்.

'அண்ணை..., உங்களோடை ஒருக்கா கதைக்கலாமே...?'

— அருகில் கேட்ட தமிழ்க்குரல் அவரை உசுப்பியது.

கண் விழித்தபொழுது எதிரில் தவமணி. சின்னராசாவின் மனைவி. வேலைக் களைப்புடன் அவள் வந்து கொண்டி ருக்கிறாள் என்பதைப் பார்த்த மாத்திரத்திலேயே வீரசிங்கம் மட்டிட்டுக் கொண்டார்.

சின்னராசா பேர்லினுக்கு வந்த புதிதில், மனைவியுடனும் இரண்டு பிள்ளைகளுடனும் அகதி அந்தஸ்துக்கான விசாரணைக்கு வந்திருந்தான். அந்த விசாரணையில் வீர சிங்கமே மொழி பெயர்ப்பாளர். அப்பொழுது அவர் சின்னராசாவின் குடும்பப் பின்னணி முழுவதையும் அறிந்து கொண்டார்.

சின்னராசா கொழும்பிலுள்ள மொத்த வியாபார நிலைய மொன்றிலே வேலைபார்த்தவன். சுற்றிவளைத்துப் பார்த்தால் முதலாளி தூரத்து உறவு. அவன் விடுமுறைக்கு ஊருக்கு வரும் பொழுதெல்லாம் ஒரு குட்டி முதலாளி போன்ற எடுப்புகளுடனே வலம் வருவான்.

ஆயுர்வேத வைத்தியத்தினைப் பரம்பரையாகக் கற்றிருந்தாள் தவமணி. கூட்டிக் கழித்துப் பார்த்தால்

ஒன்றுக்குள் ஒன்றும்! இனிதே திருமணம் முடிந்து இரண்டு பையன்களும் பிறந்து விட்டார்கள்.

இந்தக் கட்டத்திலேதான் எண்பத்திமூன்றாமாண்டு இனக் கலவரம் கொழும்பை உலுக்கியது. சின்னராசா வேலை செய்த வர்த்தக நிறுவனம் தரைமட்டமாக்கப்பட்டது. ஊருக்குச் சென்ற சின்னராசா கடும் முயற்சிகளின் பின்னர் எப்படியோ குடும்பத்துடன் பேர்லின் வந்து சேர்ந்துவிட்டான்.

விசாரணையின் போது ஏற்பட்ட அறிமுகம் பின்னர் வளர்ந்தது. மருத்துவ உதவி பெற, சமூக சேவைப் பணம் பெற என உதவிகேட்டு வீரசிங்கம் வீட்டிற்கு சின்னராசா குடும்பம் வந்து போகத் துவங்கியது.

தவமணி இப்போது வீரசிங்கத்தின் முன் நின்று கொண்டு இருக்கிறாள்... காலியாக இருந்த எதிர் ஆசனத்தை அவர் கை காட்டவே தவமணி அதில் அமர்ந்தாள். மௌனம் நிலவியது.

'சொல்லுங்கோ... என்ன விஷயம்? வேலையாலை வாறியள் போலை...' என்று வீரசிங்கம் சகஜ நிலையை ஏற்படுத்த முயன்றார்.

'ஓமண்ணை. இத்தாலி றெஸ்றோரன்ற் ஒண்டிலை வேலை செய்யிறன். குசினி வேலைதான். நாள்முழுக்கப் பாத்திரங்கள் எண்டும் கோப்பைகள் எண்டும் கழுவிக் கழுவி தோள் மூட்டெல்லாம் இத்துப் போச்சுது...' சொல்லும் போதே தவமணியின் கண்கள் பனிப்பதை அவர் அவதானித்தார்.

'அடுத்த ஸ்ரேசனிலை நான் இறங்கவேணும்....'

'தெரியும் அண்ணை...!'

ஸ்ரேசன் வரவே வீரசிங்கம் இறங்கினார். சற்றும் எதிர்பாராத விதமாக தவமணியும் இறங்கினாள். ஏதோ சொல்ல அவள் விக்கிக் கொண்டிருக்கிறாள் என்பது அவருக்கு விளங்கிவிட்டது.

'பயப்படாமல் சொல்லுங்கோ... ஏதாவது உதவியென்றால் நான் செய்யக் கூடியதை செய்யிறன்' என்று அவளை மீண்டும் சகஜ நிலைக்கு கொண்டுவர முயன்றார்.

'அண்ணை..., என்ரை பிள்ளையள் இப்ப பசியோடை கிடக்குங்கள். இனித்தான் போய் ஏதாவது சமைச்சு அதுகளுக்குக் கொடுக்க வேணும்... என்னாலை இதுக்கு மேலை தாங்கேலாது... உங்ககிட்டை சொல்லி இதுக்கு ஒரு முடிவு கட்ட வேணுமெண்டு கனகாலம் யோசிச்சனான்...' என்று தவமணி அழத் தொடங்கினாள். அவள் கொட்டிய கண்ணீர் அவரைக் கரைத்தது.

'என்ன நடந்தது தங்கச்சி...? சின்னராசா எங்கை...? அழாதேயுங்கோ...' என்றார் வீரசிங்கம்.

விம்மி அழுதபடி குளிருக்குப் போட்டிருக்கும் 'ஓவர் கோட்டை.' தவமணி மெல்லக் கழற்றினாள்.' அடித்தழும் புகளும் சூடுவைத்த காயங்களும் கழுத்திலும் கைகளிலும் கோரமாகத் தெரிந்தன.

வீரசிங்கத்தின் புருவங்கள் உயர்ந்தன.

'அண்ணை... இதெல்லாம் வெளியிலை தெரியிற காயங்கள். வேலைக்கும் போகாமல் 'சோசல்லை' வாற 'டோல்' பணம் எல்லாத்தையும் குடிச்சு முடிச்சுப் போட்டு எனக்கும் பிள்ளை யளுக்கும் அடியும் உதையும்தான். பிள்ளையள் பட்டினி கிடக்கிறதைப் பார்க்கேலாமல்தான் இத்தாலிக் காறன்ரை சாப்பாட்டுக் கடையிலை இந்த நேரத்திலை வேலை செய்யிறன். இனி வீட்டைபோய் பார்த்தால் வயித்தைப் பத்தி எரியும். பிள்ளையள் பசியிலை சுருண்டு கிடக்கும். எல்லாம் போட்டது போட்டபடி கிடக்கும். இவர் நிறை வெறியிலை இருந்து சண்டித்தனம் பேசுவார்... இனிச் சமைச்சு முடிஞ்சு சாப்பாடு குடுத்தாலும் நிம்மதியாய்ப் படுக்கவும் விடமாட்டுது மனுஷன். இந்தக் கிலிசகேடுகளை வாயலை

சொல்லவும் ஏலாது...'

'நான் ஒருக்கா சின்னராசாவோடை கதைச்சுப் பார்க்கட்டுமே...' என்று வீரசிங்கம் சொல்லத் தொடங்க, அவள் பதைபதைப்புடன் இடைமறித்தாள்.

'கேட்டுப் போடாதேயுங்கொ அண்ணை. ஏனடி சொன்னனீ எண்டு அந்தாள் என்னை அடிச்சுக் கொண்டு போடும். ராத்திரி எனக்கு அடிச்ச அகோரத்தைப் பார்க்கமாட்டாமல் என்ரை சின்னப் பொடியன் தகப்பனை வெட்டக் கத்தியை தூக்கி யிருக்கிறான். அந்தப் பாலனுக்கே இந்தளவு வெறுப் பெண்டால் என்னண்டண்ணை இந்தாளோடை இந்தப் பிள்ளை யளை வைச்சுக் கொண்டு காலம் தள்ளுறது...?'

'சின்னராசாவோடை கதைக்கவும் வேண்டாம் எண்ணிறியன்... அப்ப நான் என்ன செய்ய வேணும்? சொல்லுங்கோ...'

'எனக்கும் பிள்ளையளுக்கும் சமூக சேவை இலாகா விலை சொல்லி இலங்கைக்குத் திரும்பிப் போக 'ரிக்கற்' எடுத்துத் தாங்கோ... வெளிநாடு எண்டு ஓடி வந்து சீரழிஞ்சது போதும். உங்களைத்தான் நம்பியிருக்கிறன். இந்த நரக வேதனையிலை இருக்கிறதிலும் பார்க்க ஊரிலை போய் என்ரை ஆயுர்வேத வைத்தியம் பார்த்தெண்டாலும் என்ரை குஞ்சுகளுக்கு நான் கஞ்சி ஊத்துவன்...'

தவமணியைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. இருப்பினும் இது குடும்பப் பிரச்சனை. 'எடுத்தோம் கவிழ்த் தோம்' எனச் செயற்பட முடியாது என்பதையும் நிதானித்தார்.

'எதுக்கும் எனக்கு இரண்டு மூன்று நாள் அவகாசம் தாருங்கோ... முடிஞ்சதை செய்யிறன்...' என்று நடக்கத் துவங்கினார்.

'என்னைக் கை விட்டிடாதேயுங்கோ அண்ணை....' என்று அவள் கெஞ்சியது அவரது நெஞ்சக் குகையிலே

நீண்டநேரமாக எதிரொலித்துக் கொண்டேயிருந்தது.

## IV

**றொ**னால்ட் வாக்குத் தவறவில்லை. சொன்ன பிரகாரம் வீரசிங்கத்தைக் காணப் பல்கலைக்கழகம் வந்திருந்தான். முகச்சவரம் செய்து, அன்று ஒழுங்காக உடையணிந் திருந்தான்.

'வீரா... எப்படியிருக்கிறாய்...? நெடு நாளைக்குப் பிறகு சந்திக்கிறோம்' என்றவாறே கட்டித் தழுவினான்.

'நான் நல்லாய்தான் இருக்கிறேன். உனக்கென்ன நடந்தது...? எப்பொழுது தொடக்கம் இந்த மினிப் போத்தல் மது அருந்தும் பழக்கம்...? மோனிக்கா மது விடயத்தில் கண்டிப்பானவளல்லவா...?' எனக் கேள்விகளை அடுக்கினார் வீரசிங்கம்.

சிறிது நேரம் மௌனமாக இருந்த றொனால்ட், நீண்டதொரு பெருமூச்சை வெளியே விட்டவாறே, 'மோனிக்காவும் பிள்ளைகளும் என்னைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டார்கள். இந்நாட்டின் வரைவிலக் கணத்தின்படி இப்போது நான் 'வீடு வாசலற்ற தெருப்பொறுக்கி" என்றான் விரக்தியுடன்.

வீரசிங்கத்துக்கு தலை விறு விறுத்தது. இருபது வருட மகிழ்ச்சிகரமான தாம்பத்தியம். ஜேர்மன் மக்களிடம் வழமையாக இல்லாத கணவன் மனைவி ஒற்றுமை அவர்களது. எப்படிப் பிரிந்தது அவர்களுடைய குடும்பம்...?

**றொ**னால்டின் மனைவி ஆடம்பரத்தை விரும்புவள். கிழக்கு - மேற்கு ஜேர்மனிகள் இணைந்ததும் மேற்கின் நாகரிகமும் ஆடம்பரப் பொருட்களும் கிழக்கு ஜேர்மனிக்குள்

விரைவாகவும் தாராள மாகவும் நுழைந்தன. சோசலிஷ அமைப்பின் கீழ் கட்டுப்பாடாகவும் அமைதியாகவும் வாழ்ந்த றொனால்ட் குடும்பமும் புதிய அலையினால் எற்றுண்டு விரைவாகவே பணம் சேர்க்கும் முதலாளித்துவ போக்குக்கு அடிபணிந்தது.

வன இலாகாவில் செய்த வேலையை விட்டு விட்டு, கட்டிடங்களுக்கான மரவியாபாரத்தில் இறங்கினான் றொனால்ட். சோசலிஷ அமைப்பின் கீழ் வளர்ந்த அவனால் முதலாளித்துவத்தின் லாப நஷ்டக் கணக்குகளைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை.

'அடுத்த வருடம் லாபம் வந்துவிடும்' என்கிற நம்பிக்கையுடன் ஐந்து ஆண்டுகளாகத் தனது புதிய வியாபாரத்தினை முன்னுக்குக் கொண்டுவரப் பெரிதும் முயன்றான். முடியவில்லை. வியாபாரம் தொடங்கிய ஐந்து ஆண்டுகளுக்குள் நஷ்டப்பட்டுக் குடியிருந்த வீடு, கார் மற்றும் உடைமை எல்லாவற்றையும் வங்கிக் கடனுக்காக இழந்து குடும்பம் நடுத்தெருவுக்கு வந்தது.

மோனிக்காவினால் இந்தப் பாதாள வீழ்ச்சினைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பதினைந்து வருடங் களுக்கு மேலாக சோசலிஷ அமைப்பின் கீழ், விண்ணனாகவும் வீரனாகவும் விளங்கிய அதே றோனால்ட் முதலாளித்துவ அமைப்பின் கீழ் கையாலாக தவனாகவும் ஏமாளியாகவும் மோனிக்காவுக்குத் தோற்றம் அளிக்க லானான். வளர்ந்த மகன்கள் இருவரும் காதலிகள் என்றும், 'சுதந்திர வாழ்க்கை' என்றும் தனித்து வாழத் துவங்க மோனிக்காவும் வீடொன்றை வாடகைக்கு எடுத்துக் கொண்டு றொனால்ட்டைப் பிரிந்து சென்றுவிட்டாள்.

இந்தப் பிரிவும், சோகமும், ஏமாற்றங்களும்தான் றொனால்ட்டை நித்திய குடிகாரனாய் மாற்றியிருக்க

வேண்டும்.

வீரசிங்கம் அவனைப் பல்கலைக்கழக கன்ரீனுக்கு அழைத்துச் சென்றார். சாப்பாட்டு மேசையிலே அவர்கள் உரையாடல் தொடர்ந்தது.

'மோனிக்கா இப்பொழுது புதிய காதலன் யாருடனாவது வாழ்கிறாளா?' என வீரசிங்கம் கேட்டார்.

தனது பொக்கற்றிலிருந்து றொனால்ட் சிறிய டயறியொன்றை எடுத்தான். அதிலே இருந்த தொலைபேசி எண் ஒன்றினை சிறிய காகிதத்தில் குறித்து வீரசிங்கத்துக்கு கொடுத்தவாறே, 'எனக்குத் தெரிந்த வரை அவள் இன்னமும் தனியாகத்தான் இருக்கிறாள். செஞ்சிலுவைச் சங்க விடுதியொன்றின் அதிகாரியாக இப்பொழுது வேலை செய்வதாக என் மகன் ஒருமுறை சொன்னான். அவன் தான் இந்தத் தொலைபேசி எண்ணையும் எனக்குத் தந்தான்..., நண்பனே, முடிந்தால் மோனிக்காவுடன் ஒருதடவை பேசிப் பார். என் இதயம் அவளுக்காக எப்பொழுதும் திறந்து தான் இருக்கிறது' என்றான் பரிதாபமாக.

'நிச்சயமாக நான் மோனிக்காவுடன் பேசுவேன். நீங்கள் இருவரும் சேர்ந்து வாழ்வதை என் மனம் மிகவும் விரும்புகிறது' என்றார் வீரசிங்கம்.

# V

அதிகாலையில் அழைப்பு மணி அலறியது...

'யாராக இருக்கும்? இந்த நேரத்தில்....' என்கிற யோசனையுடன் வீரசிங்கம் கதவைத்திறந்தார்.

இரண்டு மகன்களும் புடைசூழ, சோகத்திலே புதைத்தெடுத்த முகங்கள் தரிசனமாக தவமணி சூட்கேசுடன் நின்றிருந்தாள். இரவு முழுவதும் அழுது முகம் வீங்கிக்

கிடந்தது. முகம் வேறு விதமாகவும் வீங்கியிருக்க வேண்டும். அவளுடைய உதடுகள் வெடித்து இரத்தம் கன்றியிருந்த நிலயில் அவளாலே சரியாகப் பேச முடியவில்லை.

'உள்ளுக்கு வாருங்கோ...' என்று கதவை அகலத் திறந்தார்.

தவமணி சூட்கேஸைக் குனிந்து தூக்கிய பொழுது தலையிலே திட்டுத்திட்டாக வீக்கங்கள் தெரிந்தன. வலது காதையொட்டிய பிடரியின் கீழ்ப்பக்கதிலே புதிதான தீக் காயம் ஒன்று பளிச்சிட்டது.

அன்று இரவு வீட்டிலே என்ன நடந்திருக்கும் என்று வீரசிங்கத்தால் ஊகிக்க முடிந்தது. வந்த ஆத்திரத்தில் 'இவனுமொரு மனிஷனே...?' எனப் பல்லை நெருமியவாறே தொலைபேசி அருகில் சென்று எண்களை அழுத்தத் துவங்கினர். நாலு எண்களை அழுத்தியதும் வீரசிங்கத்தின் மனைவி அங்கு வந்தாள். மனைவியைக் கண்டதும் நிதானம் அடைந்தவராக, தொடர்ந்து எண்களை அழுத்துவதை நிறுத்தி நிமிர்ந்து பார்த்தார்.

'வந்ததுகளை இருக்கச் சொல்லி ஆறுதல் சொல்லாமல் இப்ப என்னை செய்யிறியள்?' எனக் கேட்ட மனைவி, 'முதலிலை தவமணியும் பிள்ளையளும் முகம் கழுவிக் கோப்பியைக் குடிக்கட்டும்; பிறகு கதைப்பம்' என்று கூறிச் சகஜ நிலையை ஏற்படுத்தினாள்.

அவர்களைக் குளியலறைப் பக்கம் அழைத்துச் சென்று முகம் கழுவுவதற்கான வசதிகளைச் செய்து கொடுத்தபின் வரவேற் பறைக்கு வந்தாள் வீரசிங்கத்தின் மனைவி.

'என்ன பொலீஸுக்கோ போன் செய்ய யோசிச்சனீங்கள்' என்று கேட்டுக் குறும்புடன் சிரித்தாள்.

வீரசிங்கம் பொம்மையாகத் தலையை ஆட்டினார்.

'இஞ்சேருங்கோ... தோசை மா பிறிஜ்ஜிலை இருக்கு.

உடனை ஒரு சாம்பாரும் வைக்கிறான். இராத்திரி இதுகள் ஒண்டும் சாப்பிட்டிருக்காதுகள்!'

'இதுகளை இப்ப என்ன செய்யிறது...?' என வீரசிங்கம், இழுத்தார்.

'சாப்பிட்ட பிறகு அதுகளுக்கு நல்ல ஆறுதல் சொல்லி செஞ்சிலுவைச் சங்கத்துக்குக் கூட்டிக் கொண்டு போவம். அங்க வேலை செய்யிற ஒருத்தியை எனக்கு நல்லாய்த் தெரியும். உந்த மாதிரி புருஷன்மாராலே அவதிப்படுகிற பெண்களுக்கு என்று புறம்பா ஒரு விடுதி நடத்துறாங்கள். அங்கை சின்னராசா போன்ற ஆட்கள் போய் சேட்டையும் விடேலாது. அதுகளுக்கு இதுதான் பாதுகாப்பு... இதை விட்டிட்டு இப்ப நீங்கள் பொலீசுக்கு அறிவிச்சால் என்ன நடக்கும்? அவங்கள் வந்து சின்னராசாவைக் கொண்டு போய் வைச்சிருப்பாங்கள். இங்கை இருக்கிற குடிகாரக் கூட்டத்தை தெரியாதே...? சின்னராசாவின்ரை பெண்சாதியை நீங்கள் வைச்சிருக்கிறியள் எண்டு கதைகட்டி விடுவாங்கள்... உங்களுக்கு இது தேவையா...?'

மனைவி சொல்வதில் பாரிய உண்மை இருப்பதை வீரசிங்கம் உணர்ந்து கொண்டார்.

காலை உணவு முடிய ஒன்பது மணியாகிவிட்டது. அப்போது தொலைபேசி மணி கிணுகிணுத்தது.

வீரசிங்கம் அதனை எடுத்தார். மறுமுனையில் சின்ன ராசா. 'அண்ணை இவவும் பிள்ளையளும் உங்கை வந்தவையே...' நிதானமாகவே கதைத்தான் சின்னராசா. வெறி முறிந்திருக்க வேண்டும்!

வீரசிங்கம் தவமணியைப் பார்த்தார்.

மறுமுனையில் சின்னராசாவாக இருக்கலாம் என்பதை ஊகித்துக் கொண்ட தவமணி, சொல்லவேண்டாமென்று சைகை காட்டி, கையெடுத்துக் கும்பிட்டாள்.

'ஏன் என்ன நடந்தது...? ஏதேன் Forms நிரப்ப வேணுமே...? வந்தால் நிரப்பிக் குடுத்துவிடுகிறன்.'

'அவளை இஞ்சை காணேல்லை அண்ணை. விடியக்காலமையே கள்ளப் புருஷனோடை ஓடிட்டாள் போலை கிடக்கு... நரகல் வேசை திரும்பி வரட்டும். ஒரே அடியாய்க் காலை முறிச்சு மூலைக்குள்ளை கிடத்தி வைக்கிறன். கால் இருக்கிறதாலைதானே ஒட்டம் காட்டிறா...'.

இணைப்புத் துண்டித்தது. மறுமுனையில் சின்னராசா ஆத்திரத்துடன் தொலைபேசியை வைத்திருக்க வேண்டும்.

# VI

தவமணியையும் பிள்ளைகளையும் செஞ்சிலுவைச் சங்க விடுதியிலே சேர்ப்பதில் சிரமம் இருக்கவில்லை. விடுதியின் அதிபர் மிகவும் அன்புடனும் கண்ணியத்துடனும், அதே சமயம் கண்டிப்புடனும் கடமையைச் செய்பவர் என்பதை வீரசிங்கம் உணர்ந்து கொண்டார்.

அங்கும், தனக்கும் பிள்ளைகளுக்கும் அரசாங்கம் ரிக்கற் வழங்குமானால் அகதி அந்தஸ்துகோரும் விண்ணப் பத்தை ரத்துச் செய்துவிட்டு ஊருக்கு திரும்பத் தயாராக இருப்பதாக தவமணி வாக்குமூலம் அளித்தாள்.

'நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. புருஷனால் இந்த விடுதியிலே எந்த விதமான தொந்தரவும் ஏற்படாது... இப்போதைக்கு உங்கள் பெயரையே பாதுகாவலனாக பதிவு செய்துள்ளேன். ரிக்கற் விஷயத்தை சமூக இலாகாவுடன் பேசி ஒழுங்கு செய்யுங்கள்...!' எனக் கூறிய அதிபர் தனது விசிட்டிங்காட் ஒன்றினையும் வீரசிங்கத்திடம் கொடுத்தார்.

அப்பொழுது அவருக்கு றொனால்டின் மனைவி மோனிக் காவும் செஞ்சிலுவைச் சங்க இலாகா ஒன்றில் வேலை

செய்வது நினைவுக்கு வந்தது. இவரிடம் பேசினால் அவளது முகவரியைச் சரியாக அறிந்து கொள்ளலாம் என நினைத்தார். அவருடைய நம்பிக்கை வீண் போகவில்லை. மோனிக்காவை அந்த அதிபர் நன்கு அறிந்திருந்தார். அவள் வேலை செய்யும் செஞ்சிலுவைச் சங்கக் கிளையின் விலாசத்தைத் தந்ததுடன், வேண்டுமானால் தொலைபேசியில் தொடர்பு கொள்ளுமாறும் சொன்னார். வீரசிங்கம் ஒன்றும் பேசாதிருக்கவே அவரே தொலைபேசி எண்களை அழுத்தி மோனிக்காவுடன் தொடர்பு கொண்டார்.

எப்படியான வரவேற்புக் கிடைக்கும் என்கிற தயக்கத்துடன் தான் வீரசிங்கம் அந்த அலுவலக அறைக்குள் நுழைந்தார்.

அவரைக் கண்டதும் மோனிக்கா தன் இருக்கையில் இருந்து எழுந்து வந்து சிநேக பாவத்துடன் கைகுலுக்கி 'அங்கிள் வீரா' என்று அகம் மலர வரவேற்றாள்.

'தொலைபேசியில் தொடர்பு கொண்டதும் ஒரு நிமிஷம் நான் திகைத்துப் போனேன். எவ்வளவு ஆண்டுகள்! எப்படி என் தொலைபேசி எண் கிடைத்தது?' என்று கூறிக் கொண்டே அலுவலக 'ரீ'றூமுக்கு அழைத்துச் சென்றாள்.

வீரசிங்கம் எப்படிப் பேச்சைத் துவங்குவது என்கிற தடுமாற்றத்துடன் மௌனம் சாதித்தார்.

'சொல்லுங்கள் வீரா... நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? குடும்பம் எப்படி...?'

'நன்றாக இருக்கிறேன்; குடும்பமும் நலமாகவே இருக்கிறது. இவ்வளவு ஆண்டுகள் கழித்து உன்னைப் பார்ப்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கிறது.'

'எனக்கும்தான்! நீ அழைத்தால், நான் உன் வீட்டுக்கு விருந்து சாப்பிட வருவேன். உனது 'உறைப்புக் கறி' சாப்பிட

ஆசையாக இருக்கிறது' என்று பழைய கலகலப்புடன் மோனிக்கா பேசினாள்.

'மோனிக்கா... நீ கட்டாயம் வரவேண்டும். எனது மனைவியுடன் பேசி வசதியான திகதியை அறிவிக்கிறேன்...'

'உனக்குத் தெரியுமா...? நான் றொனால்டுடன் வர முடியாது...!' முகத்தில் எதுவித மாற்றமும் இல்லாமல் அதே குதூகலத் தொனியில் பேசினாள்.

இதற்கு மேலும் றொனால்டை பார்த்த சமாசாரத்தினை ஒளிக்க வீரசிங்கம் விரும்பவில்லை.

'அண்மையில் நான் றொனால்டைச் சந்தித்தேன். என் பல்கலைக்கழக அலுவலகம் வந்திருந்தான். நடந்த விஷயங்களைச் சொன்னான்...'

'மோனிக்காவை பிரிந்திருக்கிறேன் என்று மட்டும் சொல்லியிருப்பான். அவன் செய்த மொக்குத் தனங்களை எல்லாம் சொல்லியிருக்க மாட்டானே...' என்று சொல்லிக் கொண்டே இருவருக்கும் கோப்பி தயாரித்தாள்.

'இல்லை மோனிக்கா, எல்லாவற்றையும் சொன்னான். என்ன இருந்தாலும் அவனுடைய லாப நஷ்டங்களிலே உனக்குப் பங்கில்லையா?'

அவள் பதிலேதும் பேசாமல் கோப்பியைக் கலந்து கொண்டு வந்தாள். வீரசிங்கத்துக்கு ஒரு கோப்பையை அளித்தவாறே எதிரில் அமர்ந்தாள்.

'பழைய கதைகளை வீணாகக் கிளற வேண்டியிருக்கிறது வீரா. உனக்கு நல்லாகத் தெரியும். எத்தனை வருடங்கள் றொனால்ட் படித்துக் கொண்டிருந்தான். அவன் நன்கு படிக்கவேண்டுமென்று நான் உழைத்து அவனையும் குழந்தைகளையும் காப்பாற்றினேன்... ஏன்...?'

வீரசிங்கம் பதில் பேசவில்லை. அவளே தொடர்ந்தாள்.

'இந்தக் கஷ்டங்கள் எல்லாம் கொஞ்சக்

காலத்துக்குத்தான்... பின்பு அவன் என்றோ ஒரு நாள் நான் அநுபவிக்கத் துடித்துக் கொண்டிருக்கும் நல்ல வாழ்க்கையை அமைத்து தருவான் என்று நம்பியிருந்தேன்... இப்பொழுது...?'

'பிஸினஸ் என்றால் லாப நஷ்டம் வரத்தான் செய்யும் மோனிக்கா...'

'பிஸினஸ் சரிவரவில்லை யென்றால் அதை விட்டுவிட்டு ஒழுங்கான ஒரு தொழில் பாரக்க வேண்டியது தானே...?' என்று கூறிய மோனிக்கா, தனது அலுவலக அறைக்குச் சென்று ஒரு பத்திரத்தை எடுத்து வந்து அவரிடம் நீட்டினாள்.

'இதை வாசித்துப்பார் வீரா. பாங்கிலிருந்து வந்த கடிதம். அவனது விலாசம் தெரியாதபடியால் இங்கு அனுப்பியிருக் கிறார்கள்... இன்னமும் றொனால்ட் பெயரிலே எவ்வளவு கடன் இருக்கிறது என்று பார்த்தாயா...? என்னுடன் சேர்ந்திருந்தால் அவன் என்னுடைய உழைப்பில்தான் சாப்பிடுவான். அவனுடைய முழு உழைப்பையும் வங்கி பிடுங்கிக் கொள்ளும். நீயே சொல் வீரா... எனக்கென்று ஒரு வாழ்க்கை வேண்டாமா...? நான் எதற்காக அந்த மடையனுடன் தொடர்ந்து வாழ்வதாக நடித்துக் கொண்டு கஷ்டப்பட வேண்டும்? பிள்ளைகள் வளர்ந்து விட்டார்கள். அவர்கள் தங்கள் சுகங்களை நாடிப் போய்விட்டார்கள்... நான் எதற்காக எனது மிகுதி வாழ்க்கையை றொனால்டுடன் பாழாக்கவேண்டும்?

கோப்பி கோப்பைகளை எடுத்துக் கொண்டு போய் 'சிங்' குக்குள் வைத்த மோனிக்கா திரும்பி வந்து வீரசிங்கத்தின் முன் அமர்ந்து கொண்டாள். நீண்டதொரு பெருமூச்சு வெளிப்பட்டது.

'உண்மைதான். சின்னவயதில் அப்படி ஒரு காதல் வேகம் றொனால்ட் மீது இருந்தது. எதைப் பற்றியும்

கவலைப்படாமல் அவனைத் திருமணம் செய்து கொண்டேன். என் பெறுமதி என்னவென்று புரிந்து கொள்ளாத வயதிலே அது நடந்தது. எனக்கு இன்னமும் இளமையும் அழகும் இருக்கிறது. இன்னமும் என் பின்னால் பல ஆண்கள் சுற்றித் திரிகிறார்கள். அதற்காக நான் 'சோரம்' போய்விடுவேன் என்று எண்ணாதே. நல்ல பணக்காரன் ஒருவன் என் பெறுமானம் அறிந்து என்னை அன்புடனும் மரியாதையுடனும் நடத்தக் கூடியவனாய் இருந்தால் நான் அவனுடன் சேர்ந்து வாழத் தயங்கமாட்டேன்...!' என்று கூறி முடித்தாள் மோனிக்கா.

மோனிக்காவின் நிலைப்பாடு, வீரசிங்கம் பிறந்து வளர்ந்த சமூகத்தின் விழுமியங்களுக்கு முரண்பட்டதாக இருந்தது. இருப்பினும் அதுதான் மேற்குலக வாழ்க்கை என்று எண்ணிக் கொண்டார்.

'என்ன இருந்தாலும் இருபது வருட தாம்பத்திய வாழ்க்கை... அது பற்றியும் கொஞ்சம் யோசித்துப் பார் மோனிக்கா' என் வீரசிங்கம் மிடறு முறித்து இழுத்தார்.

'இந்தியத் திருமண முறைகள் பற்றி நான் நிறையவே அறிந்திருக்கிறேன். அந்த 'சென்ரிமென்ற்' சரி வராது. பெண்ணுக்கும் சுதந்திரமான வாழ்க்கை ஒன்று உண்டு' என்று கூறி, மோனிக்கா எழுந்தாள்.

'வீரா, உன்னை அவமதிப்பதாக நினைக்க வேண்டாம். உன்னை இன்னும் என் நண்பனாய் மதிக்கிறேன். எனக்கு வேலை இருக்கிறது. றொனால்டுடனான என் வாழ்க்கை அத்தியாயம் முடிந்துவிட்டது. அதனை மீண்டும் எழுத முடியாது... 'டைவோர்ஸ்' பேப்பர் எல்லாம் ஆயத்தமாக வைத்திருக்கிறேன். அவனது நிரந்தர விலாசம் எனக்குத் தெரியாததால் அனுப்ப முடியாமல் இருக்கிறது. அவனுடைய விலாசம் தெரிந்தால் தந்து விட்டுப் போ. என் 'லோய' ருக்கு அது தேவைப்படுகிறது...'

வீரசிங்கம் எழுந்தார்.

'தன் இதயத்தில் இன்னமும் உனக்கு இடமிருப்பதாக றொனால்ட் கருதுகிறான்.'

'அது முடிந்த கதை என்று நான் சொன்னேனே! அவனைப் பற்றி இன்னுமொருமுறை, தயவு செய்து என்னுடன் பேசவேண்டாம் வீரா...!'

மோனிக்கா கதவை நோக்கி நடந்தாள். வீரசிங்கம் பின் தொடர்ந்தார்.

# VII

**பெ**ண்சாதி பிள்ளையளைக் காணாத சின்னராசா 'வெட்டுறன் விழுத்திறன்' என்று ஊரெல்லாம் அலைந்து திரிகிறான், என்கிற செய்தி வீரசிங்கத்துக்குக் காற்று வாக்கில் எட்டியது.

செஞ்சிலுவைச் சங்கத்தில் அடைக்கலம் தேடியிருந்த தவமணியோ வீரசிங்கத்துக்கு ரெலிபோன் பண்ணும் போதெல்லாம் 'எனக்கும் பிள்ளையளுக்கும் இலங்கைக்குத் திரும்பிப் போக ரிக்கற் ஒழுங்கு பண்ணிப் போட்டியளோ அண்ணை...' என்று கேட்கத் தவறுவதில்லை.

வீரசிங்கத்துக்கு சமூக சேவை இலாகாவில் வேலை செய்த ஜேர்மனியன் ஒருவன் நண்பனாக இருந்தது வசதியாகிவிட்டது. அவனுடன் தொடர்பு கொண்டு விமான ரிக்கற்றுகளை ஒழுங்கு செய்து விட்டார். தாய்க்கும் பிள்ளைகளுக்கும் மாதாமாதம் உதவிப் பணம் வழங்குவதிலும் பார்க்க இலங்கைக்கான விமானச் சீட்டு மலிவானது என்கிற பொருளாதார நோக்கில் அவர்களுக்கு 'டிக்கற்' வழங்குவதற்கான அங்கீகாரம் கிடைத்தது.

பிரயாணத் திகதியை தவமணிக்கு அறிவிப்பதற்காகச்

செஞ்சிலுவைச் சங்க விடுதிக்கு சென்றார் வீரசிங்கம்.

பிரயாண தினத்தன்று ஆயத்தமாக இருக்குமாறும், செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளே பாதுகாப்பாக விமானநிலையம் கொண்டு செல்வார்கள் என்றும் பிரயாண விபரங்களைக் கூறிய வீரசிங்கத்தை ஒருவித தவிப்புடன் பார்த்தாள் தவமணி.

தனது பிரயாசைகளுக்காக அவள் மகிழ்ச்சியடைவாள் என்றே வீரசிங்கம் எதிர்பார்த்தார். மாறாக அவள் அதிர்ச்சியடைந்தவள் போல் காணப்பட்டாள். எதையோ சொல்ல விரும்புவதும், அதைச் சொல்ல முடியாமல் அவள் தவிப்பதும் அவருக்கு விளங்கிற்று.

'என்ன விஷயம் தவமணி...?' பிரச்சினை தீர்ந்தது தானே... பிறகேன் யோசிக்கிறியள்...?'

'இல்லையண்ணை... அவரை ஒருக்காப் பார்க்கவேணும் போல கிடக்கு... பிள்ளையளும் அப்பா அப்பா எண்டு அழுதபடி இருக்குதுகள் . குடிகாரன் எண்டாலும் புருஷன்... புருஷன்... தொடரமுடியாமல் தலையைக் குனிந்து கொண்டிருந்தாள் தவமணி.

அவள் என்ன சொல்ல முயற்சிக்கிறாள் என்பதை விளங்கிக் கொண்ட வீரசிங்கம் சிறிது நேரம் மௌனமானார்.

'உங்கடை விருப்பம் தவமணி. நீங்கள் குடும்பத்தோடை சந்தோஷமாய் இருந்தால் எனக்கும் சந்தோஷம் தான்...'

செஞ்சிலுவைச் சங்க அதிகாரியிடம் தவமணியின் முடிவைத் தெரிவித்துவிட்டு வீடு திரும்பினார் வீரசிங்கம்.

**ப**திவு செய்த ரிக்கற்றுகளை பிரயாண திகதிக்கு முன்பாக ரத்து செய்ய வேண்டும். தவமணியின் முடிவை நாளை சமூக சேவை அதிகாரிகளுக்குத் தெரிவித்தால், 'நீ என்ன விளையாடுகிறாயா?' என்றுதான் கேட்பார்கள். எப்படி

இதை கையாள்வதென மூளையைக் கசக்கி யோசித்தார் வீரசிங்கம்.

'என்ன யோசிக்கிறியள்...?' என்றவாறே கணவனருகே கோப்பியுடன் வந்தமாந்தாள் வீரசிங்கத்தின் மனைவி.

'செஞ்சிலுவைச் சங்கத்திலை இருந்து நீங்கள் வெளிக்கிட்டாப் போலை தவமணி எனக்கு ரெலிபோன் பண்ணினவள். அவளை நினைக்கப் பரிதாபமாய்த்தான் இருக்கு...!'

'இதென்ன குழந்தைப் பிள்ளை விளையாட்டே, நேரத்துக்கு நேரம் முடிவை மாத்திறதுக்கு? நான் நாளைக்கு அவங்களிட்டைப் போய் என்னத்தை சொல்லிச் சமாளிக்கிறது?'

புருஷனின் கொதியடங்கும் வரை மனைவி மௌனமானாள். வீரசிங்கம் கோப்பியைக் குடிக்கத் துவங்கினார்.

'இஞ்சேருங்கோ... தவமணி இப்ப ஊருக்குப் போனால் அங்கை என்ன சொல்லுவினம் தெரியுமோ...?' எங்கை தப்பியோடலாம் என்று சனம் தவிக்கேக்க இவளுக்குக் கொழுப்பு. புருஷனை விட்டிட்டு இங்கை வந்திட்டாள் எண்டு நாக்கு வளைப்பினம். நீங்கள் ஊரை விட்டுவந்து கனகாலம். உங்களுக்கு அங்கத்தய நிலைமை புரியாது. இந்தச் சண்டையுக்கை என்னண்டங்கை அவள் காலம் தள்ளுவாள்..?'

'அப்பிடியெண்டால் இங்கை ஒரு வீட்டை எடுத்துக் கொண்டு தனிச்சிருக்கிறது. தினம் சின்னராசாவின்ரை அடி உதையை வாங்கிக் கொண்டு அரியண்டத்துக்கை இருக்கிறாள் எண்ட பரிதாபத்திலைதானே நான் உதவப் போனனான்...!' என்று படபடத்தார் வீரசிங்கம்.

'இண்டைய நிலைமையிலை தவமணி இங்கை தனிச்சிருக்க சின்னராசாதான் விட்டாலும் எங்கடை ஆக்களின்ரை வாய் சும்மா இருக்குமே...? கொஞ்சம்

அவசரப்படாமல் நிதானமாய் யோசியுங்கோ. புருஷன் வேண்டாம் என்று சொல்லுற மோனிக்காவை றொனால் டோடை சேர்க்க நிக்கிறியள்... அடிச்சாலும் உதைச்சாலும் சின்னராசாவோடை இருப்பம் என்கிற தவமணியைப் புறம்பாய் வீடு எடுத்து இருந்தால் என்ன என்று கேக்கிறியள்...'

'மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடாதையும்...'

'நானும் அதைத்தான் சொல்ல வாறன். சின்னராசா பெண் சாதியை கொடுமைப்படுத்திறதை நான் நியாயப்படுத்த வரேல்லை. ஜேர்மன் கலாசாரத்துக்கு மத்தியிலை எவ்வளவு காலம் வாழ்ந்தாலும் எங்களுடைய சமூக விழுமியங்கள் வேறையெண்டதை மறக்காதேயுங்கோ... புருஷ உறவை உதறித் தள்ளிற துணிவு எங்களுக்குக் கிடையாது... மேல் நாட்டிலை வாழ்ந்தாப்போலை ஊரிலை பழகின பழக்க வழக்கங்களைத் தூக்கி எறிஞ்சிடலாம் என்று நினைக் கிறியளே?.... தவமணி பாவம்...!'

மனைவி கோப்பிக் கோப்பையை எடுத்துக் கொண்டு சமையலறைக்குச் சென்றாள். மனைவியின் பேச்சிலே, திடீரென்று வீரசிங்கத்தின் மனம் ஊருக்குத் தாவியது.


அந்த ஊரின் கடற்கரையிலே எத்தனை மாலை வேளைகளை வீரசிங்கம் இனிமையாகக் கழித்திருக்கிறார்.

கடற்கரையில் தோன்றும் அந்த அடிவானம் எவ்வளவு அர்த்தம் பொதிந்தது என்ற சிந்தனையுடன் வீரசிங்கம் கோப்பியைத் தொடர்ந்து குடிக்கலானார்.

# ௰

## பாவனை பேசலன்றி

### I



'சின்னத்துரை வாத்தியார் சிட்னியில் நேற்றுக் காலமானார்...' எனத் துவங்கி, சிட்னியிலிருந்து ஒலிபரப்பாகும் தமிழ் முழக்கம் தமிழ் வானொலியின் மரண அறிவித்தல் தொடர்ந்தது.

'இவர் டாக்டர் பேரம்பலத்தின் அருமைத் தந்தையும், ரெலிக்கொம் நிறுவனத்தின் நிதிக் கட்டுப்பாளரும், கணக்காளருமான அனுஷாவின் அன்பு மாமனாரும்,

கொழும்பின் பிரபல கண் வைத்திய நிபுணர் அமரர் பொன்னம்பலம், மற்றும் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் திருமதி காயத்திரி பொன்னம்பலம் ஆகியோரின் சம்பந்தியும், காலஞ்சென்ற விசாலாட்சியின் சகோதரரும், லண்டன் இந்து, அமெரிக்கா மகேஷ், வசந்தி, தென்ஆபிரிக்கா பிரணவன் ஆகியோரின் அன்பு மாமனாரும் திவ்வியா, தினேஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும்...'

உலகளாவி வேரோடிக் கிடந்த உறவுகளைப் பட்டியலிட்ட அறிவிப்பாளர், வாத்தியாரின் பூதவுடல் அவரது மகனின் இல்லத்தில் நாளையும், நகர மண்டபத்தில் மறு நாளும் பார்வைக்கு வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகளின் பின்னர், றொக்வூட் (Rockwood) மயானத்தில் தகனம் செய்யப் படுமெனவும், இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறும் வாத்தியார் மகன் சார்பில், உருக்கமாக வேண்டுகோள் விடுத்தார்.

**சி**ன்னத்துரை வாத்தியாரே எனக்கு எழுத்தறிவித்தவர். சிறுவயதில் தந்தையை இழந்த என்னை இந்நிலைக்கு உயர்த்திவிட்டவரும் அவரே. இந்தப் பந்தத்தை என் நெஞ்சம் சுமப்பதினால், அவர்மீது என்றும் நான் மரியாதை பாராட்டுவேன்.

**ஊ**ரில் என்றால் செய்தி கேட்டவுடன் 'சாவீட்டு'க்கு உடனே கிளம்பியிருப்பேன். இங்கே அவுஸ்ரேலியாவில்... வாத்தியாரின் பூதவுடலை நகரசபையின் அனுமதி பெற்று நாளைதான் வீட்டிற்குக் கொண்டு வருவார்கள். அதுவரை 'அந்திமசேவை' நிறுவனத்தின் குளிர்ப்பெட்டிக்குள் பிரேதங் களுடன் பிரேதமாகவே வாத்தியார் வைக்கப்பட்டிருப்பார்.

முகமனுக்காக வாத்தியார் மகன் வீடு சென்று துக்கம் விசாரிப்பதாகப் போக்குக் காட்டி, வம்பளக்க நான் விரும்ப வில்லை. அவர் மறைவு என் மனசிலே ஆழமான சோகங்களை ஏற்படுத்தியது! என் மனசு யாரிடம் இதனைப் பங்கிடுவதென அங்கலாய்த்தது.

## II

மறுநாள்!

காலையில் 'சா' வீட்டுக்குச் சென்றிருந்தேன்.

அந்த வீடு மகா விசாலமானது. கடல்போல என்பார்களே அப்படி! இருப்பினும் 'கொடிகட்டிப் பறக்கும்' பேரம்பலத்தின் செல்வாக்கிற்காகப் பெருந் தொகையானவர்கள் எதிர் பார்க் கப்பட்டார்கள். இதனால் வளவின் பின்புறத்தே, நீச்சல் குளத் துக்கும் 'ரெனிஸ்' கோட்டுக்கும் இடையில், தற்காலிக கூடாரம் ஒன்று அமைக்கப்பட்டு நாற்காலிகளும் வரிசையாக அடுக்கப் பட்டிருந்தன. 'ஓடர்' கொடுத்தால் கன கச்சிதமாக இவற்றை முடித்துத் தரும் கம்பனிகள் பல அவுஸ்ரேலியாவில் உள. உறவுக்காரர் 'மாஞ்சு மாள' வேண்டிய அவசியமே இல்லை.

கூடாரத்தின் ஒரு மூலையில் என் போன்ற வாத்தியாரின் மாணவ உறவினர்களும், ஊரவர்களும் ஒதுங்கி இருந்தோம். சிலர் வாத்தியாரின் பெருமைகள் சிலவற்றைத் தமிழில் அறிக்கை செய்தார்கள். இடையிடையே ஊரில் நடைபெறும் 'மோதல்கள்' பற்றி, அடக்கி வாசிப்பதான குரலிற் பேசிக் கொண்டோம்.

நேரஞ் செல்லச் செல்ல சிட்னி வாழ் உயர்மட்டத்தினர் பலர் பெரிய பெரிய கார்களிலே வந்திறங்கத் தொடங்கி னார்கள். கறுப்பு 'டை', கறுப்பு 'சூட்' என்று இவர்கள் இந்நாட்டின் funeral ஆசாரங்களைப் பின்பற்றியும், முகங்

களிலே செயற்கையானதொரு இறுக்கத்தினை ஒட்ட வைத்தும் கொண்டார்கள்.

புதிதாக வருபவர்களை 'Hi', 'Hallo' சொல்லி வரவேற்பதும், மறைவதுமாக வாத்தியாரின் சம்பந்தியம்மா, திருமதி பொன்னம்பலம் தான் படு 'பிஸி'யாக இருப்பதை உணர்த்திக் கொண்டிருந்தார்.

பத்து மணியளவில் வாத்தியாரின் பூதவுடல் வந்து சேர்ந்தது!

அதனை அந்திம சேவை நிறுவனத்தினர், பிரேத வண்டியில் கொண்டு வந்தார்கள். பிரேத வண்டியென்று அதை மொட்டையாகச் சொல்லிவிடமுடியாது. கறுப்பு நிற 'பென்ஸ்' வண்டி அது!

அதிலிருந்து வாத்தியார் இறக்கப்பட்டு, வீட்டின் நடு மண்டபத்தில் வைக்கப்பட்டார். இறக்கி வைக்கும் சடங்கிலே கூடாரத்தில் முகாமிட்டிருந்தவர்களும் முண்டியடித்துக் கொண்டு கலந்து கொண்டார்கள்.

பெரிய 'பட்ஜெட்'டில் அந்திம சேவைக்கு ஓடர் கொடுத்திருக்க வேண்டும். பணத்தின் 'விசுக்கல்' அவர்களின் ஒவ்வொரு அசைவிலும் தூக்கலாகத் தெரிந்தது. அனைவரும் அதனை ஒருவித பிரமிப்புடன் உணர்ந்து கொண்டிருந்தனர்.

ஆனால், அந்த வீட்டிலிருந்து ஆறு ஆண்டுகளுக்கு முன்பு வெளியேறிய வாத்தியார் இன்றுதான் முதியோர் விடுதியிலிருந்து 'பூதவுட'லாகத் திரும்புகிறார் என்ற உண்மை அங்குள்ள பலருக்குத் தெரியாது.

மருமகள் அனுஷா கெட்டிக்காரி! வாத்தியார் எழுதிய தமிழ்ப் புத்தகங்களையும், மொழி - இலக்கிய சேவைக்காக அவர் பெற்ற விருதுகளையும் தூசுதட்டி, அழகாக, அருகில்

வைக்கப்பட்டிருந்த மேசை மேலே அடுக்கி வைத்திருந்தாள்.

வாத்தியார் வெள்ளி வேலைப்பாடுகளுடன் கூடிய விலையுயர்ந்த தேக்கு மரப் பிரேதப் பெட்டியிலே வளர்த்தப் பட்டு இருந்தார். வாத்தியாரின் 'அலங்காரம்' கண் கொள்ளாக் காட்சி. சில்க் ஜிப்பா. அகலமான ஜரிகையுடன் கூடிய பட்டு வேட்டி. அதற்கு சோடியான சால்வை விசிறி மடிப்புக் கசங்காது நேர்த்தியாகச் சுத்தப்பட்டிருந்தது. இத்தகைய தொரு ஆடம்பரக் கோலத்தில், வாத்தியாரை இன்றுதான் முதன்முதலாக நான் பார்க்கிறேன்.

*ஊரிலே நான் அறிந்திருந்த வாத்தியார் என்றுமே ஆடம்பரத்தை விரும்பாதவர். வெள்ளை வெளேறென்ற நூல் வேட்டியும், கதர் சட்டையும், வெள்ளை உத்தரீ யமும் அவருடைய அலங்காரம். அன்றைக்குத் தான் எடுத்து அணிந்தது போன்ற தூய்மை துலங்கும். அந்த நாட்களில் அவர் கண்களைப் பார்த்திருக்க வேண்டும். அன்பு - கருணை - சாந்தம் என்று சொல்கிறோமே அதை அவர் கண்களிலேதான் பார்த்திருக்கிறேன்.*

*ஊர்ப் பள்ளிக்கூடத்திலே ஆறாம் வகுப்பு வரை சகலதும் அவரே! ஐந்தாம் வகுப்பு இறுதியிலேயே, அடுத்த ஆண்டு நடைபெற இருக்கும் புலமைப்பரிசில் பரீட்சைக்குப் பிள்ளைகளைத் தயார் செய்யத் துவங்கி விடுவார். அவர் நெறிப்படுத்திய புலமைப்பரிசில் சித்தி களே எங்கள் ஊரில் டாக்டர்களையும் என்ஜினியர் களையும் உருவாக்குவதற்குப் பலமான அடித்தள மிட்டது! இன்று நமது ஊரின் பெயரை உலகளவில் நிறுவிய பெருமையிலே கணிசமான பங்கு சின்னத்துரை வாத்தியாருடையது.*

*வாத்தியார் கணக்கிலே புலி என்பதை அயற்*

*கிராமத்திலுள்ளவர்களும் அறிவார்கள். எந்தப் பெரிய கணக்கையும் ஒரு நொடியில் மனதிற்குள் போட்டு விடுவார். அதன் பின் இலகுவான முறையில் உதாரணங் களுடன் விளக்குவார்.*

*நாங்கள் பல்கலைக்கழக புகுமுக வகுப்பிலே படித்த காலங்களிலும் கணக்குப் பாடத்திற்காக தினமும் ஒருமணி நேரம் அவர் வீட்டிற்குச் சென்று விடு வோம். இது ஒரு வகையில் 'ரியூசன்' வகுப்பு போன்றது தான். ஆனால் அதற்காக அவர் எந்த மாணாக் கரிடமும் பணம் பெற்றது கிடையாது.*

*'சரஸ்வதியை விற்கக் கூடாது' என்ற கொள்கையைக் கடைசி வரையிலும் சின்னத்துரை வாத்தியார் கண்டிப்புடன் கடைப்பிடித்து வந்தார்.*

## III

பூதவுடல் வைக்கப்பட்டிருந்த மண்டபத்தின் பெரும்பகுதி வந்தவர்கள் வைத்த மலர் வளையங்களால் நிரம்பிக் கொண டிருந்தது. 'கறுப்பு ஆடை' மேல்மட்டத்தினர் நாகரிகமான அளவுக்கு குரல்களைத் தாழ்த்தி, சமீபத்தில் அமுலுக்கு வந்த ஜிஎஸ்ரி (GST) வரியின் சாதக பாதகங்களை ஆங்கி லத்தில் அலசிக் கொண்டிருந்தார்கள்.

சம்பந்தியம்மா சிட்னியிலுள்ள சில 'பிரபல்யங்களுடன்' அமர்ந்து சமய கிரியைகளுக்கான 'பட்ஜெட்' போட்டுக் கொண்டிருந்தார்.

'சைவக் குருக்கள் செய்யிறதை வாறவை பாக்கப் போகினமே...? யாருக்கு இதெல்லாம் விளங்கப் போகுது? நீங்கள் சொல்லுற கிரியைச் சாமான்களிலே சிலது, என்னவெண்டே எனக்குத் தெரியாது. இதுகளை இங்கை தேடி

வாங்கிப் பாருங்கோவன்...' என்று சம்பந்தியம்மா சைவக் கிரியைச் சாமான்களில் கைவைத்தார். செலவினை இறுக்கும் முயற்சி என்பதை வெளியிலே காட்டாத லாவகம்.

*வாத்தியாரோ என்றுமே பணத்தைப் பெரிதாக் மதித்தது கிடையாது. மற்ற ஆசிரியர்களைப் போன்று ஓய்வு நேரத்தில் விவசாயம் செய்தோ ரியூசன் சொல்லிக் கொடுத்தோ பணத்தைச் சேர்த்ததும் இல்லை. சம்பளம் முழுவதும் அதே மாதச் செலவுடன் முடிந்து போகும். அதைப் பற்றி அவர் அலட்டிக் கொண்டதும் இல்லை.*

*வறுமையில் வாழும் பிள்ளைகளுக்கு வாத்தியார் பாடப் புத்தகங்களை வாங்கிக் கொடுத்திருக்கிறார். உயர்தர வகுப்பில் இருக்கும் போது எனக்கு பரீட்சைக்குப் பணமும் அவ்வப்போது அவரே கட்டி யிருக்கிறார். ஊரில் காணிப் பிரச்சனையா, அண்ணன் தம்பி அடிபிடியா, கல்யாணப் பேச்சு வார்த்தையா... 'கூப்பிடு சின்னத்துரை வாத்தியாரை' என்னுமளவுக்கு அவருக்கு ஊரில் மதிப்பிருந்தது. வாத்தியார் சொல்லை ஊரில் யாரும் மீறியதுமில்லை.*

**து**க்கம் விசாரிக்க மரண வீட்டிற்கு வந்திருந்த இளமட்டங்களிடையே வடபகுதியில் தற்போது நடைபெறும் ஈழப்போர் பற்றிய பேச்சு இயல்பாகவே முக்கியத்துவம் பெற்றது. அவர்களுடன் மூத்த பிரஜைகளும் சேர்ந்து கொண் டார்கள். கோண்டாவில் பகுதியில் இப்பொழுது சண்டை நடைபெறுவதாகவும் இதன் காரணமாக அங்கு பயிரிடப்பட்ட புகையிலை அறுவடை செய்யப்படாது பழுத்துச் சாவதாகவும் புதினத்தை அவிழ்த்து விட்டார் கொழும்பு மணியம். இவர்

தமிழர் கலாசார சங்கத்தின் சார்பில் மலர் வளையம் வைக்க வந்திருந்தவர்.

'வெத்திலை ஒண்டு யாழ்ப்பாணத்திலை பத்து ரூபா விக்கு தெண்டு பேப்பரிலை போட்டிருக்கிறாங்கள். கோதாரி. இனி புகையிலை, சுருட்டும் நெருப்பு விலை விக்கப் போகுது...' என்று ஆதங்கப்பட்டார் மணியத்தின் கையாள் நமசிவாயம்.

*அந்த நாள்களில் வாத்தியாரிடம் எப்பொழுதும் திறம் புகையிலை இருக்கும். 'கோடா' போட்ட சுருட்டை அவர் என்றும் நாடியதில்லை.*

*சம்பளம் எடுத்தவுடன் வாத்தியார் நேரடியாக கோண்டா விலுக்குச் சென்று விடுவார். அங்கு புகையிலை வியாபாரத்தில் புகழ் பெற்ற அப்புத் துரையிடம் ஒரு கட்டுப் புகையிலை வாங்கி வருவார். இது அவருக்கும், அவ்வப்போது அவரிடம் வருபவர் களுக்கும் மாதம் முழுவதும் போதுமானது.*

*அதிகாலை வேளையில் நாவிதர் சின்னப்பொடி வாத்தியாருக்கு சவரம் செய்ய வருவதுண்டு. சவரம் செய்து முடித்தவுடன் வாத்தியார் ஒரு சுருட்டு சுற்றப் போதுமான புகையிலையைக் கவனமாகக் கிழித்துச் சின்னப்பொடிக்கு கொடுப்பார்.*

*ஒரு நாள் யாருக்கோ கொடுப்பதற்காக வாத்தியார் மகன் புகையிலையைக் குறுக்காக நுள்ளிவிட்டான். வாத்தியாருக்குக் கோபம் வந்திருக்க வேண்டும். புகையிலை மேல் அவருக்கிருந்த பாந்தத்தை அவர் மறைத்ததில்லை. விளையாடிக் கொண்டிருந்த என்னையும், மகனையும் கூப்பிட்டார். அடிபோடப் போகிறார் என்று பயந்து கொண்டே போனோம். புகை யிலையை, பக்க நரம்பு வழியே கிழித்தல் வேண்டு*

*மென்றும், குறுக்காக நுள்ளினால் சுற்றப்படும் சுருட்டின் தொகை குறையுமென்றும் விரிவாக விளக்கம் கொடுத்தார். எந்த அற்ப விஷயமானாலும், அதனை வள்ளிசாக விளக்குவது அவர் சுபாவம்.*

## IV

ஈமைக் கிரியைகளுக்கான 'பட்ஜெட்' விவாதம் இன்னமும் முடியவில்லை. சம்பந்தி அம்மா வாதப் பிரதிவாதங்கள் நடத்திக் கொண்டிருந்தார். இடையிலே ரொயிலற்றுக்குப் போக வென எழுந்து வந்தவர் என்னைக் கண்டதும், நாளைக்கு ஈமைக் கிரியைக்கு வரும் வழியில் வெற்றிலையும், தட்சணைக்குச் சில்லைறைக் காசும் வாங்கி வருமாறு கேட்டுக் கொண்டார்.

சரக்குக் கண்ட இடத்தில் பிள்ளை பெறுவதற்கு சம்பந்தி அம்மாவைப்போல ஆளை நான் எங்குமே கண்டதில்லை.

*வாத்தியாரிடம் நான் பல தடவை தட்சணை வாங்கியிருக்கிறேன். எனது தந்தையாரும் வாத்தியாரும் ஒன்றாக ஆசிரிய கலாசாலையில் படித்தவர்கள். புதுவருடத்தில் வாத்தியாரிடம் அவர் கை விஷேசம் வாங்குவார். தந்தையாருக்கு இரண்டு ரூபா ஒரு சதமும், எனக்கு ஒரு ரூபா ஒரு சதமும் - ஒற்றைவிழ - வெற்றிலையில் வைத்து வாதியார் தருவார். ஒரு ரூபா அப்போது பெரிய காசு. தோசை ஒன்று ஐந்து சதம் விற்ற காலம். அதனால் எப்போது வருஷம் பிறக்குமென்று காத்திருப்பேன். எனது தந்தையார் இறந்த பின்பும் வாத்தியார் இதை எனக்குத் தர மறந்ததில்லை.*

வெளிநாட்டிலிருந்து துக்கம் விசாரித்து, தொடாச்சியாக

ரெலிபோன் கோல்கள் வந்த வண்ணமிருந்தன. வாத்தியார் மகனால் தனித்து இவற்றைச் சமாளிக்க முடியவில்லை. இரண்டு ரெலிபோன் லைன்களும் மற்றும் பேரம்பலத்தின் 'மொபைல்' ரெலிபோனும் மாறி, மாறி கிணுங்கிய வண்ண மிருந்தன. இதனால் சாமான் பட்டியல் தயாரித்த வாத்தியாரின் மருமகளும் அடிக்கடி எழுப்பிப் போக வேண்டியிருந்தது. எனவே, என்னைக் குறிப்பெடுக்குமாறு பேரம்பலம் கேட்டுக் கொண்டான்.

சம்பந்தியம்மா இலகுவில் எந்த விடயத்தையும் ஒத்துக் கொள்ளமாட்டார். அரை டொலர் மஞ்சள்தூள் பற்றி அரை நாள் விவாதம் செய்யும் கசவாரம். அத்துடன் அவரின் 'எடுப்புகளும்' எனக்கு அறவே பிடிக்காது. அந்த நேரத்தில் தான் ஆபத்பாந்தவராக அங்கு வந்து சேர்ந்தார் கிரியைகள் செய்யும் சைவக்குருக்கள். செம்பு, குடம், குத்துவிளக்கு என்று தொடங்கிய குருக்கள் கிரியைக்கு சம்பந்தியம்மாவால் பட்டியலிடப்பட்ட 'பட்டோலைச் சாமான்'களைச் சரிபார்த்தார். குருக்களுக்கு முன்னால் சம்பந்தியம்மா அடக்க ஒடுக்கமாக இருந்தது ஆச்சரியமே.

கிரியைக்குத் தேவையான சாமான்களைச் சேகரித்துத் தருமாறும், பட்டோலைச் சாமான்களை வாங்கித்தருமாறும் வாத்தியார் மகன் பேரம்பலம் என்னை உரிமையோடு கேட்டுக் கொண்டான். செம்பு குடங்களை எங்கே தேடிச் சேர்ப்ப தென்பதுதான் முக்கிய பிரச்சனை. சிட்னியில் பலரும் வெவ்வேறு சைஸ்ஸில் குத்துவிளக்கும் குடங்களும் வைத் திருப்பது உண்மைதான். அவை எல்லாம் பொலிஷ் செய்யப் பட்டு வீட்டில் அழகுக்காக அடுக்கி வைக்கப்படுபவை. கைப்படாக் கலைப்பொருட்கள் அவை. அவற்றைக் கேட்டு மொக்கேனப்பட எனக்கு விருப்பமில்லை.

# V

'**த**மிழர் கலாசார சங்கத்தின்ரை தலைவராய் இருக்கிறியள்.... ஆட்டம் பாட்டமெண்டு விழாக்களை ஒழுங்கு படுத்திறதை விட்டிட்டு, சங்கத்தின்ரை கணக்கிலை இந்த சாமான்களை வாங்கி ஒரு பொது இடத்திலை வைச்சால் என்ன...?' கொழும்பு மணியத்துக்குக் குத்தல் கதை சொன்னார் விஸ்வலிங்கம் மாஸ்ரர்.

அவருக்கு மணியத்தின் தலைவர் பதவியில் ஒருகண். இதனால் மணியம் ஒழுங்காக வேலை செய்கிறார் இல்லை என்று பகிரங்கப்படுத்துவதில் வெகு குறியாக இருந்தார்.

'செத்த வீட்டிலை உங்கடை எலெக்ஷன் ரென்சனை அவிட்டு விடாதையுங்கோ....' என்றவாறே அங்கு வந்தார் சம்பந்தியம்மா.

அவரும் சங்கத்திலை முக்கிய புள்ளி. மணியத்தை அவருக்குக் கொழும்பிலேயே தெரியும். அடுத்த வருடம் மணியத்தின் அநுசரணையுடன் சங்கத்தின் காரிய தரிசியாகவாவது வந்துவிட வேண்டுமென்பது சம்பந்தியம் மாவின் ஆசை.

விஸ்வலிங்கம் மாஸ்ரர் சம்பந்தியம்மாவின் 'குலுக்கல்' கதைக்கு பதில் சொல்ல முன்பு, நிலைமையை உணர்ந்த நான் சாமான் பட்டியலை உரத்து வாசிக்கத் தொடங்கினேன்.

'மஞ்சள், நெய், அரிசிமா, அரிசி...' இவ்வாறு நீண்ட பட்டியல் இறுதியில் 'சோற்றுப் பருக்கை' என்று முடி வடைந்தது.

"சாவு வீட்டிலை சோற்றுப் பருக்கை என்னத்துக்கு...?' என்று இழுத்தார் விஸ்வலிங்கம் மாஸ்ரர்.

'வாயக்கரிசி போட்டு முடிந்தவுடன் அரிசிப் பொரியுடன்

சோற்றுப் பருக்கையும் போட்டால்தான் ஆத்மா அமைதி யடையும்,' என விளக்கம் கொடுத்தார் சைவக்குருக்கள்.

'அப்ப.... நல்ல குத்தரிசி சோறாய் வாத்தியாருக்கு போடுங்கோ. அவரும் அது திண்டு ஐஞ்சாறு வருஷம் இருக்கும்' என்றார் நமசிவாயம், உள்ளுக்கு இன்னொரு குறிப்புப் பொருளைச் சொருகியவாறு.

*வாத்தியாருக்குக் குத்தரிசிச் சோறு வேண்டும். ஒரு வருடத்ததுக்கு தேவையான வயல்நெல்லை ஊரில் அறுவடை முடிந்ததும் கூடையொன்றில் குவித்து வைத்திருப்பார்.*

*வாத்தியார் மாமி சமைத்தால் அதில் ஒரு தனி ருசியுண்டு. அவரது கைவாகு அப்படி. நல்ல கறி சமைக்கும் போதெல்லாம் பாடம் முடிந்தவுடன் என்னையும் அங்கேயே சாப்பிடச் சொல்வார்.*

*சிட்னியில் வசிக்கும் வாத்தியார் மகன் பேரம்பலம் என்னிலும் இரு வருடங்கள் மூத்தவன். முதற் தடவையிலேயே மாவட்டத்தில் கூடுதல் புள்ளி பெற்று மருத்துவக் கல்லூரிக்குச் சென்று விட்டான். வாத்தியார் இதுபற்றி என்றுமே தம்பட்டமடித்தது கிடையாது. எல்லோரும் படித்து முன்னுக்கு வர வேண்டுமென்பது அவர் கொள்கை. பிறர் பிள்ளை தலை தடவினால் தன்பிள்ளை தானே வளரும் என்பது அவர் நம்பிக்கை.*

*வாத்தியரின் மகளான சித்திரலேகா என்னைப் பார்க்கிலும் இரண்டு வயது இளையவள். அவளை நீங்கள் பார்த்திருக்க வேண்டும். வாத்தியார் மாமி மாதிரி தக்காளி நிறம். தேர் மாதிரி வளர்த்தி. அறிவும் அழகும் இணைந்தால் எதுவோ அதுதான் அவள். நான்*

உள் வீட்டுப்பிள்ளையான தால் அவளுடன் பழகு வதற்கு எந்தத் தடையுமிருக்கவில்லை.

எனக்கும் பொறியியல் படிப்புக்குப், பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது. பேராதனையிலுள்ள பொறியியல் கல்லூரிக்குச் செல்வதற்கு முன்பு வாத்தியார் மாமி என்னை விருந்து சாப்பிட அழைத்திருந்தார்.

சித்திரலேகாவே அன்று சமைத்திருந்தாள். கத்தரியும் உருளைக்கிழங்கும் சேர்ந்த பால்க்கறி, பருப்பு, பயத்தங்காய், ஆட்டுக்கறி பிரட்டல், பொரியல், எலும்புச் சொதி, அப்பளம் என எனக்குப் பிடித்தமான வகைகளால் அமர்க்களப் படுத்தியிருந்தாள்.

சாப்பாடு முடிந்தவுடன் அருகில் யாருமில்லாத நேரம் பார்த்து என்கொரு 'பைலட்' பேனா கொடுத்தாள். எழுதாத காதற் காவியம் அது என்பதை உணர்ந்து கொண்டேன்!

என்ஜினியரிங் போகிறேன் என்ற துணிவில், அவள் முன்னிலையே வாத்தியாரிடம் கேட்டுவிட்டேன். சித்திர லேகாவிற்கு வெட்கம் அழகாகத்தான் இருந்தது. வாத்தியார் கண் நிறைய பூரிப்போடு எங்கள் இருவரையும் பார்த்தார். அம்மா இதற்கு மறுப்புத் தெரிவிக்கமாட்டார் என்று எனக்குத் தெரியும்.

இறுதியாண்டு பரீட்ஷை முடிந்த பின்பு இடிபோன்று அம்மாவிடமிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது.

சித்திரலேகா கிணற்றில் தண்ணீர் அள்ளும் போது ஊருக்குத் தென்புறத்தேயுள்ள இராணுவ முகாமி லிருந்து ஏவப்பட்ட 'செல்' அவளைத் தாக்கியதாம். அந்த இடத்திலேயே அவள் உயர் பிரிந்து விட்டது. இறுதிப் பரீட்ஷை நேரமாகையால் வாத்தியார் இதை

*எனக்குத் தெரிவிக்க வேண்டாமென்று கேட்டுக் கொண்டாராம்.*

*இதன் பின் ஊருக்குப் போக என் மனம் இடம் தரவில்லை. வேலை ஒன்றை எடுத்துக்கொண்டு அம்மாவையும் ஊரிலிருந்து வரவழைத்து, கொழும் பிலேயே தங்கிவிட்டேன்.*

## VI

**மா**லை நான்கு மணியளவில் ஊரார் உறவினர் தெரிந்தவர் நண்பர்களெனக் கூட்டம் பெருகியது.

சம்பந்தியம்மா வந்தவர்களை பூதவுடல் அருகே கூட்டிச் செல்வதிலும், அவர்கள் கொண்டுவந்த மலர் வளையங்களை வாங்கி அடுக்குவதிலும் பிஸியாக இருந்தார்.

இடையிடையே CD யில் ஒலித்த தேவாராங்களை மாத்திப் போடுவதிலும், மலர் வளையத்தில் இணைக்கப்பட்ட பெயர் மட்டையை வெளியே தெரியும்படி இழுத்து விடுவதிலும் அவர் அலுக்காத அக்கறை காட்னார்.

வைக்கப்பட்ட மலர் வளையங்களின் எண்ணிகையும், அவற்றை யார் யார் வைத்தார்கள் என்பதும் தனது மருமகனின் அந்தஸ்து 'சிம்பல்' என்று சம்பந்தியம்மா நினைத்திருக்கக் கூடும்.

நேரம் செல்லச் செல்ல வாத்தியார் மகனுடனும், மருமக ளுடனும் வேலைசெய்யும் வெள்ளைக்கார நண்பர்கள் வரத் துவங்க, வாத்தியார் மகன் கறுத்த 'கோட் சூட்டில்' வாத்தியாரின் தலை மாட்டில் நின்றிருந்தான். மருமகளும் கறுத்த உடையணிந்து கணவனருகே கதிரையில் அமர்ந திருந்தாள்.

சும்மா சொல்லப்படாது. இத்தனை வருடங்களின் பின்பும்

இருவரின் சோடிப் பொருத்தம் 'அம்ஸமாகவே' அமைந் திருந்தது.

இவர்கள் இருவருக்கும் கொழும்பிலேயே மிக ஆடம்பரமாகத் திருமணம் நடந்தது. பிரபல கண் வைத்திய நிபுணர் டாக்டர் பொன்னம்பலம் தனது கிளினிக்கில் வேலை செய்த வாத்தியார் மகன் பேரம்பலத்தைத் தனது மருமகனாக்கிக் கொண்டார்.

சித்திரலோகாவின் அவலச் செய்தி அறிந்ததற்குப் பிறகு அன்றுதான் வாத்தியாரை முதன் முதலாகச் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

அவரைக் கண்டதும் கலியாண வீடென்றும் பார்க்காமல் நான் அழுதே விட்டேன். வாத்தியார் வழமைபோல் உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு, தட்டிக் கொடுத்தார். பழைய அதே வாத்தியார்தான். திருமணத்திற்கு வந்திருந்த விருந்தினர்களினதும் சம்பந்தி வீட்டாரினதும் படாடோபங் களுக்கு மத்தியில், வாத்தியார் தனித்துவமானவராகவே தோன்றினார்.

திருமணம் முடிந்த மறுவருடமே மேற்படிப்பிற்காக சிட்னி வந்த பேரம்பலம் நிரந்தரப் பிரஜையாகித் தற்போது சகல செல்வாக்கும் சௌகரிங்களும் நிறைந்தவனாக உயர்ந்து விட்டான்.

நாட்டு நிலைமையைக் காரணம் காட்டி, நானும் குடும்பத்துடன் சிட்னிக்குக் குடிபெயர்ந்தது எத்தனையோ ஆண்டுகள் கழித்து நிகழ்ந்தது.

வந்த புதிதில் ஒரு நாள் வாத்தியார் மகன் வசிக்கும் செல்வந்தர்கள் பகுதிக்கு முதன் முதல் வாங்கிய எனது பழைய காரில் சென்றிருந்தேன். எனது கார் அவர்களது 'றைவேயில்' நிற்பதை வாத்தியார்

மருமகள் விரும்பாதது அவள் முகத்தில் தெரிந்தது. பேரம்பலத்தைச் சுருக்கி 'Pal' ஆக மாற்றிய வாத்தியார் மகனால், பழைய நட்புடன் பழக முடியவில்லை.

வீட்டில் மனைவியின் ஆதிக்கம் சர்வ வியாபகமாகத் தெரிந்தது. அதன்பின் அவன் வீட்டிற்குப் போவதை நான் நிறுத்திக் கொண்டேன். 'நல்லமாட்டுக்கு ஒரு சூடு' என்று வாத்தியார் அடிக்கடி சொல்லுவார்.

ஒரு நாள் பரத நாட்டிய அரங்கேற்ற மொன்றில் பேரம்பலத்தைச் சந்தித்தேன். வாத்தியார் சிட்னிக்கு வருவதாகச் சொன்னான். சித்திரலேகாவின் சோகத்தில் வாத்தியார் மாமியும் இறந்துவிட ஊரில் தனித்திருந்த வாத்தியார் யாழ்ப்பாண நிலவரங்களும் பிடிக்காமல் கொழும்புக்கு வந்துவிட்டதாக விபரம் சொன்னான்.

'கொழும்பில் எப்படி வாத்தியாரின் பொழுது போகிறது...?' என்று என்னையும் அறியாமலே கேட்டுவிட்டேன்.

வாத்தியாரின் உதவியால் படித்து உயர் பதவியில் அமர்ந்திருக்கும் ஊரவர் ஒருவர் அறையொன்றை ஒழுங்கு செய்து கொடுத்ததாகவும், அங்கும் வழமை போல காலையும் மாலையும் பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பதாகவும் பேரம்பலம் கூறினான்.

'வாத்தியார் பிள்ளைகளிடம் பணம் வாங்க மாட்டாரே! கொழும்பில் பென்சன் பணத்துடன் எப்படிச் சமாளிக்கிறார்...?' மகன் இங்கிருந்து பணமேதும் அனுப்பிகிறானா என்று அறியும் ஆவலில் விருப்புப்

*புடுங்கினேன் நான்.*

*அறை எடுத்துக் கொடுத்த அவரது மாணவனே தனது குழந்தைகளுக்கு வாத்தியார் பாடம் சொல்லிக் கொடுப்பதைக் காரணம் காட்டி வாடகையின் பெரும் பகுதியைச் செலுத்தி விடுவதாகப் பேரம்பலம் பட்டும் படாமலும் சொன்னான்.*

## VII

**வா**த்தியாரின் பேரக்குழந்தைகள் அங்குமிங்கும் ஓடியவாறு தாத்தாவின் பிரேதப் பெட்டிக்கு வெளியே தொங்கும் பட்டுக்குஞ்சங்களைத் தொட்டு விளையாடிக் கொண்டிருந்தன.

'ஹாய், அங்கிள்!' என்றவாறே என் அருகே வந்த வாத்தியாரின் 'பேத்தி' ஏன் எனது மகனைக் கூட்டிவரவில்லை என்று கேட்டாள். அவளுக்கு அங்கு விளையாடுவதற்கு சோடி கிடைக்காத ஆதங்கமாக இருக்கலாம்.

'நாளை உன்னுடனும் தம்பியுடனும் சேர்ந்து தாத்தாவுக்கு பந்தம் பிடிக்க வருவான்' என்றேன் ஆங்கிலத்தில், அவளுக்கு விளங்கும் படியாக.

'பந்தம் என்றால் என்ன...? 'வியப்புடன் கேட்டாள் பேத்தி.

இறந்தவருக்கு இறுதி மரியாதை செலுத்த பேரப்பிள்ளைகள் தீப்பந்தம் பிடிப்பார்கள். இது எங்கள் ரடிஸன் (tradition). இங்கு அதைச் செய்ய மண்டபத்தில் அனுமதிக்கமாட்டார்கள் என்பதால் நீண்ட மெழுகுதிரியைக் கொளுத்தி நாளை நீங்கள் பிடிக்கலாம் என்று விளக்கினேன் நான். ஆவலுடன் கேட்டுக் கொண்டிருந் தவளைத் தம்பியார் விளையாட வருமாறு அழைக்கவே அங்கிருந்து அகன்றாள்.

குடும்பக் கட்டுப்பாட்டில் வாழ்க்கையை அனுபவித்தபின் வாத்தியார் மகன் தம்பதிகளுக்கு அடுத்தடுத்து பிறந்தவை இவ்விரண்டு குழந்தைகளும். பெண் குழந்தை அச்சொட்டாக வாத்தியார் மாமி மாதிரியே இருந்தாள். உயிரோடிருந்தால் மாமி எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பார்.

துணையில்லாமல் குழந்தைகளை வளர்ப்பது என்பது வெளிநாட்டில் லேசுப்பட்ட விஷயமில்லை. அதுவும் கணவனும் மனைவியும் வேலைக்குப் போவதாக இருந்தால் கேட்கவே தேவையில்லை. குழந்தை பிறந்த நேரங்களில் மாத்திரம் சம்பந்தி அம்மா சிட்னிக்கு வந்து போனாராம். அமெரிக்காவில் உள்ள மகனுடன் வாழ்ந்த சம்பந்தி அம்மாவுக்கு வேலைகள் அதிகம். எல்லாம் கலை - கலாசாரம் - கல்வி சம்பந்தப்பட்டவைகளே. முன்னாள் கல்லூரி அதிபரான அவருக்கு ஆசிரியத் தொழிலில் அவர் ஆற்றிய சேவைக்காக இலங்கை அரசு 'வித்ய ஜோதி ' பட்டமும் வழங்கி கௌரவித்துள்ளது. இதற்கெல்லாம் அரசியல் செல்வாக்கு வேண்டும். வாத்தியாரின் சேவையுடன் ஒப்பிடும்போது இதெல்லாம் தூசு என்பது பலரறிந்த உண்மை. ஆனால் யாழப்பாணக் கிராமமொன்றில் வாத்தியார் செய்த சேவை கொழும்பிலுள்ள அரசாங்கத்துக்கு எங்கே தெரியப்போகிறது?

வாத்தியார் மகனுடைய பிள்ளைகளை பாலர் வகுப்புக்குக் கொண்டு போவதற்கும், திருப்பி அழைத்து வருவதற்கும் மாலை வேளைகளிலே அவர்களை மேற்பார்வை செய்வதற்கும் 'ஆள்' ஒன்று அவசரமாகத் தேவைப்பட்டது. இங்கு இதற்கென நம்பிக்கையான —

ஆள்கிடைப்பது கடினம். கிடைத்தாலும் அநியாயச் செலவு.

நியூயோக், சிட்னி, கொழும்பு எனப் பறந்து திரியும் பிரபல சமூக சேவகியைப் பிள்ளைகளைப் பராமரிக்குமாறு கேட்க முடியுமா? தன் பிள்கைகளைப் பார்க்கவே கொழும்பில் இரண்டு ஆயாக்களையும் ஒரு 'போயை'யும் அமர்த்தி இருந்ததாக மூச்சுக்கு மூச்சு பெருமைப்படும் சம்பந்தியம்மாவிடம் இந்தப் பிரச்சினையைப் பிரேரிக்கத்தானும் யாருக்குத் துணிவு வரும்?

"மாமா 'சும்மா' கொழும்பிலை இருக்கிறார் அவரைக் கூப்பிட்டால் என்ன?" என்ற யோசனையை முன் வைத்தாள் மருமகள். பேரம்பலத்திற்கு இது நல்ல யோசனையாகப் பட்டது. சின்னவனின் பிறந்த நாளன்று எடுத்த புகைப் படங்களையும் இணைத்து பாசத்தைப் பிழிந்து பேரம்பலம் தந்தைக்குக் கடிதம் எழுதினான்.

அந்தக் கடிதத்தைத் தொடர்ந்து பேரப் பிள்ளைகள் தாத்தாவைப் பார்க்க அடம்பிடிப்பதாக அன்பொழுக வேறொரு கடிதமெழுதினாள் மருமகள்.

வெளிநாட்டு வாழ்க்கை தனக்கு ஒத்துவராது என்பது வாத்தியாருக்கு நன்கு தெரியும். கொழும்பிலே நரக வேதனை அனுபவிப்பவர்.

'பொடியன் பாசத்துடன் அழைக்கிறான். கடைசி நேரத்தில பேரக்குழந்தைகளுடன் கொஞ்சி விளையாடக் குடுத்து வைக்க வேணும். கொழும்பு நிலைமைகளும் வரவரச் சரியாய் இல்லை' என்று பலரும் பல நியாயங்களை வாத்தியாருக்கு எடுத்துச் சொல்லி அவர் மனசை இளக வைத்தார்கள். அரைகுறை

மனசுடன்தான் வாத்தியார் விசாவுக்கு மனுக் கொடுத்தார். ஆனால் பேரம்பலம் இணைத்திருந்த தஸ்தாவேஜுக்கள் கனதி சேர்க்கவே மிக விரைவில் அவருக்கு விசா கிடைத்துவிட்டது.

முக்கிய வேலை காரணமாகப் பேரம்பலத்தால் விமான நிலையத்துக்குப் போக முடியவில்லை. இதனால் மருமகளே விமானநிலையம் சென்றாள். சிட்னி விமான நிலையத்தில் வாத்தியாரால் மருமகளை இனம் காண முடியவில்லை.

கொழும்பிலே மருமகளுக்கு நீண்டு வளர்ந்த அடர்த்தியான கூந்தல். அந்தக் காலத்தில் சேலை உடுத்து, கூந்தலில் பூவைத்து மருமகள் வரும் போதெல்லாம் பெருமை பொங்க வாத்தியார் அறிமுகம் செய்வார். இன்று மயிரைக் கத்தரித்து, தலையைப் பொப் செய்து, ஜீன்ஸ் ரீசேட்டுடன் மருமகள் அவரை வரவேற்றாள். வந்திறங்கியதும் வாத்தியாருக்கு ஏற்பட்ட முதல் அதிர்ச்சி இதுதான்.

விமான நிலையத்தில் மருமகள் சந்தித்த வெள்ளைக்காரி தெரிந்தவளாக இருக்க வேண்டும். இருவரும் வாத்தியாரை விட்டுச் சிறிது விலகி, வண்டியில் சூட்கேசை வைத்துத் தள்ளிக் கொண்டு வந்தனர்.

வேட்டி சட்டையுடனும் அங்கவஸ்திரத்துடனும் காலில் செருப்புடன் வின்ரரில் வீட்டுக்கு வந்த அவரைப் பேரக்குழந்தைகள் நூதனமாகப் பார்த்தன!

## VIII

**பி**ரேதப் பெட்டியின் அருகில் ஏற்றி வைக்கப்பட்டிருந்த ஒற்றைக் குத்து விளக்கு 'கூடு' பற்றி எரிந்தது. எண்ணெய்

ஊற்றித் திரியை நேர்த்தி செய்த பின்னர், ஊதுவத்திகளைக் கொளுத்தி அதற்குரிய ஸ்ராண்டிலே பொருத்தி வைத்தார் சம்பந்தியம்மா.

எதையோ நினைத்துக் கொண்டவர்போல, எனக்குப் பக்கத்தில் காலியாக இருந்த கதிரையில் வந்தமர்ந்து கொண்டார்.

'நாளைக்குக் கனசனம் வரும். இவர்களைத் தெரியாத சனமே இங்கை இருக்கினம்? தமிழ்ச் சங்கம், இலக்கியப் பேரவை, இந்து மா மன்றம் என்று பல சங்கங்களும் இரங்கல் உரை நிகழ்த்த இடம் ஒதுக்கித் தரும்படி 'ரெலிபோன்' அடிச்சுக் கேட்டவை. அவை தம்பி, வாத்தியர் தமிழுக்கும் சமயத்துக்கும் செய்த சேவை என்று தெந்தட்டாய் சொல்லிப் போட்டு விட்டிடுவினம். வாத்தியாரின்ரை பெருமைகள் கொஞ்சமோ? நாங்கள் அவற்றை - 'சகல பெருமைகளை' யெல்லாம் இங்கிலீஸிலும், தமிழிலும் அடிச்சு விட்டாலென்ன?... வாத்தியாரோட நல்லாப் பழகின தமிழறிவுள்ள ஆள் உம்மை விட்டால் ஆர் இருக்கினம்? எனக்கு நீர் கொஞ்சம் உதவி செய்தால், இரவோடை இரவாக கொம்பியூட்டரிலே போட்டு நாளைக்கு ஈமைக் கிரியைகளுக்கு முன்னம் சீனாக்காரன்ரை பிரஸிலை அடிச்செடுத்திடலாம். வாத்தியார் விஷயத்திலை நான் கேட்டே நீர் செய்ய வேணும்...? என்று வார்த்தைகளிலே தேன் தடவிப் பேசினார் சம்பந்தியம்மா.

'சகல பெருமைகளும்' என்று சம்பந்தியம்மா எதைக் குறிப்பிடுகிறார் என்பதை நான் நன்கு விளங்கிக் கொண்டேன். வாத்தியாரைச் சாட்டாக வைத்துத் தன்னுடைய மகள் மருமகன் எனத் துவங்கி, தன்னுடைய பெருமைகளையும், குடும்பத்தின் மேதா விலாசங்களையும் ஆவணப்படுத்துவது தான் அவருடைய நோக்கும் என்பது எனக்குத் தெரியும்.

அவர், தான் நினைத்ததைச் சாதிப்பதில் சூரி!

அவருடைய கோரிக்கைக்குத் தலையாட்டிய வண்ணம், வாத்தியாருடைய சிட்னி வாழ்க்கையிலே நான் நனவிடை தோயலானேன்.

*சின்னத்துரை வாத்தியார் சிட்னிக்கு வந்த புதிதில், அவரது வரவைக் கொண்டாட, ஒன்றுகூடல் விருந்து ஒன்றை ஒழுங்கு செய்திருந்தார்கள். வாத்தியார் தொலைபேசியில் என்னைத் தவறாது வரும்படி அழைத்திருந்தார். மனைவி மகளுடன் நான் குறித்த நேரத்துக்கு அங்கு சென்றிருந்தேன். அன்றுதான் வாத்தியார் என் மனைவியையும், மகளையும் முதல் முதலாக பார்த்திருக்க வேண்டும். கண் கலங்கியவாறே மகளைத் தூக்கி உச்சி முகர்ந்தார்.*

*'எப்படி வாத்தியார், சிட்னி பிடிச்சுக் கொண்டுதோ?' என்று வாத்ஸல்யத்துடன் கேட்டேன். அவர் தமது பதிலைச் சொல்வதற்கிடையில் கறிச்சட்டிகளுடன் வரத் துவங்கிய விருந்தினர்களைக் கண்டு மலைத்துப் போய் நின்றார் வாத்தியார்.*

*'ஏனப்பா இதுகளைக் காவிக் கொண்டு வாறியள்...?' எனக் கேட்டவாறே மருமகள் கறிச் சட்டிகளை வாங்கி மேசையில் அடுக்கத் தொடங்கினாள்.*

*'விருந்துக்கு இன்னும் சமைக்கேல்லை; என்னண்டு ஆக்கள் வந்தாப்போலை எல்லத்தையும் ஒப்பேதத் போகினம்' என்று பயந்த வாத்தியாருக்கு இப்போது தான் அவுஸ்திரேலிய விருந்தின் சூக்குமம் புரிந்தது. அவருக்கு இந்த B.Y.O. முறை முற்றிலும் புதிசு. திவசம், கலியாணம், நல்லநாள் பெருநாள் என்று அண்டா*

அண்டாவாக அவித்துக் கொடுத்தவர் சின்னத்துரை வாத்தியார்.

'தாங்களே கொண்டுவந்து தாங்களே சாப்பிடு வதற்குப் பெயர் விருந்தில்லை...' என்று முணுமுணுத்த வாறே ஊரில் ஸ்பெஷலாக சுற்றுவித்து எடுத்து வந்த சுருட்டொன்றைப் பற்ற வைத்துக் கொண்டார் வாத்தியார்.

அங்கு வந்திருந்த மேல்மட்ட பெண்களுக்கு சுருட்டு மணம் ஒத்து போகவில்லை.

முகத்தைச் சுழித்தவாறே இருமத் தொடங்கி னார்கள்.

குறிப்பறிந்த மருமகளும், 'மாமா.... இனி உந்த சுருட்டுப் புகைக்கிறதை விட்டிடுங்கோ... இங்கை புகையிலை சுருட்டும் வாங்கேலாது. 'காப்பெற்' உந்த மணத்தை இழுத்துதோ... வீடு முழுக்க சுருட்டு மணம் தான் அடிக்கும்,' என்றவாறே வாத்தியார் கையில் புகைந்து கொண்டிருந்த சுருட்டை நாசூக்காய் வாங்கி ரொயிலெற்றுக்குள் போட்டு, தண்ணீர் அடித்துவிட்டாள்.

வாத்தியார் என்னைப் பரிதாபமாகப் பார்க்கவே, நான் அதைக் காணதவன் போல நடித்தேன்.

வந்திருந்த விருந்தினர்கள் அடுத்த அறையில் 'சிகரெற்' புகைத்தவாறே கையில் மதுக் கிளாசுடன் வம்பளத்து கொண்டிருந்தார்கள்.

சீமாட்டிகளும் 'அல்க்ககோல்' இல்லாத 'வைன்' என்று துவங்கி பசியெடுக்குமென 'ரெமி மாட்டின்' குடிக்கும் நிலைக்கு வந்துவிட்டார்கள்.

பார்ட்டி களைகட்டத் தொடங்கிவிட்டது. வந்தி ருந்த கூட்டம் CD யில் ஒலித்த இசைக்குத்

தாளமிட்டவாறே, 'மணம், குணம், காரம் ஏற்றப்பட்ட bites ஸையும் ஒரு கைபார்த்துக் கொண்டிருந்தது.

இதிலே ஒருவகையான சடங்குமுறை பின்பற்றப் படுவதை வாத்தியார் அவதானிக்கத் தவறவில்லை.

வாத்தியாருக்காக ஒழுங்கு செய்யப் பட்ட விருந்தில் அவரைக் கவனிப்பார் யாருமில்லை. மெல்ல வந்து என்னருகில் அமர்ந்து கொண்டார்.

தவிப்புடன் விரல்களை இறுக மடிப்பதும் விரிப்பது மாக அவஸ்தைப்படுவது நன்கு தெரிந்தது. கூர்ந்து கவனித்தேன். வாத்தியார் கையில் புதுச் சுருட்டு! மெல்ல எழுந்து நின்ற எனது காருக்கு கூட்டிப் போய் காருக்குள் இருந்த 'லைற்றரை' எடுத்துக் கொடுத்தேன். எதுவுமே பேசாது சுருட்டைப் பற்ற வைத்துக் கொண்டு நீண்டதொரு பெருமூச்சு விட்டார் வாத்தியார்.

'நான் இங்கை வந்திருக்கப்படாது... பெரிய பிழை விட்டிட்டன்...' கண் கலங்கினார் வாத்தியார்.

'வந்ததும் வராததுமாய் ஏன் இப்படிச் சொல்லுறியள்? போகப் போக இடம் பிடிபட்டிடும். நாங் களும் இங்கைதானே இருக்கிறம். ஒண்டுக்கும் யோசியாதையுங்கோ' என ஆறுதல் சொன்னேன் நான்.

நெடுநேரம் காருக்குள் இருந்து என்னுடன் ஊர் நினைவுகளை மீட்டார் சின்னத்துரை வாத்தியார்!

## IX

**இ**ரவு முழுவதும் வீட்டிலே பூதவுடலை வைத்திருக்க நகரசபை அனுமதிக்காது. அதனால் இரவு ஒன்பது மணி யளவில் அந்திம சேவை நிறுவனத்தினர் பூதவுடலைக் கொண்டு செல்ல வந்திருந்தார்கள்.

நாளைக் காலை பத்து மணியளவில் வாத்தியார் நேரடியாக சைவக் கிரியைகளுக்கென ஒழுங்கு செய்த மண்டபத்துக்குக் கொண்டு வரப்படுவார்.

பிரேதப் பெட்டியை மூடியவுடன் விக்கி விக்கி அழுதான் பேரம்பலம்.

அது இறுதி நேர உணர்ச்சிகளின் வெளிப்பாடு. தன் இயலாமைகளுக்காகவும் சேர்த்து அழுகிறானோ என்றுகூட எனக்குத் தோன்றியது.

'வாத்தியார் வாழ்ந்தனுபவிச்சுப் போட்டுத்தானே போயிருக்கிறார்! அதுவும் வெள்ளிக்கிழமை; நல்ல'சா' செத்திருக்கிறார். நீங்களும் அவருக்கு ஒரு குறையும் வைக்கேல்லை. மனவருத்தப் படாமல் பிள்ளையளுக்குச் சாப்பட்டைக் குடுங்கோ. அதுகளும் நாள் முழுக்க ஒண்டும் சாப்பிடாமல் 'கோலா' வைக் குடிச்சுக் கொண்டு திரியுதுகள்...' என்றவாறே உறவினர்கள் சமைத்துக் கொண்டுவந்த சாப்பாடுகளை மேசைமேல் எடுத்து வைத்தார் சம்பந்தி அம்மா.

பிள்ளைகள் சோறுகறி வேண்டாம் என்று அடம்பிடித்தபடி பிறீஸரை (Freezer)த் திறந்து 'சொசேஸை' வெளியில் எடுத்து மைக்கிறோ வேவில் சூடாக்கினர்.

*'மைக்கிறோவேவும் குளிர்ப்பெட்டியும் இல்லா விட்டால் சனங்கள் இங்கை பட்டினி கிடந்து செத்துப் போங்கள்... கோழிக் குஞ்சுகள் உயிரோடை உலாவின காலத்திலும் பார்க்க 'பிறீஸ்'ருக்குள்ள கிடக்கிற காலம்தான் அதிகம்' என்று வாத்தியார் ஒரு தடவை பகிடியாகக் குறிப்பிட்டது சடுதியாக என் நினைவில் உறைத்தது.*

*வந்த சில நாட்களிலே சிட்னியில் தான் பெற்ற*

அநுபவங்களை வாத்தியார் தொடுத்துக் கோர்த்துச் சொல்லியிருந்தார். அவரின் ஒருநாள் அநுபவமாக அவற்றைத் தொகுத்து மீள்பார்வை செய்வது சுவையானது!

காலையில் ஐந்து மணிக்கெல்லாம் துகில் எழுந்த அரவத்தைக் கேட்டு வாத்தியாரும் விழித்துக் கொண்டார். நேரமாற்றம் என்கிற சங்கதிகளை எண்ணிப் பார்க்காமல் 'புதிய இடம் நித்திரை வரேல்லை' என்று வாத்தியாரும் எழுந்து விட்டாராம்.

குளிர்ப்பெட்டிக்குள் இருந்து எடுக்கப்பட்ட பாணில் இரண்டு துண்டுகளை 'ரோஸ்ற்' பண்ணி 'பட்டர்' பூசி ஒரு கோப்பையில் வைக்கப்பட்டிருந்தது.

வைத்த குறிப்பிலே அதுதான் தமது காலை உணவு என்பதைப் புரிந்து கொண்டார்.

பாண் 'ரோஸ்ற்' செய்வது எப்படி, 'மைகிறோவேவ்' எப்படி உபயோகிப்பது என்கிற நுட்பங்களை எல்லாம் மகன் பேரம்பலம் வாத்தியாருக்கு அக்கறையுடன் விளங்கப்படுத்திக் கொண்டிருந்தான்.

பரிதாபமாக பார்த்த வார்த்தியாரைப் பார்த்து, 'புதிசில கொஞ்சம் கஷ்டம்தான், பிறகு பழகிப் போகும். இண்டைக்கு இதிலை வைச்சிருக்கிற சோறு கறியை மைக்கிறோவேவிலை சூடாக்கி மத்தியானம் சாப்பிடுங்கோ... எவ்வளவு நிமிஷங்களுக்கு சூடாக்கிறது என்பது பற்றி கவனமாக இருங்கோ... எதையும் கருக்கிப் போடாதையுங்கோ' என்று அக்கறையோடு சொன்னான் மகன்.

மருமகளோ 'ரபிக் ஜாம்' வாறதுக்கு முன்னாலே போக வேண்டுமென்று தனது ஸ்போட்ஸ் மொடல்

காரில் போய் விட்டாள்.

மத்தியானச் சாப்பாட்டைச் சரிக்கட்டிப் பார்ப்போம் என்கிற எண்ணத்திலே குஷினி வேலையிலே வாத்தியார் கொஞ்சம் சிரத்தை எடுத்தார்.

குளிர்ப்பெட்டியின் மேல் அறையைத் திறந்து பார்த்தார் வாத்தியார். சில் என்ற குளிர் காற்று அவர் முகத்தில் வீசித் துன்புறுத்தியது. இருந்தாலும் அதிலே சேமிக்கப்பட்ட 'திரவியங்களை' நோட்டமிட்டார். பிளாஸ்டிக் பெட்டிகளில் கறிகள் திகதியிடப்பட்டு Freeze பண்ணப்பட்டிருந்தன. மனக் கணக்கிட்டுப் பார்த்தார் வாத்தியார். சில கறிகளின் வயது மூன்று மாதங்களை எட்டிப் பிடித்திருந்தன. பச்சைமிளகாய், கறிவேப்பிலை எல்லாம் பொலீத்தீன் பைகளிலே இறுகக் கட்டப்பட்டு பாடம் செய்யப்பட்டிருந்தன.

வகைக்காகக் கறிப் பெட்டி ஒன்றைத் திறந்து பார்த்தார் வாத்தியார். தக்காளிக் குழம்பாக இருக்க வேண்டும். கல்லு மாதிரி இறுகிக் கிடந்தது.

கோப்பையிலே எடுத்து வைக்கப்பட்ட சோறு கறியைப் பேரம்பலம் கற்றுத்தந்த தொழில் நுட்பமுறை களைப் பிரயோகித்து சூடாக்கிச் சாப்பிட்டுப் பார்த்தார் வாத்தியார்.

'சப்'! எல்லாவற்றையும் 'பின்'(bin)னுக்குள் கொட்டி விட்டார்.

மாலையில் மருமகள் வேலைவிட்டுத் திரும்பி வந்து புதிசாக ஏதாவது சமைப்பாள்தானே என்கிற எண்ணத் திலே இரண்டு மூன்று சுருட்டுக்களை வஞ்சகமின்றித் தாராள மாகவே பற்ற வைத்துக் கொண்டார்.

வேலை முடிந்து மாலை வீட்டுக்கு வந்த மருமகள்

பத்திரகாளியானாள்.

'மாமா, உங்களுக்கு எத்தனை தரம் சொல்லுறது வீட்டுக்குள்ளை சுருட்டுப் பத்த வேண்டாம் எண்டு. வீடு முழுக்க சுருட்டு நாத்தம். ஆரேன் வந்தால் என்ன நினைப்பினம்...?'

வாத்தியார் வாயடைத்துப் போனார். அவருடைய வாழ்க்கையில் யாரும் அவர் முகத்தைப் பார்த்து குரல் எழுப்பிப் பேசியது கூடக் கிடையாது.

படலம் அத்துடன் முடியவில்லை.

'டொயிலட்' போய் வந்ததும் மீண்டும் மருமகள் முணுமுணுத்தாள். வார்த்தைகள் தெளிவாகக் கேட்க வில்லை.

சமையல் அறை 'சிங்'கிலே கோப்பைகள் கழுவாமல் கிடந்ததுக்கு ஒரு 'கமண்ட்'. ஒரு பாட்டம் மழை பெய்து ஓய்ந்தது போல!

மருமகள் இரவுச் சாப்பாட்டுக்கென பாண் துண்டுகளை எடுத்து 'பட்டரை'த் தடவிக் கொண்டு 'சான்விச்' தயாரித்தவாறே வாத்தியாருடன் பேச்சுக் கொடுத்தாள்.

'மாமா, நாளைக்குப் பிள்ளையளைப் பள்ளிக்கூடம் விட்டவுடன் ஒருக்காக் கூட்டிக் கொண்டு வாருங்கோ. உங்களுக்கும் நடந்தது போல இருக்கும். அதுகளும் பின்னேரப் பிள்ளை பராமரிப்பு நிலையத்திலை கிடந்து களைச்சு விழுந்து வருகுதுகள்... அதுகளுக்கும் உங்களோட ஒட்டிக் கொள்ளவும் ஆசைவரும்,' என்றவள், செய்த 'சான்விச்'சை தானும் பிள்ளைகளும் சாப்பிட்ட பின்னர் மேல் மாடிக்கு சென்று டிவிக்கு முன்னால் அமர்ந்து கொண்டாள்.

*மாடிக்கு வாத்தியார் என்றுமே போனதில்லை! வாத்தியார் தனது இரவுச் சாப்பாட்டை எட்டிப் பார்த்தார். குளிர் பெட்டிக்குள் இறுகிக் கிடந்த பழைய தக்காளிக் குழம்பு சூடாக்கப்பட்டிருந்தது. அதன் அருகில் சில பாண்துண்டுகள். 'ரோஸ்ர'ரில் போட்டு வாட்டி எடுத்தால் மொறு மொறுப்பாகத் தின்னலாம் என்ற எண்ணத்தில் போலும், ரோஸ்ரரும் மேசைமேல் வைக்கப்பட்டிருந்தது.*

*பேரம்பலம் நேரம் சென்றுதான் வீடு வந்தான். தந்தையைக் கண்டதும் 'சாப்பாடு முடிஞ்சுதோ' என்று கேட்டவாறே, பதிலுக்குக் காத்திராமல், மாடிக்குப் போய் விட்டான். பின்பு இறங்கவேயில்லை. அவன் இரவில் 'ஸ்போட்ஸ்' கிளப்பில், ரெனிஸ் முடிந்தவுடன் சாப்பிட்டு விட்டுவரும் சங்கதியைப் பல நாள் கழித்தே வாத்தியார் அறிந்து கொண்டார்.*

***ஊ**ரிலே மாமி என்கிற மகராசி வாழ்ந்த காலத்தில்... வாத்தியாரின் சாப்பாட்டு விஷயங்களிலே எவ்வளவு கரிசனை? பழையது என்ற பேச்சுக்கே இடமில்லை... 'சூடாகச் சாப்பிட்டால்தான் இவருக்கு பத்தியம்...' என்று சொல்வதிலே வாத்தியார் மாமி அடையும் புளகாங்கிதத்தை நான் அறிவேன்.*

## X

**கா**லையிலே வாத்தியாரின் ஈமக்கிரியை நடைபெறும் மண்டபத்திற்கு கிரியைச் சாமான்கள் சகிதம் போனேன். மனைவியையும் மகளையும் கூடவே அழைத்துச் சென்றிருந் தேன். வாத்தியாருக்கான — என்னை ஆளாக்கிய கல்வி

மானுக்கான — இறுதி அஞ்சலி அது! அதிலே குடும்பமாகக் கலந்து கொள்வதை என் மனசு விரும்பியது. என் மனைவியும் மகளும் ஒரு கட்டத்திலே வாத்தியாருடன் நெருக்கமாகப் பழகத் தொடங்கிவிட்டார்கள். நேற்றிரவு முழுவதும் என் மனைவி சலிப்புச் சொல்லி அழுது கொண்டிருந்தாள். இந்தப் பரிவும் பாசமும் பாவனையல்ல என்பது எனக்குத் தெரியும்.

*காலம் செல்லச் செல்ல வாத்தியார் என் வீட்டுக்கு நடந்தே வரத் துவங்கினார். இங்குள்ள formalityகளை மதிக்காமல், உரிமையுடன் வருவது எனக்கு மன நிறைவினைத் தந்தது.*

*'நடைக்கு நடையுமாச்சுது... உங்களை வந்து கண்டதுமாச்சு.' என்று அவர் பூசி மெழுகிச் சொன்னாலும் அவரது மன வெப்பிசாரங்கள் முழுவதையும் நான் அறிவேன்.*

*என் மனைவி சிறு வயதிலேயே தந்தையை இழந்தவள். எனவே அவள் சீக்கிரமே வாத்தியாரைத் தனது தந்தையின் ஸ்தானத்தில் வைத்துப் பாராட்டத் துவங்கினாள்.*

*வழக்கமாக வெளியில் எங்குமே சாபபிடாத வாத்தியார் என் மனைவி அழைத்ததும் மறுப்பேதும் கூறாது சாப்பிடுவார். அவருக்கென்றே குத்தரிசியும் கருட்டும் இங்குள்ள தமிழ்க் கடையொன்றில் வாங்கி வீட்டிலே 'ஸ்டொக்' வைத்திருந்தேன். இது பற்றி என் மனைவி கொண்டிருந்த அக்கறை, எனக்கு திருப்தி தந்தது.*

*வீட்டில் என் மகளுடன் நானும் மனைவியும் தமிழிலே பேசுவதை ஒரு கொள்கையாகவே கடைப்பிடித்தோம். எமது வீட்டிலே கமழ்ந்த தமிழ் மணத்தை வாத்தியார் மிகவும் அநுபவித்தார்.*

*வாத்தியாரின் அக்கறையினால் தமிழ்ப்பள்ளிக் கூடப் பேச்சுப் போட்டிகளில் என் மகள் பரிசுகள் பல பெற்று 'தமிழிலே நல்ல கெட்டிக்காரி' என்கிற பெயரையும் சம்பாதித்தாள்.*

*'ஏன் வாத்தியார், உங்கடை பேரப்பிள்ளையளை தமிழ்ப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பலாமே...?' என்று என் மனைவி ஒரு நாள் வஞ்சகமில்லாமல் கேட்டு விட்டாள். அவள் சிட்னியில் வார இறுதி நாட்களில் மாத்திரம் நடைபெறும் தமிழ்ப் பாடசாலையொன்றின் தொண்டர் ஆசிரியை.*

*நீண்ட பெருமூச்சொன்றே வாத்தியாரிடமிருந்து பதிலாகக் கிடைத்தது. மனைவி அந்தக் கேள்வி மூலம் அவருடைய மனசை வருத்திவிட்டாளோ என்று நான் மனம் புழுங்கினேன்.*

**ம**னைவி கண்ணீர் விட்டு அழுகிறாள். அவளைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. றொக்வூட் மயானத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டிய பொருட்களில் சில எனது காருக்குள் இருந்தது நினைவுக்கு வந்தது. நான் வெளியே வந்தேன்.

என் மனம் ஏன் இப்படித் தவிக்க வேண்டும்? இறுதிப் பிரிவு மகா கொடுமையானது...!

மற்றவர்களின் வாகனங்களுக்கு இடைஞ்சல் ஏற்படாத வகையில் மண்டபத்தின் அருகே ஒதுக்குப்புறமான இடத்தில் எனது காரை நிறுத்தியிருந்தேன்.

என் காருக்கு அண்மையில் ஒருவர் சிகரெட் புகைத்துக் கொண்டு நின்றார். அவரும் ஒரு தமிழர் தான். வாத்தியாரின் பூதவுடல் இன்னமும் மண்டபத்துக்கு கொண்டு வரப்படாத தால் நேரத்தினைப் போக்காட்ட அவர் சிகரெட் புகையை

வளையமாக விட்டுக் கொண்டிருந்தார்.

வீட்டிலே என்றைக்கு வாத்தியார் சாப்பிட்டாலும் அன்று ஒரு விருந்து நடப்பதாக என் மனம் குதூ கலிக்கும், சாப்பிட்ட கையோடு எனது வீட்டின் பின்புறத்தேயுள்ள வெளி விறாந்தையில் இருந்துதான் அவர் சுருட்டுப் புகைப்பார்.

வாத்தியார் என்றைக்குமே தமது வீட்டுக் கதைகளை வெளியில் சொல்வது கிடையாது. தன் னால் தாங்க இயலாத நேரத்தில் மாத்திரம் என்னிடம் சொல்லித் தனது மனதைத் தேற்றிக் கொள்வார்.

அப்படி ஒரு சந்தர்ப்பத்தில்தான் அவர் தமது சுருட்டுக் கட்டுக்கு நடந்த அவலத்தைச் சொன்னார்.

ஊரில் இருந்து அக்கறையுடன் எடுத்து வந்த சுருட்டுகளின் ஒரு பகுதியை காற்றுப் போகாதவாறு செப்பமாகக் கட்டி அலுமாரியின் மேல், யார் கண்களிலும் சட்டென்று படாதவாறு , பத்திரப்படுத்தி வைத்திருந்தாராம்.

கையிருப்பு முடிந்தவுடன் சுருட்டை எடுக்கப் போனவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அங்கே சுருட்டுக் கட்டைக் காணவில்லை. அதனைக் கண்ணாலேகூடப் பார்த்ததில்லை என்று வீட்டிலுள்ள எல்லோரும் சாதித்தார்கள்.

சில நாட்களின் பின்னர் பேரப் பிள்ளைகளை வீட்டுக்கு அழைத்து வந்த பொழுதுதான், பேரன் மர்மத்தின் முடிச்சை அவிழ்த்தான்.

'மம்மி அறையைச் சுத்தப்படுத்திய போது சுருட்டுக் கட்டைக் கண்டெடுத்ததாகவும், யாருக்கும் தெரியாத

வாறு 'கராஜில்' ஒளித்து வைத்து, நகர சபை குப்பை எடுக்கும் நாளாகப் பார்த்து அதைப் 'பின்'னுக்குள் போட்டதாகவும் சொன்னான். இந்த சமாசாரத்தினை கிழவனுக்குச் சொல்லக் கூடாது என்றும் கண்டித்தும் வைத்திருந்தாளாம்...

அதன் பின்னர் என் வீட்டிற்கு வந்தால் மட்டும் வாத்தியார் சுருட்டுப் புகைப்பார். அவர் சுருட்டின் அடிமை என்பதல்ல. சுருட்டுப் புகைத்தலைத் தமது சுதந்திரத்தின் குறியீடாகவும், பாத்தியமாகவும் அவர் அனுபவித்தார் என்பதை நான் விளங்கிக் கொண்டேன்.

## XI

**றொ**க்வூட் மயானத்தில் அங்கு தேவையான பொருள்களை இறக்கி வைத்தேன்.

இன்னும் நேரம் இருந்தது. நினைவுகளின் பாரம் நெஞ்சை அழுத்தவே நேரம் ஊர்ந்து செல்வதாகத் தோன்றியது.

மீண்டும் ஈமக்கிரியைகள் நடைபெறும் மண்டபத்திற்குச் செல்லும் நோக்த்துடன் காரில் ஏறி அமர்ந்தேன். அப்பொழுது தான் சம்பந்தியம்மா தயாரித்த வாத்தியாரின் நினைவு மலரை சீனாக்காரனின் அச்சகத்தில் எடுக்க வேண்டுமென்ற சங்கதி நினைவிலே உறைத்தது.

அந்த அச்சகம் 'வெஸ்ற்மீட்' (Westmead) ஆஸ்பத் திரிக்கு முன்னால் இருந்தது.

பத்து மணிக்கு முன்னதாக ஈமக்கிரியைகள் நடைபெறும் மண்டபத்திற்குச் சென்றுவிடவேண்டும்.

போகும் வழியில் வெஸ்ற்மீட் ஆஸ்பத்திரிக்கு முன்னாற் செல்லும் வீதியிலே திருத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இதனால் அமல்படுத்தப் பட்டிருக்கக்கூடிய

புதிய வீதி ஒழுங்கு முறைகளிலே மாட்டித் தவிப்பதை தவிர்ப்பதற்காக 'பரமற்றா' (Parramatta) வீதிவழியாக காரை வேகமாச் செலுத்தினேன்.

கார் ஆஸ்பத்திரியை விலத்திச் சென்றாலும், என் நினைவுகள் அதனைச் சுற்றிக் கிளை விட்டன.

*'வெஸ்ற்மீட்' ஆஸ்பத்திரியிலே வாத்தியாருக்கு நிறைய அனுபவம் உண்டு.*

*முதன் முறையாக அவர் அங்கு அனுமதிக்கப்பட்ட பொழுது பேரம்பலம் நான் வேலை செய்யும் கந்தோருக்குப் போன் செய்து விபரம் சொன்னான். அத்துடன் தன் தந்தை என்னை அவசரமாகப் பார்க்க விரும்புவதாகவும் தெரிவித்தான்.*

*அன்று மாலையே மனைவியுடன் ஆஸ்பத்திரிக்குச் சென்றிருந்தேன்.*

*'யூறலோஜி' பிரிவில் குழாய் மூலம் சிறுநீர் கழித்தபடி படுத்திருந்தார் வாத்தியார்.*

*எங்களைக் கண்டதும் கண்களில் திரண்ட கண்ணீரை சாமர்த்தியமாக மறைத்படி புன்னகைத்தார்.*

*'என்ன நடந்தது...?' எனக் கேட்டேன்.*

*அந்த வர்த்தமானத்தை அவர் தொட்டம் தொட்ட மாகத் தான் சொன்னார். அவற்றைக் கோர்வைப் படுத்தி நான் விளங்கிக் கொண்டேன்.*

*இரண்டு நாட்களின் முன்பு காலையில் பிள்ளை களை பாலர்வகுப்பில் விடுவதற்கு கூட்டிச் சென்றவர் மீண்டும் வீட்டிற்கு வந்தபோதுதான் திறப்பை எடுக்காது கதவை இழுத்துச் சாத்தியதை உணர்ந்து கொண்டார். மருமகள் வரும் வரை வெளியில் உள்ள வாங்கில் அமர்ந்துள்ளார். 'வின்ரர்' குளிர் சிறுநீர் பையைத்*

தாக்கியதால் 'புரஸ்ரேற்' சுரப்பி வீங்கி அவரால் சிறுநீர் கழிக்கமுடியவில்லை.

'எனக்கு அல்லது பேரம்பலத்துக்கு ரெலிபோன் பண்ணியிருக்கலாமே...?' எனக் கடிந்து கொண்டேன்.

'செய்திருக்கலாம் தான். பக்கத்து வீட்டு வெள்ளைக் காரனோடை பேசி விஷயத்தை சொல்லு றதுக்கும் பாஷைப் பிரச்சினை. வெளியிலை 'பூத்'திலை இருந்து ரெலிபோன் பண்ணியிருக்கலாம்... அதுக்கு என்னிட்டை காசேது...?' வாத்தியார் மறுபுறமாகத் திரும்பி, வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டார்.

'பேரப்பிள்ளையளும் பின்னேரம் பள்ளிக்கூடத் தாலை வந்து குளிருக்கையே நிண்டதுகள்...?' இது என் மனைவியின் கேள்வி.

'பேத்தி அடுத்த வீட்டுக்குச் சென்று தாய்க்கு ரெலிபோன் பண்ணியதாகவும், 'சோட்' லீவைப் போட்டுவிட்டு வீட்டை வந்த மருமகள், 'வேட்டியைக் கட்டிக் கொண்டு நாள் முழுக்க வெளியே garden (கார்டன்) பெஞ்சிலை இருந்து மானத்தை வாங்காதை யுங்கோ. போகேக்கை திறப்பை எடுத்துக் கொண்டு போகவேணுமெண்டதும் தெரியாத அளவுக்கு அறளை பேந்து போச்சுது...' என்று ஒரே ஆர்ப்பாட்டம் பண்ணியதாகவும் தெரிந்தது.

'ஒரு மனுஷனுக்கு மறதி வாறதில்லையே...? எனக் கொண்டாத் தம்பி எல்லாம் வெறுத்துப் போச்சுது' என்று நாத் தளதளக்கக் கூறியவாறு கண்ணீரை மறைக்க மீண்டும் மறுபக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டார் வார்த்தியார்.

மனப்பாரத்தைத் தாங்க முடியாத போதெல்லாம்

*வாத்தியார் தான் பெற்றுவரும் மனக்காயங்களை இப்படித்தான் வெளிப்பத்துவதுண்டு.*

*அந்த நேரங்களில் நானும் அவருக்கு ஒரு சுமைதாங்கியாக மாறுவேன்.*

*'புரஸ்ரேற்' சுரப்பியை ஒப்பரேசன் செய்து அகற்ற வேண்டும் என்கிற வைத்திய ஆலோசனையின் பேரில் தான் டாக்டர்கள் அவரை ஆஸ்பத்திரியில் இருந்து 'டிஸ்சாஜ்' செய்தார்கள்.*

*இந்த ஆஸ்பத்திரி விஜயத்துக்குப் பின்னர் வாத்தியார் சிறுநீர் கழிப்பதற்கு மிகவும் சிரமப்பட்டார்*

## XII

பரமற்றா றோட்டை நான் எடுத்தது மொக்குத் தனமான வேலை என்பதைப் பின்னர்தான் உணர்ந்தேன்.

தேவையில்லாத அலைச்சலுக்கு உள்ளாகி, ஈமக் கிரியை மண்டபத்துக்கு வரச் சுணங்கிவிட்டது.

நான் மண்டபத்தை அடையவும் அந்திம சேவை நிறுவனத்தினர் வாத்தியாரின் பிரேதப் பெட்டியைக் கொண்டு வந்து மேடையில் வைக்கவும் சரியாக இருந்தது.

ஒரு மூலையிலே அமர்ந்து விஸ்வலிங்கம் மாஸ்டர் உருக்கமாகத் தேவார திருவாசகம் பாராயணம் செய்து கொண்டிருந்தார்.

அவரையே சுண்ணப்பாடலையும் பாடுமாறு நான் முன்னரே கேட்டிருந்தேன்.

எனது 'மோபைல்' ரெலிபோன் கிணுகிணுத்தது.

சைவக் குருக்கள், தான் 'On the way' என்றும், பத்துப் பதினைந்து நிமிடங்களில் மண்டபத்துக்கு வந்து விடுவதாகவும் செய்தி சொன்னார்.

வாத்தியாருக்குச் செய்யப்பட்ட அலங்காரத் திருத் தங்கள் என் பார்வையில் விழுந்தன. இப்பொழுது மஞ்சள் நிற புதிய குர்தா ஒன்று அணிவித்திருந்தார்கள். இது மிக நாகரீகமான சில்க் குர்தா எத்தனையோ தலைமுறைகளுக்கு இப்பாலாகச் சினிமா யுகத்தின் உடையலங்காரத்திற்குள் வாத்தியார் கொண்டு வரப்பட்டிருந்தார். நெஞ்சுப் பகுதியிலே பெரிய பூ வேலைப்பாடுகள் செய்யப் பட்டிருந்தன.

வாத்தியாரின் இயல்பான தோற்றம் மாற்றி அமைக் கப்பட்டு விட்டதான மனக்குறை எனக்கு.

வெள்ளைக்கார நண்பர்களும் வாற இடத்திலே, 'எங்கள் 'பழைமையும்' ஸ்டையிலானதுதான் எண்டு தெரிய வேணும்...' என்கிற சம்பந்தியம்மாவின் வாதங்களுக்கு எதிராக யாரால் அப்பீல் செய்ய முடியும்?

*சிட்னியிலும் தமது வழமையான தோற்றத்தைப் பேணுவதிலே வத்தியார் பலவிதமான கஷ்டங்களை எதிர்நோக்க நேர்ந்தது. வகுப்பில் உள்ள ஏனைய பிள்ளைகள் காரில் வந்து இறங்குவதாகவும், தாத்தா வேட்டியைக் கட்டிக் கொண்டு வருவது funny யாக இருப்பதாகவும் தினமும் பேரப்பிள்ளைகள் முறைப்பாடு செய்தன.*

*'பாம்பு தின்னுகிற ஊருக்குப் போனால் நடுமுறி எனக்கு எண்டு சொல்லுறது போலத்தான் இதுவும். ஊரிலை வேட்டியிலை திரிஞ்ச எத்தினைபேர் இங்கை காற்சட்டை போட்டுக் கொண்டு திரியினம். இந்த நாட்டின்ரை வின்ரருக்கும் குளிருக்கும் வேட்டி சரிப்பட்டு வருமே?' - என்று மகன், மருமகள் ஏன் சம்மந்தி அம்மா கூட - பல விதத்திலும் பல தொனியிலும் சொன்ன போதிலும் வாத்தியார் மசியவில்லை.*

'காலாதி காலமாய் நான் வேட்டியோடைதான் திரியிறன். உங்களுக்காக இந்த வயதிலை காற்சட்டை போடச் சொல்லுறியளோ...?' என்று வாத்தியார் இந்த விஷயத்தில் பிடிவாதமாகவே இருந்தார்.

முதல் 'வின்ரர்' கழிந்த பிறகு வாத்தியாருக்கு ஓரளவு பயம் தீர்ந்துவிட்டது!

இந்தக் கட்டத்திலேதான், இனிப்பான ஒரு செய்தியை மாலதி வாத்தியார் காதிலே போட்டு வைத்தாள். அவள் ஊரிலே வாத்தியாரிடம் படித்தவள். அவள் 'சென்ர லிங்கில்' வேலை செய்பவள். வேலையற்றவர்கள், வயோதிபர், ஒற்றைத் தாய் ஆகியோருக்கு உதவிப்பணம் வழங்கும் அரச திணைக்களம் அது.

'நீங்கள் அவுஸ்திரேலியாவுக்கு வந்து ஒரு வருஷமும் ஒன்பது மாதமுமாகுது! 'ஸ்பொன்ஸரில்' வந்தால் இப்போதைய சட்டப்படி இரண்டு வருஷத்துக்குப் பிறகுதான் உதவிப்பணம் கிடைக்கும். இன்னும் மூன்று மாதத்திலை நானே எல்லா ஒழுங்கும் செய்து விடுகிறன். உங்களுக்கு இரண்டு கிழமைக்கு ஒருக்கால் 'சோசல்' காசு வரும் என்று சொன்னாள்.

இதற்குப் பிறகு வாத்தியார் ஒருநாள் என் மனைவியிடம் பேசிய போது, 'சோஷல்' பணம் கிடைத்தவுடன் தான் செய்யவிருக்கும் விஷயங்களை மனந்திறந்து சொன்னார்.

'ஒரு டொலர் ரிக்கற்றிலை நாளெல்லாம் ரெயினிலும் பஸ்ஸிலும் பயணம் செய்யலாம்... தமிழ்க் கடைகளுக்குப் போய் தமிழ்ப் புத்தகங்களும் பேப்பர்களும் வாங்கி வாசிக்லாம்...' எனத் தன்னுடைய தன்மானத்

*தினை ஓரளவேனும் காப்பாற்றலாம் என்கிற கனவு களிலே மிதந்தார்.*

*ஆனால் அந்தக் கனவுகள்....!*

# XIII

**சை**வக் குருக்கள் இறுதிக் கிருத்தியங்களைச் செய்யத் துவங்கிவிட்டார். ஊதுவத்திகளும், சாம்பிராணி வில்லை களும் இலேசாகச் சுகந்த மணத்தினை அறையெல்லாம் பரப்பிக் கொண்டிருந்தது.

இந்தப் புகையும் மணமும் அவுஸ்ரேலிய மண்ணுக்கு அந்நியமானவை. இருப்பினும் இவற்றின் மூலம் வாத்தியாரின் இறுதிச் சடங்கிலே தமிழ் மணம் ஊட்டப்படுவதாக அங்கு குழுமியிருந்தவர்கள் நினைத்துக் கொண்டார்கள்.

*மீண்டும் குளிர் சிறுநீர் பையைத் தாக்கியதால் அவராலே சிறுநீரை கட்டுப்படுத்த முடியவில்லை. மன உழைவுகளும் சேர்ந்து வாத்தியாரை உருக்குலைத்து விட்டது. இரண்டு ஆண்டுகளுக்கிடையில், சடுதியாக பத்து வயசுகளின் மூப்பு உடலிலே புகுந்து கொண்டதாக அவர் அவதிப்பட்டார்.*

*'வீடு முழுக்க மூத்திர வாடையடிக்குது. வீட்டுக்கு ஆக்களைக் கூட்டிக் கொண்டு வாறதுக்கும் வெக்கமாய் இருக்குது...' என்று புறுபுறுக்கத் தொடங் கினாள் மருமகள்.*

*'மூத்திரவாடை' என்ற பிரச்சினையை முதலில் கிளப்பியவர் சம்பந்தியம்மாவே. எதையும் திட்டம் போட்டு தந்திரமாக நிறைவேற்றுவதில் அவர் மகா கெட்டிக்காரி!*

*அவுஸ்திரேலியாவில் மூத்த பிரஜைகளுக்குள்ள*

வசதி அமேரிக்காவில் இல்லை என்பது சம்பந்தி அம்மா வுக்கு நன்கு தெரியும். இதனால் மகளின் ஸ்பொன் ஸரில் நிரந்தரப் பிரஜையாக விசா கிடைத்து சிட்னியில் 'என்றிமேக்' பண்ணியவர் கடந்த இரண்டு வருடங்களாக நியூயோக் - சிட்னி - கொழும்பு என்று பறந்து திரிந்துவிட்டு 'சோசல்' பணம் எடுக்கும் காலம் வந்தவுடன் நிரந்தரமாகத் தங்க சிட்னி வந்துள்ளார்.

மகளின் வீட்டருகே கொழும்பு மணியத்தின் உதவியுடன் இரண்டு அறை 'அப்பாட்மென்ற்' ஒன்றையும் வாடகைக்கு அமர்த்தி, சின்னக் கார் ஒன்றும் வாங்கிவிட்டார்.

பேரப்பிள்ளைகளும் இப்போது அம்மம்மாவின் காரிலேயே பள்ளிக்கூடம் போய்வரத் தொடங்கி விட்டன.

சிட்னியிலும் சம்பந்தி அம்மா மெல்ல மெல்லத் தனது சமூக சேவைகளை ஆரம்பித்தார்.

இடையிடையே மகள் வீட்டிற்கு மிஞ்சிய கறிகளை பிளாஸ்ரிக் பெட்டியில் போட்டுக் கொண்டு வந்து போகவும் துவங்கிவிட்டார். வந்த அலுவலைப் பார்த்துக் கொண்டு போகும் சுபாவம் அவருக்கு எப்பொழுதும் இல்லை. எதிலும் மூக்கை நுழைக்காமல் எப்படிச் சமூக சேவை செய்வது...?

''ரொயிலெற்றை'க் கழுவி சுத்தமாய் வைச் சிருங்கோ வாத்தியார். பிள்ளையளுக்கும் வியாதிவரப் போகுது...' என சாதுவாகச் சொல்லித்தான் விவகாரத் திற்கு அத்திவாரம் போட்டார்.

வாத்தியார் ஒரு ஊர்ச் சட்டம்பி என்றும், தான் கொழும்பில் கல்லூரி அதிபராக இருந்தவர் என்கிற

'கெறு' சம்பந்தியம்மாவுக்கு எப்பொழுது உண்டு.

வாத்தியாருக்கு 'சோஷல்' உதவிப்பணம் கிடைக்க இன்னும் இரண்டு வாரங்களே இருந்தன.

'வாத்தியாரை வீட்டிலை வைச்சுக் கஷ்டப்படு கிறதிலும் பார்க்க 'நேசிங்ஹோமிலை' (Nursing home)விட்டால் ஒழுங்காய் கழிவித்துடைச்சு பாத்துக் கொள்ளுவினம். மணி அண்ணற்றை சம்பந்தியையும் அங்கைதான் கொண்டு போய் விட்டிருக்கினம். நேரத் துக்கு நேரம் நல்ல சாப்பாடாம்!' என்று வாத்தியார் கேக்கக் கூடியதாக - மகளுக்கு ஆலோசனை கூறினார் சம்பந்தியம்மா. அப்பொழுது பேரம்பலமும் அங்கிருந் தான். சமய சந்தர்ப்பங்களைத் தேர்ந்தெடுப்பதில் சம்பந்தியம்மா மகா கெட்டிக்காரி.

இதனை வாத்தியாரால் தாங்கமுடியவில்லை.

'என்னை ஒரு இடமும் கொண்டு போய் விடவேண்டாம். யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவிடுங்கொ. என்ரை பென்சன் காசிலை நான் வாழுவன். ஒரு நேரக் கஞ்சி வைச்சுத் தாறதுக்கு எனக்கு ஆக்கள் இல்லையே?' என்று வாத்தியார் குரல் எழுப்பிச் சொன்னார்.

'உந்தச் சண்டையுக்கை 'பாஸ்' எடுத்து ஆர் இப்ப உங்களைக் கூட்டிக் கொண்டு போறது? அங்கை இருந்து கொண்டு மகன் கவனிக்கிறான் இல்லை' எண்ட அவப் பெயரை அதுகளுக்கு தேடித் தராமல் பேசாமல் இங்கை இருங்கோ.' தன் மருமகன் சார்பாக சம்பந்தி யம்மா பேசினார்.

சாதாரணமாகவே வீட்டில் பேரம்பலத்தின் பேச்சு எடுபடாது. மாமியாரின் சந்நிதானத்திலே அவன்

எப்பொழுதும் வாயில்லாப்பூச்சி.

அந்த ஆலோசனைக்கு தீர்மானம் எடுக்கப்படாத நிலையில், திடீரென பற்றீரியா இன்பெக்ஸன் வந்து வாத்தியார் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

சுகமானதும் நேரடியாக, வாத்தியார் நேர்ஸிங் ஹோமிலே விடப்பட்டார். எல்லா ஒழுங்குகளையும் சம்பந்தியம்மாவே முன்னின்று செய்திருக்கவேண்டும். அவரை அங்கு கொண்டுபோய்விடும்வரை மகளும் தாயும் யாருக்கும் விஷயத்தை அவிட்டுவிடவில்லை.

செய்தி கேட்டவுடன் நான் அடுத்த சனிக்கிழமை வாத்தியாரைப் பார்க்க நேர்ஸிங் ஹோம் போயிருந்தேன்.

என்னைக் கண்டதும் வாத்தியார் உடைந்து போனார். மத்தியானம் கொண்டு வந்து வைத்த அவித்த உருளைக் கிழங்கும் இறைச்சித் துண்டும் ஆறிக் குளிர்ந்திருந்தது. வாழைப்பழத்தை மட்டும் சாப்பிட்டுவிட்டு தோலை கோப்பையில் வைத்து இருந்தார்.

சாப்பாட்டுக் கோப்பையை எடுக்க வந்த வெள்ளைக்கார பெண்மணி 'சாப்பாடு ருசிக்க வில்லையா...?' என ஆங்கிலத்தில் கேட்டாள்.

வாத்தியாரிடமிருந்து பதிலேதும் வரவில்லை.

அவருக்கு ஆங்கிலம் விளங்காதா என ஆச்சரியத் துடன் கேட்டாள் அவள்.

அப்பொழுது நான் அவரின் பெருமைகளைச் சொல்லி, அவராலே பலர் முன்னுக்கு வந்ததையும் எடுத்துக் கூறி அவளைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளும்படி அவளைக் கேட்டுக் கொண்டேன்.

வாத்தியாரின் நிலையைப் பரிவோடு புரிந்து கொண்ட அவளும் அவரின் கன்னத்தை அன்புடன் தடவிக் கொடுத்தாள்.

பாஷை புரியாத பிற மொழிச் சூழலில் வாத்தியாரின் நிலையை என்னால் நன்கு புரிந்து கொள்ள முடிந்தது. மகளின் பரத நாட்டிய வகுப்பு நேர்ஸிங் ஹோமுக்கு பக்கத்திலேயே நடப்பதால் சனிக்கிழமைதோறும் சாப்பாட்டுப் பார்சலுடனும் தமிழ்ப் பத்திரிகையுடனும் தவறாது அவரிடம் போகத் தலைப்பட்டேன்.

இந்தக் கடமையிலே நான் ஆத்ம திருப்தியடைந்தேன்.

அன்று Father's day!

மனைவி ரிபன் கரியர் ஒன்றில் போட்டுத் தந்த குத்தரிசி சோறு கறியுடன் வாத்தியாரிடம் போயிருந்தேன்.

மகன் பேரம்பலம் தனது இல்லாள் சகிதம் ரோஜாப் பூங்கொத் தொன்றுடன் வந்திருந்தான். நான் கொண்டு சென்ற ரிபன் கரியர் அவர்கள் கண்களை உறுத்தியிருக்க வேண்டும்.

'என்ன மாமா... இங்கைதானே நாங்கள் நல்ல 'பலன்ஸ் டயற்' குடுக்கச் சொல்லி 'எக்ஸ்ரா' காசு கட்டிறம். எங்கடை ஊர்க் கறிசோறு தின்ன இங்கை இருக்கிற மற்றவையெல்லா கறி மணக்குதெண்டு 'கொம்பிளேன்' பண்ணப்போகினம்...' என்றாள் வாத்தியார் மருமகள்.

'அப்பா... வந்த இடத்திலை அதுக் கேற்றமாதிரி வாழப் பழகுங்கோ. நீங்கள் என்ன சின்னப்

பிள்ளையே...?' மனைவி முன் வாயைத் திறந்தான் பேரம்பலம்.

வாத்தியாரின் உதடுகள் துடித்தன.

நிலைமையப் புரிந்து கொண்ட நான், 'அதுக்கென்ன பேரம்பலம், இண்டைக்கு ஒரு நாளைக்குத்தானே? அவர் சாப்பிட்டவுடனை யன்னலை வடிவாய் திறந்து விட்டு, 'எயர் பிறெஸ்னர்' அடிச்சு விடுறன்' என்று சமாதானம் கூறினேன்!

சிறிது நேரம் எவரும் பேசவில்லை.

மௌனத்தை கலைத்த படி 'நாளைக்கு, உன்ரை அம்மாவின்ரை திவசம். அண்டைக்குத்தான் பேத்தி திவ்வியாவின்ரை பிறந்த நாளும் வருகுது...' என்று வாத்தியார் மகனுக்கு மெதுவாக சொன்னார்.

'இங்கை ஆர் மாமா திவசம் குடுக்கினம்? நான் அம்மாட்டை சொல்லி முருகன் கோவிலிலை மாமி பெயருக்கு ஒரு அருச்சினை செய்விச்சு விடுறன்...' என்று மருமகள் குறுக்கிட்டாள்.

'அண்டைக்கு இவை திவ்வியாவின்ரை பிறந்த நாளுக்கு ஆக்களையும் பார்ட்டிக்கு கூப்பிட்டிருக் கினமாமாம்...' என இழுத்தான் பேரம்பலம்.

'பேத் டே வீட்டிலையே கொண்டாடுறியள்? பிள்ளை யளையும் பார்க்க ஆசையாய்த்தான் இருக்கு' வாத்தியார் தனது ஆசையை வாய் திறந்து சொன்னார்.

பேரம்பலத்திடமிருந்து என்ன பதில் வரப் போகிறது என்ற ஆவலுடன் காத்திருந்தேன் நான்.

'Happy Fathers Day....! எப்பிடி வாத்தியார் இருக் கிறயள்?' என்று கேட்டவாறே அந்த நேரத்தில் அங்கு வந்து சேர்ந்தார் சம்பந்தியம்மா.

*'என்ன இங்கை நிண்டு மினக்கெடுகிறயள்...? சாமான் வாங்கிறேல்லையே...? நாளைக்கிடையிலை ஊரிப்பட்ட வேலையள் செய்து முடிக்கவேணும். திவ்யா தன்ரை கிளாஸ் மேற்ஸையும் வரச் சொல்லி கூப்பிட்டிருக்கிறாளாம். அவளின்ரை 'பேர்த்டே' கேக்குக்கு ஐஸிங் செய்யவே எவ்வளவு நேரம் எடுக்கப் போகுது' என அவசரப்படுத்தினர் சம்பந்தியம்மா.*

*மானிடம் இவ்வளவு தாழ்ந்ததை நான் என்றுமே அனுபவித்ததில்லை!*

# XIV

சுண்ணப்பாடலை உருக்கமாகப் பாடிக் கொண்டிருந்தார் விஸ்வலிங்கம் மாஸ்ரர்.

பேரம்பலம் தந்தைக்குக் கடமை செய்யும் அருந்தவப் புதல்வன் போன்ற தோற்றம் எல்லோர் மனதிலும் படியுமாறு சுண்ணமிடிக்கத் துவங்கினான்.

ஆனால் என் மனம் அன்று நேர்ஸிங் ஹோமில் நடந்த நிகழ்ச்சியிலேயே சுழன்று கொண்டிருந்தது. என் மண்டைக் குள் உலக்கை கொண்டு இடிப்பது யார்? எது?

*வாத்தியாருடைய அந்தத் சின்னக் கோரிக்கைகூட நிராகரிக்கப்பட்டது மனசை அரித்துக் கொண் டிருந்தது.*

*மகளின் பரத நாட்டிய வகுப்பு முடிந்து அவள் வரும் வரையில் காரிலே காத்திருந்தேன். ஆனால் நினைவுகள்...?*

*வாத்தியார் நேர்ஸிங் ஹோமில் வாழ்ந்த காலத்தில் ஒரு தடவையேனும் வீட்டுக் கொண்டு செல்லப்பட வில்லை.*

நாளைக்கு வாத்தியாரைக் கோவிலுக்கு கூட்டிச் சென்று அவர் கையால் வாத்தியார் மாமிக்கு திவசம் கொடுக்க வேண்டுமென்ற தீர்மானத்திற்கு வந்தேன். என்னை இந்த நிலைக்கு உயர்த்தி வைத்த குருவுக்குச் செய்ய வேண்டிய கடமை அதுவென நான் தெளிவு பெற்றேன்.

மகள் காரிலே ஏறினாள். அவளுக்கு அருகில் உள்ள மக்டொனால்ஸில் 'யூனியர் பேகர்' வாங்கிக் கொடுத்ததும், அவளுக்கு சந்தோஷம். நான் மீண்டும் நேர்ஸிங் ஹோமுக்குச் செல்லக் காரை திருப்பினேன்.

அங்கு இப்பொழுது சீனன் ஒருவனே மனேஜராக நியமிக்கப்பட்டு இருந்தான். அவன் சிங்கப்பூரில் பிறந்து வளர்ந்தவன்.

இந்துக்களின் பழக்கவழக்கங்கள் நன்கு தெரியும். அவனிடம் சகல விபரங்களையும் எடுத்துச் சொல்லி, நாளைக்கு வாத்தியாரை முருகன் கோவிலுக்கு அழைத்துச் செல்ல அனுமதி கேட்டேன்.

'முருகன் கோவிலுக்கா?' என்று மகிழ்ந்த சீனன், சிங்கப்பூர் சிறங்கூன் றோட்டில் தைப்பூசத்துக்கு நடைபெறும் காவடி பற்றிக் கூறியவாறே வாத்தியாரின் கையெழுத்தைப் பெற்றுவருமாறு 'போம்' ஒன்றைத் தந்தான்.

வாத்தியாரிடம் விஷயத்தை விளக்கி கையொப்பம் கேட்டேன். அதில் கையொப்பமிட்டபோது அழுதே விட்டார். வாத்தியார் குழந்தைப்பிள்ளைபோல தேம்பு வார் என்று நான் நினைத்ததில்லை. இறுதியில் சமாளித்துக் கொண்டு, என் மகளை இறுக்கி அணைத்து முத்தம் கொடுத்தார்.

அடுத்த நாள் காலை குருக்களுக்கு கொடுக்க வேண்டிய திவஷசமான்கள் சகிதம் வாத்தியாருடன் சிட்னி முருகன் கோவிலுக்கு சென்றேன். கோவிலில் வாத்தியார் சின்னப் பிள்ளைபோல் அங்குமிங்கும் சுற்றித் திரிந்தபின் ஒரு தூணில் சாய்ந்து வெகு நேரம் மௌனமானார்.

திவசம் முடிந்து நேர்ஸிங் ஹோமுக்கு வரும் போது வாத்தியார் நன்கு களைத்து விட்டார். இருப்பினும் அவரது முகத்தில் ஒருவித அமைதி குடிகொண் டிருந்தது. வரும் வழியில் சித்திரலேகா பற்றியும், மாமி பற்றியும் வாயோயாது கதைத்தவாறே வந்தார்.

'சித்திரலேகா இருந்திருந்தால் எனக்கு இந்த நிலை வந்திருக்காது... நான் இப்ப உன்னோடை இருந்தி ருப்பன். எல்லாத்துக்கும் 'குடுப்பனை' வேணும்... எனக் கண்கலங்கினார் வாத்தியார்.

அன்று அவரைப் பிரியும் போது என் கைவிளை வாஞ்சனையுடன் பற்றிக் கொண்டு, 'நான் இன்னும் எத்தனை நாள் இருப்பனோ தெரியாது. உவன் பேரம் பலத்தை நம்போலாது. அவன் பெண்டுகளின்ரை சொல் லுக்கை நிண்டு ஆடுறான். நான் செத்தால் நீதான் எல்லாத்தையும் பொறுப்பெடுத்துச் செய்ய வேணும்...' செய்வாய்தானே...? என்று கேட்டார் வாத்தியார்.

சம்மதத்திற்கு அறிகுறியாக தலையை ஆட்டிக் கொண்டே என் கண்களில் பனித்த கண்ணீரை அவர் பார்த்து விடக் கூடாதென்பதற்காக வாசல் பக்கம் திரும்பினேன்.

வேலை விடயமாக அடுத்த இருவாரங்கள் நான்

*வெளிநாடு சென்றிருந்தேன். திரும்பி வந்ததும் கந்தோரில் பல வேலைகள் எனக்காகக் காத்தி ருந்தன. இருப்பினும் நான் இல்லாத காலங்களில் என் மனைவி நேர்ஸிங் ஹோம் செல்லும் பணியைச் செய்து வந்தாள்.*

*'இந்த ஞாயிற்றுக் கிழமை எப்படியும் வாத்தி யாரைச் சென்று பார்க்க வேண்டும்' என்கிற அக்கறையுடன் தமிழ்ப்பத்திரிகைகள் சிலவற்றையும் எடுத்து வைத்து இருந்தேன்.*

*தற்செயலாகத்தான் செய்திக்கு பின் தமிழ் முழக்கத்தின் சமூக அறிவித்தலுக்குச் செவி மடுத்தேன்.*

*"சின்னத்துரை வாத்தியார் சிட்னியில் நேற்றுக் காலமானார்..."*

## XV

**ம**ண்டபம் கொள்ளாத கூட்டம் திரண்டிருந்ததில் சம்பந்தியம்மாவுக்குப் பரம திருப்தி. எல்லாவற்றையும் மேற்பார்வை செய்யும் ஒரு தோறணை.

பேரம்பலத்தின் பிள்ளைகள் இருவரும் தாத்தாவுக்கு பந்தம் பிடிப்பதற்கு வந்தார்கள். நீண்ட மெழுகுவர்த்தி களையே பந்தமாகப் பாவிக்கும்படி சைவக் குருக்கள் கேட்டுக் கொண்டார். வாத்தியாரைத் தாத்தா என்று வாஞ்சையுடன் அழைக்கும் என் மகளுக்கும் வாத்தியார் மீதுள்ள என் ஆத்மார்த்த உறவை நிலைநாட்ட ஒரு பந்தம் கொடுத்தேன்.

**பி**ரேதப் பெட்டியருகே குலுங்கிக் குலுங்கி அழுது

கொண்டிருந்த வாத்தியாரின் மருமகளைச் சுற்றிப் பலர் ஆறுதல் கூறிக் கொண்டிருந்தார்கள். எங்கிருந்துதான் இந்த கண்ணீர் மடை திறந்ததோ?

'மாமாவுக்கு நாங்கள் என்ன குறை வைச்சம்? இன்னும் கொஞ்சநாள் அவர் உயிரோடை இருந்து பேரப் பிள்ளையளின்ரை வளர்ச்சியைப் பார்த்திருக்கிலாம்' என்ற வாறே விக்கி விக்கி அழுதாள் மருமகள்.

'பிள்ளை, பிறந்தவை ஒரு நாள் சாகத்தானே வேணும். நீ பார்த்தது போலை இங்கை ஆர் மாமன்மாரைப் பார்த்திருக்கினம்? அவர் உயிரோடை இருக்கேக்கை நீ செய்ய வேண்டியதெல் லாத்தையும் நிறைவாய் செய் திட்டாய்...' என்று வாத்தியார் மருகமகளின் கண்ணீரைத் தனது சேலைத் தலைப்பால் துடைத்தார் மரகதம் மாமி.

றொக்வூட் (Rockwood) மயானம் நோக்கி ஊர்வலம் புறப்பட்டது.

சின்னத்துரை வாத்தியாரின் பூதவூடல் செல்லும் ஊர்வலம் அது.

கொழும்பிலே பிரபல கண் டாக்டராக விளங்கிய பொன்னம்பலம் தம்பதிகளுடைய மருமகன் — டாக்டர் பேரம்பலம் —சிட்னியிலே சம்பாதித்துள்ள செல்வாக்கினைப் பறைசாற்றும் ஊர்கோலமாக அது மயானத்தை நோக்கிச் செல்கிறது.

றொக்வூட் மயானத்திலே இரங்கலுரைகள் துவங்கின.

பிரேதப் பெட்டியிலே மட்டும் வாத்தியாரின் முக தரிசனம் பெற்ற கொழும்பு மணியமும் பேசினார்.

'இந்தப் படைபோதுமா அல்லது இன்னும் படை

வேணுமா? என்று கேட்பது போல ஊர்வலத்தின் சிறப்பையும் மரண வீட்டின் பிரமாண்டத்தையும் குறிப்பிட்டார். சிட்னித் தமிழர் கலாசார சங்கத்தின் அடுத்த தேர்தலிலே சம்பந்தி யம்மாவின் வெற்றிக்கு இது முதல் படியாய் அமைகிறது என்று அவர் வெளிப்படையாகச் சொல்லா விட்டாலும், அவரது உரையூடே அது மறை பொருளாய்த் தொனித்தது.

நினைவு மலரின் பிரதிகளை சம்பந்தியம்மா ஒவ்வொரு வருக்கும் அக்கறையுடன் விநியோகித்துக் கொண்டிருந்தாள்.

சின்னத்துரை வாத்தியாரின் பெருமைகளைப் பேசுவதற்கு இவர்கள் யார்? இரங்கலுரை நிகழ்த்தும் சம்பிரதாயங்களுக்குள் சிக்குண்டு நான் என் ஆன்மாவை இழக்கத் தயாராக இல்லை.

பிரேதப் பெட்டியின் அருகே ஊதுவத்திகள் எரிந்து சாம்பல் உதிர்த்துக் கொண்டிருந்தன. சில தணல் கங்குள் அங்குள்ள 'கார்பெற்'றில் (Carpet) விழப்பார்த்தன.

வாத்தியார் தலைமாட்டில் வைக்கப்பட்டிருந்த ஒற்றை வாழைப்பழத்திலே, எரியும் அந்த ஊதுவத்திக் குச்சிகளை சொருகி, கீழே இறங்கினேன்.

வாத்தியார் மூலம்தான் நான் பாரதி பாடல்களைக் கற்றவன் என்பது அப்பொழுது ஏனோ என் நினைவுக்கு வந்தது...!

சிட்னியில் காலமான சின்னத்துரை வாத்தியாரின் நினைவுகள் மெல்லக் கனவாய் பழங்கதையாய் போவதை நான் விரும்பவில்லை. அவர் கற்றுத் தந்த தமிழையும், இலக்கிய ஆர்வத்தையும் துணைப் பற்றி, அவர் சமர்ப்பண மாகவே இக்கதையே எழுதினேன்.

[வீரகேசரி (இலங்கை)]
July-August 2000



கலாநிதி ஆசி. கந்தராஜா அவர்கள் உயிரியல் தொழில் நுட்பத்துறையில் பெரிய விஞ்ஞானி. உலகப் பல்கலைக்கழகங்கள், ஆய்வு நிறுவனங்கள் அவரைத் தங்கத் தட்டில் வைத்து ஏந்துகின்றன. முற்றிய நெற்பயிர் தலை வணங்குவது போல், இவர் விளங்குகின்றார். இவர் கதைகளிலே கூட, அந்தக் குணம் வெளிப்படுகின்றது.

கந்தராஜாவில் அசல் பலமாக நான் கருதுவது மனிதர்கள்மேல் இவருக்கு இருக்கும் அபிமானம். மனிதர்களை அவர்கள் பலத்தோடும் பலவீனத்தோடும் இவர் ஏற்றுக் கொள்ளுகிறார்... வடிவநேர்த்தியும் அழகும் கொண்ட கதைகள். நல்ல வாசக அனுபவம் தருகிற கதைகள்...